**S151**



# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

## தொலைநிலைக் கல்வி

www.mkudde.org


# எம்.ஏ. - அரசியல்

## முதலாம் ஆண்டு

## தாள் - 2

# அரசியல் சிந்தனை

S151



# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

## தொலைநிலைக் கல்வி

www.mkudde.org

# எம்.ஏ. - அரசியல்

## முதலாம் ஆண்டு

## தாள் - 2

# அரசியல் சிந்தனை

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

VIJ – 2009 – Copies 500

# அரசியல் சிந்தனை

**அன்புடைய மாணவரே,**

அரசியல் விஞ்ஞான முதுகலை பட்டப்படிப்பிற்கு உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். அரசியல் பாடத்தில் நீங்கள் அடிப்படை ஆற்றுப்பயிற்சியை பெற்றிருக்காவிடில் தயவுசெய்து அரசியல் விஞ்ஞானம் பற்றிய அடிப்படை நூல்கள் சிலவற்றைப் படிக்கவும், மேலும், எங்களுடைய பாடங்கள் உங்களுக்குப் போதிய அடிப்படைய அரசியல் அறிவைப் புகட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன.

அரசியல் சிந்தனை எனும் இந்தப் பாடப்பகுதி அரசு, அரசாங்கம் ஆகியவைப் பற்றி பல்வேறு அரசியல் சிந்தனையாளர்களின் கருத்துக்களை இப்பாடப்பகுதியில் கற்பீர். இவைகளை பத்து பாடங்களில் வடித்துத் தந்துள்ளோம். இப்பாடங்களைவும் பாடத் திட்டத்தில் குறிப்பிட்டப்படுள்ள நூல்களையும் கற்குமாறு உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், தொலைநிலைக் கல்வி இயக்ககம் நடத்தும் நேர்முகத் தொடர் வகுப்புகளில் உங்களுடைய ஐயப்பாடுகளை தீர்த்துக்கொள்ள வாய்ப்புள்ளது. எனவே, நாங்கள் அனுப்பும் பாடங்களையும் முறையாக படிக்கவும், நாங்கள் நடத்தும் தொடர் வகுப்புக்களுக்குத் தவறாமல் வருகை தர உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

**எங்கள் நல்வாழ்த்துக்கள்.**

**இப்படிக்கு.**

**அரசியல் விஞ்ஞானத் துறை.**

## paper II

## Syllabus

## Political Thought

Unit: 1 Plato

Unit: 2 Aristotle

Unit: 3 Machiavelli

Unit: 4 Hobbes

Unit: 5 Locke

Unit: 6 Rousseau

Unit: 7 J.S. Mill

Unit: 8 Marx

Unit: 9 Lenin

Unit: 10 Mao

## Select References


1. R.N. Berki. The History of Political Thought: A Short Introduction, London, Dent, 1977.
2. J. Coleman, A History of Political Thought: From Ancient Greece to Early Christianity, London, Blackwell, 2000.
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino, Modern Western Political Thought: Machiavelli to Marx, Chicago, University fo Chieago Press, 1972.
5. C.H. Mellwain, The Growth fo political Thought in the West, New York,Macmilan, 1932.
6. J.B. Motsll, political Thought in Medieval Times, New York, Harper Torch books, 1958.
7. G.H. Sabine, History of Political Theory, 4th edn., revised by T.L.Thorson,New Delhi, Oxford and IBH, 1973
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought. 2. Volumes, Cambridge. Cambridge University, 1990

# பாடப்பட்டியல்

| பாட எண் | பொருளடக்கம் |
|---|---|
| 1. | அறிமுகக் கடிதம் - பாடத்திட்டம்- பாடப்பட்டியல்- பிளேட்டோவுக்கு முந்திய காலத்தில் அரசியல் சிந்தனை. |
| 2. | பிளேட்டோ |
| 3. | அரிஸ்டாட்டில் |
| 4. | மாக்கியவல்லி |
| 5. | ஹாப்ஸ் |
| 6. | லாக் |
| 7. | ரூசோ |
| 8. | ஜான் ஸ்டூவர்ட் மில் |
| 9. | கார்ல் மார்க்ஸ் லெனின் |
| 10. | மாவோ |

# அலகு -1

## பிளேட்டோவிற்கு முந்திய காலத்தில் அரசியல் சிந்தனை

**அறிமுகம் :**

மனிதன் சமுகவாழ்வில் ஈடுபட்டது முதல் அவன் தனக்கும் மற்றவர்களுக்கும் இடையே உள்ள உறவுகளைப் பற்றி சிந்திக்கலானான். அரசு தோன்றியது, அரசையை பற்றி எண்ணமுற்பட்டான். அரசின் தன்மை யாது? அது எவ்வாறு தோன்றிறு? தனி மனிதன் அரசிற்கு ஏன் பணிதல் வேண்டும்? அரசின் அதிகாரத்தின் வரம்பு யாது? இது போன்ற வினாக்கள் தனிமனிதனின் நிலை குறித்து எண்ணி வந்த குறித்து எண்ணி வந்த சிந்தனையதாளர்கள் மனதில் எழுந்தன. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த வெவ்வேறு சிந்தனையாளர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இவர்களின் கருத்துக்கள்தான் இந்தப் பாடப் பகுதியின் பொருளடக்கமாகவுள்ளது.

**நோக்கங்கள்:**

1. கிரேக்க நாட்டில் தோன்றிய சிந்தனைகளின் விளக்கம்
2. சோபிஸ்டுகள் சிந்தனை விளக்கம்
3. சாக்ரட்டீஸ் சிந்தனை விளக்கம்

**அலகின் வடிவமைப்பு :**

கிரேக்க நாட்டில் அரசியல் சிந்தனை
சோபிஸ்ட்கள் பங்கு
சாக்ரட்டீஸின் பங்கு
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனை
கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

## *1.1 கிரேக்க நாட்டில் அரசியல் சிந்தனை:*

அரசியல் சிந்தனை கிரேக்கக நாட்டில் தான் முதன்முதலில் தோன்றிற்று. கிரேக்கர்கள் அறிவு சார்ந்த முறையைப் பின்பற்றி பிரச்சனைகளுக்குத் தீாவு காண முனைந்தனர். அரசின் அதிகாரத்தில் எல்லா குடிமக்களும் பங்கு பெற்றிருந்தனர். கிரேக்க நகர அரசு ஒரு திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பபட்டிருந்தது. தனியொருவனின் விருப்பு வெறுப்பைப் பிரதிபலிக்கும் ஒரு அமைப்பாக அந்த அரசு செயல்படவில்லை. எஜமான் அடிமை உறவின் அடிப்படையில்லமால் ஒற்றுமை உணர்வின் அடிப்படையில் அரசு கட்டி எழுப்பப்பட்டிருந்தது. குடிமக்கள் அனைவரும் பொது நலனுக்ககாவே உழைத்தனர். நகர அரசின் வளர்ச்சியில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் சிந்தனையைக் கிளறின. கிரேக்க நகர அரசுகள் பலவிதமாக தோன்றியிருந்தமையால் அவற்றை ஒப்பிட்டு விவாதிக்கும் எண்ணமும் தோன்றின. இத்தகயை சூழ்நிலையில் அரசின் தன்மை, அதன் அடிப்படை குடிமக்களின் கடமைகள் ஆகியன பற்றி மக்கள் உள்ளங்களில் பல்வேறு வினாக்கள் எழுந்தன. கிரேக்க அரசியல் சிந்தனை பெரும்பாலும் அறஞ் சார்ந்தாய் அமைதிருந்தது. தனி நபருடைய நன்மைக்கும் சமுதாய நன்மைக்குமிடையே அது வேறுபாட்டினை ஏற்படுத்துவதுதில்லை. அது போலவே சமயத்திற்கும் அரசுக்குமிடையேயும் பாகுபாடு ஏதுவும் இல்லை. தொடக்கத்தில் கிரேக்க சிந்தனையாளர்கள் பிரபஞ்சத்தின் தன்மையை பற்றிய அதிக அக்கறைகாட்டினார். உண்மை என்றால் என்ன என்ற கேள்விக்கு விடைகானுவதற்க்கு தீவிரமாக முயன்றனர். மிலேட்ஸ் நகரின் தேம்ஸ், பிதகோரஸ் ஹெரகிளிடபாமனைட்ஸ் போன்ற பல்வேறு அறிஞர்களும் நிறைய மாணவர்களைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கோட்பாடுகளையெல்லாம் எதிர்த்து அவற்றை வழுவிழக்க செய்த பெருமை பிளேட்டோவைச் சேரும். பிளேட்டோவிற்கு முன்னரே. கிரேக்கத்தில் அரசியல் சிந்தனையின் போக்கையை மாற்றியவர்கள் சோபிஸ்டுகள் ஆவார்.

## *1:2 சோபிஸ்டுகள் பங்கு:*

சோபிஸ்டு ஒருவகை அறிவுப் புரட்சியை ஏற்படுத்தினரென்றால் அது மிகையாகாது. சோபிஸ்டு என்றால் அறிஞர் எனப் பொருள்படும் தற்காலத்தில் தவறான வாதத்தைச் சரியானதுதெனக் காட்டவல்ல புத்திசாலிகளை சோபிஸ்டுகள் என்கிறோம்.கல்வி கேள்விகளில்

நாட்டமுடையோர் என சாக்ரட்டீஸ் அவர்களை அழைத்ததார். அவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாய்ப் பணியாற்றினர். அவர்களுடைய மாணவர்களுள் பலர் அரசியலில் பங்கு பெற்று முன்னேற்றம் காணுவதைத் தமது குறிக்கோளாய்க் கொண்டிருந்தனர். அன்றைய ஏதென்ஸ் மக்களாட்சி அரசியலமைப்பைக் கொண்டிருந்தமையால் அரசின் அதிகாரிகள் மக்கள் பேரவையின்முன் தமது செயல்களுக்கு விளக்கமளிக்க வேண்டியிருந்தது. அவ்வேளையில் அவர்களுக்கு நாவண்மை பெரிதும் கைகொடுத்தது. எனவே சோபிஸ்டுகள் தமது மாணவர்களிடையே மேடைப் பேச்சுத் திறனை வளர்ப்பதற்குப் பெரிதும் முனைந்தனர். சோபிஸ்டுகள் தமக்கென ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் தமது காலத்தில் நிலவி வந்த தத்துவக் கருத்துக்களுக்கு எதிராகப் புதிய கருத்துக்களை வலியுறுத்தினர். பிரபஞ்சத்தின் நிலையுண்மையை அறிய முயன்ற பழைமைவாதிகளுக்கெதிராக அவர்கள் புதிய நோக்கைக் கற்பித்தனர். அப்புதிய கண்ணோட்டத்தில் அறிவின் மையமாக மனிதன் கருதப்பட்டான். பிரபஞ்சத்தைப் பற்றிய கல்வியை சோபிஸ்டுகள் கைவிட்டுவிட்டனர். மனிதனே கல்வியின் கருப்பொருளானான். மனிதன்பால் ஏற்பட்ட அந்த ஆர்வம் கிரேக்கச் சிந்தனையே முற்றிலுமாக ஆக்கிரமித்துக் கொண்டது. சோபிஸ்டுகள் அரசியலை ஒரு நடைமுறைக் கல்வியாக்கினர். சிசரோ கூறுவதைப் போல, அவர்கள் தத்துவத்தை விண்ணினின்று மனிதரின் இருப்பிடங்களுக்கு கொணர்ந்தனர்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை.**
1.சோபிஸ்டுகளின் அரசியல் சிந்தனையை கூறுக.

### *1.3 சாக்ரட்டீஸின் பங்கு:*

கிரேக்க அரசியல் சிந்தனையின் போக்கை முழுமையாக மாற்றியவர் சாக்ரட்டீஸ் ஆவார். ஏதேன்சில் கி.மு.470 ஆம் ஆண்டில் பிறந்த அவர் மேற்கத்திய அரசியல் தத்துவத்தின் தந்தையென அழைக்கப்படுகின்றார். அவருடைய ஆரம்ப தத்துவம் எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும். அதாவது எனக்கு ஒன்றுந் தெரியாது என்பதாகும். மனிதன் எவ்வாறு இருக்கவேண்டும், அவன் எதனை நாடவேண்டும் என்பன பற்றிய கல்வியே மேன்மையான கல்வியாகுமென அவர் வாதிட்டார். உறுதிப்பாடுகளுக்கும் யூகங்களுக்கும் இடமளிக்காது பல்வேறு கேள்விகளை எழுப்பினார். சரியான விளக்கங்கள், தெளிவான சிந்தனை,முறையான , பகுப்பாய்வு ஆகியவற்றை அவர் விரும்பினார். நன்னெறியின் பொருள் என்ன? சிறந்ததோர் அரசின் தன்மை யாது? என்பன சாக்ரடீஸ் எடுத்துக்கொண்ட பிரச்சினைகளில் முக்கியமானவையாகும்.

பிரச்சனைகளுக்கு வினா விடை முறையிலேயே சாக்கர்டீஸ் தீர்வுகாண விரைந்தார். இம்முறை தர்க்க முற்பட்ட ஆய்வு எனப்பட்டது. அவர் உண்மைகளின் அடிப்படையிலேயே வாதித்தார். மனிதன் வெறும் நம்பிக்கை, உள்நோக்கம் ஆகியவற்றால் அல்லாது உண்மையான அறிவால் வழி நடத்தப்பட வேண்டும் என்பது அவரது துணிவு. அரசு இயற்கையானது என்று சாக்ரடீஸ் கருதினார். நன்னெறி, நுண்ணறிவு ஆகியவற்றின் பிரதிபலிப்பே அரசாங்கம் அரசாங்கம் கட்டுப்பாட்டையும், சிந்திக்கும் திறனையும் வளர்க்க வேண்டும். சாக்ரட்டீஸ் ஏதென்ஸின் மக்களாட்சி முறையை வன்மையாகக் கண்டித்தார். ஏனெனில் அது ஒழுக்கம். சமயம் ஆகியவற்றின் விதிமுறைகளைத் தகர்த்து விட்டது. சோபிஸ்டுகளால் கற்பிக்கப்பட்டோர் வழக்கமான மேற்குடியினருக்குப் பதிலாக ஆட்சி பீடமேறியிருந்தனர். இதனால் தனிநபர் நலனே பேணப்பட்டு சமுதாய நலன் புறக்கணிக்கப்பட்டது. மக்களனைவரும் சமம், என்ற மக்களாட்சிக் கோட்பாட்டை சாக்ரடீஸ் எதிர்த்தார். அதனால் சீட்டுக் குலுக்கி அரசு நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையும் அவருடைய கண்டனத்திற்குள்ளாகியது. நம்பிக்கையிற் சிறந்ததோர் ஆட்சிக்குப் பதிலாக அறிவிற் சிறந்ததோர் ஆட்சி அமைய வேண்டுமென சாக்ரடீஸ் கருதினார். அரசியலில் நுண்ணறிவின் தேவையை அவர் வலியுறுத்தினார்

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறைவு சோதனை.**
> 2.சாக்ரடீஸின் அரசியல் கருத்தை விளக்குக.

## 1.4 தொகுப்புரை :

கிரேக்கத்தில் அரசியல் சிந்தனையின் போக்கையை மாற்றியவர்கள் சோபிஸ்டுகள் ஆவார். சோபிஸ்டுகள் அரசியலை ஒரு நடைமுறைக் கல்வியாக்கினர். அரசியல் சிந்தனை வரலாற்றில் சாக்ரட்டீசுக்கு சிறந்த இடமுண்டு. அறிவின் நிலைத்தன்மையின் வளைவுகளை உணர்த்தியவர் அவரே. அரசியல், அறிவியல் ஆகியவற்றிடையே எழும் முரண்பாடுகளைப் பற்றியும் அவர் வினாக்கள் தொடுத்தார். அரசு என்பதுமிக இயற்கையான தேவையான ஒரு மனித அமைப்பாகும். ஆண்டவனின் ஆணைகளுக்கு அடுத்தபடியாக அரசின் சட்டங்கள் மதிக்கப பெறவேண்டும். சாக்ரட்டீசின் கௌரவமும் சீரிய போதனைகளும், ஐரோப்பிய நாகரிகத்தில் அவருக்கு தலையாய இடத்தை அளித்துள்ளன.

**1.5 முக்கிய வார்த்தைகள் :-**

கிரேக்க நாடு, பிரபஞ்சம் , பிதகோரஸ்; சாக்ரட்டீஸ், சிசரோ, சோபிஸ்டுகள்

**1.6 பரிந்துரை நூல்கள் :**


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.


**1.7 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவு சோதனை கேள்விக்களுக்கான பதில்கள்**

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:2 - ல் அறிக.*

*கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண். 1:3 -ல் அறிக.*

**1.7 மாதிரி வினாக்கள்:-**

1. பிளேட்டோவிற்கு முந்திய காலத்தில் நிலவிய அரசியல் சிந்தனையை பற்றி ஒரு கட்டுரை வரைக.

## அலகு - 2

# பிளேட்டோ

(428 B.C - 347 B.C)

**அறிமுகம் :**

பிளேட்டோவின் கருத்துக்களுக்கு முக்கிய உந்துகோலாகத் திகழ்ந்தவர் சாக்ரட்டீஸ் ஆவார். இவர்களின் சந்திப்பு பிளேட்டோவின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது எனலாம். சாக்ரடீஸிடமிருந்து தான் பிளேட்டோ தர்க்க ரீதியிலான வாதமுறையைக் கற்றார். சாக்ரடீஸின் கொள்கைகளான அறிவே அறமாகும். இலட்சியமே உண்மையானது என்பவையே பிளேட்டோவின் சிந்தனைக் கோட்பாட்டின் அடித்தளமாக காணப்படுகின்றன. வாதம் அல்லது கருத்துப் பரிமாற்றம் மூலம் தான் உண்மையைக் கண்டறிய முடியும் என்பதும், குறிக்கோள் அல்லது எல்லையை மையாக வைத்துக் கொண்டுதான் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதும் சாக்ரடீஸின் வாதங்கள் ஆகும். அரசியல் தத்துவத்திற்கு இலக்கணம் வகுத்த முதல் சிந்தனையாளர் பிளேட்டோ ஆவார். உலகத்திலுள்ள அனைத்து அரசியல் சிந்தனையாளர்களும் இவரைப் பின்பற்றியவர்கள் என்று கூடக் கூறலாம். எனவே ஒப்புவமை செய்ய இயலாத சிந்தனையாளர் பிளேட்டோ. உலகம் பாராட்டுகின்ற அரிஸ்டாட்டில் இவரது மாணவர் ஆவார்.அரசியலில் இவர் எழுதிய குடியரசு மற்றும் சட்டங்கள் என்ற நூல்கள் மேலை நாட்டில் கல்வி வளர்ச்சி பெறுவதற்கு வித்திட்டவை என்பது மிகையல்ல. கிரேக்க சமுகத்தின் அடிப்படையிர் இவரது அரசியல் சிந்தனை அமைந்துள்ளது. பிளேட்டாவின் சிந்தனைகளான இலட்சிய அரசு கல்வி, பொதுவுடைமை, நீதி ஆகியன பற்றி தெளிவாக பின்வரும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

**நோக்கங்கள் :**

1. பிளோடோவின் இலட்சிய அரசு பற்றிய விளக்கம்
2. பிளோடோவின் கல்வி முறை விளக்கம்
3. பிளோடோவின் பொதுவுடைமைக் கருத்து விளக்கம்

**வடிவமைப்பு :-**

பிளோட்டோவின் வாழ்கை வரலாறு
பிளோட்டோவின் நூல்கள்
அரசு
இலட்சிய அரசு
கல்வி
நீதி
பொதுவுடமை
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனை
கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

## *1.1 இளமைப் பருவம்:*

இவர் 426 பெரிகிளிஸ் இறந்த ஒருவருடம் கழித்து ஏதேன்சில் ஒரு நற்குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்களாவர். ஏதேன்சில் சட்டத்தை உருவாக்கிய சோலன் என்பவரின் உறவினர் இவரது தாய். இவரது தந்தையும் செல்வந்தர் குடும்பத்தைச் சார்ந்தவர். பிளேட்டோவின் வளர்ச்சிக்குக் காரணம் சாக்ரட்டீஸ் ஆவார். சாக்ரட்டீஸின் கருத்துக்கள்தாம் அவரை அரசியல் உலகத்திற்கு நுழைய வைத்தது. தவிர பிளேட்டோவின் உறவினர்களும் இவர் அரசியலில் நுழைய ஆர்வம் காட்டினார்கள். இருப்பினும் இவரது உறவினர்கள் சாக்ரட்டீஸைக் குறைகூறி அவரது புகழைக் கெடுக்க நினைத்தனர். இது பிளேட்டோவிற்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் சாக்ரட்டீஸ் மிகவும் நல்லவர். தெளிவான சிந்தனை உடையவர். இளைஞர் சமுகம் விழிப்படைய வேண்டுமென்று புரட்சிக் கருத்துக்களை வெளியிட்டவர். எனவே, பிளேட்டோ சிறிது காலம் அரசியலிலிருந்து விடுபட்டார். சாக்ரட்டீஸிற்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டதால் மனம் வெகுண்டார். அரசியல் வனவாசத்தைக் கலைத்து சாக்ரட்ஸின் பணியைத்தான் தொடர கங்கணம் செய்தார். எனவே இவர் வெறுமனே அரசியல் மட்டும் இருந்த நிலை மாறி தத்துவஞானியாக மாற வாய்ப்பு ஏற்பட்டது. இவரது நோக்கமும் ஒரு சிந்தனையாளராக இருக்க வேண்டுமென்பது தான் அந்நோக்கம் ஈடேறியது. பிளேட்டோ கி.மு.347இல் மறைந்தார்.

### *1.2 பிளேட்டோவின் நூல்கள் :*

பிளேட்டோவின் நூல்கள் யாவும் நமக்குக் கிடைத்துள்ளன. இந்நூல்கள் முழுவதும் உரையாடல்முலம் உணர்த்துவதாக அமைந்துள்ளன. ஏனெனில் இருவருக்கு வழிகாட்டியாக இருந்த சாக்ரடீஸ் முறையைப் பின்பற்றியே இவர் நூல்கள் எழுதியுள்ளார். பிளேட்டோ மொத்தம் 36 உரையாடல் நூல்களை எழுதியுள்ளார். இவரது வாழ்வின் பல்வேறு கட்டங்களில் இந்நூல்களை எழுதினார். இவரது நூல்களில் சில ஆரம்பகாலத்தில் எழுதப்பட்டவை. அவை Euthyhro, Crito, Apology, Charmides, Laches, Lysis, Euthydemus, Protagores, Gorgias, Meno, Symposium, Phaedo ஆகியவை Republic, Phaedrus, Parmenides ஆகியவை அவர் ஆசிரிய வாழ்க்கையின்போது எழுதப்பட்டது. இவைகள் அவருக்குப் புகழ் தேடித் தந்த உரையாடல்களாகும். தன்னுடைய இறுதிக் காலங்களில் அவர் எழுதியவை Sophists, Politicus Philebus, Timaeus, Critias, Statesmen, Laws ஆகியவையாகும்.

### *1.3 குடியரசு :*

பிளேட்டோவின் படைப்புகளில் மிகப் பிரபலமானது குடியரசு என்னும் உரையாடலாகும். அரசியல் தத்துவம் சம்பந்தமாக எழுதப்பட்ட உரையாடல்களில் சிறந்தது இந்நூல். அரசியல் விஞ்ஞானம் சம்பந்தமான முறைப்படி எழுதப்பட்ட முதல் நூலாகும். அரசியல் கருத்துக்களையும் அமைப்புகளையும்இந்நூலில் பிளேட்டோ அலசி ஆராய்ந்துள்ளார். கடந்த இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளில் இதற்கிணையான நூல் இன்றளவும் தோன்றவில்லை. தர்க்கரீதியிலான வாத முறையை பிளோட்டோ மிக திறம்பட கையாண்டுள்ளார். அரசியலும் தத்துவம் கோர்வையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளபடியால் மிகச் சிக்கலான பிரச்சனைகளும் எளிதாக புரியக் கூடிய முறையில் விவரிக்கப்பட்டுள்ளன. மனிதன் சமுதாயத்தில் எங்ஙனம் செயல்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறியுள்ளது. பத்துப் புத்தங்களை உள்ளடக்கிய இந்நூல் ஐந்து பகுதிகாளகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை:

பிரிவு 1. நீதியின் பொருளும் தன்மையும்
பிரிவு 2. இலட்சிய அரசும் கல்விமுறையும்
பிரிவு 3. பொதுவுடைமைக் கோட்பாடுகள்
பிரிவு 4. அரசு வகைகளும் தனி நபர்களும்
பிரிவு 5. மனித உள்ளத்தின் ஆற்றல் திறனும் விதியும்

### 1.4 அரசு:

மக்கள் தங்கள் எண்ணத்தால் , தேவையினால் அரசை உருவாக்கினரென பிளேட்டோ கூறுகிறார். அரசின் வளர்ச்சி முழுவதும் மக்களின் ஈடுபாட்டால் ஏற்பட்டது என்கிறார். பொருளாதார அடிப்படையில் அரசு குறித்து பிளேட்டோவின் கருத்து அமைகிறது. எந்த ஒரு மனிதனும் சுயநிறைவானவனல்ல. மனிதன் தனது அனைத்துத் தேவைகளையும் தன்னால் நிறைவு செய்ய முடியவில்லை என்பதை உணர்ந்ததால் பிறரின் உதவியை நாடினான். தன்னுடைய தேவைகளை நிறைவு செய்வதற்குத்தான் பிறருடைய உதவியை நாடினான். இவ்வாறு ஒருவருக்கொருவர் பரஸ்பரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக சேர்ந்து வாழத் தலைப்பட்டனர். சேர்ந்து வாழ்ந்த மனிதர்களின் ஒன்றிணைப்பே அரசாகும். இதுதான் அரசு உருவாகக் காரணமான முதல்நிலை. முதலில் மனிதன் தனது அடிப்படையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்காக பிறர் உதவியை நாடினான். நாளடைவில் மக்கள் கூட்டம் அதிகரிக்கவே, அவர்களின் தேவைகளும் அதிகரித்தன. இதனால் மக்கள் வாழ்வும் வித்தியாசமாக அமைந்தன. மக்களின் அடிப்படைத் திறமைகளுக்கு தகுந்த வகையில் மக்கள் தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர். சேர்ந்து வாழ்ந்த மக்கள் உள்ளார்ந்த திறமைகளை வெளிகாட்டி, சிறந்த முறையில் வாழ முயற்சித்தனர். பொருளாதார வகையில் அரசு என்பது தரமான பொருட்களை உருவாக்க முயற்சிக்கவே ஒவ்வொரு செயலையும் பகிர்ந்து செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. இதனால் ஒவ்வொரு செயலும் செயல்முறையில் தனித்துவம் ஏற்படலாயிற்று, எனவே அரசு என்பது தேவையின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்தத் தேவைகள் அனைத்தும் மக்களின் உழைப்பால் அல்லது கூட்டு நடவடிக்கையால் நிறைவு பெற்றது என்கிறார் பிளேட்டோ. பிளேட்டோ அரசில் மக்களின் பலவகை வாழ்க்கை முறைகளைக் கூறுகிறார். மக்கள் தனது பணியில் தனித்துவம்பெற வேண்டியது அவசியமென்பதை இரண்டாவது வளர்ச்சி நிலை என்கிறார். இராணுவத்தில் பணிபுரிவோர் அதிகத் திறமையும் துணிச்சலும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அரசின் பாதுகாவலர்களே அவர்கள்தான். அவர்கள் தங்களது அடிப்படைத் தேவைகளுக்காக பிற வேலைகள் செய்யாது இருக்க வேண்டும். இவர்கள் தங்கள் வேலையில் முழுக் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

அஞ்சாது எளிதில் யராலும் வெல்ல முடியாத திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் மக்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். இராணுவம் அரசனுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். ஆனால் மக்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். இராணுவம் அரசனை மக்களை அச்சுறுத்தல் கூடாது.

### *1.5 இலட்சிய அரசு :*

பிளேட்டோ இலட்சிய அரசிற்கும் நடைமுறைக்கும் உள்ள வித்தியாசங்களைக் கூறுகின்றார். இலட்சியம் என்பது நடைமுறையில் சாத்தியமல்லவென்றும் இது எல்லா இலட்சியங்களுக்கும் பொருந்தும் என்கிறார். பின்னர் ஏன் இலட்சியத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேள்வி எழுப்பி இலட்சியம் இலட்சியத்திற்காகவே என்கிறார். ஏனெனில் இது மக்களின் வாழக்கைப் பாதையின் அளவுகோலாக அமையும். இலட்சியத்தோடு ஒப்பிடுகையில் மக்களுடைய செயல்களை எங்குள்ளதென்பதைக் கண்டறிய உதவுமென்கிறார்.

இலட்சிய அரசிற்கு தேவையானவை என்ன? அரசில் மக்கள் ஒரு தனித்தன்மையுள்ள உறவால் சேர்ந்து வாழ்கிறார்கள். வெறுமனே இடத்தாலோ அல்லது இனத்தாலோ சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதை ஏற்கவில்லை. முன்னர் கூறியதுபோலவே, பொருளாதாரத் தேவைக்காகவே மனிதர்கள் அரசில் அங்கமானார்கள். தனி நபர்கள் தங்களது முயற்சியால் மட்டும் தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாத காரணத்தால், பிறரின் உதவியை நாடி அரசை உருவாக்கினார்கள். ஆனாலும், அரசு என்பது பொருளாதார தேவைக்காக மட்டும் உருவானதென்று கூற முடியாது. மனிதர்களின் மனநிலை மற்றும் அறிவை அடிப்படையாகக் கொண்டது என்று கூடக் கூறலாம்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை கேள்வி.**
1.பிளேட்டோ இலட்சிய அரசின் அடிப்படை கொள்கைகளை கூறுக.

இராணுவத்தின் தேவை, இராணுவ வீரர்கள் எப்படி இருக்க வேண்டும், என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைக் கூறும்போது இராணுவவீரர்கள் பொருளாதாரப் பணிகளைச் செய்ய வேண்டியதில்லை என்பதை அறிவோம். ஏனெனில் அவர்கள் இராணுவப் பணியைச் செய்தால் மட்டும் போதுமானது என்கிறார்.உழைக்கும் தொழிலாளர்கள் பற்றி அடுத்ததாகக் கூறுகிறார் பிளேட்டோ.

இதில் கைத்தொழில் புரிவோர், விவசாயிகள், வியாபாரிகள் இடம் பெறுவர்.இவர்கள்தான் ஒட்டு மொத்த சமுதாயத்தின் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் செய்யக் கூடியவர்களாவர். சாதாரண மனிதர்களும் இதில் இடம் பெறுவர். ஏனெனில் இவர்களுக்கு உண்மை மற்றும் இலட்சியங்கள் ஆகியவற்றில் ஆர்வம் கிடையாது. இவர்கள் வாழ்க்கைக்குரிய அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்தால் போதுமானது என்று வாழக் கூடியவர்கள்.இவர்கள் பிற பிரிவினரோடு சேர்ந்து வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவர்கள், தன்னடக்கம் கொண்டவர்கள். மற்ற பிரிவினர்கள் வாழ்வதை அப்படியே ஏற்றுக் கொண்டு வாழக் கூடியவர்கள் இவர்கள்.

இலட்சிய அரசில் 3 பிரிவினர்கள் உண்டு என்கிறார் பிளேட்டோ. இதில் அரசன் தத்துவஞானி. தத்துவஞானி போதுமான பயிற்சி நிறைந்தவராக இருந்தால்தான் ஆட்சிபுரிய முடியும் என்கிறார். கல்வி, இசை, உடற்பயிற்சி ஆகியவற்றை 18 வயதுவரை கற்க வேண்டும். ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாது அனைவருக்கும் இப்பயிற்சிகள் கொடுக்கவேண்டும். பின்னர் இரண்டு ஆண்டுகள் இராணுவப் பயிற்சி கொடுக்க வேண்டும். பின்னர் அவர்களுடைய அறிவினைச் சோதித்து, அறிவுடையவர்களுக்கு உயர் கல்வி வழங்க வேண்டும். இப்படிப்பு 21 வயது முதல் 30 வரை 10 ஆண்டுகள் கொண்டதாகும். அவர்கள் இராணுவ வீர்ரகளாக மதிக்கப்படுவர். அவர்களில் படிக்க ஆர்வமுடையவர்களைச் சோதித்து தத்துவப் படிப்பு பயல அனுமதிக்கப்படுவர். இது 5 ஆண்டு படிப்பு. பின்னர் அவர்களது திறமையைச் சோதித்து தகுதியுடையவர்கள் நிர்வாத்தில் நியமிக்கப்படுவர். நிர்வாகத்தில் பல பிரிவுகளிலும் 15 ஆண்டுகள் பணியில் அமர்த்தப்படுவர். 15 ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர், பணி ஓய்வு பெறுவர். அவர்கள் தத்துவத்தில் வல்லுநர்களாக இருப்பதால் அவர்களே அரசாங்கத்தை நடத்துவர். தத்துவக் கல்விதான் தனி மனிதனின் உயர்ந்த பண்பை வளர்க்கக் கூடியது. எனவே தத்துவக் கல்விதான் உயர்ந்த இலட்சிங்களை அடையக் கூடிய சரியான வழி என்று பிளேட்டோ கூறுகின்றார். இருப்பினும் அந்த இலட்சியங்களை அடைவதென்பது எளிதானது அல்ல. மேலும் உயர்ந்த அலட்சியம் என்பது என்ன என்பதிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

இராணுவ வீரர்கள் போதுமான பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்குப் போதுமான வசதிகள் செய்து தர வேண்டும். அவர்களுக்கு பொருட்கள் பற்றிய அக்கறை இருக்கக் கூடாது. அப்போதுதான் பொது நன்மைக்காக அவர்கள் பாடுபடுவர். இல்லையேல் அவர்கள் சொத்து சேர்க்க முயற்சிப்பர். அது கூடாது. மக்களின் பொது நலன் மட்டுமே இராணுவ வீரர்களின் கவனமாக இருக்க வேண்டும்.

மேலும், இராணுவ வீரர்களுக்குக் குடும்பம்கூட இருக்கக்கூடாது. அவர்கள் சந்நியாச வாழ்க்கை வாழ வேண்டுமா? அவர்கள் சன்னியாச வாழ்வு கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இது இராணுவ வீரர்களின் உடல்வலுவை மட்டுமல்ல, அறிவுத் திறனையும் பாதிக்கின்றதெனக் கூறுகின்றார் பிளேட்டோ. எனவே தற்காலிகத் திருமணம் செய்து கொள்ளலாமென அறிவுறுத்துகிறார். ஆனால் திருமணம் உடலும் உள்ளமும் பக்குவப்பட்ட பின்னர்தான் திருமணம் செய்து கொள்ள வேண்மென்கிறார். தற்காலிகத் திருமணம் முலம் பிறக்கும் குழந்தைகள் நிலை என்னவென்று கேள்வி எழுப்பி அக்குழந்தைகளை அரசே எடுத்து வளர்க்க வேண்டுமெனப் பதிலும் கூறுகிறார். தற்காலிகத் திருமணம் எவ்வளவு காலத்திற்கொருமுறை நடைபெற வேண்டுமென்ற கட்டுப்பாட்டையும் அரசே தீர்மானிக்க வேண்டுமென்கிறார்.

இலட்சிய அரசில் ஆண்களும், பெண்களும் சமமானவர்கள்லென பிளேட்டோ கூறுகிறார். ஆண்கள் மாதிரியே பெண்களுக்கும் கல்வி உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் வழங்க வேண்டுமென்கிறார்.

இலட்சிய அரசில் இராணுவ வீரர்க்ள் பொதுவுடைமையை ஏற்கவேண்டும் என்கிறார் பிளேட்டோ. நண்பர்கள் அனைவரும் எல்லாவற்றிலும் பொதுவாக இருக்க வேண்டும். மனைவி. குழந்தை என்ற பற்றிலும் பொதுவாகவே இருக்க வேண்டும், இராணுவ வீரர்கள் ஒரே மாதிரியான வாழ்வு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நாட்டினைக் காக்கக் கூடிய இவர்கள் மனிதப் பண்புடன் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறையில் வாழ வேண்டும் என்கிறார் பிளேட்டோ.

இலட்சிய அரசில் வகுப்பு முறையை அல்லது ஜாதிமுறையைக் கொண்டு வந்துள்ளார் பிளேட்டோ என்று சிலர் வாதிடுகின்றனர். இது உண்மையல்ல, ஏனெனில் வகுப்புமுறை பிறப்பை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கக் கூடியது. பிளேட்டோவின் வகுப்பு முறைமையில் தனி நபர்களின் திறமையை வைத்து முடிவு செய்யப்படுகிறது, வகுப்பாகப் பிரிக்கப்படுகிறது. ஆனால் பிறப்பால் அல்ல.

அரசில் தத்துவஞானிகள் தங்களை அரசில் ஒப்படைக்க வேண்டுமா என்பதற்கு பிளேட்டோவின் பதில் யாதெனில், இவர்கள் மற்றவர்களுக்காக வாழக் கூடிய தியாக வாழ்க்கை வாழ வேண்டுமென்கிறார். ஏனெனில் மனிதன் சமுதாயத்தின் ஒரு பகுதியே தவிர, மனிதன் தனி மனிதல்ல. எனவே, ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தரவல்லது அவன் காட்டும் பிறர் நலமே தவிர தன்னலமல்ல என்பதை தெளிவாக்குகிறார்.

இலட்சிய அரசில் தத்துவஞானிகள் முழுச் சுதந்திரம் கொண்டவர்கள். எந்தவிதமான கட்டுப்பாடுகளும் அவர்களுக்குக் கிடையாது.அரசின் நடவடிக்கைகளைச் சுதந்திரமாக நிர்வகிக்க கூடியவர்கள். நிர்வாகத்தை முழுமையாக நடத்தக் கூடியவர்கள்.

தத்துவஞானிக் கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வருவது கடினமானதென்பது பிளேட்டோவிற்கே முழுமையாகத் தெரியும். ஆயினும் இதனை முறையாக அணுகி, நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார். உயர்ந்த இலட்சியம் தத்துவஞானிகளுக்கு மட்டுமே தெரியுமென்கிறார். அதனை நடைமுறைப்படுத்தும் வழியும் அவர்களுக்கு தெரியுமென்கிறார். இதனை இன்று மக்களாட்சியில் நிராகரித்து, பிரபுக்கள் ஆட்சி என்று சிலரால் ஆளக்கூடிய முறை என வர்ணிக்கின்றார், மக்களாட்சி இன்று தழைக்க வேண்டுமானால், ஆட்சியை ஆளக்கூடிய விவரம் தெரிந்த சிலரிடம் ஒப்படைப்பது தான் சிறந்தது ஆகும். இரண்டாவதாக, அரசியல் முப்பிரிவினர் முறைமையயை பிளேட்டோ கூறவுவது ஏற்புடையதுயல்ல. மூன்றவாதாக, மனித மனம் என்பது ஒரே மாதியானதுயல்ல. மாற்றத்திற்க்கு இலக்கானது. மாறும் தன்மை பயத்தது. எனவே மனத்திறக்குள்ளே போட்டோ போட்டி நடைபெற்று கொண்டே வரும்.

நான்காவ்தாக, பொதுவுடைமைக் கோட்பாடானது இலட்சிய அரசின் மிகைப்பாடாக உள்ளது. சமுதாயம் முன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்பது பொதுவுடைமைக் கோட்பாட்டிலிருந்து விலகுவதாக உள்ளது. ஐந்தாவதாக, இலட்சிய அரசில் நீதிமன்றம் என்பது கிடையாது. ஆறாவதாக, பெரும்பான்மை மக்களின் எண்ணங்கள் புறக்கணிக்கப்படுகின்றது. பிளாட்டோ தத்துவஞானிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார். சிறந்த அறிவுடையயோர் அனைவரும் உண்மையானவர்களாக இருப்பார்கள் என்பது ஒரு தவறான கருத்து. சராசரி அறிவுடையவர்கள் பற்றி எதுவுமே பிளேட்டோ கூறாதது மற்றுமொரு குறைபாடு. ஏழாவதாக, அரசின் சட்டங்கள் மக்களின் சிறந்த பண்புகளை பாதுகாக்கவல்லது, மனைவியைத் தேர்ந்தெடுக்ககும் உரிமை, நிரந்தரத் திருமணம் ஆகிய சிறந்த பண்புகள் மறுக்கப்பட்டுள்ளன, குடும்பம் தேவையில்லையென்பதற்கு பல காரணங்களை பிளேட்டோ கூறுகின்றார், இருப்பினும் இவரது இலட்சிய அரசு எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. இலட்சிய அரசு உண்மை நிலைப்பாட்டை விளக்கவில்லை என்பதை அறியலாம்.

### 1.6 கல்வி:-

கல்வி மூலமே மனிதர்களுடைய திறமைகளையும், பண்புகளை உருவாக்க முடியுமென்று பிளேட்டோ கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். பணிகளைத் திறமையாகச் செய்ய உதவுவது கல்வியாகும். அரசின் தேவகைளுக்காக தனி மனிதன் தன்மை அனுசரித்து செயல்படுத்த வைப்பது கல்வி. அறிவகைக் காட்டிலும் உயர்வானது எதுவுமில்லை என்கிறார். பிளேட்டோ உடலுக்கு உணவு எப்படியோ, அது மாதிரி ஆத்மாவிற்கு உயிரூட்டவல்லது கல்வி என்கிறார்.

பிளேட்டோவின் கல்வி முறை இரண்டு பிரிவுகள் அடங்கியதாகும்.

அ) ஆரம்பக் கல்வி

ஆ) உயர் கல்வி

**அ. ஆரம்பக் கல்வி:**

ஆரம்பக் கல்வி மூன்று படிநிலைகள் அடங்கியதாக கல்விமுறையை பிளேட்டோ விளக்குகிறார். முதலாவதாக இளமைக் கல்வி ஆறு வயது வரைக்கும் கற்றுத்தர கூடியதாகும். மதக் கல்வி மற்றும் அறநெறி ஆகியன இளமைக் கல்வியில் கற்றுத் தரவேண்டிய பாடங்களாகும். இரண்டாவது நிலை ஆறு வயது முதல் 18 வயது வரையிலும் கற்றுத் தரக் கூடியதாகும். இவ்வயதில் உடல்நிலை மேம்பாடு மற்றும் அறிவு வளர்ச்சி ஆகியன கற்றுத் தரவேண்டும். இசை அறிவு வளர்ச்சிக்கும், உடற்பயிற்சி உடல் நலத்திற்குமாக வரையறுத்துள்ளார். இப்பாடத்திட்டம் 18 வயது முதல் 20ம் வயது வரை நடைமுறையில் இருக்கும் மூன்றாம் நிலைக் கல்வியில் இராணுவப் பயிற்சி உட்பட அனைத்து உடற்பயிற்சியும் இதில் கற்றுத்தரப்பட வேண்டும். திறமை, கட்டுப்பாடு ஒழுக்கம் மற்றும் பண்புகள் ஆகியன வளர உடற்பயிற்சிக் கல்வி அவசியமென பிளேட்டோ கூறுகின்றார். இந்நிலையில் அறிவுத் திறனைச் சோதித்துப் பார்த்து, மேம்படுத்துவது இம்மூன்றாம் நிலைக் கல்வியில் இடம் பெறும்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை கேள்வி.**
2.பிளேட்டோ ஆரம்பக் கல்வி முறையை கூறுக.

**உயர் கல்வி:**

உயர் கல்வியின் நோக்கம் அறிவை மேம்படுத்தல். 20வது வயது முதல் 30 வயது வரையிலும் உயர்கல்வியின் முதல் கட்டம். இதுவரை படித்த கல்வியை நடைமுறைப்படுத்துவதான் உயர்கல்வியின் நோக்கம். எனவே 30 வயதில் ஒரு தேர்வு நடத்தப்படும். இத்தேர்வில் தோல்வியுற்றவர்கள் அரசின் துணை மற்றும் சார்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுவர். இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் உயர்கல்வியின் அடுத்த நிலைக்கு அனுப்பப்படுவர். இந்தக் காலத்தில் பயிற்சியானது கல்வி கேள்விகள் நிறைந்ததாக விவாதத் திறாய்வு கொண்ட இயற்பியல் வாதக் கல்வியாக இருக்கும். இது ஐந்து வருடங்களுக்கு கொடுக்கப்படும். 35வது வயதில் பயிற்சிக்கு பின்னர் நிர்வாகிகளாக நியமிக்கப்படுவர். இவர்க்ள 50 வயதுவரை பதவியில் இருப்பர்.

பிளேட்டோவின் கல்விமுறை மனதை மையமாக வைத்து அமைக்கப்பட்டுள்ளது. நல்ல மனதைத் தீர்மானிப்பது சூழ்நிலை. எனவே குழந்தைகளுக்கு நல்ல சூழ்நிலை அமைத்துக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நல்ல மனம் வளரும். குழந்தைகள் கட்டுக்கதைகளைக் கேட்க நேர்ந்தால். அது அவர்களைக் கோழைகளாக மாற்றிவிடும் என்கிறார்.

புலவர்கள் நல்ல பாடல்களை குழந்தைகளுக்காக எழுத வேண்டுமென அரசு புலவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நியாயமானதும் நல்ல செயல்கள் மட்டுமே பாடல்களில் இடம் பெற வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. மனக் கட்டுப்பாட்டை வலியுறுத்தும் வண்ணமே பிளேட்டோவின் கல்வி அமைந்துள்ளது. மண்தை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டுமென்ற பயிற்சி முறைகளையும், உடலைக் கட்டுப்படுத்துவது குறித்தும் பிளேட்டோ கூறுகின்றார். வெளிப்படையான பயிற்சிகள்மூலம் மனதைக் கட்டுப்படுத்த முடியும் என்று பிளேட்டோ எண்ணியதால் பயிற்சியின் அவசியத்தை பிளேட்டோ வலியுறுத்துகின்றார்.

உடல் நலம் மட்டுமல்ல மனநலமும் தேவையென்பதை உணர்த்துகிறார் பிளேட்டோ. இருபது வயதுவரை இராணுவ வீரர்களுக்கு எல்லா வகையான பயிற்சியும் கொடுக்க வேண்டுமெனக் கூறுகின்றார். கணக்கு, புவியியல், வானவியல் ஆகிய பாடங்கள் மாற்றயிலாத உண்மைகளை உணர்த்துகின்றன என பிளேட்டோ கூறுகின்றார். கணக்கின் முக்கியத்துவத்தைக் கூறும்போது, எல்லாப் பாடங்களையும் விரைவாகப் படிக்க கூடிய ஆற்றல் மிக்கவர்கள் கணக்கை எடுத்துப் படிப்பவர்கள் என்கிறார். உயர் கல்வியில் கணக்கை கட்டாயம் படிக்க வேண்டுமென்கிறார் பிளேட்டோ.

தற்கால மக்களாட்சி சமூகத்திற்கு பிளேட்டோவின் கல்வி முறை பொருத்தமானதல்ல. இது மக்களாட்சிக்கு எதிரான தன்மை படைத்தாக அமைந்துள்ளது. உயர் கல்விக்கு கொடுத்துள்ள முக்கியத்துவம் மற்றும் கணக்கு பாடத்திற்குக் கொடுத்துள்ள அதிக முக்கியத்துவம் ஏற்கப்படக் கூடியதாக இல்லை.

### *1.7 நீதி :*

பிளேட்டோ நீதி என்பதன் பொருளையும் அது சமுகத்திற்கு எவ்வளவு அவசியமானதென்பதையும் கூறுகின்றார். நீதியென்பது ஒழுங்கான நடத்தை என்கிறார். பிளேட்டோ அதை அரசிற்கும் தனி நபருக்கும் இடையில் அமையப் பெறுகின்ற செயலாகப் பாவிக்கிறார். நீதி என்றால் என்ன? அது எங்குள்ளது? என்று பல கேள்விகளை எழுப்புகின்றார். ஒரு நல்ல அரசிற்கு பலவகையான நேர்மைப் பண்புகள் தேவை என்கிறார். அறிவு, வீரம், நிதானம் மற்றும் நீ தி ஆகிய சில நேர்மைப் பண்புகளாகும்.

விபரம் தெரிந்த மக்களால் அரசின் பணிகளைச் செய்யக் கூடியது அறிவு. இவர்கள் தான் நாட்டை ஆளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இந்த மாதிரி அறிவு கொண்டவர்கள் மிகக் குறைவாகவே இருப்பர். வீரமிக்கவர்கள் நாட்டின் பாதுகாப்பைக் காக்கக் கூடியவர்கள் மிகக் குறைவாகவே இருப்பர். வீரமிக்கவர்கள் நாட்டின் பாதுகாப்பைக் காக்கக் கூடியவர்கள். மக்களின் வீரத்தையும் அடிமைகளின் வீரத்தையும் பிளாட்டோ பிரித்துக் காட்டுகிறார். பிளேட்டோ அடிமையின் வீரம் பகுத்தறிவில்லாதது. மூடத்தனமானது சட்டத்தின்பால் பயன்படுத்தப்படாத ஒன்று. மனக்கட்டுப்பாடு அல்லது ஒழுங்கு என்பது மூன்றாவது நேர்மைப் பண்பென பிளேட்டோ கூறுகின்றார். தன்னைக்காக்கக் கூடியது மனக் தன்னை கட்டுப்பாடு. மனக்கட்டுப்பாடு ஏற்பட்டால் ஓர் இணக்கம் ஏற்படும். இணக்கம் ஏற்பட்டால் ஒற்றுமை எற்படும். இந்த ஒற்றுமைதான் அரசு. கடைசி நேர்மைப் பண்பு நீதியாகும். நீதி என்பது மக்கள் அவரவர் பதவிகளில் அமர்ந்து அப் பதவியின் பணிகளை முறையாகச் செய்வதாகும். மற்றவர் பணிகளில் குறுக்கீடு செய்யாமல் இருப்பதும் நீதி தான் ஆகும். நீதி அடிப்படையில்தான் அரசியலில் பல நேர்மைப் பண்புகள் தழைக்க முடியும் என்கிறார்.

அரசிற்கு எவ்வாறு நீதியுள்ளதோ அதேபோல தனி நபருக்கும் நீதி முக்கியம். அரசின் நீதிக்குரிய மூன்று அரங்கங்கள் பகுத்தறிவு, வீரியம், பசி ஆகியன தனி நபருக்கும் பொருந்தும். ஒவ்வொரு மனிதனும் தனது பணியை நியைவேற்றுவதே நீதி என்பதாகும். வாழ்வின் முக்கிய குறிக்கோளே நீதி என்பது தான் என பிளேட்டோ கூறுகின்றார். நீதி நம்மிடம் உள்ளது இம்மூன்று அங்கங்களில் வித்தியாசம் அல்லது முரண்பாடு நேரிட்டால் அநீதி ஏற்படும். அநீதியால் ஒழுக்கமின்மை,கோழைத்தனம், அறியாமை ஆகியன ஏற்படும் என எச்சரிக்கிறார் பிளேட்டோ.

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை கேள்வி.**
> 3.பிளேட்டோ நாட்டிற்கு நீதி தேவை என்பதை எவ்வாறு விளக்குகிறார்.

பிளேட்டோவின் நிதக் கோட்பாட்டிற்கு சட்டபூர்வமான அந்தஸ்து வழங்கப்படவில்லை. சட்டப்பூர்வமானது என்பதற்கும் அறநெறி ஆகிய இரண்டிற்கும் தெளிவான விளக்கம் தரவில்லை. மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதென்பது கடினம். இப்பிரிவுகளில் ஒரு பிரிவிற்கு ஆட்சியை செலுத்தும் உரிமையை நியாமான வகுப்பினர் என்று வழங்குவது மற்ற இரண்டு பிரிவுகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. தவிர அறநெறிக்கு முரண்பட்டதாகவும் இவரது நீதிக் கோட்பாடு உள்ளதெனக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

## 1.8 பொதுவுடைமை :

பிளேட்டோவின் பொதுவுடைமை விசித்திரமான ஒன்று. இது சமூகத்தின் பொருளாதார அமைப்பபைப் பாதிக்கவல்லது. இது இவரது நீதிக் கோட்பாட்டின்பால் அமைக்கப்பட்ட ஒன்று பொதுவுடைமையல்லாத நீதியினால் பகுத்தறிவு, வீரியம், பசி ஆகிய இரண்டிற்குமிடையே மோதல் உருவாகும். சொத்து, குடும்பப் பாசம், தனி நபர் வகுப்பு ஆகியன சமூகத்தில் மனிதனின் கடமைகளைச் செய்ய விடாது. கவனத்தைத் திசை திருப்பவல்லவை. இந்த அடிப்படையில்தான் பிளேட்டோவின் பொதுவுடைமைத் தத்துவம் அமைந்துள்ளது.

அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரம் ஒருவர் கையில் அமையப் பெற்றால் அரசியல் தூய்மைக்கு ஆபத்து ஏற்படுமென்கிறார் பிளட்டோ. இதனால் லஞ்சம் தலையெடுக்கும் என்கிறார். பொதுவுடையின் மூலம் மனதைத் தூய்மைப்படுத்த முடியமென்று பிளேட்டோ உணர்த்துகிறார். ஆனால்,பிளேட்டோவின் பொதுவுடைமை முழுமையான பொதுவுடைமை அல்ல. ஏதெனில் அதில் சமூகத்தின் மூன்றாவது பிரிவு மக்களைச் சேர்க்கவில்லை. மூன்றாவது பிரிவு மக்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டில் உள்ளதால், மிகவும் ஏழைகளாகின்றனர். கிரேக்கர்களிடையே பொதுவுடைமையானது, நிலத்தை பொதுவாக வைத்துக் கொள்வதாகும். இந்நிலம் அனைத்துப் பழங்குடியினர் மற்றும் பிற இனத்தார்க்கும் பொதுவாக மதிக்கப்பட்டது. அரசிடம் நிலம் இருக்க வேண்டுமென்பதல்ல. நண்பர்கள், பொருட்கள் அனைத்தும் பொதுவான பொருட்களென பித்தாகோரசின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அடிமைகளுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்டது.

### சொத்தில் பொதுவுடைமை :

பிளேட்டோவின் நீதிக் கோட்பாட்டால் உருவானதுதான் சொத்தில் பொதுவுடைமைக்கோட்பாடாகும். இது இன்றைய பொதுவுடைமையிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. தற்காலப் பொதுவடைமை என்பது பொருள் சார்ந்தது. ஆனால் பிளேட்டோ கூறும் பொதுவுடைமை பொருள் சார்ந்தது அல்ல. ஏதெனில் அரசரின் கடமையானது சொத்தைக் காப்பாற்றுவதாகும். எனவே பிளேட்டோ கூறும் பொதுவுடைமை பொருள்களுக்கு எதிர்மறையானது. ஆனால் இன்றைய

பொதுவுடைமை பொருள்களுடன் ஆக்கபூர்வமானது. தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்கல், சமூகமயமாதல் ஆகியவற்றோடு பிளேட்டோவின் பொதுவுடைமை தொடர்வடையதல்ல. பிளேட்டோவின் பொதுவுடைமை போர் வீரர்களுக்கும், பாதுகாவலர்களுக்குமாக உருவானது. இவர்கள் பொது உணவறையில் தான் உண்ண வேண்டும். பிளேட்டோவின் பொதுவுடைமை கட்டாயப் பணியாகும். அது வெறுமனே மகிழ்ச்சியைப் பகிர்ந்தளிக்கக் கூடிய முறையல்ல என்கிறார். பொதுவுடைமைக் கோட்பாட்டின் அடிப்படை தத்துவ ரீதியானது. ஒரு வரையறுக்கப்பட்ட செயலின் அடிப்படையில் அமைந்துள்ளது. இச்செயல் பற்றி பிளேட்டோ குடியரசு முழுவதிலும் விளக்கியுள்ளார். பொருளும் வறுமையும் அரசாங்கத்தின் செயல்பாட்டிற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன. எனவே இரண்டும் அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டவைகளாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பிளேட்டோ. பிளேட்டோவின் சொத்தில் பொதுவுடைமைக் கோட்பாடு பலராலும் குறிப்பாக, அரிஸ்டாட்டிலால் விமர்சிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனிடமும் தனக்கென்று சொத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்ற உணர்வு இயல்பாகவே உள்ளது. அவ்வுணர்வின் மூலமாகவே அவன் தனது தனித் தன்மையையும் ஆளுமையையயம் புலப்படுத்துகின்றான். இது ஆட்சியாளருக்கு தனிநபர் மட்டுமின்றி பிற வகுப்பினருக்கும் பொருந்தும். ஆனால் பிளேட்டோ ஆட்சியாளருக்கு தனி நபர் சொத்துரிமையை அளிக்க மறுக்கின்றார். இதனால் சொத்து சேர்க்க வேண்டுமென்ற அவனது உணர்வு திருப்தியடையாமல் உள்ளது. மேலும் பிளேட்டோவின் பொதுவுடைமை உற்பத்தியாளரைப் பாதிக்கவில்லை.

அரசில் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குப் பதிலாக பிளேட்டோவின் பொதுவுடைமை மக்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இதனால் ஒற்றுமை குலைகின்றது. சொத்தில் பொதுவுடைமையின் விளைவாகப் போட்டியும் ஒற்றுமையின்மையும் ஏற்படுகின்றன. சாதாரணமாக தனி நபர் சொத்துரிமை நாகரிகத்தின் சின்னமாகக் கருதப்படுகின்றது. அதனை அழிக்க முற்படும்பொழுது பிறருக்கு உதவி செய்தல், கொடை போன்ற உணர்வுகளும் அழிக்கப்படுகின்றன. பிளேட்டோவின் பொதுவுடைமை சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றைப் பலியிட்டு ஒற்றுமையை உருவாக்க முனைகின்றது. இதனால், சர்வாதிகாரம் தோன்றுகிறது. மனிதன் அரசின் நலன்களுக்கு முழுவதும் அடிமையாக்கப்படுகிறான். அரிஸ்டாட்டில்

அரிஸ்டாட்டில் கூறியதுபோல் தீமைகள் கெடுதல்கள் சொத்தினால் ஏற்படுவது அல்ல. மனிதன் இயற்கையிலேயே கெட்டவனாக இருப்பதால்தான் என்பதை ஏற்கத்தான் வேண்டும்.

**பெண்களில் பொதுவுடைமை :**

பெண்களில் பொதுவுடைமை பற்றி பிளேட்டோ கூறுகின்றார். ஆட்சியாளர்களுக்குக் குடும்பம் தேவையில்லை என்பதற்குப் பல காரணங்கள் கூறுகிறார். முதலில் தனியார் சொத்தை நீக்குவது பற்றி கூறுகிறார். சொத்தில்லாமல் குடும்பத்தைப் பராமரிக்க முடியாது என்கிறார். குடும்பப்பாசம் ஆட்சியாளர்கள் கவனம் முழுவதும் ஆட்சியில் செலுத்துவதற்கு இடையூறாக அமையும். எனவே குடும்பப் பாசத்திலிருந்து விடுபடக் கூறுகிறார். பிளேட்டோ குடும்பத்தை ஒழிப்பதன்மூலம் பெண்களுக்கு சுதந்திரம் கிடைக்குமென்று எண்ணுகிறார். பெண்களின் பொதுவுடைமையால் ஆட்சியாளர்கள் தங்கள் கவனத்தை அறிவியல் பூர்வமாக திட்டமிட்டுச் செயல்களைச் செய்யலாம் என்று கூறுகிறார். பொது வாழ்விற்கெனச் சட்டம் இருந்தால் ஒற்றுமை உருவாகும். ஏனெனில் தனியார் நலம் அல்லது மகிழ்ச்சி என்பது கிடையாது அல்லவா. எனவே பெண்களில் பொதுவுடைமை மூலமாக ஒற்றுமை நிலவும். தவிர, மக்கள் தொகைப் பெருக்கத்தையும் ஒழுங்குபடுத்தக் கூடியது பெண்களின் பொதுவுடைமையாகும்.

பெண்களில் பொதுவுடைமைக் கோட்பாட்டை பிளேட்டோ தெளிவாக்க கோட்பாட்டளவில் விளக்கினாலும், அது நடைமுறைக்கு உகந்ததல்ல எனப் பலரும் வாதிடுகின்றனர். சமூகத்தில் பல தீமைகளை உருவாக வழி வகுத்துவிடும். இந்தக் கோட்பாடுஅறநெறி என்பது இல்லாமல் போய்விடும். திருமணம் என்பதன் நோக்கமே சிதறடிக்கப்பட்டுவிடும். தற்காலிகத் திருமணங்கள் குறித்து பிளேட்டோ கூறும் கருத்துக்களும் ஏற்க்க கூடியதல்ல. குடும்பம் என்பது மனிதர்களின் உண்மையான செயல் என்பதையும் நினைக்கிறார். ஆயினும் பெண்கள் பொதுவுடைமையால் பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலம் என்ன? வளர்க்க வாய்ப்பளித்தால் மட்டும் போதாது. பாசத்தோடு வளர்ந்தால்தான் குழந்தைகளின் மன ஆரோக்கியம் வளரும். எனவே சமூகத்தால் ஏற்கப்படாத புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளாக வளர்வர். அதுநாட்டிற்கு உகந்ததல்ல.

பிளேட்டோ ஆட்சியாளர்களின் பாலுணர்வுக்கு தடைவிதிக்கவில்லை. இது அறிவியல் பூர்வமாக நெறிப்படுத்தபடவேண்டும். ஆண்களும் பெண்களும் சந்திக்குமாறு திருவிழாவைக்களை நடத்த வேண்டும். சீட்டுக் குலுக்கி பெயர்களை தேர்ந்தெடுத்து, ஆணும் பெண்ணும் கூடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு சீட்டுக் குலுக்கும்போது ஒரு சிறந்த ஆணையும் ஒரு நல்ல பெண்ணையும் இணைத்து விடுமாறு வழிமுறைகளைக் கையாள வேண்டும். அவர்களுடைய கூட்டுறவால் தோன்றும் குழந்தைகள் பிறந்தவுடனேயே தாய்மாரிடமிருந்து பிரிக்கப்பட்டு செவிலியர்கள்வசம் ஒப்படைக்கப்பட வேண்டும். எந்தவொரு குழந்தையும் தன்னைப் பெற்றோர் யாரென அறியக் கூடாது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் கூடி வாழ்ந்த ஆண், பெண் அனைவரும் கூடிய காலத்தில் பிறந்த எல்லாக் குழந்தைகளையும் தம் சொந்தக் குழந்தைகளாகவே அரசு பாவிக்க வேண்டும். தாம் அனைவரது சகோதர, சகோதரியரென எண்ணுமாறு அக்குழந்தைகளுக்கும் கற்பிக்க வேண்டும். இவ்வாறாக ஆளும் வகுப்பு முழுவதும் ஒரே குடும்பமாக ஆகிறது. பெண்கள் கூடி வாழவதற்கான பருவம் அவர்களுடைய 20 வயது முதல் 45 வயது வரையாகும். ஆண்களுக்கான காலம் 25 வயது முதல் 55 வயது வரையாகும். நகர அரசின் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு தேவையான எண்ணக்கையிலேயே குழந்தை பிறப்பு ஏற்படச் செய்ய வேண்டும்.

## 1.9 பிளேட்டோவின் சட்டங்கள்:

பிளேட்டோ நடைமுறையில் எந்தவிதமான அரசாங்க முறையைக் கொண்டு வரலாமென ஆராய்கிறார். ஏனெனில், இவரது இலட்சிய அரசை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பதை உணர்ந்தார். மேலும் தன்னுடைய பழுத்த உலக அனுபவத்தால் புதிய நடைமுறை அரசாங்கத்தை கொண்டுவர முயற்சித்தார். இதுதான் இவர் கூறும் இரண்டாவது வகை சிறந்த அரசாங்கம். இவர் கூறும் அரசாங்கம் இலட்சிய அரசிலிருந்து வேறுபட்டது. இது சட்ட அரசு அறிவாளிகளின் அரசல்ல. தனியார் உரிமை ஆகியன ஆட்சியாளருக்கும் குடிமக்களுக்கும் வழங்கியதாயினும், தனி நபர்களுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. சட்ட அரசின் அடிப்படைகள் பற்றிக் கூறுகிறார். மன்னராட்சி, மக்களாட்சி என இருவகயைாக அரசாங்கங்களைக் கூறிவிட்டு, இவை இரண்டும் சேர்ந்த கலவைதான் தனது இரண்டாவது வகை அரசாங்கம் என்கிறார்.

அரசின் பணி யாதெனில், மக்கள் தொகை பெருகாமல் பார்த்துக் கொள்வதும், மக்களின் சொத்துக்களைக்காப்பதும் ஆகும். ஏழை, பணக்காரன் என்ற இருவகைப் பிரிவுகள் நாட்டில் வராத அளவிற்குச் சமத்துவமாக வாழ வழிவகை செய்ய வேண்டும். மக்களுக்கு அதிகமான சொத்துக்கள் கிடைக்குமானால், அவற்றைஅவர்கள் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். சொத்துக்கள் அனைத்தும் அரசாங்கத்திடம் பதிவு செய்திருக்க வேண்டும். வரதட்சணை, வட்டிக்குப் பணம் கொடுத்தல் ஆகியன தடை செய்யப்பட வேண்டும். பிளேட்டோவின் இரண்டாவதுவகை அரசாங்கத்தில் மொத்தம் 37 பாதுகாவலர் ஆட்சியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.அவர்களுக்கு தகுதி வரையறை விரிவான வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். தேர்வுக் குழுவில் 360 பேர்கள் இடம்பெற வேண்டும். இவர்களை மக்கள் சேர்ந்து எடுப்பர். 50 வயது நிரம்பிய ஒருவர் கல்வி அமைச்சராக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

ஐந்தாண்டுகள் இவர் பதவியில் இருப்பார். குடியரசில் கூறியது மாதிரியே சட்டங்களிலும் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் பிளேட்டோ. இவர் கூறும் சட்டம் கல்வியையும், கட்டாயப் பணிகளையும் வலியுறுத்தக் கூடியது. இரண்டு பாகங்களாக சட்டம் அமைந்துள்ளது. இவை அரசின் அடிப்படைச் சட்டங்களாகும். முதல் பகுதி முன்முறையையும், அடுத்த பகுதி சட்டத்தையும் கூறுகின்றது. இவை எளிமையாகவும், தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### 1.10 தொகுப்புரை:

பிளேட்டோ தனது குடியரசு நூலில் இலட்சிய அரசு பற்றி சிறப்பாக விளக்கி உள்ளார். இருந்தபோதிலும், இவ்வரசு தற்காலத்திற்கு உகந்ததுயில்லை விமார்ச்சிககப்படுகிறது மற்றும் விவாதத்திற்குரியதாகும். அதேபோல், இவ்வருடைய பெண்கள் பொதுவுடைமை கொள்கையை விவாதத்திற்குரியதாகும். பிளோட்டோ தனது இறுதிக் காலத்தில் எழுதப்பட்ட சட்டம் என்ற நூலில் தற்காலத்திற்குகேற்ற அரசாங்களை பற்றி கூறுவது வரவேற்க்கத்தாகும்.

### *1.11 முக்கிய வார்த்தைகள்:*

குடியரசு,இலட்சிய அரசு, பொதுவுடமை, வகுப்பு முறை, உயர் கல்வி, பெண்கள், சட்டங்கள்,

### *1.12பரிந்துரை நூல்கள் :*


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.


### *1.13 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக்களுக்கான பதில்கள்:*

*வினா எண்.1 - இந்த வினாக்கள் விடையை பகுதி எண் 1:3 ல் அறிக*

*வினா எண்.2 - இந்த வினாக்கள் விடையை பகுதி எண் 1:6 ல் அறிக*

*வினா எண்.3 - இந்த வினாக்கள் விடையை பகுதி எண் 1:7 ல் அறிக*

### *1.14 மாதிரி வினாக்கள்:*

1. *பிளேட்டோவின் நீதிபற்றிய கோட்பாட்டை ஆராய்க.*
2. *பிளேட்டோவின் குடியரசு பற்றி ஒரு கட்டுரை வரைக.*
3. *பிளேட்டோவின் அறிஞர் - அரசர் கொள்கையை விளக்குக.*
4. *பிளேட்டோவின் பொதுவுடைமை கருத்துக்களை ஆராய்க.*

## அலகு - 3

## அரிஸ்டாட்டில்

(304 B.C - 322 B.C)

### அறிமுகம்:

கிரேக்க தத்துவஞானிகளின் வரிசையில் முக்கியமான இடத்தைப் பெற்றவர் அரிஸ்டாட்டில் ஆவார். அரசியலுக்கு இலக்கணம் வகுத்தவர் இவர்தான் என்று கூட விமர்சிப்பர். இவர் கி.மு. 384ம் ஆண்டில் பிறந்தார் இவருடைய தந்தை அரசு மருத்துவர். மாசிடோனியா அரசர் இரண்டாம் அரிஸ்டாலின் அரண்மனை மருத்துவர் அவரது தந்தை. செல்வச் செழிப்பின் பின்னணியில் பிறந்தவர் அரிஸ்டாட்டில். இருப்பினும் இவரது சிந்தனை எண்ணம் ஆகியன மக்களை எவ்வாறு நல்வழிப்படுத்துவது. நல்லாட்சியை எவ்வாறு கொண்டு வருவது என்ற நடைமுறைச் சிந்தனைதான் இவருடைய எழுத்துக்களில் பிரதிபலிக்கின்றது.

அரிஸ்டாட்டிலின் வாழ்க்கையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு கி.மு. 367 முதல் 347வரையிலும் அரிஸ்டாட்டில் ஏதேன்சில் கல்வி கற்ற காலமாகும். பின்னர் கி.மு 34 முதல் 335 வரையில் அவர் உலகமெங்கும் சுற்றிய அனுபவத்தைக் குறிப்பதாகும். மூன்றாம் பிரிவு கி.மு.335 முதல் 322 வரை அவர் ஆசிரியராப் பணியாற்றிய காலத்தையும் குறிக்கும்.

### நோக்கங்கள்:

1. அரிஸ்டாட்டிலின் அரசு பற்றிய விளக்கத்தை அறிதல் .
2. குடியுரிமை பற்றிய விளக்கம் அறிதல்.
3. அரசியலைப்புக்களை வகைப்படுத்தலின் அடிப்படை கொள்கைகள் பற்றி விளக்கம்.
4. இலட்சிய அரசு பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துக்கள் பற்றிய விளக்கம்.
5. அரிஸ்டாட்டில் நீதி பற்றிய அடிப்படை விளக்கம்.

**வடிவமைப்பு :**

அரிஸ்டாட்டீல் இளமைப்பருவம்
அரசு
குடியுரிமை
அடிமை முறை
அரசியலைமைப்புகளை வகைப்படுதல்
சட்டம்
நீதி சொத்து
நீதி
புரட்சி
இலட்சியம் அரசு
பிளேட்டோவிற்கும் அரிஸ்டாட்டீலுக்கு உள்ள வேறுபாடுகள்
தொகுப்பு
முக்கியவார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
வினாக்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவுச் சோதனைக் வினாக்களுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

### 1.1. இளமைப் பருவம் :

அரிஸ்டாட்டில் தனது 17வது வயதில் கிரேக்க நாட்டின் கல்வி மையமாகக்கருதப்பட்ட ஏதேன்சிற்கு வந்தார். இங்கு 20 ஆண்டுகாலம் அங்கு தங்கி, பல பாடங்களைப் படித்தார். அவருக்கு ஆசிரியராக இருந்தவர். புகழ் பெற்ற பிளேட்டோவாகும். பிளேட்டோவின் இறப்பிற்குப் பின்னர் பிளேட்டோவின் புகழ் பரப்ப கல்வி மையம் ஒன்றைத் துவக்கி பணியாற்றினார். பின்னர் இம்மையத் தலைமையை பிளேட்டோவின் உறவினர் பெற்றதால் ஏதேன்சை விட்டு வெளியேறினார். நாடுகள் பல சென்று சுற்றிப் பார்த்தார். பின்னர் அஸஸ் என்ற இடத்தில் குடியேறினார். இங்கு கி.மு.347 முதல் 344 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார் இங்கு வாழ்ந்து வந்த நேரத்தில் ஹெர்மியாஸ் (Hermisas) என்ற அரச குடும்ப உறவு இவருக்குக் கிடைத்தது. அரச குடும்பத்திலேயே திருமணமும் செய்து கொண்டார். இதனால் அரசாட்சி பற்றித் தெளிவாக, தனிப்பட்ட முறையில் கண்ணுற வாய்ப்புக் கிடைத்தது.பின்னர் கி.மு.344ல் அங்கிருந்து வெளியேறி லெங்காங் தீவிற்குச் சென்று கடலிய உயிரியலைப் (Marine Biology) படித்தார்.

மாசிடோனியா அரசரின் அழைப்பிற்கிணங்க அந்நாட்டு இளவரசர் அலெக்ஸாண்டருக்கு ஆசிரியராக கி.மு. 342 முதல் 336 வரை இருந்தார். அலெக்ஸாண்டர் கிமு 336ல் அரசாங்கப் பொறுப்பேற்றதால் அரிஸ்டாட்டில் மறுபடியும் ஏதேன்சு திரும்பினார். இங்கு ஒரு பள்ளியை நிறுவி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினர். இந்தப் பள்ளியின் பெயர் லைசியம் என்பதாகும். அலெக்ஸாண்டர் இறப்பிற்குப் பின்னர் மாசிடோனியான நாட்டில் ஏராளமான அரசியல் பிரச்சனைகள் எழுந்தன. அரிஸ்டாட்டிலையும் அரசியல் பிரச்சனையில் தொடர்புபடுத்தியதால் ஏதேன்சை விட்டு வெளியேறினார். இவர் விசாரணை மட்டும் பல பிரச்சனைகளில் தொடர்புபடுத்தியதால் ஏதேன்சை விட்டு வெளியேறினார். இவர் விசாரணை மட்டும் பல பிரச்சனைகளில் சிக்கித் தவித்தபொழுது, அலெக்ஸாண்டரின் பிரதிநிதி இவருக்கு உதவி செய்தார். கி.மு. 322ல் அரிஸ்டாட்டில் மறைந்தார்.

### 1.2 அரசு:

அரிஸ்டாட்டில் முதலில் அரசின் தோற்றத்தைப் பற்றிக் கூறுகின்றார். ஆணும் பெண்ணும் தனித் தனியாக வாழ முடியாததால், முதன் முதலாகக் குடும்பம், ஆண் பெண் இருவர்களின் பரஸ்பரத் தேவைக்காக உருவானது அரசு என்கிறார். குடும்பம் என்பது இவர்கள் இல்லாமல் உருவாகாது. குடும்பம் என்பதில் கணவன் மனைவி மற்றும் அடிமை ஆகிய மூவரைக் கொண்டதாகும். குடும்பம் என்பது இயற்கையாக உருவான அமைப்பு. மனிதர்களின் பொருட்களின் தேவையை நிறைவு செய்வதற்காக உருவானது குடும்பம். குடும்பம் தனது பொருட் தேவைகளில் திருப்தி அடைந்தால் நிம்மதியாக இருப்பான். குடும்பத்தின் தேவைகள் அதிகரிக்கும்போது அவற்றை அக்குடும்பத்தால் நிறைவு செய்ய இயலாத நேரத்தில் குடும்பங்கள் மற்ற குடும்பங்களின் உதவியை நாடுகின்றன. இதன் விளைவாக உருவானது கிராமம் ஆகும். கிராமம் என்பதுதான் முதல் சமூகம். பல கிராமங்கள் சேர்ந்து உருவானது அரசாகும். அரசு முழுமையானது. தன்னிறைவானது. மக்களின் பலதரப்பட்ட நலன்களையும் காப்பது அரசு. அரிஸ்டாட்டில் அரசுக்கும் சமுகத்திற்கும் வேறுபாடு கூறவில்லை. அவை இரண்டுமே ஒருமித்த திட்டத்தோடு மக்களின் பொது நலனைக் குறிக்கோளாகக் கொண்டது. ஏனெனில் அரசு உயர்வானது. எல்லாவற்றிற்கும் மேலானது அரசு. அரசு என்பது வெறுமனே குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியவற்றின் சேர்க்கை அல்ல. குடும்பம் என்பதற்கு முன்னர் உள்ளதுதான் அரசு என்கிறார்.

அரசு உருவாக்கத்திற்கான குடும்பம் முதல் உருவாகி, பின்னர் சமூகம், சமூகங்களின் கூட்டமைப்பு அரசு என்று காலத்தால் கூறலாம். ஆனால் உண்மையில் நடைமுறையில் அரசுதான் குடும்பத்திற்கு முன்னதாக இருக்க வேண்டும். ஏனெனில் அனைவருடைய நோக்கமும் அரசைத்தோற்றுவிப்பதாகவே அமைந்திருக்கும். எனவே, அரசின் குறிக்கோள் என்பதும் எல்லாவற்றிற்கும் முன்னதாக அடிப்படையாகவே இருக்க வேண்டும். ஆகவே தான் அரசு என்பது உண்மையான அமைப்பு. அது பல பிரிவுகள் அடங்கிய ஒரு ஒட்டு மொத்தக் கூட்டு அரசு என்று அரிஸ்டாட்டில் அரசின் குறிக்கோள் பற்றிக் கூறுகின்றார்.

அரசு ஓர் இயற்கையான நிறுவனம். அரசிற்குள் சமூகம், குடும்பம் ஆகியனஉருவாயின. மனிதன் கூடி வாழும் தன்மையுடையவன். எனவேதான் அதனை சமூக விலங்கு என மனிதன் வர்ணிக்கப்படுகிறான். மனிதன் நல்லவனாகவோ, அல்லது கெட்டவனாவோ இருக்கலாம். ஆனால் அரசின் குறிக்கோள் எப்போதும் நல்ல வாழ்க்கையை மக்களுக்கு அளிப்பதாகும். உயிர் வாழ வைப்பது மட்டும் அரசல்ல. நல்வாழ்கையை அமைத்துக் கொடுப்பதுதான் அரசின் நோக்கம் உயிர் வாழ்தல் மட்டுமே அரசின் குறிக்கோளாக இருந்தால் , காட்டில் வாழும் விலங்குகளும் அடிமைகளும் அரசை ஏற்படுத்தியிருப்பார்கள். எனவே அரசு என்பது உயிர் வாழ உருவாக்கப்பட்ட அமைப்பு அல்ல. மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும், மக்களின் சொத்துக்களைக் காப்பதும், பொருட்களின் பரிமாற்றத்தை ஒழுங்குபடுத்துவதும் அரசின் நோக்கங்களாகும். இதனால் ஒவ்வொரு தனி நபரும் தன்னிறைவாகச் செயல்பட அரசு முயற்சிக்கும்.

அரிஸ்டாட்டில் கூறும் அரசு ஆக்கப்புர்வமானது. தனி நபர்களின் நலன்களைக் காப்பதுதான் அரசு. இல்லையேல் அது அரசே கிடையாது. ஏனெனில் அரசு என்பது மக்களின் நலன்களைக் காக்கக் கூடியது. மக்களின் நலனை அரசு மக்களுக்குக் கல்வி வழங்குவதன் மூலமே காக்கிறது. மக்களுக்கு குடிமையுணர்வு, பொது நன்மை ஆகியவற்றை உணர்த்தி, அவற்றிற்குரிய பயிற்சியை, மக்களை நல்லவர்களாக்கும் பணியைச் செய்வது அரசு. மக்களின் பொருளாதார நலன்களை மட்டும் கண்ணுறுவது அரசு அல்ல.

அரசில் போதுமான மக்கள் தொகை இருக்க வேண்டும் என்கிறார். இவர் அரசின் எல்லையைப் பற்றியும் கூறுகிறார். அரசின் எல்லைபராமரிக்க இயலாத அளவிற்குப் பரந்து இருக்கக் கூடாது. அதே நேரத்தில் எல்லை குறைவாக இருந்தால் மக்களும் குறைவாவே இருப்பர். எனவே பரந்தும் இல்லாமல் போதுமான அளவில் இருக்க வேண்டும். அரசை நடத்தக் கூடிய ஆட்சியாளரும் மக்களும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடிய வகையில் வரையறுக்கப்பட்ட எல்லையை அரசு கொண்டிருக்க வேண்டும்.

### 1.3 குடியுரிமை:

குடியுரிமைப் பற்றித் தெளிவாகப் புரியும்படி கூறியவர் அரிஸ்டாட்டில். ஓரிடத்தில் வாழ்ந்து வந்த காரணத்திற்காக ஒருவர் குடியுரிமை பெறுதல் என்பது விசித்திரமான உன்று. ஏனெனில் அப்படியானால் அடிமைகள் மற்றும் வெளிநாட்டினர் போன்றோர் குடியுரிமை பெற்று விடுவர். ஓரிடத்தில் வசித்தது தான் தகுதி என வரையறுத்தல் குடியுரிமைக்கு தகுதியானவர்க்ள அல்ல. சட்டபூர்வ உரிமையுடையவர்களும் குடிமக்களாக முடியாது. ஏனெனில் அவர்கள் பெற்றோர்களை வைத்து உரிமை கொண்டாடினால் அவர்களது பெற்றோர்களைப் பற்றிய பூர்வாங்கத்தை ஆராய நேரிடும். அதனால் பல சிக்கல்கள், விளைவுகள் ஏற்படும். எனவே சட்டபூர்வமாக உரிமை கோர முடியாது குழந்தைகள், சிறியவர்க்ள ஆகியோர்களும் குடியுரிமையைப் பெறத் தகுதியில்லாதவர்கள், ஏனெனில் அவர்கள் அறிவு பக்குவப்பட்டவர்கள் அல்ல.

அரிஸ்டாட்டில் யார் யார் குடியுரிமை கொண்டவர்கள் என விளக்குகிறார். நீதி நிர்வாகத்திலும், அரசின் நிர்வாகத்லும் பங்கு பெறுகின்ற அனைவரும் குடியுரிமை கொண்டவர்கள் ஒரு நீதிமன்றத்தில் சான்றாளனாகப் பணிபுரிவதன் முலம் ஒருவன் நீதித்துறையில் பங்கு பெறுகிறான். ஏதேன்சில் சுற்றுமுறைப்படி குறுகிய காலத்திற்கு நீதிநிர்வாகத்தில் பணியாற்றுமாறு மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் காலப்போக்கில் அனைவரும் பங்கு பெறும் வகையில் அமைக்கப்பட்டு இருந்தது. தவிர, அரசியலமைப்பு ரீதியாக நிர்வாக உரிமை பெற்றவர்கள் குடியுரிமை பெற்றவர்களாக் கருதப்படுவர். இவர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறுகின்ற காரணத்தால் குடியுரிமை பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஏனெனில் சமுதாயத்தின் நலனைக் காக்கக் கூடியவர்கள் குடியுரிமை பெற்றவர்கள். நிர்வாகத்திறனும், நிர்வாகத்தில் ஆர்வமும் இருந்தால் தான் பொது மக்கள் நன்மையைப் பேண முடியும் என்பது அரிஸ்டாட்டில் கருத்து. பொதுவாக ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மக்களைச் சார்ந்தது. மக்கள் குடியுரிமை பெற்றவர்கள் என்ற வாதம் அரிஸ்டாட்டிலைப் பொறுத்தவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஏனெனில் ஏதேன்சின் தலையாய அதிகாரம் கொண்டது பேரவை: அது இறைமை வாய்ந்தது. மக்கள் அப்பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது மட்டும் குடியுரிமைக்கு போதுமானதல்லவென்றும், அவர்கள் நிர்வாகத்திலும் பங்கு பெற்றால் தான் குடியுரிமை பெறுவதற்கு முழுத் தகுதி வாய்ந்தவர்களென அரிஸ்டாட்டில் விபரமாக் கூறுகின்றார். எனவே குடியுரிமை கொண்டவர்க்ள ஆட்சியாளர்களாகவும், மக்களாகவும் இயங்க வேண்டும். எனவே அவர்கள் ஆட்சியாளராக எவ்வாறு செயல்பட வேண்டும். ஆட்சியாளருக்குக் கீழ் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எனவே நடைமுறையில் அனுபவம் வாய்ந்த அறிவாளிகளாக குடியுரிமை பெற்றவர்கள் திகழ்பவர்கள் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்து.

குடியுரிமை பெறுவதற்கு சிலூ தகுதிகளையும் அரிஸ்டாட்டில் வரையறுத்துள்ளார். சொத்தும், ஓய்வு நேரமும் உடையவர்கள் மட்டுமே குடியுரிமை பெறத் தகுதியானவர்களென அரிஸ்டாட்டில் கூறுகின்றார். தங்களது குடும்பத்தைக் காக்க முடியாது போது, மக்களை எங்ஙனம் காக்க முடியும் என்ற உள்ளார்ந்த உணர்வை வெளிப்படுத்துகிறார். இருப்பினும் அவர் வெளிப்படையாகச் சில காரணங்களைக் கூறுகின்றார். ஒர குடிமகன் சட்டமியற்றுபவனாயும், நீதிபதியாகவும் செயல்பட வேண்டுமெனில் பொருளாதாரத் தேவைகள், குடும்பக் கவலைகள் அவனுக்கு இருக்கக் கூடாது. வயிற்றுப்பிழைப்பே போராட்டமாக இருக்கும் போது, அவர்களிடம் நிர்வாகம் சென்று விட்டால் அதன் கதியாதெனக் கலங்கி பயந்து போய்த் தான் உழைப்பாளர்களுக்கு குடியுரிமையை அரிஸ்டாட்டில் வழங்கவில்லை. மேலும் அவர்களுக்கு நேரமும் கிடையாது. அரிஸ்டாட்டில் கூறும் ஓய்வு நேரம் என்பது கிடைப்பது அரிது. பெண்களுக்கு அரிஸ்டாட்டில் கூறும் ஓய்வு நேரம் என்பது கிடைப்பது அரிது. பெண்களுக்கு அரிஸ்டாட்டில் குடியுரிமை வழங்கவில்லை ஏனெனில் பெண்கள் எப்போதும் பிறரைச் சார்ந்திருக்கின்றனர்.

ஒவ்வொரு குடிமகனும் நிர்வாகத்தில் பங்குபெற உரிமையுண்டு என அரிஸ்டாட்டில் கூறுகின்றார். அதன் பின்னர் தகுதி, நடைமுறை அனுபவம் குடியுரிமைக்கு அத்தியாவசியம் என்கிறார் அரிஸ்டாட்டில். ஆனால் பிளேட்டோ அவருக்கு மாறாக அறிவியல் அறிவு இருந்தால் மட்டும் போதுமானது என்கிறார். தவிர, எல்லோரும் சமம் என்ற கோட்பாட்டிலிருந்து விடுபடுவதால் குடியுரிமை பெற்றவர்கள் அனைவரும் அரசுக்காக உழைக்கக் கூடியவர்களாக அங்கீகரிக்கப்படுகிறார்களே தவிர, அரசின் அங்கமாகக் கருதப்படவில்லை.

அரிஸ்டாட்டிலின் கோட்பாட்டின்படி நடுத்தர வகுப்பினரே ஆளும் வகுப்பினராக முடியும் சொத்தில்லாத மக்களை அரசியல், அதிகாரத்திலிருந்து தள்ளிவிட்டார். இதனால் பெரும்பான்மையான மக்கள் குடியுரிமை பெற வாய்ப்பில்லை. பெண்களுக்கும் குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது. எனவே சொத்துள்ளவர்களின் ஆட்சி அமைந்தால், அரிஸ்டாட்டிலின் எண்ணப்படி மக்களின் நலன்களைக் காக்கக் கூடிய ஆட்சி அமைந்தால், அரிஸ்டாட்டிலின் எண்ணப்படி மக்களின் நலன்களைக் காக்கக் கூடிய ஆட்சி நடைபெறுமா அல்லது சொத்துடையோரின் சுகபோக வாழ்வை நிலை நிறுத்தும்படி ஆட்சி நடைபெறுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரிஸ்டாட்டிலின் கோட்பாட்டின்படி நடுத்தர வகுப்பினரே ஆளும் வகுப்பினராக முடியும் சொத்தில்லாத மக்களை அரசியல். அதிகாரத்திலிருந்து தள்ளிவிட்டார். இதனால் பெரும்பான்மையான மக்கள் குடியுரிமை பெற வாய்ப்பில்லை. பெண்களுக்கும் குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது. எனவே சொத்துள்ளவர்களின் ஆட்சி அமைந்தால், அரிஸ்டாட்டிலின் எண்ணப்படி மக்களின் நலன்களைக் காக்கக் கூடிய ஆட்சி அமைந்தால், அரிஸ்டாட்டிலின் எண்ணப்படி மக்களின் நலன்களைக் காக்கக் கூடிய ஆட்சி நடைபெறுமா அல்லது சொத்துடையோரின் சுகபோக வாழ்வை நிலை நிறுத்தும்படி ஆட்சி நடைபெறுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் மொத்தத்தில், அரிஸ்டாட்டில் உளவியல் பூர்வமாக நடைமுறை அனுபவத்தின் பயனாக பொறுப்புள்ளவர்க்ள என்பதை சொத்துத் தகுதியாக ஆட்சியாளர்களுக்கு வரையறை செய்தது. பல நாடுகளில் வாக்குரிமைக்கு சொத்துத் தகுதி வைத்திருந்ததை நாம் அறிவோம். இன்றயை நாளில் இது மாதிரி தகுதி நிர்ணயம் செய்தால் பொறுப்பான ஆட்சி நடைபெறலாம். எனினும் அதற்கு உத்திரவாதம் இல்லை. பெரும்பான்மையான மக்கள் ஆட்சி பீடத்திற்குச் செல்லவே முடியாது.

### 1.4 அடிமை முறை :

அரிஸ்டாட்டில் அடிமை முறையை ஆதரிக்கிறார். அடிமை என்பதற்கு அரிஸ்டாட்டில் கூறும் கருத்து யாதெனில், எவனொருவனுக்கு சொந்த ஆளுமைத் தன்மையில்லையோ அவன் அடிமை என்கிறார். வீட்டுவேலை செய்வரை அடிமைத்தனம் என்றும், அவ்வேலையைச் செய்பவன் அடிமை என்றும் அரிஸ்டாட்டில் விளக்குகறார். அடிமை முறை அவசியமானது என்கிறார். அரிஸ்டாட்டில் ஒரு மனிதன் தன்னுடைய ஆளுமைத் திறனை வளர்ப்பதற்கு பல வகையான செயல்களைச் செய்ய வேண்டியுள்ளது. அவ்வேலைகளுக்கு ஏராளமான வெளிப்படையான அல்லது உடல் உழைப்புத் தேவை. இவ்வுழைப்பை நல்கக் கூடியவர்கள் அடிமைகள் என்கிறார். அடிமை முறை என்பது இயல்பான நிறுவனம் என்கிறார் அரிஸ்டாட்டில். உயர்ந்தோர் அவர்களுக்குக் கீழ் உள்ளவர்களைக் கட்டுப்படுத்தி நிர்வகிப்பது என்பது நியாயமான கோட்பாடுதான். எண்சாண் உடம்பை ஆன்மா அல்லது உயிர் ஆள்வது போல், அறிவுடையயோர் ஆட்சி செய்வது என்பது இயல்பான ஒன்று தான். அடிமைகள் உடல் உழைப்பை நல்க வேண்டும். மேலும் மனிதர்கள் தங்களது திறனை ஆளுமையை வளர்க்கத் தவறினால், அவர்கள் அடிமைகள் தான் என்பதில் அரிஸ்டாட்டில் ஆணித்தரமாக உள்ளார். அடிமைகளை சொத்து சேர்க்கவோ, அதிகாரம் செலுத்தவோ, ஆடம்பரமாக வாழவதற்கோ பயன்படுத்தக் கூடாது என்றும் அவர்களுக்கு ஓய்வு நேரம் மட்டுமே வழங்க வேண்டும்மென்ற கருத்தும் உள்ளது. அடிமை முறை அறவழியில் அமைந்தது என்கிறார் அரிஸ்டாட்டில். தலைவன் தன் அடிமையைவிட உயர்ந்தவன். நாகரிகத்தையும் நல்ல பண்புகளையும் குடும்பத்தில் சேர்ந்த பின்னரே ஓர் அடிமை பெறுகிறான். இவ்வாறு அறவழி அமைந்த அடிமைத்தனத்தை அரிஸ்டாட்டில் ஆதரிக்கின்றார். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு உலகெங்கிலும் இருப்பதாக அரிஸ்டாட்டில் கூறுகின்றார். ஒரு சிலர் ஆளவும் எஞ்சியோர் அடங்கவும் வேண்டுமென்பது தேவை மட்டுமன்று முறையானதுமாகும். பிறப்பிலேயே இவ்வேறுபாடு தோன்றி விடுகிறது. உடல்வாகிலேயே இயற்கை பாகுபாட்டைக் காட்டி விடுகின்றது. உழைப்பாளிகள் உடல் வலிமையுடையவர்கள். அரிஸ்டாட்டிலின் அடிமைக் கோட்பாடு கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. சில நபர்கள் ஆளுகைத் தன்மையை வளர்கக முடியாது: அவர்கள் அடிமைகள் தான் என்று அரிஸ்டாட்டில் கூறும் கருத்து ஏற்படையதாக இல்லை. திறமையின் அடிப்படையில் மனிதர்களைப் பாகுபாடு செய்வது இயலாத காரியம்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**

1. நாட்டிற்கு அடிமைமுறை அவசியம் என்று எவ்வாறு அரிஸ்டாட்டில் விளக்குகிறார்.

அடிமை முறையை நியாயப்படுத்தி அரிஸ்டாட்டில் கூறுவது எரிச்சலைத் தரக் கூடியதாக, அவர் சூழ்நிலையின் கைதியாக இருந்து இக்கோட்பாட்டை ஆதரிக்கிறார் என்று தோன்றுகிறது. அடிமை முறையென்பது சமத்துவத்திற்கு எதிரானது. அடிமைகளை விலங்குகள் போல் நடத்தக் கூடாது எனப் பலரும் கண்டிக்கின்றனர். நல்ல வாழ்க்கையை அடையும் பொருட்டே இயற்கை மனிதனைப் படைத்துள்ளது என்று கூறும் அவரே, அடிமைகளையும் இயற்கை தோற்றுவித்துள்ளது எனக் கூறுவது விந்தையானதாகும்.

## *1.5 அரசியலைமைப்புகளை வகைப்படுத்தல் :*

அரிஸ்டாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட அரசியலமைப்புகளைப் படித்து உணர்ந்து அதன் பின்னர் அரசியலமைப்புகளை வகைப்படுத்தினார் என்று கூறுவர். அரசாங்கத்தை நடத்திச் செல்ல வரையறுக்கும் செயல் திட்டமே அரசியலைப்பு என அரிஸ்டாட்டில் வரையறுக்கின்றார். அரசாங்கங்களை முதலில் இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். பொது நலன்களைப் பேணக் கூடிய அரசாங்கம் தனியார் நலன் காக்கும் அரசாங்கம் என இருவகைகளாகப் பிரிக்கிறார். இவற்றில் ஒவ்வொரு முறையும் மூன்று விதமாகப் பிரிக்கப்படுவதாக அரிஸ்டாட்டில் வகைப்படுத்துகிறார். பொது நலன் பேணக் கூடிய வகையில் மன்னராட்சி பிரபுக்களாட்சி, இடைநிலை மக்களாட்சி என மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். இந்த மூவகை ஆட்சியும் முறையின்றி செயல்பட்டால் அவை முறையே சர்வாதிகார ஆட்சி சிறுகுழு ஆட்சி மக்களாட்சி என மாறும் என்கிறார். இவற்றில் பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் ஒரு நபர் ஆளக்கூடிய மன்னராட்சியை ஆதரிக்கின்றனர். ஏனெனில் பிளேட்டோ மன்னராட்சியில் மன்னராட்சியை ஆள்வோர் ஆளப்படுவோருக்கிடையே இடைவெளி குறையுமென்று கூறியுள்ளார். வரையறுக்கப்பட்ட பரம்பரை மன்னராட்சி சிறந்ததென அரிஸ்டாட்டில் கூறுகின்றார்.

அரிஸ்டாட்டில் காலத்தில் மன்னராட்சி நாகரிகமற்ற அரசாங்கமாகக் கருதப்பட்டது. ஏனெனில் அடிமைகளை அடக்குவதற்காக உருவானது மன்னராட்சி என்று கருதப்பட்டது. ஆனால் அரிஸ்டாட்டில் அந்த ஆட்சி சர்வாதிகார ஆட்சி என்று வர்ணிக்கிறாரே தவிர மன்னராட்சி எ;னறு குற்பிபடவில்லை. ஆயினும் அரிஸ்டாட்டில் மன்னராட்சி சிறந்ததென எப்போதும் கூறவில்லை. மன்னராட்சியில் ஒருவர் ஆட்சியாளராக

இருப்பர். அவர் தான் மன்னர். மன்னர் மக்ககளைக் காட்டிலும் நற்பண்புகளில் சிறந்து விளங்குகிறார். மக்கள் அவரை மதித்து அவர் வகுக்கும் சட்டங்களையும் பின்பற்றுகிறார்கள். சட்டங்களே இவ்வகை ஆட்சியில் மேலானவை. மனிதர்கள் அல்ல. எனவே பொது நலன் சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றது. இப்படி சட்டத்தினால் ஏற்படுத்தப்படும் அரசாங்கத்தில் ஒரு தனிநபருடைய திறமை ஒரு குழுவின் திறமைக்குச் சமமாக இருக்காது. ஒரு தனிமனிதன் ஊழல் புரிய கூடுதல் வாய்ப்புகள் உண்டு.

இரண்டாவது வகையான அரசாங்கம் பிரபுக்கள் ஆட்சியாகும். மற்றவர்களுடைய தேவைகளையும் சேவைகளயைும் மன்னர் தொடர்ந்து கவனித்தல் இயலாது. எனவே மன்னராட்சியில் பிரபுக்களாட்சியாக உருவெடுக்கின்றது. மன்னராட்சி பிரபுக்களை மன்னர் உயர் பதவிகளில் நியமிக்கின்றார். இவ்வாறு நியமிக்கப்பட்ட பிரபுக்கள் நாட்டு நலனை முன்னிட்டு நாட்டை ஆளும் போது அது பிரபுக்களாட்சியாக மாறுகிறது.

மூன்றாவது வகை அரசாங்கம் இடைநிலை மக்களாட்சி என்கிறார் அரிஸ்டாட்டில். இடைநிலை மக்களாட்சியால் மக்கள் அனைவரும் இணைந்து அரசைக் கட்டுப்படுத்துகிறனர். அரசு வறியவர் நலனை மட்டும் பேணியதென்றால் அது மக்களாட்சி என்கிறார்.

அரசாங்க முறைகளை வரையறுத்த பின்னர் இவை ஒவ்வொன்றின் நன்மை தீமைகளை அரிஸ்டாட்டில் விளக்குகின்றார். மக்களாட்சிவாதிகளும் அரசியலமைப்பு நீதியை அடிப்படையாக்க கொண்டிருக்க வேண்டுமென்று கூறுகின்றார். பிரபுக்கள் தங்கள் செல்வாக்கு அரசாங்கத்தில் அதிகமாக இருக்க வேண்டுமென்பதால், அது சிறு குழுவினர் ஆட்சியாகும் என்கிறார். மக்களாட்சிவாதியினர் அனைவரும் சமம், எல்லோருக்கும் சம அளவில் அரசியல் உரிமைகள் இருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். அரிஸ்டாட்டில் விவரிக்கும் மக்களாட்சி இன்றைய மக்களாட்சியிலிருந்து வேறுபட்டதாகும். வறியவரே பெரும்பான்மையினராக இருக்கும் முறையே மக்களாட்சி என்கிறார். சுதரந்திரம், சமத்துவம் ஆகியவற்றின்பால் மக்கள் கொள்ளும் வேட்கையே மக்களாட்சிப் பண்பாகும். மக்களாட்சியில் பதவிகளுக்கான தேர்தல்களில் நிற்க சொத்து தகுதியாக வரையறுக்கக்கூடாது. சிறுகுழு ஆட்சியில் சொத்து தகுதியாக வரையறுக்கப்பட்டு சொத்துடையோர் சிலரின் நலன் காக்கும் வகையான

எனவே அரிஸ்டட்டில் மக்களாட்சியையும் சிறுகுழு ஆட்சியின் குறைகளைக் களைந்து, அவற்றின் நன்மைகளை எடுத்துக் கொண்டு இடைநிலை மக்களாட்சி என்று புதியவகை அரசாங்கத்தை உருவாக்குகிறார். ஏழை, பணக்காரர் என்பவர்களின் எண்ணிக்கையவைவிட நடுத்தர வர்க்கத்தினர் அதிகமாய் இருக்கும், அரசாங்க முறை தான் இது. குலுக்குச் சீட்டு மூலம் தேர்தல் நடத்தும் முறை நீக்கப்படுகிறது. வறியவர்களின் மூடத்தனமான ஆதரவைக் களைகிறது. தகுதி, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அரசாங்கம் நிர்வகிக்கப்படுகின்றது. கட்டுப்பாடற்ற பணக்காரர்களும், விவரமறியதாக ஏழைகளும் புறக்கணிக்கப்படுவதால் இடைநிலை மக்களாட்சி ஒரு சிறந்த அரசாங்க முறையாகும். ஏனெனில் நடுத்தர மக்கள் செலவந்தர்களின் செல்வத்தை விரும்புவதில்லை. வறியவர்களின் பொறாமைக்கு ஆளாவதுமில்லை. நட்பு, சமத்துவம், நீதி ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் நிலையான ஆட்சியை அமைக்கின்றனர். இதற்கு அரிஸ்டாட்டில் கொடுக்கும் விளக்கமானது, தனிப்பட்ட ஒருவர் விருந்து கொடுப்பதைவிட பலரின் ஒத்துழைப்போடு ஒற்றுமையாகப் பலர் கொடுக்கும் விருந்து எவ்வாறு சிறந்ததோ அதே போல சிலரின் கருத்துக்களும் நற்பண்புகளும் பொது நலனைக் காக்கும் என்று கூறியுள்ளார்.

### 1.6 சட்டம்:

அரசுகள் தங்கள் அதிகாரங்களை சட்டத்தின் அடிப்படையில் வகுத்துக் கொள்ள வேண்டும். நல்லாட்சி என்று அரிஸ்டாட்டில் கூறுவது சட்டத்தினால் ஆளக் கூடிய ஆட்சி, சிறந்த நபர்களால் ஆளக் கூடியது அல்ல. இவ்வாறு சட்டத்திற்கு அதிகமான முக்கியத்துவம் அளிக்கிறார். சட்டத்தின் நோக்கமும் அரசின் நோக்கமும் ஒன்றாகவே இருக்கும் என்கிறார். சட்டத்தின் ஆட்சி என்பது அரசியலமைப்புச் சட்டமாகும். மக்களின் அந்தஸ்திற்கேற்ப மரியாதையுடன் இயங்கவல்லது சட்டம் பொது நலன் கருதி ஆள்வது சட்டம். இது சட்டபூர்வமான ஆட்சி மக்களின் ஒட்டுமொத்த அறிவின் திரட்டே சட்டம் என்கிறார்.

அரிஸ்டாட்டில் சமுகத்தின் சட்டங்களுக்கும் பெருமளவு முக்கியத்துவம் அளிக்கின்றார். சமுகத்தைப் பேணக் கூடிய சக்தியாக அவர் சட்டத்தைக் கருதுகின்றார். தனிநபர் ஒவ்வொருவரின் செயலும் அச்சக்தியின் மூலமே நெறிப்படுத்தப்படுகின்றது.

மனித நடவடிக்கைக்ள உட்பட்டுச் செல்லக் கூடிய அறநிலை எல்லைகளின் தொகுதியே சட்டமென அரிஸ்டாட்டில் விவரிக்கின்றார். சட்டத்திற்கு மேல் ஒவ்வொரு அதிகாரமும் இல்லையாதலால், அதுவே இறைமையாகும். ஒரு சிறந்த அரசியல் ஆட்சியாளர்கள் நிர்வாகிகளாகவும், சட்டங்களின் பாதுகாவலராயும் இருக்கின்றனரென அரிஸ்டாட்டில் விளக்குகின்றார்.

### *1.7 சொத்து:*

பிளட்டோ கூறுவது போல் சொத்தில் பொதுவுடைமைக் கோட்பாட்டை இவர் ஆதரிக்கவில்லை, கண்டிக்கிறார். சொத்து என்பது சமுகத் தன்மை பயத்தது நல்வாழ்க்கை வாழ வழியமைக்கும் கருவி சொத்து என்கிறார். ஆனால் சொத்து ஒரு அளவிற்குள் இருக்க வேண்டுமென கட்டுப்பாடு செய்கிறார். அதிகமாக சொத்து சேர்ப்பது விரும்பத்தக்கது அல்ல என்று சொத்திற்கு ஒரு வரையறையைக் கூறுகின்றார். சொத்தின் அளவு குடும்பத் தேவையைப் பொறுத்து அமைகிறது. தேவைக்கு குறைவாகச் சொத்து பெறுவது எவ்வளவு தீமையோ அந்த அளவிற்கு தேவைக்கு அதிகமான சொத்து வைத்திருப்பதுவும் தீமையே என அதிகச் சொத்து சேர்ப்பதை வன்மையாக்க கண்டிக்கிறார்.

### *1.8 நீதி:*

நீதி என்பது அரிஸ்டாட்டில் கருத்துப்படி ஒரு நற்பண்பாகும். இது முழுமையானதல்ல. மற்றவர்களின் தொடர்பைப் பொறுத்தே இது அமையும் என்கிறார். இவர் நீதியை இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். சட்டபுர்வ நீதி என்பது பொதுவானது. சட்டத்திற்கு கீழப்படிதலுக்கு ஒப்பானது. எனவே இது ஒரு நற்பண்பிற்கேற்ப அமையக்கூடியது. மற்றொரு நீதியை தனிநீதி எனலாம். இந்த தனிநீதியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று பகிர்ந்தளிக்கும் நீதி மற்றொன்று குறைதீர்க்கும் நீதி என்பனவாகும். பகிர்ந்தளிக்கும் நீதி என்பது சொத்தும் பதிவியும் ஒவ்வொரு மனிதனின் திறமைக்கேற்ப வழங்கப்பட வேண்டும் என்பதாகும். திறமை என்பது அரசியலமைப்பிற்கேற்ப வேறுபடும். அதாவது, செல்வச் சிறுகுடியாட்சியை எடுத்துக் கொண்டால் திறமை சொத்தின் முலம் நிர்ணயம் செயப்படும். அதே போல பிரபுக்கள்

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை,**
3.நீதியின் பண்புகளை கூறுக.

ஆட்சியில் திறமை தனிநபரின் நற்பண்பின் மூலம் நிர்ணயம் செய்யப்படும். எனவே நற்புண்பில் உயர்ந்து விளங்குவர்களுக்கு அரசியல் உயர்பதவியையும், நற்பண்பு குறைந்தவர்களுக்குத் தாழ்ந்த பதவியும் அளிக்கப்பட வேண்டும். குறைகளையும் நீதி என்பது நீதிபதிகளால் கையாளப்படுகிறது. அது சிவில் சட்டங்கள், குற்றவியல் சட்டங்கள் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுகின்றது. அரசியல் நடவடிக்கையில் நல்லதென்பது நீதி நீதி என்பது பதவிகளைப் பகிர்நதளிப்பதென அரிஸ்டாட்டில் பதவிக்கும் நீதிக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறார்.

### 1.9 புரட்சி :

அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் புரட்சிக் கோட்பாட்டை எதிர்க்கிறார். பிளேட்டோ மாற்றங்கள் ஏற்படுவதற்குரிய குறிப்பிட்ட காரணத்தை கூறவே இல்லை. பிளேட்டோ கூறுவது போல்தான் வரிசைப்படியாக மாற்றங்கள் ஏற்படும் என்பதுவும் சரியல்ல. பிரபுக்களாட்சியில் ஆட்சியாளர்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு, சுயநலவாதிகளாக தங்களை மட்டுமே காக்கக்கூடியவுர்களாக மாறிவிடுவர் என்பது உண்மையல்ல. ஏனெனில் பண ஆசை என்பது பொதுவான செயல் எல்லா ஆட்சியிலும் உள்ளது. எனவே பண ஆசையினால் பிரபுககளாட்சி சிறு குழு கெட்ட ஆட்சியாக மாறாது. பின்னர் வறியோர் பெரும்பான்மையோர் மக்களாட்சியை ஏற்படுத்துவர் என்பதுவும் நம்பத்தக்கதல்ல என்று அரிஸ்டாடில் எண்ணுகிறார்.

புரட்சி ஏற்படுவதற்குரிய காரணங்கள் இருவகைகளாகப் பிரிக்கின்றார் அரிஸ்டாட்டில் ஒன்று, பொதுவான காரணங்கள் மற்றொன்று குறிப்பிட்ட காரணங்கள் என்பனவாகும். முதலில் பொதுவான காரணங்களைப் பார்ப்போம். முதலாவதாக, அரிஸ்டாட்டில் கூறும் நீதிக் கருத்திற்குப் பல விளக்கங்கள் தருகின்றனர் அறிஞர்கள். மக்கள் அனைவரும் சமத்துவம் பெறுவதில் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பது புரட்சிக்கு முதல் காரணம். ஒரு சிலரால் மட்டும் அனுபவிக்கப்பட்டுவரும் சலுகைகளும் அதிகாரங்களும் அதே அளவில் தங்களுக்கும் வேண்டும் எனக் கோருகிறார்கள். மக்களுடைய சொத்தையோ, திறமையையோ அல்லது உயர்நற்பண்புகளையோ அடிப்படையாகக் கொண்டு விகிதாச்சார முறையில் அரசியல் அதிகாரம் கொடுக்க வேண்டுமென்கின்றனர். அதற்கேற்ப சலுகைகள் அமைய

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை.**
> 3. புரட்சி எவ்வாறு தோன்றுகிறது?

வேண்டுமென்கின்றன. ஒரு நாட்டில் புரட்சி தாழ்த்தப்பட்டோர் சமநிலை கோரும்போதும், சமநிலையிலுள்ளளோர் உயர்நிலை கோரும் போதும் ஏற்படும் என்கிறார் அரிஸ்டாட்டில்.

இரண்டாவதாக, ஒரு சிலர் அரசாங்கத்தில் மதிப்பும் மரியாதையும் பெற்று சலுகைகளை அனுபவித்து வருவதும், இவை மற்றவர்களுக்கு மறுக்கப்படும் போதும் புரட்சி ஏற்படும்.

மூன்றாவதாக, ஏழை, பணக்காரர் என்று இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருப்பதால், மூன்றாவது பிரிவு நடுத்தர வகுப்பினர் ஏழை பணக்காரர் ஆகிய இருவர்களாலும் நசுக்கப்படுக்கின்றன ஏழைகள் பெரும்பான்மையோர்களாகவும், செல்வந்தர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தும் இருப்பதால் இருவரும் திறனில் சமமானவார்கள். இங்கு இரு வகுப்பினராலும் உள்நாட்டுக் கலகம் தோன்றி, பிறகு அக்கலகம் புட்சியாக உருவெடுக்கும் என்கிறார்.

நான்காவதாக, பயம் புரட்சியதைத்தூண்டும் காரணிகள் முக்கியமான ஒன்று. தவறு செய்தவர்கள் தண்டனைக்குப் பயந்து, தண்டனையிலிருந்து தப்புவற்குப் புரட்சி செய்யக்கூடும். பல சமயங்களில் மக்கள் அநீதிக்குப் பயந்தும், ங்களுக்கு அநீதி விளையாமல் தடுப்பதற்காகவும் புரட்சி செய்யக்கூடும்.

ஐந்தாவதாக செல்வந்தர்களை பெரும்பான்மையான மக்கள் வெறுத்து, எதிர்ப்பது மற்றுமொரு காரணமாகும். பேராசை, பொறாமை, ஆணவம், அச்சம் முதலிய மனித உணர்ச்சிகள்தான் புரட்சிகளுக்குத் தூண்டுதல்களாக அமைகின்றன.

ஆறாவதாக, அரசின் வளர்ச்சி வளர்ச்சி சீராக அமையாமல், எதிர்விகிதாச்சார முறையில் வளர்வது அடுத்த காரணம்.

ஏழாவதாக, தேர்தல் சூழ்ச்சிகளும் புரட்சிகரச்சூழ்நிலையை உருவாக்கும் காரணிகளாகும். புரட்சி வண்முறை அடிப்படையிலோ அல்லது வஞ்சகச்சூழ்ச்சி முலமாகவோ நடைபெறும் என அரிஸ்டாட்டில் கூறுகின்றார். வன்முறைப்புரட்சி நடைபெறும்பொழுதோ அல்லது வெற்றிகரமாகப் புரட்சி ஏற்பட்டபின்போ வலிமை பயன்படுத்தப்படும். வஞ்சகச் சூழ்ச்சியை இருவகைகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது, ஒரு குடிமகனை ஏமாற்றி ஏற்பட்டுள்ள மாறுதலுக்கு அவனுடைய இசைவைப் பெற்று விட்டு பின்னர் அவனை அடக்கி ஆண்டுகொள்ளலாம் என்பது. இரண்டாவது, மக்களிடையே சில கோசங்களை திரும்பத் திரும்பக் கூறி, அவர்களை ஏமாற்றி விடலாம்.

அரசாங்கம் ஆளும் முறையில் மக்கள் நசுக்கப்பட்டு வந்தால் புரட்சிக்கு வழிவகுக்கும் என முக்கிய காரணமாக்க கூறுகின்றார். மேலும், அரிஸ்டாட்டில் ஒவ்வொரு அரசாங்க முறையிலும் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களை தனித்தனியாக ஆய்வு செய்கின்றது. இதனால் மக்களின் வெறுப்புக்கு ஆட்சியாளர்கள் இடம் கொடுக்கின்றனர். பிரபுக்களாட்சி ஒருவருக்குப் பதில் சிலர் இருப்பதால், நிர்வாகத்தைச் செம்மையாகச் செய்ய முடியும் என்று இதன் நன்மையை உணரமுடிகிறது. இது மக்கள் நலன் பேண வாய்ப்பில்லை. ஆகையால் மக்கள் புரட்சி முலம் மாற்றி, பலரிடம் ஆட்சி செய்தால் அவல ஆட்சி தான் நடைபெறுமே தவிர, நல்லாட்சி நடைபெறாது. அவல ஆட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்வர்; அப்புரட்சியில் ஒருவரிடம் அதிகாரம் அமையப் பெற்றால், மக்கள் அவருக்குச் சில கட்டுப்பாடுகள் விதிப்பர். இது தான் வரையறுக்கப்பட்ட மன்னராட்சி சிறந்த முறையான ஆட்சி என அரிஸ்டாட்டில் கருதுகிறார். புரட்சிகளைத் தடுக்கவும் அரிஸ்டாட்டில் சில கருத்துக்களை வழங்கியுள்ளார். உயர் குடியாட்சியிலும் பிரபுக்களாட்சியிலும் புரட்சி வராமல் தடுக்க, கீழ்மட்ட மக்களை அன்போடும் பரிவோடும் நடத்த வேண்டும். மக்களாட்சி சமத்துவத்திற்குப் பாடுபட வேண்டும். அரசியலமைப்பைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு மக்கள் சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சிறு சட்ட மீறுதல்கள் தான் பெரும்புரட்சிக்கு வழிவகுக்கின்றது. எனவே புரட்சியால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு உணர்த்த வேண்டும். பதவியைச் சாதகமாகப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் வழியை முறியடிக்க வேண்டும். செலவுகளுக்குக் கணக்குக் காட்ட வேண்டும். கணக்குகளைச் சரிபார்க்க தணிக்கை முறை இருக்க வேண்டும். பதவி உயர்வுகள் படிப்படியாகத்தான் ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். திடீரென உயர்பதவிகளை யாருக்கும் வழங்கக் கூடாது. அரசு பதவியை சொந்த நலனிற்குப் பயன்படுத்தக் கூடாது.

ஆட்சி புரிவோர் மக்களுக்கு ஏதாவதொரு வேலையைக் கொடுத்து வேலையைச் செய்ய வைப்பதிலேயே கவனமாக இருக்கவேண்டும். மக்கள் அனைவரும் ஒன்று திரண்டால் ஆட்சிக்கு ஆபத்தாகலாமென்பதால், மக்கள் ஒன்று திரளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சர்வாதிகாரி தன்னுடைய ஆட்சி தூய ஆட்சி என்று பறைசாற்றிக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் தன்னுடைய ஆட்சி அதிகாரத்தையும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். மக்களுக்கு நன்மை தரும் சில செயல்களை அவர்களை ஈர்க்கும் வகையில் வெளிப்படையாகச் செய்ய வேண்டும். அப்போது தான் சர்வாதிகாரி நியாயமற்ற செயல்களில் ஈடுபடமாட்டான் என்று மக்கள் நம்புவார்க்ள. மக்களுக்கு அளிக்கப்படும் நன்மைகளை பாராட்டு, பரிசுகள் ஆகியவற்றை அரசன் நேரடியாக வழங்க வேண்டும். மக்களுக்கு வழங்கும் தண்டனைகள் மறைமுகமாகவே இருக்க் வேண்டும்.

மொத்தத்தில் அரிஸ்டாட்டில் நல்லோர் ஆட்சியை விரும்புகிறார். அதுவே நல்லாட்சி என்கிறார். அன்றைய கிரேக்க அரசு முறையான இடைநிலை மக்களாட்சியும் நல்லோர் ஆட்சியையம் ஆதரிக்கிறார். சுதந்திரம், சமத்துவம் ஒவ்வொருவரும் தன் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட மக்களாட்சி வழிவகுக்கின்றது என்று மக்களாட்சியையும் ஆதரிக்கின்றார்.

### 1.10 இலட்சிய அரசு:

அரிஸ்டாட்டில் கூறும் இலட்சிய அரசு சூழ்நிலைகளின் தன்மையபைப் பொறுத்து அமையக் கூடியது. சூழ்நிலைகளே எவ்வகை அரசியலமைப்பையும் சிறந்தாக மாற்றுகின்றன. அதிக செல்வம் படைத்தோர் ஒருபுறமும், மறுபுறம் பலர் வறுமையில் வாடுவதும் அரசின் கெடுதல் செயல்கள். இவ்வாறு அதிகமான செல்வச்செழிப்போடு ஒரு சிலரும் உணவிற்கே வழியில்லாமல் வாடும் ஏழைகளாகப் பலரும் இருந்தால், இவர்கள் இரு பேர்களும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஒருவரையொருவர் சார்ந்து சமநிலையில் வாழ்வது என்பது இயலாது.

ஒரு அரசியலமைப்பு எல்லா மக்களுக்கும் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் ஏற்றதாக இருப்பது என்பது அரிது. எனவே அரசியலமைப்பு மற்ற அரசியலமைப்புகளைக் காட்டிலும் நீண்ட காலம்

நீண்ட காலத்தில் நீடித்துச் செயல்பட்டால் அந்த அரசியலமைப்பை நல்ல அரசியலமைப்பு என்று கூறலாம். மக்களாட்சியை நல்ல அரசியலமைப்பு என்று கூடக் கூறலாம். ஏனெனில் பெரும்பான்மையான ஏழை மக்கள் அதில் அதிக அளவு பங்கு பெறக் கூடிய அளவில் அது அமைந்துள்ளது.

செல்வந்தர்கள் அரசியல் செல்வாக்குடனும் அதிகாரத்துடனும் இருந்தால் சிறு குழு ஆட்சி சிறந்தது. ஏனெனில் ஏழை மக்கள் பெரும்பான்மையாக இருந்தாலு, அதிக அதிகாரத்துடன் இருப்பவர்கள் செல்வர்களாகும். எல்லாவற்றையும் விட நடுத்தர மக்கள் அதிகச் செல்வாக்குடன் இருந்தாலும், அதுதான் சிறந்த ஆட்சி எனஅரிஸ்டாட்டில் கூறுகின்றார்.

அரிஸ்டாட்டில் கூறும் இலட்சிய அரசு பிளேட்டோ கூறிய இலட்சிய அரசு மாதிரியாகாத்தான் உள்ளது. அரசின் முலம் மக்களுக்கு நல்லாட்சி வழங்கவேண்டும் என்று அரசை மக்கள் நலம் காக்கும் வழிமுறையாக் காண்கிறார். அரிஸ்டாட்டில். மக்கள் தொகை, நிலப்பரப்பு ஆகியவற்றில் அரசு தன்னிறைவு நிறைந்ததாக இருக்கக் கூடாது. அதிகமான குழந்தைகள் இருந்தால் கருக்கலைப்பும் செய்து கொள்ளலாம் என்றும் கூறுகிறார். அதிகமான குழந்தைகள் இருந்தால் கருக்கலைப்பும் செய்து கொள்ளலாம் என்றும் கூறுகிறார். ஏனெனில் மக்கள் தொகை தான் பிரச்சனைகள் அனைத்திற்கும் அடிப்படை. பெண்களுக்கு பிளேட்டோ முதல்தர முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அரசின் தலைநகர் கடற்கரை அருகாமையில் இருக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் வணிகம், வியாபாரம் ஆகியன வளர்ச்சியடையும். குடிமக்கள் சொத்து, நிலம் ஆகியன வைத்துக் கொண்டு, போர்வீரர்களாக, மதத்துறவிகளாக, நாட்டின் நிர்வாகிகளாக ஒவ்வொரு நிலையிலும் அரசிற்கு உதவ வேண்டும் என்கிறார்.

பிளேட்டோவைப் போல் அரிஸ்டாட்டிலும் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறார். மனித நற்குணங்களைப் பெற கல்வி மிகவும் அவசியம். குடிமக்கள் முழுமையடைந்தால் தான் அரசு முழுமையடையும். அறநெறிகளையும் அறிவையும் வளர்ப்பது மிகவும் அவசியம் ஒரே சீரான கட்டாயக் கலவி அரசிற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று என கட்டாய்க கல்வியை வலியுறுத்துகின்றார். கல்வி ஏழு வயது

முதல் கொடுக்க வேண்டும் என்கிறார். ஏனெனில் அதுதான் கற்க வேண்டிய பக்குவப்பட்ட வயதாகும்.

## 1.11 பிளேட்டோவிற்கும் அரிஸ்டாட்டிலுக்குமுள்ள முக்கிய வேறுபாடுகள்:

அரிஸ்டாட்டிலின் கருத்து பிளேட்டோவிலிருந்து வேறுபடுகின்றது. இலட்சிய அரசு என்ற கோட்பாட்டை நீக்கிய பின்னர் உள்ள பிளேட்டோவின் கோட்பாடும் அரிஸ்டாட்டில் கோட்பாடும் ஏறத்தாழ ஒன்றுதான். பிளேட்டோவின் இலட்சிய அரசு என்ற கோட்பாடு நடைமுறைக்கு உகந்தது அல்ல. கடவுள் குறித்து எந்தவிதமான கருத்தையும் அரிஸ்டாட்டிரல் கையாளவில்லை. பிளேட்டடோவின் கருத்துக்கள் உய்த்து உணரப்பட்ட நடைமுறை வாழக்கை அனுபவங்கள் அல்ல. தத்துவரீதியாகப் பிரச்சனைகளை அணுகக் கூடியவர் பிளேட்டோ. மக்களின் நடைமுறை அனுபவங்களை வைத்து அரிஸ்டாட்டில் தனது கருத்துக்களை உருவாக்கியவர்.

பிளேட்டோவின் தத்துவஞானிகள் ஆளுகைக்குப் பதிலாக எல்லா குடிமக்களும் ஆளுவதில் பங்கு பெறுவதையே அரிஸ்டாட்டில் ஆதரிக்கிறார். பிளோட்டோவின் பொதுவுடைமைக் கோட்பாட்டையும் அரிஸ்டாட்டில் எதிர்க்கிறார் மனைவிகள் மற்றும் குழந்தைகள் ஆகியோரை பொதுவுடைமையாக்கும் பிளேட்டோதான் கருத்தை இவர் ஏற்கவில்லை. ஏனெனில் தனி உடைமை உணர்வுதான் அன்புக்கு அடிப்படை பொதுவில் அனுபவிக்கப்படும் மனவைிகள் மீதும், குழந்தைகள் மீதும் எவரும் உண்மையான அன்பு காட்ட இயலாது. உண்மையிலேயே அப்படியொரு முறை பொறாமையை ஏற்படுத்தி ஒற்றுமையைக் குலைத்து விடும் என்று அரிஸ்டாடில் பயப்படுகிறார். அரிஸ்டாட்டிலைப் பொறுத்தவரையில் குடும்பம் என்பது மனித வாழ்க்கயைிலுள்ள ஒரு இயற்கயைான, கற்பனை வளர்க்கும் நிறுவனமும் ஆகும். குடும்பம் மற்றும் சொத்து ஆகிய இரண்டு நிறுவனங்களும் பழங்காலத்திலிருந்து வந்துள்ளவை. இவைகளை அழிக்க வேண்டும் என்பதை அரிஸ்டாட்டில் ஏற்றுக் கொள்ளவே இல்லை. இவை அழிந்தால்தான் ஒற்றுமை ஏற்படும் என்பதற்குப்பதிலாக, அரசியலமைப்பை ம்க்களுக்குக் கற்றுக் கொடுப்பதன் மூலம் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த இயலும் என்பது

என்பது அரிஸ்டாட்டிலின் எண்ணம். அரிஸ்டாட்டிலைப் பொறுத்தவரை பொது சொத்துரிமை பொது அக்கறையின்மைக்கு வழிவகுக்கும். பொது சொத்துரிமையினால், வேலை செய்வதற்கான ஊக்குவிப்பு அழிந்துவிடும். தவிர, சொத்துரிமையினால் அன்பு, பாசம், இரக்கம், மகிழச்சி ஆகியவற்றின் அடிப்படையாகும். ஆனால் பிளேட்டோ தனியார் சொத்துரிமையை ஆதரிக்கவில்லை. அரிஸ்டாட்டில், தனியார் சொத்துரிமையை ஆதரிப்பதோடு அந்த சொத்துகளிலிருந்து கிடைக்கும்

## 1.12. தொகுப்பு:

பிளேட்டோ இலட்சியவாதி; அரிஸ்டாட்டில் நடைமுறைவாதி, இறைமைவாய்ந்தது சட்டம் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துவதோடு, சட்டம் தான் மக்களை நிர்வகிக்கும் மக்கள் சட்டத்தின் காவலர்களாகவும், உதவியாளர்களாகவும் இருப்பர். பெண்கள் குறித்து இரண்டு சிந்தனையாளர்களுக்கும் கருத்து வேறுபாடு உள்ளதை பெண்கள் பொதுவுடைமை என்ற பிளேட்டோ கருத்தை அரிஸ்டாட்டில் ஏற்கவில்லை. இருப்பினும் பெண்கள் மேம்பாட்டுப் பிரச்சினையில் அரிஸ்டாட்டில் அதிகக்கவனம் செலுத்தவில்லை.

## 1.13 முக்கிய வார்த்தைகள் :

அரசு, ஏதேன்சு, குடியுரிமை, அடிமை் முறை, அரசியலமைப்பு, மக்களாட்சி, நீதி, புரட்சி

## 1.14 பரிந்துரை நூல்கள்:


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
Torchbooks, 1958.

5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.

### 1.15 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகளுக்கான பதில்கள்:

கேள்வி எண். 1. இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் - 1.2 ல் அறிக.
கேள்வி எண். 2. இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் - 1.4 ல் அறிக.
கேள்வி எண். 3. இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் - 1.8 ல் அறிக.
கேள்வி எண். 4. இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் - 1.9 ல் அறிக.

### 1.16 மாதிரி வினாக்கள் :

1. அரிஸ்டாட்டிலின் இலட்சிய அரசு பற்றி ஆராய்க.
2. அரிஸ்டாட்டிலின் அரசியல் மாற்றம், புரட்சி ஆகியவற்றின் காரணங்களை ஆராய்க.
3. அரிஸ்டாட்டில் எவ்வாறு அரசியலமைப்புக்களை வகைப்படுத்திகிறார் பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.

# அலகு - 4

# நிக்கோலோ மாக்கியவல்லி

# (1459 - 1527)

## அறிமுகம் :

மாக்கியவல்லி தமது காலத்தின் உண்மையான பிரதிபலிப்பாக இருந்தார். உண்மையிலே தான் வாழ்ந்த சூழ்நிலையை அப்படியே படம் பிடித்துக்காட்டியதில் மாக்கியவல்லி முதலிடம் பெறுகிறார். இவர் வேறு எந்த ஒரு அரசியல் சிந்தனையாளரையும் விட தன்னுடைய சூழ்நிலையை அப்படியே விளக்குவதில் வல்லவர். இவர் 16ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் வெளியிட்ட கருத்துக்கள் அச்சூழ்நிலையை அப்படியே விளக்குகின்றன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வரையறை செய்யப்பட்ட அரசுகளின் ஆதரவு குன்றியது. எல்லா இடங்களிலும் மிகவும் சக்தி வாய்ந்த அரசுகள் தோன்றலாயின. திருச்சபையில் போப்பாண்டவர் பொதுச்சங்கத்தைக் கூட்டவில்லை. லாட்டரன் பொதுச்சங்கம் 1511 முதல் 1517 வரையில் போப்பாண்டவரின் அதிகாரத்தைச் செம்மைப்படுத்தும் ஒரு கருவியாகச் செயல்பட்டது. இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் நிலவிய நிலக்கிழார் முறை மறைந்து எல்லா அதிகாரமும் மன்னரின் வரையறைக்கு உட்படுத்தப்பட்டது. இப்படி மன்னரின் அதிகாரத்திலும் திருச்சபையின் அரசிலும் முக்கியமாகத் தெரிந்தது தனிமனிதன்தான். தேசிய அரசு குறித்த கருத்துக்களுக்கு எங்கும் ஆதரவு அளிக்கப்பட்டது. இவ்வகையில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் தேசிய அரசுகளாயின. கிறிஸ்துவ ஐரோப்பா என்ற பழைய கருத்து மாறி திருச்சபையின் அதிகாரத்திலிருந்து அரசுகள் விடுபட்டன. தேசிய அரசு ஒன்றுதான் மக்களின் மதிப்பையும் மரியாதையையும் பெறும்வகையில் சூழ்நிலை நிலவியது. ஒருங்கிணைப்புக்கு முனைந்த பல குழுக்கள், பிராந்தியங்கள் போன்றவற்றில் இத்தாலிதான் மிகக் குறைந்த அளவு முன்னேற்றத்தை அடைந்திருந்தது. இத்தாலிய தீபகற்பம் மூன்று நூற்றாண்டுகளாக அரசியல் ரீதியில் பல சிற்றரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 16ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் நாடுகளின் ஒருங்கிணைப்பும், உள்நாட்டில் செயல்படுத்தப்பட்ட மாற்று அமைப்புக்களும் இத்தாலியத் தீபகற்பம் ஐந்து சிற்றரசுகளாகப் பிரிக்கப்படுவதற்கு உதவியாக இருந்தன. அவை நேப்பிள்ஸ் அரசு, மிலான் சிற்றரசு, வெனிஸ், பிளாரன்ஸ் குடியரசு, -

ரோமானிய திருச்சபையின் நாடு முதலியவை ஆகும். மாக்கியவல்லி இத்தாலி நாட்டை ஒரே மன்னரின் கீழ் ஒருங்கிணைந்த பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் போல ஒரு வலிமை மிக்க வல்லரசாக ஆக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இத்தாலி அன்று இருந்து நிலைமையில் ஒரு தேசிய வலிமை மிக்க மன்னரையோ அதற்கு வேண்டிய செல்வங்களையோ கொண்டு விளங்கவில்லை.போப்பாண்டவரின் அதிகாரத்திற்குட்பட்ட பிராந்தியங்களின் அரசின்மை நிலவியது. நிலக்கிழார்களின் அதிகாரத்தைப் போப்பாண்டவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே அவர்கள் அரசின் அதிகாரத்தை எதிர்த்து வந்தனர். படைவீரர்களின் உதவியுடன் இத்தாலியை ஒருங்கிணைக்க வேண்டுமாயின் முதலில் எல்லா நிலப்பரப்பையும் வலிமையான அரசின் கீழ் ஒன்றுபடுத்த வேண்டும். இவ்வகையில் நேப்பிள்ஸ், வெனிஸ் போன்ற நாடுகள் திருச்சபையின் அதிகாரத்திலிருந்து விடுபட்டு தேசிய ஒருங்கிணைவு பெறுதலைப் போப்பாண்டவர் எதிர்த்தார். அவர் அரசியல் சுதந்தரம் ஒன்று தான் மன்னரின் தலையீட்டைத் தடைசெய்யும் என்று கூறினார். இவ்வாறு அவர்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க எடுத்துக்கொண்ட முயற்சியும், அவர்களின் அணுகுமுறையும் மாக்கியவல்லியையும் மற்றவர்களையும் போப்பாண்டவர் பதவியை ஒரு மதச்சார்ப்பற்ற நிறுவனமாக எண்ணம் தூண்டியது. 1494 ஆம் ஆண்டு பிரான்ஸ் மன்னர் சார்லஸ் VII இத்தாலியின் மீது படையெடுத்ததன் விளைவாக இத்தாலி ஐரோப்பாவின் போர்க்களாமானது. இத்தாலி நாட்டுச் சிற்றரசர்களால் வல்லரசுகளின் படையெடுப்பிலிருந்து படைபலத்தால் தங்களைக் காத்துக் கொள்ள முடியவில்லை. எனவே திறமை வாய்ந்த அரசியல் தந்திர முறைகளைக் கடைப்பிடித்துத் தங்கள் சிற்றரசுகளைக காக்க வேண்டியிருந்தது. இங்ஙனம் அந்நாளைய இத்தாலிய அரசியல் நிலைமை மிவும் சிக்கலிருந்து இவ்வேளையில்தான் மாக்கியவல்லி பிளாரன்ஸின் நிர்வாகத்துறையில் ஒரு அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். சமயப்புரட்சிக் காலத்தில், பிளாரன்ஸின் கலாச்சாரத்துறையில் முக்கியமானவராக மாக்கியவல்லி விளங்கினார். அவருடைய அறிவும், நிர்வாகத்தில் ஏற்பட்ட பயிற்சியும் அச்சூழ்நிலையை மிகவும் ஒத்திருந்தன. அந்நாளைய தலைசிறந்த கிரேக்க, ரோமானிய எழுத்தாளர்களுடன் வெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

நோக்கங்கள் :

1. அரசியலும் ஒழுக்கம் என்பது பற்றிய மாக்கியவல்லியின் விளக்கம்.
2. அரசாங்கங்களின் வகைகள் பற்றி மாக்கியவல்லியின் விளக்கம்.
3. நாட்டை அரசன் எவ்வாறு ஆள வேண்டும் என்பது பற்றி மாக்கியவல்லியின் விளக்கம்.

**வடிவமைப்பு :**

மாக்கிய வல்லியின் வாழ்கை வரலாறு
அணுகுமுறை
மாக்கியவல்லியின் அரசியல் கருத்துக்கள்
அரசாங்களின் வகைகள்
நாட்டைப் பாதுகாத்தல்
ஆட்சி பகுதி விஸ்தரிப்பு
அரசானும் முறை
மதம்
இளவரசன்
கோட்பாடுகள்
அரசு
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறைவு சோதனை
வினாக்களுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

## 1.1 மாக்கியவல்லியின் வாழ்க்கை வரலாறு:

போப்பாண்டவரை ஆதரிக்கும் குடும்பம் ஒன்றில் மாக்கியவல்லி 1460 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய இளமை வாழ்கையைப் பற்றிய அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. 1494-ஆம் ஆண்டு அவர் நகர கவுன்சிலின் செயலாளராக நியமிக்கப்பட்டார். பின் இராணுவ கவன்சிலுக்குப் பொறுப்பாய் இருந்த 10 நபர்கள் அடங்கிய குழுவிற்கு மாக்கியவல்லி செயலாளராகக் கடமையாற்றினார். மேலும் அப்பொழுது ஆட்சியிலிருந்து லாரன்சோவிற்கு மாக்கியவல்லி நண்பரானார். உயர்குடி ஆட்சியானது மாற்றப்பட்டு மக்களாட்சி நிலவியபொழுது மாக்கியவல்லி அரசின் வெளி விவகார பிரதிநிதியாக்கப்பட்டார். 1512 - ஆம் ஆண்டு சோடரினி ஆட்சி கவிழ்க்கப்பட்டு மேடிசி திரும்பவும் உயர்குடியாட்சியை நிறுவினார். மாக்கியவல்லி சோடரினி குடும்பத்துடன் நெருங்கியவராக இருந்தால் மேடிசி திரும்பவும் ஆட்சிக்கு வந்தவுடன் மாக்கியவல்லியை வேலையிலிருந்து விலக்கிவிட்டனர். 1513ஆம் ஆண்டு போப்பாணடவராகப் பதவியேற்ற பத்தாம் லியோ என்பவரும் மேடிசி குடும்பத்தைச் சேர்ந்தவராகையால், மேடிசியின் அதிகாரம் ஓங்கியது.

அதனால் 1513ஆம் ஆண்டு முதல் 1526ஆம் ஆண்டு வரை மாக்கியவல்லிக்கும் பிளாரன்ஸ் அரசுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் மாக்கியவல்லியோ தன் பழைய அரசாங்கப் பதவியைப் பெறவும் மேடிசி அரசுடன் நல்ல உறவை ஏற்படுத்தவும் விரும்பினார். இவருடைய இந்த முயற்சி எழுத்து வடிவில் அமைந்தது. அவர் தன் எண்ணங்களை இரண்டு நூல்களில் வெளியிட்டுள்ளார். முதல் நூல் இளவரசர், இரண்டாவது நூல் டைடஸ் லிவியசின் முதல் பத்து அதிகாரங்கள் பற்றிய உரையாடல்கள், இவர் மேலும், பிளாரன்ஸ் வரலாறு, போர்க்கலை என்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

1526 ஆம் ஆண்டு மேடிசி அரசு குடும்பத்தார் மாக்கியவல்லியின் திறமையைக் கண்டு அவரை மீண்டும் அரசாங்கப் பணியில் அமர்த்தினார். ஆனால் மாக்கியவல்லியின் ஆசைக்கோட்டை தகரும்படி மேடிசியின் ஆட்சி அகற்றப்பட்டு ஜனநாயக கட்சியின் ஆட்சி ஏற்பட்டது. இதன் விளைவாக மாக்கியவல்லி வேலையிழந்தார். 1526 ஆம் வருடத்தில் மாக்கியவல்லி இயற்கை எய்தினார்.

### 1.2 அரசியல் அணுமுறை:

அரசியல் விஞ்ஞானத்தில் வரலாறு அணுகுமுறையையே உண்மையான முறையாக மாக்கியவல்லி கருதினார். அவர் எல்லாக் காலங்களிலும், மக்களைத் தூண்டும் அல்லது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் அவைகளைத் தீர்க்க மக்கள் கையாளும் முறைகளும் ஒரே மாதிரியாவே இருக்கின்றது என்று நம்பினார்.

ஆகையால் கடந்தகாலப் பிரச்சனைகளை நன்கு அறிந்து கொண்டால் அது நிகழ்காலத்திற்கு மிகவும் பயன் தருவதுடன் எதிர்காலத்திற்கெனச் சில அனுமானங்களையும் ஊகிக்க முடியும் என்று நம்பினார். அரசியல் கற்பனை உலகத்திலிருந்து வேறுபட்டு ஒரு புதிய முறையில் அரசியலுக்கும் வரலாற்றிற்கும் இடையே தொடர்பு ஏற்படுத்த முயன்றார். அவர் தன் ஆராய்ச்சிக்கு முக்கியமாக கிரேக்க ரோமானிய வரலாற்றையே துணை கொண்டார். மனித குலவளர்ச்சிக்கு கிறித்துவ சமயத்தைக் காட்டிலும் கிரேக்கர்களும் ரோமானியர்களும் பெரிதும் உதவினார்கள் என்ற மாக்கியவல்லியின் கருத்து அந்நாளைய கருத்திற்குப் புறம்பான கருத்தாகும்.

அவருடைய புதியமுறை அவருடைய நூல்களில் பிரதிபலிக்கின்றன. உரையாடல்கள் என்ற நூல் ரோமானியர்களைப் பற்றியதாகவே அமைந்துள்ளது. மாக்கியவல்லி, இளவரசர் என்ற நூலில் தாம் வாழ்நத சூழ்நிலையை அப்படியே படம் படித்துக் காட்டுகின்றார். அவர் வரலாற்று முறையில் தேவையான அளவு ஒப்பீட்டு முறையயும் புகுத்தியுள்ளார். டன்னிங் என்பவர் கூறுவதாவது; மாக்கியவல்லியின் அணுகுமுறை பார்ப்பதற்கு வரலாற்று முறையாத் தென்பட்டாலும் அது உண்மையில் வரலாற்று முறையன்று; அந்நாளைய மனிதர்களும், அவர்கள் வாழந்த சூழ்நிலைதான் மாக்கியவல்லியின் கருத்தைக் கவர்ந்திருந்தன. கடந்தகால நிகழ்ச்சிகளையும் நிகழ்கால சம்பவங்களையும் ஒன்றுபடுத்தினர்.

அவர் வாழ்ந்த காலத்தை அப்படியே கண்காணித்து வந்தார். அந்நிகழ்ச்சிகளின் ஆய்வு அவருடைய அணுகுமுறையைக் காட்டுகின்றது. அவருடைய முடிவுகள் அனுபவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டவை. மேலும் இம்முடிவுகள் வரலாற்று நிகழ்ச்சிகள் மூலம் வலியுறுத்தப்பட்டன. மாக்கியவல்லியின் குறிக்கோள் அரசியல் கோட்பாடுகளை பற்றப் படிப்பதல்ல. அவர் அரசினை நடத்திச் செல்லும் கலையைப் பற்றியே கூறியுள்ளார். அவருடைய கருத்துக்கள் ஆட்சியாளருக்குடையதாக இருக்கின்றனவே தவிர ஆளப்படுபவர்களுக்கு அவர் ஏதும் கூறவில்லை. ஆகையால் மாக்கியவல்லியின் நூல்களை அந்நாளைய சிந்தனையாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே அது அவருக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தியது எனலாம். இளவரசர் என்ற நூல் வலுவான மன்னராட்சியைப் பற்றி ஆராய்கின்றது. இவ்விரு நூல்களும் அரசியல் அதிகாரத்தை திறம்படக் கையாளும் முறையைப் பற்றியதாகவே உள்ளதல்லாமல் அரசில் மக்களுக்கும் ஆட்சியாளருக்கும் உள்ள அடிப்படைத் தொடர்பைப் பற்றி விள்ககுவதாய் அமையலில்லை.

### 1.3 மாக்கியவல்லியின் அரசியல் கருத்துக்கள்:

#### அரசியலும் ஒழுக்கமும்

மாக்கியவல்லி ஒழுக்கம், மதம் போன்றவற்றில் கொண்டிருந்த எண்ணங்கள் அவர் கருத்தை நிலைநிறுத்தியது எனலாம். அவரது கருத்துக்கள் மத்தியகாலச் சிந்தனையாளரும் மதத்தையும் ஒழுக்கத்தையும் அரசியல் அதிகாரத்திற்கு உட்படுத்தவில்லை. மாக்கியவல்லி இயற்கைச் சட்டங்களையும் இறைவனுடைய சட்டங்க-

-ளையும் ஒதுக்கித்தள்ளினார். அவர் அரசியல் விஞ்ஞானத்தையும் அறநெறியையும் பிரித்த முதல் அரசியல் சிந்தனையாளாராக விளங்கினார். இவ்வாறு கூறும்போது, மாக்கியவல்லிக்கு முன்னே அரிஸடாட்டில் தற்செயலாக அரசியலையும் அறநெறியையும் பிரித்திருந்த போதிலும், மாக்கியவல்லி அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை பிரிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தினார். மாக்கியவல்லி ஒழுக்கநெறிகளில் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. மேலும் அவைகள் அரசியல் நற்பண்புகளுக்குத் தேவையானது அல்ல என்று கருதினார்.

ஒழுக்கப்பண்பால் புறக்கணிக்கபட்டு கடமைக்காகச் செய்யப்படுகின்ற தீயவைகளான வன்முறை, கொடுரம், கெட்ட எண்ணம் போன்ற தீயசெயல்களை மாக்கியவல்லி விவாதிக்கின்றபொழுது, அவர் நற்பண்ப மற்றும் மதக்கோட்பாட்டுச் செயல்பாடுகளை ஆதரிக்கவில்லை. இவ்வாறு அவர் கொண்டிருந்த எதிர்மாறயைான கருத்துக்களைக் கொண்டு மாக்கியவல்லி தீய காரியங்களை ஆதரித்தார் என்று எண்ணத்தோன்றும். அவர் ஒரு அரசர் நல்லவராக இருப்பபது போற்றத்தக்கது என்றும், அதே வேளையில் தன் அரசியல் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள அவரது நற்பண்புகளை எப்பொழுதும் இழக்கத் தயாராக இருக்கவேண்டும் என்றும் கூறுகிறார். ஒருவர் எல்லா நற்பண்புகளையும் பெற்றிருக்க முடியாதென்பதால் ஒரு அரசர் நாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும் தீய குணங்களை விட்டு விட்டு நாட்டிற்கு ந்னமை பயக்கும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். மாக்கியவல்லி ஒரு அரசர் உண்மையானவராகவும்,நல்லவராகவும்,மனிதாபிமானம் உடையவராகவும், மதக்கோட்பாடுகளில் நம்பிக்கை உடையவராகவும், மற்றவர்களுக்குத் தென்படவேண்டும் என்று கூறுகிறார். ஆனால் நாட்டைக் காக்க அவர் மேற்கூறிய எல்லாற்றையும் கைவிட்டுச் செயல்பட வேண்டுமாயின் அதற்கும் அவர் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அரசு அழிவுறும் என்ற சூழ்நிலை ஏற்படும் போது அரசர்களும் மக்களும் அவ்வரசை அழிவிலிருந்து காப்பாற்றும் வகையில் ந்மபிக்கையைத் தகர்த்து நன்றி கெட்ட செயலில் ஈடுபடுகின்றார்கள் என நான் எண்ணுகிறேன் என்று மாக்கியவல்லி கூறுகிறார்

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை.**

1.அரசியலுக்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

மாக்கியவல்லி தன்னைப் பொறுத்தமட்டில் ஒழுக்கமற்றவரல்லர். ஆனால் அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் அவர் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கவில்லை. அவருடைய தத்துவத்தைப் பொறுத்தவரை ஒழுக்கக் கோட்பாடுகளின் முடிவுகள் அரசியல் அதிகாரத்திற்கும் அரசின் நன்மைக்கும் உட்பட்டதாகவே கருதினார். அதேபோல் அவர் தனிப்பட்ட் முறையில் மதக்கோட்பாடுகளுக்குப் புறம்பானவர் அல்லர். ஆனால் அரசிய்லில் மதக்கோட்பாடுகளை புகுத்தவில்லை. ஒரு அரசியல் வல்லுநர் மத சம்பந்தமான உணர்ச்சிகளை அரசின் கொள்கையில் ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்திக் கொள்வார். மதக்கோட்பாடுகளிலும், சமயத்திலும் மக்களுக்கு நம்பிக்கை குறைவாகத் தென்பட்டால் அது நாடு அழிவுறப் போகின்றது என்பதற்கு ஒரு அறிகுறியாகக் கருதி, திறமையான ஒரு ஆட்சியாளர் தன் அதிகாரத்திற்கு மேல் மத உணர்ச்சிகளைத் தூண்டும் மதச் சீர்திருத்தங்களைச் செய்வார்.

அரசைப் பாதுகாப்பதே மாக்கியவல்லியின் அரசியல் சிந்தனையின் மையப்பகுதியாக அமைந்தது. அவருடைய நாட்டுப்பற்று இக்கருத்தைத் தெளிவாக விளங்குகின்றது. ஒரு நாடு ஆபத்தான நிலையிலிருக்கும்போது அந்நாட்டு ஆட்சியாளர்கள் எது நல்லது, எது தீயது, எது கருணைமிக்கது, எது கொடுரமானது, எது புகழ்தரக் கூடியது, எது அவமானமானது என்று எண்ணிப்பாராமல், எந்தச்செயலைச் செய்தால் நாட்டின் சுதந்திரத்தையும் தன்மையும் காப்பாற்ற முடியுமோ அச்செயலைச் செய்யவேண்டும் என்று கூறகின்றார். அரசியலுக்கும் ஒளுக்கத்தன்மைக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளதென மாக்கியவல்லி நம்பினார். இதில் அதிகாரம் மற்றும் தனி நபருடைய திறமைகள் வெளிப்படும் வகையில் அத் தொடர்பு அமைந்தது. எனவே தனிநபர் துதி பாடக்கூடிய வகையில் அத் தொடர்பு அமைந்துள்ளது. அப்பொழுது .இருந்த பிளாரன்ஸ் அரசாங்கத்தை அவர் நுண்ணியவகையில் அறிந்திருந்த காரணத்தால் தான் அவரால் பிளாரன்ஸ் அரசாங்கத்தை அவர் நுண்ணியவகையில் அறிந்திருந்த காரணத்தால் தான் அவரால் நிலையான, தொடர்பான வரையறுக்கப்பட்ட கொள்கைகளை வகுக்கமுடிந்தது. மனிதர்கள் நடைமுறையில் தங்களது செல்களைச் செய்யும்போது அறநெறிகளிலிருந்து தவறுகின்ற காரணத்தால்தான் மாக்கியவல்லி அறநெறியையும் விளக்கியுள்ளார். மனிதன் வாழ்வதற்கும், இப்படித்தான் வாழவேண்டும் என்பதற்கு ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. எனவே மாக்கியவல்லி வாழ்கின்ற மனிதனை மட்டுமே தன்னுடைய ஆய்விற்கு எடுத்துக்கொண்டார். ஆகவேதான்

ஒழுக்கப்பண்பு, மதபோத வாக்கியங்கள் ஆகியவை அடங்கப் பெற்றதாக அரசியல் அறிவியல் உள்ளதென்ற கோட்பாட்டினைத் திருத்தவும் இவருடைய பகுப்பு உதவியது. அதில் வரலாற்றறையும் அரசியல் தத்துவங்களையும் விளக்கியுள்ளார்.

**அரசியல் செயல் நோக்கம்:**

சமுக, அரசியல் சம்பந்தப்பட்ட மனிதனின் செயல் நோக்கை மாக்கியவல்லி மனிதன் சுயநலனுக்காவே எல்லா காரியங்களையும் செய்கிறான் என்றும், அவன் செயலில் சமுதாய நற்பண்பிற்குச் சிறிதும் இடமில்லை என்றும் முடிவுக்கு வருகிறார். எல்லா அரசியல் செயல்களும் தன்னலமிக்கதாகவே உள்ளன. மாக்கியவல்லியின் அரசியல் நோக்கம் குறித்த கருத்துக்கள்ள இளவரசன் என்ற நூலில் வெளிப்படையாகக் கூறியுள்ளார். பொதுவாக மனிதர்கள் பிடித்தவர்கள். மனிதர்களின் இக்குணங்களகை கருத்தில் கொண்டு அரசனைக் கண்டு மக்கள் பயப்பட வேண்டுமே ஒழிய அவர்கள் அவருடன் ஒட்டி உறவாடக் கூடாது. அன்பு எப்பொழுது தன் சுயநலனை முன்னிட்டுக் கடமைகளைப் புறக்கணிக்கச் செய்யும். ஆனால் பயம் மனிதர்களை எப்பொழுதும் கடமையிலிருந்து வழுவாமல் காக்கும் என்று கூறுகிறார். மேலும் மனிதனின் எளிய எண்ணங்களைக் கொண்ட நிலையும் அந்தந்த நேரங்களில் எழும் மதிப்பிடுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தை ஒரு திறமையான, அறிவு படைத்த அரசர் பயன்படுத்திக்கொள்வர். மனிதர்கள் இயற்கயையாகவே ஒழுக்கக்கேடுடையவர்கள். எனவே புத்திசாலியான அரசர் எப்பொழுதும் தன்னுடைய ஆலோசகர்களை நம்பக்கூடாது. எச்செயலையும் தன்னுடைய அறிவாற்றலின்படி சீர்துாக்கிப் பார்த்துத்தான் செய்ய வேண்டும்.

மனிதர்கள் இயற்கையாவே முடிவில்லாத ஆசைகளைக் கொண்டுள்ளார்கள். இவர்களுடைய கூடுதல் திருப்திதான் அவர்களுடைய எல்லாச் செயல்களையும் ஆட்கொள்கின்றது. இவ்வகை ஆசைகளில் மிக முக்கியமானது தனிச்சொத்துடைமை. ஆகையால் மாக்கியவல்லி இளவரசன் என்ற நூலில் மனிதன் எளிதில் தன் தந்தை இறந்ததை மறந்து விடுவான். ஆனால் தந்தையின் முலம் தனக்கு வரும் சொத்தைப் பறிகொடுத்தவன் அதை மறக்க மாட்டான் என்று கூறுகிறார். எனவே தனியார் சொத்துக்களை அரசு கைப்பற்றக் கூடாது. இதே

கருத்தை அவருடைய உடையாடல்கள் என்ற நூல் முழுமையாக் கூறுகிறது. சுதந்திர ததாகமும் சுயஆட்சிக் கோட்பாடும் மனிதர்களின் பொருட்சார்ந்த தனியுரிமை கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டன. ஒரு சில மனிதர்களே உண்மையில் அதிகாரத்தைப் பயன்படுத்த விரும்புகிறார்கள். குடியரசு முறையிலான அரசை மக்கள் விரும்பவதற்கு காரணம் அதில் பொருள்சாதந்த நன்மைகளை பெறுகிறார்கள். ஆனால் மன்னராட்சி முறையிலான அரசில் எல்லா த்ன்மையையும் மன்னரே எடுத்துக்கொள்கிறார். சுதந்திரத்தை விரும்புவதன் முக்கிய நோக்கம் அடிமையான நாட்டை காட்டிலும் சுதந்திர நாட்டில் தங்கள் நாட்டில் தங்கள் சொத்தை விரைவில் பெருக்கிக் கொள்ள அதி வாய்ப்புகள் உண்டு என்பதே ஆகும்.

### 1.4 அரசாங்கங்களின் வகைகள்:

அரிஸ்டாட்டிலைப் போன்றே மாக்கியவல்லி அரசாங்களை மன்னராட்சி, உயர்குடியாட்சி அரசியலமைக்குட்பட்ட மக்களாட்சி என்ற துாய முறையிலான அரசாங்கங்களாகவும், அதற்கு இணையாக, துாய்மையற்ற எதேச்சதிகாரம், சிறுகுழுவாட்சி, மக்களாட்சி போன்ற அரசாங்கங்களாகவும் பிரித்தார். அவர் பாலிபியஸ், சிசரோ போன்றவர்களின் கருத்துக்களுக்கு ஒப்ப கலப்பு முறையிலான அரசாங்கம் தான் சிறந்ததெனவும் கருதினார். இளவரசர் என்ற நூல் முக்கியமாக மன்னராட்சியைப் பற்றியும் அவருடைய அதிகார வரம்பைப் பற்றியும் விளக்குகின்றது.

எதேச்சதிகாரத்தை விரும்புவர் என்று கருதப்பட்ட அவர் உண்மையில் எதேச்சகதிகாரத்தை ஆதரிக்கவில்லை. அரிஸ்டாட்டிலைக் காட்டிலும், மாக்கியவல்லி குடியரசு முறையிலான அரசாங்கத்தையே பெரிதும் போற்றினார். பொதுப்டையிலான சமத்துவத்துடன் விளங்கும் ஒரு சமுகத்தில் காமன்வவெல்த் தான் சிறந்த அரசு எனவும், செவ்வனே நடைபெறமுடிகின்ற அரசு எனவும் மாக்கியவல்ல கருதினார். ஒரு தனி மன்னனக் காட்டிலும் ஒரு குழு எப்போதும் அதி அறிவாற்றாலுடன் செயல்படுவது உண்மை. அதிகாரிகளனைத் தேர்வு செய்வதிலும், பட்டங்களைப்ப பெறத்தகுதி படைத்தவர்களைத் தேர்வு செய்வதிலும் மக்கள் பொதுவாக சரியாகவும் குற்றம் காண முடியாத அளவிலும்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அரசியலை நிறுவுவதற்கு அரசர்

ஆவார். அதுபோல மக்கள் அரசர் ஏற்படுத்திய நிறுவனங்களைப் பராமரிக்கப் பொருத்தமானவர்கள் என்று மாக்கியவல்லி கருதினார்; முடிவாக, காலத்திற்கு ஏற்ற மாற்றத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப குடியரசு மாறும். ஆனால் மன்னராட்சி அவ்வாறு மாறுதல் அடைவதில்லை.

மாக்கியவல்லி உயர்குடியாட்சியை ஆதரிக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசருக்கு ஆதரவாகத் திகழ்வது மக்கள் கூட்டமே என்று அவர் கருதினார். உயர்குடியைச் சார்ந்தவர்களைக் காட்டிலும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் சீரிய கருவியாக உள்நாட்டுக் கலவரங்களை மட்டுப்படுத்தும் மக்கள் கூட்டம் திகழ்கின்றது. உயர்குடியைச் சார்ந்தவர்கள் அதிகாரத்தை பயன்படுத்தும் எண்ணம் கொண்டவர்கள். ஆனால் மக்கள் அவ்வாறல்லாமல் அமைதியை ஒழுங்கையும் விரும்புவர்களாக இருப்பார்கள். எனவே உயர்குடியைச் சார்ந்தவர்கள் சுதந்திரமான அரசாங்கத்திற்கு முட்டுக் கட்டையாக விளங்குவார்கள்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
1.மாக்கியவல்லின் அரசாங்க வகைகளை கூறுக.

எனவே மாக்கியவல்லி சமத்துவத்தை அடிப்படையாக கொண்ட ஒரு காமன்வெல்த்தையே விரும்பினார். ஆனால் காலஙங்களுக்கும் சூழ்நிலைகளுக்கு இடங்களுக்கும் ஏற்ற வேறுபட்ட அரசாங்க அமைப்புக்கள் தேவை என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். உயர் குறிக்கோள்களை அடைய உதவும் ஒரு வகையான சிறந்த அரசாங்க முறையை வகுக்க எண்ணினார்.

### 1.5 நாட்டைப் பாதுகாத்தல்:

மாக்கியவல்லி தன்னுடைய நூல்களால் மன்னராட்சியும் குடியரசு முறையும் இலகுவாக, அமைதியாக நடைபெறுவதற்குத் தேவையான பல கோட்பாடுகளை விளக்குகின்றார். மன்னராட்சி நிலையாக நடைபெற மிக முக்கியமான விதி அரசர் அந்நாட்டு நிறுவனங்களுக்கும் அங்குள்ள மரபுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதுதான். மக்கள் நன்றாக ஆளப்படுகிற போது அவர்களுடைய வாழ்க்கை முறையும் சீராக பாதுகாக்கப்படுவதால் அவர்கள் வாழ்க்கை முறையனை மேம்படுத்த எண்ணி அதிக உரிமைகள் கேட்பதில்லை. இந்தப் பொதுவான விதி பரம்பரையாக பதவிக்கு வரும் மன்னராலும், ஆட்சியைப் பிடித்து ஆளும் மன்னராலும் பின்பற்றப்படவேண்டும். பரம்பரை வழியில் ஆட்சிக்கு வரும் மன்னர்களுக்கு அதிக சிக்கல்கள் கிடையாது. ஆனால் புதிதாக ஆட்சியைக்

கைப்பற்றி ஆட்சி நடத்தும் ஒரு மன்னர் அநேக பிரச்சனைகளைக் கையாள வேண்டியுள்ளது. மாக்கியவல்லி இம்முறையில் பதவிக்கு வந்த மன்னரைப் பற்றித்தான் அதிகம் ஆராய்கின்றனர். அரசியல் ஆதிக்கத்திற்கு மட்டுமின்றி, அரசனைக் காப்பாற்றிக் கொள்வதற்க்குஆயுதவலிமை அவசியம். எனவே நன்கு பயிற்சியளிக்கப்பட்ட இராணுவம் தயராக வைக்கப்பட வேண்டும். அரசர் எப்பொதும் தன் பாதுகாப்பிற்காக அந்நிய நாட்டை நம்பியிருக்கக் கூடாது. பொதுக் கருவுலத்தை விட போரில் கைப்பற்றும் பொருளையே அதிகமாய்ச் செலவிட வேண்டும். பொது மக்களைப் பொறுத்தவரை அரசர் எப்பொழும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும். இவற்றிற்கு மேலாக அரசர் எப்பொழுதும் குடிமக்களின் சொத்து, பெண் போன்ற காரியங்களில் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். அரசரைக் கண்டு மக்கள் எல்லோரும் பயப்பட வேண்டும் ஒழிய, அவரை யாரும் பெறுக்கக்கூடாது. கொடுரமான செயல்களைச் செய்ய வேண்டிய பொழுது அவ்வேலைகளை அசர் எப்பொதும் தன் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதே வேலையில் நல்ல காரியங்களை அவரே தன் முன்னிலையில் செய்வது அரசருக்கு மக்களிடைய நன்மதிப்பை ஏற்படுத்தும். அரசர் எப்பொழுதும் மக்களை பல திட்டங்களில் ஈடுபடுத்தியிருக்க வே;ண்டும். மாபெரும் திட்டங்களை வகுப்பதன் முலம் அரசர் தமது குடிமக்களைக் கனவுலகில் சஞ்சரிக்கச் செய்ய வேண்டும். அரசர் கலை, இலக்கியம் போன்றவற்றிற்குப் பாதுகாவலராக விளங்க வேண்டும். மேலும் அவர் வணிகம், விவசாயம், போன்றவற்றை வளர்க்க வேண்டும். அதே சமயத்தில் வரிவிதிப்பு கடுமையாக இருத்தலாகாது. மேற்கூறிய அறிவு சார்ந்த சர்வாதிகாரம் நன்னெறிக்குப் புறம்பாகக் காணப்பட்டது. எனினும் இத்தகைய கருத்துக்கள் ஒரு உண்மையான அரசு எவ்வாறு செயலாற்றுகின்றது என்பதை நமக்கு உணர்த்துவதாக உள்ளது. அவருடைய குடியரசு முறை அரசாங்க செயல் முறைகள் அவர் வாழ்ந்த சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் வண்ணம் அமைந்துள்ளன. மாக்கியவல்லியின் காமன்வெல்த் அல்லது குடியரசு பற்றிய கருத்துக்கள் பண்டைய கிரேக்க நகர அரசுகளைச் சார்ந்ததாகும். பெரிய அரசுக்கான மக்களாட்சி முறையைப் பற்றி மாக்கியவல்லி விளக்கவில்லை. அதே போன்று பண்டைய கருத்துப்படி காமன்வெல்த் என்பது உயர்குடியாட்சிக்கு மாறான மக்களின் கூட்டாட்சியைக் குறிக்கின்றது. மாக்கியவல்லி அரிஸ்டாட்டிலின் அடிப்படையில் குடியரசைத்

தூய்மையானதாவும், தூய்மையற்றதாகவும் பிரிக்கின்றார். ஒரு குடியரசில் சமத்துவம் இல்லாதபோது அது தூய்மையற்ற குடியரசாகின்றது. குடியரசின் அமைப்பு முறை எவ்வாறுறிருப்பினும் மாக்கியவல்லி அதன் நிலையான தன்மையைப் பற்றியே அதிகம் ஆர்வம் கொண்டிருந்தார். மேலும் ரோமானிய குடியரசுமுறை அவரை மிகவும் கவர்ந்திருந்தது.

அவர் குடியரசின் அரசிரயிலமைப்புக்கும், மரபு, சட்டம் போன்றவற்றிற்குமிடையே நடைமுறையில் உள்ள தொடர்புகளை ஆராய்ந்தார். அவ்வேளையில் அடிப்படை சட்டத்திற்கும் சாதாரணச் சட்டங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றார். சட்டமும் மரபும் ஒன்றோடொன்று நெருங்கிய மரபில் ஏற்படும் மாறுதல்கள் அலகுவாக் சட்டத்தில் பிரதிபலிக்கும் என்பது உண்மை. ஆனால் மரபிற்கொப்ப அரசியலமைப்புக்கள் மாறுவது கிடையாது. எனவே முடிவில் அரசியலமைப்பு மரபுகளுக்கும் சட்டங்களுக்கும் முரணாக இருப்பதால் நாடு சீரழிவறத்கு அது முக்கிய காரணமாகின்றது. ஆகவே சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அரசியலமைப்புக்களையும் மாற்றிக்கொள்ளுவது அரசைக் காப்பாற்றுவதின் முக்கிய அம்சமாகும். ஒரு அரசியலமைப்பு நெகிழாத் தன்மையுடன் இருப்பின், அவ்வரசியலமைப்பு ரோம் நகரில் நடந்தது போல் வன்முறையில் தூக்கி எறியப்படும். குடியரசில் ஏற்படும் மாற்றங்கள் நடைமுறையில் உள்ள அமைப்புக்களுக்கு ஒத்தவகையில் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். பொதுவாக மக்கள் வெளித்தோற்றத்தைக் கொண்டுதான் திருப்தியடைகிறார்கள். அவர்கள் பொதுவாக மக்கள் வெளித்தோற்றத்தைக் கொண்டுதான் திருப்தியடைகிறார்கள். அவர்கள் செயலாக்க நிலைகளை ஊடுருவி நோக்குவதில்லை என்று மாக்கியவல்லி கூறுகிறார்.

அவசர காலங்களில் அரசாங்க அதிகாரி ஒருவர் முழுமையான அரசாங் அதிகாரத்தை உபயோகப்படுத்தவேண்டியதின் அவசியத்தையும் மாக்கியவல்லி விளக்குகின்றார். அவர் சர்வாதிகாரம் ரோமானிய குடியரசின் முக்கிய பண்புகளில் ஒன்று எனவும், ரோமானிய அரசியலமைப்பின் மதிப்பை உயர்த்தியதில் தலையானதும் என்றும் கருதினர். அதேபோல் மக்களாட்சி அரசாங்கங்களில் அவசரகாலத்திற்கு உகந்த சில விதிமுறைகளையும் அரசியலமைப்பு கொண்டிருக்காத போது, அவசர நிலையை சமாளிக்கும் பொருட்டு அடிப்படை விதிகளுக்கு, புறம்பான செயல்களைச் செய்தும் அரசைக் காக்க வேண்டும், என்பது மாக்கியவல்லியின் கருத்தாகும். ஆனால் இந்த மாதிரியான முறைகள்

பின்னால் தவறான காரியங்களுக்கும் அரசர்களாக பயன்படுத்தப்படும் என்ற எண்ணம் மாக்கியவல்லிக்கு எழுந்ததில் ஐயமில்லை. எனவே அவரது சர்வாதிகாரி கவனமாக அதிகார எல்லைகளை வகுத்து உருவாக்கவும், விலக்கவும் செய்யமுடிகின்ற ஒரு சுதந்திமான அரசாங்கமுறைகளைக் கொண்டிருந்தார்.

கட்சிப் பூசல்கள் பொதுவாக அரசின் பொதுநோக்கிற்கு ஊறுவிளைவிக்கும் என்ற கருதினார்கள். ஆனால் மாக்கியவல்லியோ ரோமானிய வரலாற்றைக் குறித்த முக்கிய பண்புகளில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தார். கட்சிப் பூசல்கள் பொதுமக்களின் மாறுபட்ட ஆசைகளுக்கும் எண்ணங்களுக்கும் வடிகாலாக அமைகின்றன. அதன் விளைவாக திறமைமிக்க குடிமகன் தன் திமையை வெளிப்படுத்த வாய்ப்பையும் பெறுகின்றான். அவைகளெல்லாம் ரோமானிய குடியரசின் முக்கிய அம்சங்களாகவும் அக்குடியரசு வளர்வதற்கு உறுதுணையாகவும் இருந்தன என்று மாக்கியவல்லி கூறுகிறார். அவர் மேலும் மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்த வேறு பலமுறைகளையும் குடியரசில் கையாள வேண்டும் என்றும் கூறுகிறார். பொது அதிகாரிகள் மீது சுமத்தப்படும் புகார்களை விசாரிப்பதற்கும் தனியான ஒரு அமைப்பு குடியரசுகளில் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். திறமை வாய்ந்த குடிமக்களை எப்பொழுதும் பொதுமக்களை சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றார்கள். அமைதியான காலங்களில் அவர்களை மக்கள் ஒதுக்கித் தள்ளுகிறார்கள். அரசின் தலைமை அப்பொழுது செல்வந்தர்களிடம் சென்று சேர்கின்றது. இந்த குடிமக்கள் எப்பொழுதும் போர்க்களத்தில் வைக்கப்படுவார்கள். ஆனால் ஒரு இலட்சிய குடி அரசின் கட்சி உட்புசல்களும், புரட்சிகரமான வெளிநாட்டுக் கொள்மையும்மறுக்க முடியாத நிலைத்திருக்கும் சூழ்நிலைகளாகும்.

### 1.6 ஆட்சிப் பகுதி விஸ்தரிப்பு ( Extension of Dominion):

இளவரசர் என்ற நூல் ஒரு முடியாட்சி முறையில் அரசின் அதிகார விரிவாக்கத்தைப் பற்றிய கோட்பாடுகளையும், செயல்முறைகளையும் கூறுகின்றது. குடியரசு விரிவடைதல் பற்றிய கருத்துக்கள் உரையாடல்கள் என்ற நூலில் கூறப்பட்டுள்ளன. இந்த முறையில் பல சிற்றரசுகள் ஒன்றாக இணைந்து ஒரு காமன்வெல்த் அல்லது ஒரு மன்னரின் கீழ் இணைவாதலும் வலுவான வல்லரசு ஏற்படும். மாக்கியவல்லி, பிரான்ஸ் ஸ்பெயின் போன்ற நாடுகளைப் போல இத்தாலியை ஒரு வலிமை பொருந்திய வல்லரசாக ஆக்க

விரும்பினார். சிற்றரசுகளை நிறுவுவதில் மோசஸ், சீசர் போர்ஜியா போன்றவர்கள் பின்பற்றிய வேறுபட்ட கொள்கைகளை மாக்கியவல்லி மேற்கோள் காட்டுகின்றார். மோசஸ், சைரஸ், ரோமுலஸ் போன்றவர்கள் தங்கள் வளைத்தாலும் அதிகாரத்தைப் பெற்றவர்கள். ஆனால் போர்ஜியா அடுத்தவர்களின் உதவியால் வெற்றி பெற்று வளமான எதிர்காலத்தைப் பெற்றார் என்று மாக்கியவல்லி கூறுகின்றார். இவர்களெல்லாம் புதிய அரசை ஏற்படுத்திய சாதனையாளர்கள். அரசை விரிவாக்க வேண்டும் என்ற ஆசை கொண்ட மன்னன் தன் இன மக்களிடமிருந்து குறைவான எதிர்ப்பைத்தான் சமாளிக்க வேண்டியிருக்கும். எனவே தன் நாட்டின் அரசைக் கைப்பற்றுவது மிகவும் இலகுவானது. வெல்பவர் தோற்ற மன்னரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து இலகுவாக பழைய அரசியல் நிறுவனங்களை அப்படியே பின்பற்றலாம். ஆனால் இன மொழி வேறுபாடுகள் வேற்று மிகுந்த நாட்டின் அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்வது மிகவும் சிக்கலான பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அங்குள்ள மக்களின் பழைய சுதந்திர மனப்பாங்கும் பழைய அரசியலமைப்பு முறையும் அவர்களை எப்பொழுதும் புரட்சி செய்யத்தூண்டும். எனவே அவ்வாறு வெற்றி கொள்கின்ற சமுதாயத்தை அறவே மாற்றுவது சாலச்சிறந்தது என்று மாக்கியவல்லி கருதினார்.

ஒரு திறமை வாய்ந்த மனிதனின் உண்மையான பலப்பரீட்சை அவன் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தி அதை நிலை நிறுத்திக் கொள்வதிலே அடங்கியுள்ளது. சீர்திருத்தம் செய்பவர் பழைய முறையில் நன்மை பெறலாம் என்ற எண்ணமுடையவர்களிடமிருந்து வெறுப்பை எதிர் நோக்க நேரிடும். வெற்றியான முறையில் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைச் செய்து உயர்நிலை எய்தியவர்களில் முக்கியமானவர்கள் ரைசஸ், ரோமுலஸ், தீசஸ் போன்றவர்களாகும். அவர்கள் ஏற்படுத்திய புதிய அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்குப் போதிய இராணுவத்தைப் பெற்றிருந்தார்கள்.

அரசின் அதிகார எல்லையை விரிவாக்கும் எண்ணம் குடியரசிலும் மன்னராட்சியிலும் காணப்படுகின்றது. மன்னர் தன் தனியான அதிகார வெறியால் அடுத்த நாட்டைக் கைப்பற்ற எண்ணுதல் இயற்கையான மனிதனின் குணமாகும். ஆனால் குடியரசு தேவையின் அடிப்படையில் அதிகார எல்லையை பெருக்கிக் கொள்ள எண்ணுகின்றது. அவ்வாறு குடியரசு அதிகார எல்லையை அதிகரிக்க அரசியலமைப்பு வழிவகை செய்யாதபோது அவ்வரசியலமைப்பு புறக்கணிக்கப்படும் உரையாடல்கள்

என்ற நூலில் ரோமானிய அதிகார விஸ்தரிப்பபைப் பற்றி கூறும்போது மாக்கியவல்லி அவை கீழ்காணும் காரணங்களால் ஏற்படுத்துகின்றது என்று கூறியள்ளார். நகர மக்கள் தொகைப் பெருக்கம், குடிமக்கள் அல்லாதவரகளின் கூட்டு, வெற்றி கொண்ட இடங்களில் குடியிருப்பை ஏற்படுத்தல், கொள்ளையடித்த செல்வங்கள் பொது இருப்புக்களில் சேர்த்தல், அரசை வெல்வமிக்கதாகச் செய்தல், நன்கு பயிற்சியளிக்கப்பட்ட இராணுவத்தைக் கொண்டிருப்பது ஆகியனவே முக்கியக் காரணங்களாகும். மாக்கியவல்லி காட்டிலும் நல்ல போர்வீரர்கள்தான் உண்மையான வலிமையாகும் என்று மாக்கியவல்லி கூறும்போது, நல்ல வீரர்களை முயன்று பெறுவது பணமல்ல. ஆனால் நல்ல வீரர்கள் பணத்தை முயன்று பெறுவார்கள் என்று கூறினார்.

ஆய்வன் முடிவில் மாக்கியவல்லி தந்திரத்தைப் போல வலிமை முடிவான செயலல்ல என்று கூறுகின்றார். வலிமையையும் தந்திரத்தையும் பயன்படுத்தாத எவரும் புகழின் உச்சிக்குப் போனதில்லை. வலிமை மட்டுமிருந்து தந்திரமில்லாமல் இருப்பினும் அது போதுமானதில்லை. ஆனால் தந்திரமிருந்து வலிமையில்லாமல் இருப்பினும் வெற்றி கிட்டும் என்பது மாக்கியவல்லியின் கருத்தாகும். இக்கோட்பாடு மன்னராட்சிக்கும் குடியரசுக்கும் பொருந்தும். இக்கோட்பாடின் முன்மாதிரியாக ரோமானியப் பேரரசு விளங்கியது.

### 1.7 அரசாளும் முறை:

மாக்கியவல்லியின் நூல்கள் எழுதப்பட்ட நோக்கம் இத்தாலியை அதாவது பிளாரன்ஸ் நகர்தசைக் காப்பாற்றி, நல்லாட்சியை நிறுவ வேண்டும் என்பதாகும். உண்மையிலேயே இத்தாலிய அரசுகளை காப்பாற்ற வேண்டும் என்பதுதான் இவருடைய அரசுக் கோட்பாடாகும். இவருடைய காலத்தில் இத்தாலியில் எண்ணற்ற பூசல்களும், போராட்டங்களும் நடைபெற்றன. மக்கள் பல அவதிகளுக்கு உள்ளாயினர். அவர்கள் வாழ்வில் அமைதி வராதா என்ற ஆதங்கம் மாக்கியவல்லியிடம் ஏற்பட்டது. இத்தாலியில் அமைதி, ஒழுங்கு, அரசியல் நிலைத் தன்மை, பாதுகாப்பு ஆகியனதான் அவசியமென எண்ணினார். அந்நியரின் பிடியிலிருந்து இத்தாலியை விடுவிக்க வேண்டுமென்பதில் கவனமாக இருந்தார். இவர் தூதுவராக, நிர்வாகியாக இருந்த காரணத்தால் எவ்வாறு அமைக்கலாம் என்பதில் கவனம் செலுத்தினார் மாக்கியவல்லி. அரசியல் தத்துவஞானி அல்ல மாக்கியவல்லி. அரசியல் அறிவியலர் ஆவார். இவர் எவ்வாறு குறிக்கோளை அடைய

முடியுமென்ற நோக்கத்தைத்தான் வலியுறுத்தியவர். அந்த நோக்கத்தை எவ்வாறு அடைய வேண்டுமென்பதில் அக்கறை இல்லாதவரானார்.

மாக்கியவல்லி தன்னுடைய உரையாடல்கள் நூலில் குடியரசு முறையிலான அரசாங்கமே சாதாரண மக்களுக்குப் போதுமானது, சிறந்தது என்று வர்ணிக்கின்றார். ஏனெனில் குடியரசு வகை அரசாங்கம் மக்களுக்கு நாட்டுப் பற்றினை வளர்க்கும் என்கிறார். ஆனால் இளவரசன் என்ற நூலில் வரம்பற்ற மன்னராட்சி தான் சிறந்ததெனக் கூறுகின்றார். ஏனெனில் மக்கள் அனைவரும் நல்லவர்களல்ல, மோசமானவர்கள். மோசமான மக்களிடம் நாட்டுப் பற்று இருக்க முடியாது என்கிறார். எனவே இரண்டு வகையான அரசாங்க முறைகளைக் கூறினாலும் இவர் எழுதிய நூல் இளவரசன் என்பது பிளாரன்ஸ் நகரத்தை ஆண்ட மெடிசி குடும்பத்தாருக்காகவே எழுதப்பட்டதாகும்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
3.மாக்கியவல்லின் அரசாளும் முறையினை விளக்குக.

**மாக்கியவல்லியின் கருத்துக்கள் கீழ்க்கண்ட மூன்று தன்மைகள் வாய்ந்தவை. அவை:**

1. மனிதன் சுயநலவாதி. அவனுடைய வாழ்க்கை, புகழ் ஆகியவற்றில் தான் அக்கறை எடுத்துக்கொள்வான். சொத்து என்பதில் அதிக அக்கறை செலுத்தக் கூடியவன்.

2. மனிதனுடைய இயல்பு எப்போதும் ஒன்றுபோல்தான் இருக்கும். மாறாத தன்மை படைத்தது நல்லது என்பதைக் கட்டாயப் படுத்தித்தான் சுமர்த்த வேண்டும் என்கிறார்.

3. அரசு என்பது தான் முக்கியம். மக்கள் அரசிற்காகவே உள்ளவர்கள். மக்களுக்காக அரசு என்று சொல்ல முடியாது. மக்கள் தங்கள் தனிப்பட்ட விருப்பங்கள் அரசிற்குக் கீழாக இருக்கும் வகையில் விருப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அரசின்பால் முழுமையான கண்முடித்ததனமான நாட்டுப்பற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் அரசோடு தங்களை இணைத்ததுக் கொண்டு, அரசிற்காகவே செயல்படுகிறது என்ற பொது உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது உணர்வை மக்களிடம் அசாங்கம் மதம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தும்.

### 1.8 மதம்:

மதம் என்பது ஆன்மீக வளர்ச்சியை உருவாக்கும் காரணியாக மாக்கியவல்லி பார்க்கபவில்லை. மதம் அரசின் நிலைத் தன்மையைக் காக்கும். ஓர் காரணி, தெய்வீக வழிபாட்டைப் பின்பற்றினால் நாடு வளரும். இல்லையேல் நாடு அழிவதற்குக் காரணமாகி விடும். எனவே கடவுள் பயம் அல்லது அரச பயம் என்ற தெய்வீக வழிபாடு தேவை என்கிறார். அரச பயம் என்ற தெய்வீக வழிபாடு தேவை என்கிறார். அரச பயம் என்பது கட்டாயம்இருக்க வேண்டும். ஆனால் இதனை கடவுள் பயத்தோடு ஒப்பிடுவது சரியானதல்ல. நிலைத்து இருக்குதென்று சொல்ல முடியாது. எனவே ஒவ்வொரு அரசும் அல்லது குடியரசும் மதத்தைக கடைப்பிடித்தால் தான், ஊழல்றற அரசைக் காக்க முடியும். கிறிஸ்தவ மத்ததைக் கொண்டுவர இவர் நினைக்கவில்லை. மாறாக, பண்டைய உரோமானிய சாம்ராஜ்யங்களில் நிலவிய யாரொருவர் அரசுக்குப் பணிபுரிகின்றனரோ அவர்கள் கடவுளுக்கும் பணிபுரிகின்றார்கள் என்ற கருத்திற்கிணங்க மதம் அரசும் என்று பார்க்க வேண்டுமென்கிறார். மாக்கியவல்லி. பொது உணர்வை உருவாக்குவதே சுதந்திரமென்கிறார். பொது உணர்வு- உருவாக்கப்பட்டு விட்டால், மாக்கியவல்லியின் கருத்துக்கள் அனைத்தும் பலன்தரும். ஏனெனில் படைவீரர்கள் ஊதியம் பெற்று நாட்டைக் காக்கும் முறை ஒழிக்கப்பட்டு விடும் இத்தாலியில் இம்முறையே அதிகமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. தேசிய இராணுவம் என்பது ஏற்படும். இதில் 17 வயது முதல் 40 வயது வரை உடல் திறனும் திறமையும் வாய்ந்த அனைவரும் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். நல்ல சட்டங்களை இயற்றப்படட வேண்டும். மக்கள் அரசை வளமானதாக ஆக்க வேண்டும். எதிரிகள் அனைவரிடமிருந்து விடுதலை பெற்று, பாதுகாப்பாக, அமைதியாக அரசில் கூறுகின்றார். குடியரசு அரசாங்கம் பொது உணர்வை சிறந்த முறையில் உருவாக்கும். ஏனெனில் அங்கு மக்கள் ஊழலற்றவர்களாக இருப்பர். அரசனைக் காட்டிலும் மக்கள் அறிவுள்ளவர்களாக தெளிவாக, நிலைமையைப் புரிந்து கொண்டு நடப்பவர்களாக இருப்பார்கள் என உறுதியாக நம்புவதாக மாக்கியவல்லி மீது நம்பிக்கை வைத்துள்ளார்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
3.அரசியலக்கும் மதத்திற்கும் உள்ள தொடர்பான கூறுக.

### 1.9 இளவரசன்:

மாக்கியவல்லி ஏதேச்சதிகாரத்தை ஆதிரிக்கின்றார். அரசனின் ஏதேச்சதிகாரம் மட்டும்தான் மக்களைக் காக்கும் என்கிறார். ஏனெனில்

மக்களுக்கு அரசின் பால் எந்தவிதப் பற்றும் இல்லை. மிகவும் ஊழலானவர்கள் இளவரசன் என்ற நூல் இத்தாலி அரசர் லோரன்சாவிற்காக எழுதியது. பொது மக்களுக்காக எழுதப்பட்டது அல்ல. இத்தாலியை எவ்வாறு காப்பது, வளர்ப்பது என்ற கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது இந்நூல். அரசன் தன்னுடைய பதவியைத் தக்க வைத்துக் கொள்ள என்னென்ன செய்ய வேண்டும்? என்னென்ன தவிர்க்கப்பட வேண்டும் என்பதைக் கூறவே இந்நூல் எழுதப்பட்டது அல்ல. பற்றியும் அதனுடைய நிலைமையைப் பற்றியும் பல இடங்களில் கூறுப்படுவதால், இது இத்தாலிக்காக எழுதப்பட்டதென்றாலும் மிகையல்ல.

### 1.10 கோட்பாடுகள்:

அரசன் மக்களை ஆள வேண்டும் என்பதைக் காட்டிலும் முதலில் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். பொதுப் பணத்தை செலவு செய்வதில் அரசன் கவனமாக இருக்க வேண்டும். அதிகமான செலவுகள் செய்தால் அரசன் தனிநபர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுவான். இதனால் மக்களுக்கும் அரசனுக்குமிடையே வெறுப்பு ஏற்படும். அரசன் என்பவன் சிங்கத்தைப் போலும் நரியைப் போலும் இருக்க வேண்டும். அரசன் சிங்கத்தைப் போல் எதிரிகளை முறியடிக்க வேண்டும். அதே போல், நரியைப் போல் தந்திரமாக எதிரிகளை எவ்வாறு தன்னுடைய வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும். இக்கட்டான நிலைகளில் வாக்குறுதிகளை கைவிடுவது தவறல்ல. அரசன் என்பவன் மனிதாபிமான, மதப்பற்றுடையவனாக, நல்லவனாக, நம்பிக்கைக்குரியவனாக இருக்க வேண்டும். அவனுக்குத் தேவைப்படும் சமயங்களில் இக்குணங்களை மாற்றிக் கொள்ளலாம். கோழையாக, பயந்தாங்கொல்லியாக, அரசன் இருக்கக்கூடாது என்கிறார் மாக்கியவல்லி. அரசன் அன்பானவனாகவும், கண்டிப்பானவனாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டில் எது முக்கியதென்றால், அன்பைக் காட்டிலும் கண்டிப்பே அரசனுக்கு தேவையானதென்கிறார். அரசன் சட்டத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். அரசனுக்கு பெயரும் புகழும் கிடைக்க வேண்டுமென்று நினைத்தால் சில மாறுபட்ட நடவடிக்கைளில் இறங்க வேண்டும். ஏனெனில் மக்கள் அந்த வித்தியசமான நடவடிக்கைகளைப் பற்றி அதிகமான பேச்சும் விவாதமும் செய்வர். அரசன் மக்களின் மரியாதைக்குப் பாத்தியப்பட்டவனாக இருக்க வேண்டும் அல்லது மக்களால் எதிரிகள்

வெறுக்கப்படக் கூடியவனாக இருக்கக் கூடாது, அரசன் போர்தொடுக்கத் தயங்கக் கூடாது. போரைத் தள்ளிப் போடவும் கூடாது. ஏனெனில் இது எதிரிகள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள வாய்ப்பாகிவிடும். அரசன் போலப் புகழ் எது, உண்மையான புகழ்ச்சி எது என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அரசன் போலிப் புகழ்ச்சிக்கு அடிபணிந்து விடக் கூடாது. அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசன் கவனமாக இருக்க வேண்டும். விசுவாசம், திறமை, அறிவு ஆகிய பண்பு நிறைந்தவர்களையே அமைச்சர்களாகத் தேர்வு செய்ய வேண்டும். இராணுவத்தை நவீனப் படுத்த வேண்டும். தேவையற்ற பழைய இராணுவத்தை நீக்க வேண்டும்.

மாக்கியவல்லி, இரண்டு விதிமுறைகளை அரசன் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். அரசன் சுயநலமிக்கவனாக இருப்பதைக்காட்டிலும் தற்புகழ்ச்சியுடையவனாக இருக்க வேண்டும். இரண்டாவதாக மக்களுக்கு என்னென்ன செய்கின்றானோ அவை அனைத்தும் அவனுடைய நலனிற்காகவே இருக்க வேண்டும். மக்களுக்கு உயிர், உடைமை மற்றும் புகழ் ஆகிய பாதுகாப்பு வழங்கிய, மக்களின் விசுவாசத்தை அரசன் பெற்றுக் கொள்ள வேண்டும். தன்னுடைய நாட்டைப் பராமரிக்க அருகாமை நாட்டைப் பிடித்து, தன்னுடைய நாட்டை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். விரிவுபடுத்தப்பட்ட பகுதி தன்னுடைய நாடு மாதிரியே பழக்கவழக்கங்கள், மொழி ஆகியன இருந்தால் அந்த நாட்டின் ஆட்சியாளரை நீக்கி விட வேண்டும். அந்த விரிவுபடுத்தப்பட்ட பகுதி தன்னுடைய நாட்டைக் காட்டிலும் மொழி, பழக்கவழக்கங்களில் வேறுபட்டால், அந்த ஆட்சியாளரைக் கொன்று விட்டு, தன்னுடைய பிரதிநிதிகளை நியமித்து ஆட்சி செய்ய வேண்டும். சில காலத்திற்குப் பின்னர், தன்னுடைய ஆட்சியைப் பலப்படுத்துவதற்காக மக்களைத் தம் பக்கம் ஈர்ப்பதற்காக, ஆண்டுவந்த பிரதிநிதிகளைத் தூக்கிலிட வேண்டும். உள்ளூர் பிரச்சனைகளைச் சமாளிக்க, பிற நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டும். வெளிநாட்டின் மீது போர் தொடுக்க இராணுவத்தை வலுவானதாக, பலப்படுத்த வேண்டுமென்றும், இத்தாலிக்கு சுதந்திரம் பெற முயற்சிக்க வேண்டுமென்று மாக்கியவல்லி மேடிசி இளவரசர் லாரன்சோவிடம் முறையிடுவதாக இளவரசர் நூலின் கடைசிப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது. இத்தாலிக்கு சுதந்திரம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றில் அதிக்க கவனம் செலுத்துகிறார். மாக்கியவல்லி.

மாக்கியவல்லி அறநெறியை அரசியலில்லிருந்து பிரிக்கின்றார் என்பதை அவரது இரண்டு நூல்களும் தெரிவிக்கின்றன. மாக்கியவல்லி நாத்திகவாதியாகவும், கொடுங்கோன்மையை ஆதரிப்பவராகவும் காணப்படுகின்றார் எனச் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். போப்ஆண்டவரையும் கிறிஸ்தவ மதத்தையும் இவர் வெறுக்கின்றார். தனிநபர் அறநெறி, பொது வழிமுறைகளை இவர் ஆதரிக்கின்றார். ஏனெனில் நோக்கம் தான் முக்கியமே தவிர வழிமுறை அல்ல என்பது இவரது திடமான கருத்து. மக்களின் அறநெறி நல்ல அரசாங்கத்தைப் பாதித்துவிடுமென்கிறார். அரசன் என்பவன் சமுகத்திற்கு அப்பால் அமைந்து, அறநெறிகளுக்கு அப்பாற்பட்டவன் என்கிறார். எனவே தான் அரசன் தன்னுடைய நடவடிக்கைகளின் மூலம் தான் மக்களின் நல்வாழ்வைப் பேண முடியும் என்கிறார் மாக்கியவல்லி. எனவே அரசன் மக்கள் தரப்பு வாதங்களுக்கு மரியாதையளிக்காது. தேவைப்பட்டால் அறநெறிக்கு மீறிய செயல்களனைத்தையும் செய்யலாமென அரசனின் மீறய செயல்களும் நியாயம் கற்பிக்கிறார்.

நல்ல அரசாங்கத்தை ஏற்படுத்தவும், மக்களின் நல்வாழ்வைக் காக்கவும் அரசன் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாமென மாக்கியவல்லி கூறுகின்றார். அரசனுடைய நடவடிக்கைகள் மக்களுக்கு எதிராக அமைந்தாலும் பிற நாட்டிற்கு எதிராக அமைந்தாலும் கவலையில்லை. தன்னுடைய நோக்கத்தை அடைய மக்களின் ஆதரவு, பிறநாட்டின் ஆதரவு ஆகியன எளிதில் கிடைக்காது என்பதால், தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாமென்கிறார். நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சம் ஏற்படும் சமயங்களில் எது நியாயமான நடவடிக்கை எது நியாயமில்லாத நடவடிக்கை எனப் பாதுபாடு பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்கிறார் மாக்கியவல்லி. எனவே மாக்கியவல்லியின் அணுகுமுறை விசித்திரமான ஒன்று திறமையான அரசாங்கத்தின் திறமையைப் பற்றி அமைத்துச் செயல்பட வேண்டுமென்பதில் தான் மாக்கியவல்லிக்கு அக்கறையே தவிர, அரசாங்கம் எவ்வாறு அமைய வேண்டும், செயல்படவேண்டுமென்ற தத்துவார்த்த நடவடிக்கைகள் இவர் நூல்களில் கிடையாது. அரசு தோற்றக் கோட்பாட்டில் வரலாற்று அணுகுமுறையை மாக்கியவல்லி சரியான வகையில் பயன்படுத்தவில்லை என்று சபேன் குற்றம் சாட்டுகிறார். மாக்கியவல்லியின் அணுகுமுறை அவருடைய அனுபவத்தால் கிடைத்த

உற்றுநோக்குகள், நடைமுறைகள் தான் ஆகும். இவருடைய நடைமுறை அனுபவங்கள் மூலம் தான் தனது கருத்துக்களை உருவாக்கியுள்ளார் என்பதற்குச் சான்று. அவர் காலத்திய இத்தாலியின் அரசியல் பிரச்சனைகளை வெளியிட்டதாகும்.

மாக்கியவல்லியின் கருத்துக்கள் 16 ஆம் நூற்றாண்டின் இத்தாலியைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. இவரது கருத்து குறிப்பாக அரசியல், மதம் ஆகியவற்றில் வித்தியாசமான கருத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் இத்தாலி. இத்தாலி தவிர வேறு நாட்டிலிருந்தாலோ அல்லது 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியியோவாக இருந்தால் இவரது கருத்து வேறு மாதிரியாகவே இருந்திருக்கும். மதத்தை இவர் வித்தியாசமாகக் கூறியிருப்பார். தவிர மறுமலர்ச்சிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் உரோமானிய கிறிஸ்தவ மதத்தைக் குறை கூற ஆரம்பித்தனர். மொத்தத்தில் இவரது அரசியல் தத்துவம் பரந்த அளவில் அமையவில்லை. குறுகிய கண்டோட்டத்துடன் அமைந்துள்ளது. ஆகவேதான் அரசியல் சிந்தனைக்கு அவர் ஆற்றிய பங்கு குறைவாகக் கணிக்கப்படுகின்றது.

### 1.11 அரசு:

அரசு என்பது அத்தியாவசியமானது. மக்களின் பாதுகாப்பிற்குத் தேவையானது. ஏனெனில் மக்கள் முழுமையாகவே தன்னலமிக்கவர்கள். இதே கருத்தை சோபியச் சிந்தனையாளர்களும், ஹறாப்ஸீன் கொண்டிருந்தனர். அரசு என்பது ஒப்பந்தத்தால் உருவானது என்று ஹாப்ஸ் கூறுகின்றார். ஆனால் மாக்கியல்லி ஒப்பந்தம் பற்றி எதுவும் கூறவில்லை. அரசு மக்களின் நல்வாழ்விற்காக எந்த வகையிலும் அரசை உருவாக்கலாம் என்கிறார். சுயநலமானவர்களாக மக்கள் இருப்பதால், அவர்களை கட்டாயப்படுத்தித் தான் அரசில் பணிய வைக்க முடியுமென்பதால், அரசு என்பது வலிமையால் தான் உருவானது என்கிறார். அரசன் நாட்டை வெற்றிகரமாக அரசை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கையில் இறங்குவான் என்கிறார். மக்களை ஆணையிட்டுக் கட்டுப்படுத்தவோ இறையுணர்வுடனோ அல்லது மக்களிடம் செல்வாக்குப் பெற்றவனாகவோ கட்டுப்படுத்த அரசன் உரிமை பெற்றிருக்கவில்லை. எனவே மக்கள் அரசுக்கு மக்கள் அச்சத்தாலோ அல்லது அவர்களுக்கு ஆதாயம் கிடைக்மென்ற சுயநலத்திற்காகத் தான் பணிவார்கள் என்று மாக்கியவல்லி

கூறுகின்றார். இக்கருத்தை உறாப்ஸீம் ஏற்கனவே கூறியுள்ளார். இரு சிந்தனையாளர்களும் மக்கள் அரசுக்குக் கீழ்ப்படிதல் என்பதற்கு ஒரே காரணங்களைத் தான் கூறியுள்ளனர். மக்கள் தங்கள் பாதுகாப்பிற்காக உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டுமென்கின்றனர். மாக்கியவல்லி அரசு உருவானதோடு நின்றுவிடாது என்றும் அது தொடர்ந்து விரிவுபடுத்தப்படும் என்றும் கூறுகின்றார். தேசிய அரசு என்று இன்று நம்மால் அழைக்கப்படக் கூடியவகையில் மாக்கியவல்லியின் அரசை தேசிய அரசு என்று கூட குறிப்பிடுகின்றார். தேசிய அரசு என்பது வெளிநாட்டுக் கட்டுப்பாடு எதுவுமின்றி முழுச் சுதந்திரத்துடன் செயல்படவல்லது என்று கூறுகின்றார். இதில் பொதுவான உணர்வோடு அனைவரும் அடிப்படையில் அரசு உருவாகும் என்று தேசிய அரசுக் கோட்பாட்டை விளக்குகிறார். இத்தாலியை மனதில் வைத்துத்தான் தேசிய அரசு கோட்பாட்டை மாக்கியவல்லி உருவாக்கியுள்ளார். இத்தாலியிலுள்ள அனைத்து வெளிநாட்டவர்களையும் வெளியேற்றிவிட்டு, இத்தாலியை ஒற்றுமைப்படுத்தி தேசிய அரசாக்க வேண்டுமென்கிறார். ஏனெனில் இத்தாலிய மொழி இனம் ஆகிய அனைத்தின் பால் இந்த அரசு அமையும் என்கிறார். இத்தாலி அரசியல் ஒற்றுமையின்றி போராட்டங்கள், எழுச்சிகள் ஆகியன தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தால் இத்தாலியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். அமைதியை நிலவச் செய்ய, இத்தாலிய மக்களுக்காக அரசுக் கோட்பாடு என்பதை அவருடைய எண்ணத்தை வைத்து நாம் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

### 1.12 தொகுப்புரை:

மாக்கியவல்லி தான் முதலாவது தற்கால அரசியல் தத்துவஞானி ஆவார். அவரது சிந்தனைதான் 16 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் உள்ள அரசியல் சிந்தனைக்கு அடிப்படையாக, படிக்கட்டாக அமைந்தது எனக் கூறுவோரும் எதிர்ப்போரும் உண்டு. இருப்பினும் அவரது காலம் இடைக்காலம் அரசியல் சிந்தனை முடிவுக்கு வந்து தற்கால அரசியல் சிந்தனை தொங்குகிறதென்பதில் கருத்து வேறுபாடில்லை. அவரது சிந்தனை பல வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. இடைக்காலத்தில் எழுந்த அரசு மற்றும் திருச்சபை பிரச்சனையான, கிறிஸ்தவ மதம் தான் அனைத்து அரசுகளையும் கட்டுப்படுத்தக் கூடிய தென்றும் அரசுகள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்துதான் செயல்பட வேண்டும் என்பது ஒரு பிரச்சனை. மக்கள் இறைமை, ஏதேச்சதிகாரம் ஆகிய மூன்று இடைக்கால

அரசியல் பிரச்சனைகள் தொர்ந்து வருவதற்கு மாக்கியவல்லி கருத்துக்கள் தான் எனலாம். ஏனெனில் மூன்று பிரச்சனைகளும் முடிவுக்கு வராது. தொடர்ந்து வந்து கொண்டு உள்ளது. மாக்கியவல்லியின் சிந்தனை அமைந்துள்ளது.

மக்கள் இறைமை என்ற கோட்பாட்டை இவர் ஏற்றுக்கொள்ளலாமல் இல்லை. ஏனெனில் இவர் தான்குடியரசு முறை அரசாங்கத்தைத் தனது முதல் நூலில் ஆதரித்து எழுதியுள்ளார். சாதாரண மக்களுக்கு குடியரசு முறை அரசாங்கம் தான் மிகவும் பொருத்தமான ஒன்று என்கிறார். ஏதேச்சதிகாரத்தை ஆதரித்துப் பேசுவதற்குக் காரணம் மக்கள் தான் அரசனைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதியுள்ளார். மக்கள் இறைமைக் கோட்பாடு மறுமலர்ச்சிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதை நாம் அறிவோம். சுதந்திரம் என்பது அரசர்களுக்கு திருச்சபை குறுக்கீட்டைக் குறைத்தால்தான் கிடைக்குமென திருச்சபை எல்லா அரசர்களையும் கட்டுப்பாடு செய்ததைக் குறை கூறுகின்றார். தவிர, ஏதேச்சதிகாரம் தான் சிறந்த அரசாங்க முறை என்றும், இது குடியரசு மற்றும் மன்னராட்சி எதுவாக இருந்தாலும் பொருந்தக் கூடியது என்கிறார். மொத்தத்தில், மக்கள் தங்கள் முழு நடவடிக்கைகளால் அரசாங்கத்தை அல்லது அரசனைக் காக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். மக்களால் ஆளக் கூடியது மக்களாட்சி என்பதற்கு பதிலாக ஆளக் கூடிய அரசனைக் காத்தால் தான் மக்கள் தங்கள் சுதந்திரத்தை அனுபவிக்க முடியுமென்று ஏதேச்சதிகார முறையை இவர் முழுவதும் ஆதரித்தது வந்துள்ளார்என்பது குறிப்பிடத்தக்கது. சிவில் சட்டங்கள் மன்னராட்சியில் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அரசியல் இல்லை. மன்னராட்சியானாலும், குடியர்சாட்சியாலும் சட்டமென்பது பகுத்தறிவாகவோ, மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடியதாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. சட்டத்தின் உண்மையான நோக்கத்தை இவர் ஆதரிக்கவில்லை. எனவே அவரைத் தத்துவஞானி என்று கூறுவதைவிட ஒர நிர்வாக அறிஞர் என்று தான் கூற வேண்டும். மன்னராட்சியை, மன்னரைக் காக்கக் கூடியதாகச் சட்டம் இருக்க வேண்டுமென்ற உள்ளார்ந்த நிலையில் அவரது கருத்துக்கள் அமைந்துள்ளன. ஹாப்ஸீக்கும் மாக்கியவல்லிக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. மாக்கியவல்லியின் கருத்துக்கள் அரசியல் கோட்பாட்டிற்கு வழிகாட்டியாக அமையவில்லை. 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மற்றும் அதற்கு எதிரான இயக்கங்களில் மாக்கியவல்லியின் கருத்துக்கள்

அரசியல் கோட்பாட்டிற்கு வழிகாட்டியாக அமையவில்லை. 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மற்றும் அத்றகு எதிரான இயக்கங்களில் மாக்கியவல்லியின் கருத்துக்கள் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் இடம் பெறவில்லை. ஏனெனில் இவை முழுக்க முழுக்க. கிறிஸ்தவ மதம் பற்றி அமைந்திருந்தது. ஆனால் மாக்கியவல்லி கிறித்துவ மதத்தை அடியோடு வெறுத்தார். எனவே மாக்கியவல்லியின் கருத்துக்கள் இவருக்குப் பின்னர் வந்த அரசியல் சிந்தனையாளர்களின் மனதில் இடம் பெறவில்லை. மன்னராட்சியை மாக்கியவல்லி ஆதர்க்கின்றவர். இருப்பினும் ஆங்கிலேய மன்னராட்சியை ஆதரிக்கக் கூடிய பியூரிடன்ஸ் என்று சொல்லக் கூடிய 16 ஆம் நூற்றாண்டுச் சிந்தனையாளர்களின் மனதில் கூடி மாக்கியல்லி இடம் பிடிக்கவில்லை என ஆலன் கூறுகின்றார்

மாக்கியவல்லியின் நோக்கத்தை அடைய எவ்வழி முறைகளையும் கடைப்பிடிப்பது என்ற இவரது கருத்து 16 ஆம் நூற்றாண்டில் சிந்தனையாளர்கள் எவரது மனதிலும் இடம் பிடிக்கவில்லை. இருப்பினும் பிரச்சனைகளைத் தீர்தது வைக்க உண்மைகள் அசவியமென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிரச்சனைகளை உணர முடியாதபோது தீர்வு என்பது இருக்காது. எனவே அவர் காலத்திற்குப் பின்னர் பயன்கருது கோட்பாடு உருவானது. மேலும் திருச்சபை அரசு பற்றிய மோதலிலிருந்து இவர் விடுபட்டு இருப்பது ஒரு விரும்பத்தக்க செயல் எனக் கூறுவோரும் உள்ளனர்.

மாக்கியவ்லி தனது கருத்தைத் தெளிவாக் கூறியுள்ளாரெனினும், தீர்க்கமாக் கூறவில்லை. தொலைநோக்குப் பார்வையில் அவர் கருத்துக்கள் இல்லை. அவர் கூறும் அறநெறி ஏற்கக் கூடியதாக அமையவில்லை. மாக்கியவல்லி கூறும் அரசனை உருவாக்குவதென்பது கடினமானது.

### 1.13. முக்கிய வார்த்தைகள் :

தேசிய அரசு, போப்பாண்டவர், உயர்குடியாட்சி, ரோமானியார்கள், அரசியல் ஒழுக்கம், ஆயுத வலிமை.

**1.14 பரிந்துரை நூல்கள்:**

1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.

**1.15 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனைக் கேள்விக்களுக்கான பதில்கள்.**

1. கேள்வி எண் .1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண்.1:3 ல் அறிக
2. கேள்வி எண் .2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண்.1:4 ல் அறிக
3. கேள்வி எண் .1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண்.1:7 ல் அறிக
4. கேள்வி எண் .1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண்.1:8 ல் அறிக

**1.16 மாதிரி வினாக்கள்:**

1. மாக்கியவல்லி மதம், ஒழுக்கம் ஆகியவை பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை ஆராய்க.
2. குடியரசு, இளவரசன் ஆகிய நூற்களில் மாக்கியவல்லி ஆட்சியாளர்க்கு கூறும் அறிவுரைகள் யாவை?

# அலகு - 5

## தாமஸ் ஹாப்ஸ்
*(1588 - 1679)*

**அறிமுகம் :**

ஹாப்ஸ் இங்கிலாந்து நாட்டின் தலைசிறந்த அரசியல் சிந்தனையாளர் ஹாப்ஸ் ஆவார். இவரது சிந்தனையை சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசியல் சிந்தனையில் ஒரு மைல் கல்லாம். இவ்வருடைய சிந்தனைகளான இயற்கை நிலை, இயற்கை உரிமைகள், சமூக உரிமைகள், அரசாங்க வகைகள் ஆகியவற்றை கீழ்காணும் பகுதிகளில் காணுவோம்.

**நோக்கங்கள் :**

ஹாப்ஸின் அணுகுமுறை கோட்பாடு விளக்கம்
ஹாப்ஸின் இயற்கை நிலையில் மக்களின் நிலை பற்றி விளக்கம்.
ஹாப்ஸின் சமூக ஒப்பந்தக் கோட்பாடு விளக்கம்.

**வடிவமைப்பு :**

இளமைப்பருவம்
நூல்கள்
அணுகுமுறை
இயற்கை நிலை
இயற்கை உரிமைகள்
சமூக உரிமைகள்
அரசாங்க வகைகள்
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
வினாக்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

### 1.1. இளமைப்பருவம்:

இங்கிலாந்து நாட்டின் தலைசிறந்த அரசியல் சிந்தனையாளர் ஹாப்ஸ் ஆவார். இவர் 1588 ஆம் ஆண்டு பிறந்தார். இந்த ஆண்டு இங்கிலாந்து

மறக்க முடியாத ஆண்டு. ஏனெனில் ஸ்பெயின் கப்பற்படை இங்கிலாந்து மீது தாக்குதல் நடத்திய வரலாற்று நிகழ்ச்சி நடந்தது அந்த ஆண்டில் தான். இவர் பிறந்தது முதலே பயந்தாங்கொல்லியாவே இருந்து வந்துள்ளார். இவரது அப்பா ஒரு மதப் போதகர். எனவே வீட்டைக் கவனியாது, மதப் போதனையில் காலம் கழித்து வந்தார், எனவே ஹாப்ஸ் மற்றும் இரு சகோதரர்கள் அரவது அம்மா ஆகியோர்கள் தனியாக வாழந்து கஸ்டங்கள் பலவற்றை அனுபவித்து வந்தனர். ஹாப்ஸ் இளம் வயதிலேயே தன்னுடைய அறிவுத் திறனை வெளிக்காட்டினார். நான்கு வயதிலேயே ஹாப்ஸ் எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டார். இவர் தனது ஆறாவது வயதில் லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைக் கற்றார். இவர் 15வது வயதி ஆக்ஸ்போர்டு சென்று, படித்தார். ஆக்ஸ்போர்டில் தனது உயர்கல்வியை முடித்த பின்னர் கவன்டிஸ் பிரபு குடும்பத்தில் ஒருவருக்கு ஆசிரியராகவும் தோழனாகவும் நியமிக்கப்பட்டார். அது இவரது நல்ல நேரம் என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் கவன்டிஸ் பிரபு டெவன்சயர் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். உறாப்ஸ் தனது கடைசிக் காலம் வரை 1679 ஆம் ஆண்டு வரை கவண்டிஸ் குடும்பத்தோடு நெருகங்கிய தொடர்பு நண்பராயினார். இவர் சந்தித்த முக்கிய நபர்களில் பேகன், கார்வி, கலிலியோ ஆகியோர் அடங்குவர். ஊர்களைச் சற்றிப் பார்க்க பயணம் மேற்கொள்வதில் அதிகமான ஆர்வம் காட்டினார். பாரிசில் 20 ஆண்டு காலம் வசித்து வந்துள்ளார். ஹாப்ஸின் நடைமுறை அரசியல் அனுபவங்கள் நிர்வாகத் திறன், பேரறிஞர்களின் சகவாசம் ஆகியன இவரை ஒரு உயர்நத சிந்தனையாளராக மாற்றியதென்று கூறுவர்.

இங்கிலாந்தில் முதலாம் ஜேம்ஸ் மன்னன் ஆட்சிக்கு வந்த பின்னர், அரசனுக்கும் பாராளும்னறத்திற்கும் இடையே அதிகாரப் போட்டி ஆரம்பமாயிற்று. 1640 ஆம் ஆண்டு பாராளுமன்றம் தனது அதிகாரத்தை நிலை நிறுத்த ஆரம்பித்தது. இதனால் அரச குடும்பம் பாதிக்கப்பட்டது. ஹாப்ஸ் உயிருக்கு ஆப்தது என்பதை உணர்ந்து ஐரோப்பாவிற்கு ஓடி ஒளிந்துவிட்டார். ஹாப்ஸ் இரண்டாம் சார்லஸ் மன்னனுக்கு ஆசிரியராக 1645-48 வரை இருந்துள்ளார். முதலாம் சார்லஸ் மன்னனின் மகன் தான் இரண்டாம் சார்லஸ். முதலாம் சார்லஸ் மன்னனைப் பாராளுமன்றம் தூாக்கிலிட்டது. ஹாப்ஸ் 1651ஆம் ஆண்டு மீண்டும் இங்கிலாந்து திரும்பினார். பிரான்சு நாட்டில் இருக்கும் போது மத குருமார்களுக்கு எதிராக சில கருத்ததுக்கள் கூறியதால், மத குருமார்களின் கண்டனத்திற்கு ஆளானார். எனவே அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டார். பாரிசிலிருந்து

ஹாப்ஸ் வெடவன்சயர் குடும்பத்தினர் ஆதரித்து, அவரை நன்கு கவனித்து கொண்டனர். ஹாப்ஸ் தனது 92வது வயதில் காலமானார். அது வரையிலும் டெவன்சயர் குடும்பத்தின் ஆதரவோடு தான் வாழ்க்கையை நடத்தினார்.

**1.2 இவருடைய நூல்கள் :**

ஹாப்சின் சிறந்த நூலாகவும், இவரது புகழைப் பரப்பிய நூலாகவும் கருதப்படுவது லெவியாதான் என்ற நூலாகும். இவர் பிரான்சில் வசித்து போதே1651ல் இந்த நூலை வெளியிட்டார். இது தவிர, ஏற்கனவே 1642 ஆம் ஆண்டு De Cive என்ற நூலும் 1650 ஆம் ஆண்டு Elements of Law சட்டத்தின் அணுக்கள் என்ற நூல்லையும் எழுதியுள்ளார். இங்கிலாந்து திரும்பிய பின்னர் 1655 ஆம் ஆண்டு **Decorpore** என்ற நூலையும் 1659ல் ம்ள **De Homine** என்ற நூலையும் எழுதினார். லெவியாதான் என்ற நூல் தான் மிகவும் சிறந்த நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அந்நூலைப் பற்றிய கண்டனங்கள் ஏராளம். ஏனெனில் ஏதேச்சதிகாரத்தை ஆதரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**1.3 அணுகு முறை :**

ஹாப்ஸ் வடிவியல் (geometricalmethod) முறை தான் அறிவியல் முறையில் உண்மையான அணுகுமுறை என்கிறார். யூக்லிட் மற்றும் டெகாட்டே ஆகியோர்களின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஹாப்ஸ் தத்துவங்களை அமைத்துள்ளார். ஏற்கப்பட்ட உண்மைகளை ஆரம்பத்திலிருந்தே எவ்வாறு உருவாகியிருக்குமென்று பகுத்து ஊகித்து இவர் தனது கருத்துக்களை உருவாக்கியிருக்கிறார். இதே முறையைத் தான் பிளேட்டோவும் பின்பற்றியுள்ளார் என்பதை அறிவோம். எனவே ஹாப்ஸ் முதலில் மனிதன், அவனுடைய பண்புகள் ஆகியவற்றைத் தீர ஆராய்ந்த பின்னர் தான் ரேசு பற்றிக் சுறுகின்றார். மனிதனின் இயல்புக் பற்றிக் கூறிவிட்டு, நியாயமான காரணத்திற்காக அல்லது அவனுடைய தேவைக்காகவே அரசை உருவாக்கினான் என்கிறார். மனிதன் சுயநலமிக்கவன், தனித்து வாழ விருப்பம் உடையவன். அரசியல், ஒழுக்க நெறிகள் அவனை ஆட்கொள்ளும் சக்திகள் அல்ல. அவனது ஆசையால், மற்றவர்களை வெல்ல எண்ணுகிறான். இவ்வெண்ணம் நிறைவேற அவனுடன் வாழ்கின்ற மற்றவர்களோடு போட்டியிடுகின்றான். அதிகார வெறியினால் அவர் மற்றவர்களைப் புறக்கணிக்கின்றான். அவன் ஒரு

செயலால் தனக்கு கேடு விளையும் என்றறிந்தால் அதைத் தவிர்க்கிறான். இன்பத்தை நல்லவையாகவும், துன்பத்தைத் தீயவனவாகவும் கருதுகிறான். தன் விருப்பங்கவெல்லாம் நிறைவேறும் போது மனிதன் நல்வாழ்வு வாழ்கின்றதாக நினைக்கின்றான். ஆனால் இந்த நல்வாழ்வு அவன் வாழ்வின் இறுதி முடிவாக இல்லை. அவன் நல்வாழ்வு வாழும்போது தான் அவனுடைய விருப்பங்களும் ஆசைகளும் அதிகாரமாகின்றன. இந்த அதிகார வெறி வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் பின் தொடர்கிறது என்கிறார் ஹாப்ஸ்.

ஹாப்ஸின் லெவியாதான் ஆங்கிலேய அரசை ஆதரித்து எழுதப்பட்ட நூல் என்பதை அறிவோம். ஆனால் இக்கருத்தை ஹாப்ஸ் எப்போதுமே ஏற்றுக் கொண்டதில்லை. ஹாப்ஸின் மனிதர்கள் சுயநலவாதிகளாக, சமுக உணர்வு இல்லாதவரகளாக எவ்வாறு அரசின் கீழ் வந்தார்கள் என்று ஒரு கேள்வி எழுப்புகிறார். இரண்டாவதாக மக்களின் தனிநபர் மகிழ்விற்காகவே அரசாங்கத்தின் ஏகாதிபத்திய முறை அமைந்துள்ளதென்கிறார். மூன்றாவதாக ஏகாதிபத்திய முறை அரசாங்கம் மன்னராட்சிக்குப் பெருமை சேர்க்கிறதென்றும் கூறுகிறார்.ஆலிவர் குரோமவேல் ஆட்சியை புகழந்து பாராட்டுகிறார். ஹாப்சின் கருத்துக்களான இயற்கை நிலை, அரசியல் சமுகம் உருவான ஒப்பந்த முறை, ஒப்பந்தத்தின் இயல்பு மற்றும் விளைவுகள் ஆகியவற்றைக் காண்போம்.

### 1.4 இயற்கை நிலை :

ஹாப்ஸ் இயற்கை நிலையை விவரிக்கின்ற போது மக்கள் ஒருவருக்கொருவராகவும், எல்லோருடனும் சண்டை போட்டுக் கொண்டுருக்கின்ற நிலையைத் தெளிவாகக் கூறுகின்றார். மனிதன் இயல்பு பற்றியும் கூறியுள்ளார். சுயநலவாதியாக பிறரோடு சேர்ந்து வாழ விம்பாதவனாக மனிதன் உள்ளான் என்றும் கூறுகிறார். மனிதன் இறக்கும் வரை அவனிடம் காணப்படும் அதிகார வெறிதான் அவன் செயல்களின் அடிப்படையாகக் காணப்படுகின்றது. மனிதன் சிந்தனை செய்யும் பகுத்தறிவு படைத்தவனாயிருந்தும் அதே நேரத்தில் முட்டாளாகவும் காணப்படுகின்றான். மனிதனை செயல்படச் செய்வது சிந்திக்கும் சக்தியோ அல்லது புத்திக் கூர்மையோ அன்று. .அவனது மனதிற்குள் கிளம்பும் ஆசைகள்தான் அவனைச் செயல்படச் செய்கின்றன. சுயநலமே அவனது வாழ்க்கையின் முக்கிய நிலையாகும். எல்லா நேரங்கிளலும் தன்னைப் பற்றியே சிந்திக்கிறான். அவன் பிறரைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை.

அவனுடைய விருப்பங்கள் ஆசைகள், தேவைகள் ஆசியன தான் வழி நடத்தினவே தவிர, நியாயமோ, அறிவோ அவனிடம் கிடையாது என்கிறார் ஹாப்ஸ்.

இச்சூழ்நிலையில் இயற்கை உரிமைகள் என்பது தன்னைக் காத்துக் கொள்ள அவன் கொண்டிருக்கும் உடல்வலிவும் மனவலிவும் தான் என்கிறார். ஹாப்ஸ் ஏனெனில் அவன் உயிர் வாழ பிறரோடு சண்டை போட்டுத் தான் தன்னுடைய தேவைகளைப் பெற முடியும். உடல்வலிவால் பிறரிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்வது தான் இயற்கை உரிமைகள் என உறாப்ஸ் கூறுகின்றார்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**

1.ஹாப்ஸின் இயற்கை நிலை கருத்தை கூறுக.

இயற்கை நிலையில் வாழ்நத மனிதனுக்கு பிறரைப் பற்றிய அன்போ, பாசமோ, நட்போ, கூடிவாழும் எண்ணமோ இல்லாமல் இல்லை. அவன் அவற்றனைப் பற்றிச் சிந்திக்க வில்லை. தன்னைப் பற்றியே தான் சிந்தித்தான். பிறர் கஸ்டப்படுகின்றபோது தமக்கும் அந்த நிலை ஏற்படக் கூடுமென்பதையெல்லாம் உணர்ந்தாலும், அவன் அதற்காக எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. எனவே மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தான் இருந்தார்கள் என்பது ஹாப்சின் இயற்கை நிலையாகும்.

இயற்கை நிலையில் மனிதர்கள் உடலாலும் உள்ளதாலும் ஒருவருக்கொருவர் சமமானவர்களாகத் திகழந்தனர் என்கிறார். சமம் என்று சொல்கின்ற போது ஒரே மாதிரியான எண்ணத்தையும் ஒரே மாதிரியான உடல் அமைப்பையும் கொண்டிருந்தனர் என எண்ணக் கூடாது. உடல் அமைப்பபில் வலுக்குறைந்த ஒருவன் தனது அறிவு நுட்பத்தால் உடல் வலுநிறைந்த ஒருவனைச் சமாளிக்கும் திறமை கொண்டவனாக இருக்க முடியும் என்பதால் சமமானவர்கள் என்று ஹாப்ஸ் கூறுகின்றார். மேலும் பெரும்பாலான மக்கள் தங்களை மற்றவர்களைக் காட்டிலும் அறிவாளிகள் என்று நினைகின்றனர். இந்த எண்ணமே மனிதன் எல்லோரும் சமம் என்பதை உறுதி செய்கின்றது. சம ஆற்றலுடைய மனிதர்கள் ஒரே மாதிரியான எண்ணங்களையும் விருப்பங்களையும் கொண்டிருப்பது ஆசைப்படும் போது, அப்பொருள் இருவருக்கும் கிடைக்காத ஒரு நிலை ஏற்படும்போது, இருவரும் பகைவராகி ஒருவனை மற்றொருவன் வெல்ல எண்ணுகின்றான். இக்காரணத்தால் இயற்கை நிலையில் வாழந்த மனிதன் அமைதி வழந்தான்

மனிதன் அமைதி இழந்தான். மேலும் போட்டி தன்னம்பிக்கையின்மை, புகழ் ஆகியவற்றின் விளைவாகவும் தங்களுக்குள் சண்டையிடும் அவலநிலையில் மனிதன் இருந்தான். எனவே தன்னலம், தற்காப்பு, நற்பெயர் ஆகியவற்றிற்காக சண்டையிடுவது வழக்கமானதாயிற்று. இதனால் மனிதரகளிடம் பயம் பற்றிக் கொண்டது. தனிமையான, வறுமையான, கீழ்த்தரமான, மிருகத்தனமான் குறுகிய மனம் படைத்ததாக மனிதர்களுடைய வாழ்வு இருந்தது என இயற்கை நிலை மனிதர்களைப் பற்றி ஹாப்ஸ் கூறுகின்றார்.

இயற்கை நிலையில் இருந்த மனிதன் கீழ்க்கண்ட சில பொதுப் பண்புகள் நிறைந்தவனாகக் காணப்பட்டான் என்கிறார் ஹாப்ஸ். முதலாவதாக, சரியானது எது, தவறானது எது என்பதோ, இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளோ அவனுக்கு தெரியாது. ஏனெனில் அவனின் ஆசை தான் அவனை இயங்கச் செய்தது. அவன் செய்த செயல்களை மதிப்பிட எவ்வித அளவுகோலும் இல்லை. ஏனெனில் பொதுச் சட்டங்கள் உருவான பின்னர் தான் அவனுடைய செயல்களை அளவிட முடிந்தது. இரண்டாவதாக, நியாயமான செயல் எது, நியாயமற்ற செயல் எது என்பதையும் அவனால் பிரித்துப் பார்க்கத் தெரியவில்லை. சட்டத்தை செயலாக்க பொதுத் தலைவன் இல்லாத நிலையில் அங்கு சட்டமே இல்லாமல் இருந்தது. சட்டம் இல்லாத போது, அங்கு நீதி நிலவிட முடியாது. கடைசியாக இயற்கை நிலையில் தனியார் சொத்து என்பது இல்லவே இல்லை ஏனென்றால் வல்லானிட்டதே சட்டம். ஆகவே வல்லான் கட்டுப்பாட்டிலும் மக்கள் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஹாப்ஸ் இயற்கை நிலை என்ற நிலை இல்லாத போதிலும் அரசாங்கம் இல்லாத நிலையில் மனிதன் எவ்வாறு வாழ்நதிருப்பான் என்பதை ஒருவனால் நன்முறையில் ஊகிக்க இயலும் என்ற எண்ணம் கொண்டுள்ளார். இவ்வாறு ஹாப்சின் இயற்கை நிலை த்ததுவரீதியானதே தவிர, வரலாற்று அடிப்படையில் அமைக்கப்பட்டதல்ல.

### 1.5 இயற்கை உரிமைகள்:

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான சிறந்த செயல் எது என்று எண்ணுகின்றானோ, அச்செயலைச் செய்வதற்குள்ள அவனுடைய சுதந்திரத்திற்குப் பெயர் தான் இயற்கை உரிமையாகும் என்பது ஹாப்சின்

கருத்தாகும். சுதந்திரம் என்பதற்கு வெளித்தடையின்மை என்று பொருள் கொள்கிறார். இயற்கை உரிமைக்கும் இயற்கைச் உரிமைக்கும் இயற்கைச் சட்டத்திற்குமிடையயே உள்ள வேறுபாட்டைகைச் ஹாப்ஸ் விளக்குகிறார். இயற்கைச் சட்டம் என்பது உரிமைக்கு தடை விதிப்பதாக அமைந்துள்ளது. இச்சட்டம் மக்களின் பாதுகாப்பற்ற செயல்களைத் தடை செய்கின்றன. அதாவது ஒரு மனிதன் தனது உரிமைகளை அடைய எச்செயலையும் மேற்கொள்ளும் உரிமையைத் தடை செய்கின்றன. இயற்கை உரிமைகள் நிலவும் வரை மக்களுக்கு பாதுகாப்புக் கிடையாது. இயற்கைச் சட்டங்கள் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அமைந்துள்ளன என்கிறார். சண்டையிட்டுவரும் மக்களிடம் அமைதியை நிலவச் செய்வது இயற்கைச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே இயற்கை உரிமையை விட்டுக் கொடுத்து அவர்களது நலவாழ்விற்காக ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் பேசி வாக்குறுதிகள் கொடுக்க வேண்டும். வாக்குறுதியைக் கடைப்பிடித்தல் நேர்மையான செயல் என்றும், வாக்குறுதியை மீறுதல் நேர்மையற்ற செயலாகவும் மதிக்கப்பட்டது. இது ஹாப்சின் இரண்டாவது தத்துவம், ஹாப்ஸ் மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயோ அதையே நீ மாற்றவர்களுக்குச் செய் என்றும் உனக்கு நீ செய்யாத ஒன்றை மாற்றானுக்குச் செய்யாதே என்றும் கூறுகிறார். ஒரு மனிதன் இயற்கை உரிகைளை வேண்டாம் என்று துறப்பதன் முலமோ அல்லது வேறு மனிதனுக்கு மாற்றுவதன் மூலமோ தான் தனது பாதுகாப்பைப் பெறுகிறான் என்கிறார்.

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
> 2. இயற்க்கை உரிமைகள் பற்றிய ஹாப்ஸின் கருத்தை ஆய்க

### *1.6 சமூக ஒப்பந்தம் :*

ஹாப்சின் சமூக ஒப்பந்தம் பிற சிந்தனையாளர்களின் ஒப்பந்தத்திலிருந்து வித்தியாசமானதாகும். இவருடைய ஒப்பந்தம் அடிப்படையிலேய மாறுபட்டது. இதற்கு முன்னர் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் அரசாங்க ஒப்பந்தங்கள். ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள். ஆனால் ஹாப்சின் ஒப்பந்தம் சமூக ஒப்பந்தம். இது மக்களுக்கிடையே ஏற்பட்டதே தவிர அரசாங்கத்திற்காக ஏற்பட்டதல்ல. மக்கள் தங்கள் நலனிற்காக பகுத்தறிவால் உந்தப்பட்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒருங்கிணைந்து வாழும் சமூகம் தேவை என்பதை உணர்ந்தனர். எனவே மக்கள் தங்களது இயற்கை உரிமைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் மூன்றாம் நபர் ஒருவரிடமோ அல்லது ஒரு குழுவிடமோ ஓர் ஒப்பந்தத்தின் முலம் அளித்து அரசியல் சமுகத்கைக்

தோற்றுவித்தனர் என்கிறார். அந்த மூன்றாம் நபர் அல்லது குழு அனைத்து மக்களின் பிரதியாகக் கருதப்பட்டார். இவ்வாறு இயற்கை மனிதனில் இருந்து வேறுபட்ட ஒரு மனிதன் உருவானான்.

ஒப்பந்தத்தில் யார் யார் உள்ளனரென்பதைப் பார்ப்போம். இயற்கையில் தனிநபர்கள் தான் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஒப்பந்தத்தில் உருவான பெரிய சக்தி இறைமை ஒப்பந்தத்தில் வேறு எந்தப் பிரிவும் கிடையாது. சாதாரணமாக ஒப்பந்தம் என்றால் இரு பிரிவினர் இருப்பர். இங்கு இருபிரிவுகள் கிடையாது. மக்கள் அதிகாரம் முழுவதும் ஒப்படைக்கப்பட்ட பின்னர், இறைமை சக்தி உருவாகும். மற்றபடி பிற பிரிவு எதுவும் இருக்காது. எனவே மக்கள் அனைவருக்குமாகவே அதிகாரம் உருவாகும். அந்த அதிகாரம் தான் என்ன செய்ய வேண்டும், எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்யும். மக்களின் இயற்கை உரிமைகள் அனைத்தையும் இந்தச் சக்தி முழுமையாக கிரகித்துக் கொள்ளும். இந்தச் சக்தி தான் அரசு என்று அரசு தோற்றக் கோட்பாட்டைக் கூறுகின்றார்.

பெரிய அதிகாரத்தை அதாவது இறைமையை உருவாக்குவதில் சிறுபான்மையோர் தங்கள் கருத்துக்களை பெரும்பான்மைக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். அரசின் நோக்கமானது. உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பை முறியடிப்பதும் ஆகும். இது தான் ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக சொல்லப்பட்ட பகுதி.

சமூக ஒப்பந்தக் கோட்பாடு பல நூற்றாண்டுகளாக மக்களின் ஆதரவு பெற்ற கோட்பாடாக மதிக்கப்பட்டு வருகின்றது. நியாய உணர்வோடு உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. மக்கள் இணக்கத்தால் அரசாங்கம் தோன்றியது என்பது ஒரு சிறந்த கருத்து. ஆனாலும் இது பற்றி பல குறைபாடுகளும் சொல்லப்படுகின்றன. ஒப்பந்தத்திற்கு முதல் காரணமே மனிதனுடைய பயம் என்று கூறுகின்றார். மனிதர்கள் தன்னுடைய உயிர் மற்றும் உடைமை பறிபோய் விடும் என்று பயந்தனரா என்று புரியவில்லை. பயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இது சரியானது தான் என்று சொல்வதற்கில்லை. தவிர, மக்களிடையே ஒருவருக்கொருவர் பரஸ்பர நட்பு இருந்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரையும் ஹாப்ஸ் தன்னலவாதியாகக் காட்டுகின்றார். பிறரை நம்பியவர்களாக மக்கள் இக்கவில்லை. என்கிறார். மாறாக ஒருவருக்கொருவர்

சண்டை போட்டுக் கொள்வதாகக் கூறியுள்ளார். இந்நிலையில் எந்த அடிப்படையில் அறிவுக் கூறின் அடிப்படையில் சென்று சேர்ந்தனர். ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்பதற்கு உறாப்ஸ் கூறும் கருத்துக்கள் முழுவதும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமையவில்லை. சமுகத்தில் ஒப்பந்தங்கள் உருவாக முடியுமே . தவிர, சமூகம் ஒப்பந்தத்தில் உருவாவது கிடையாது என்பதை நாம் அறிவோம்.

## 1.7 அரசாங்க வகைகள்:

ஹாப்ஸ் மன்னராட்சியை முழுமையாக ஆதரித்தாலும், எந்த அரசு அமைதியையும், பாதுகாப்பையும் வழங்குகிறதோ அதுதான நல்ல அரசு என்கிறார். அதிகாரம் யாரிடம் உள்ளது என்பது முக்கியமல்ல. அந்த அதிகாரம் எவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளதென்பதுதான் முக்கியம் என்கிறார். அரசனுக்கும் பாராளும்மறத்திற்குமிடையே ஏற்படுத்தப்படும் அதிகாரப் பகுப்பு முறையை அடியோடு வெறுக்கிறார். இவ்வாறு பிரிப்பது அபாயம் என்று எச்சரிக்கிறார். இங்கிலாந்து பாராளுமன்றம் இறைமை படைத்து இருப்பது போல் பிரான்சு பதினான்காம் லூயிஸ் அரசர் இறைமை கொண்டவர்; எனவே இறைமை அதிகாரம் ஒருவரிடம் இருக்க வேண்டும் என்கிறார். அரசாங்க வகைகளைப் பிற சிந்தனையாளர்கள் போலயே வகைப்படுத்தியுள்ளார். அரசு அதிகாரம் ஒருவரிடமிருந்தார் மன்னராட்சி, மக்கள் அனைவரிடமும் இருந்தால் அது மக்களாட்சி, ஒரு சிலர் கையில் இருந்தால் அது பிரபுக்களாட்சி என்று வகைப்படுத்துகிறார். இவற்றில் மன்னராட்சியும் மக்களாட்சியோ, அல்லது மக்களாட்சியயோடு பிரபுக்களாட்சியோ சேர்ந்து இருப்பதை ஹாப்ஸ் ஆதரிக்கவில்லை. ஏனெனில் அந்த மாதிரியான கலப்பு அரசாங்கங்கள் தவறானவை என்கிறார்.

ஹாப்ஸ் மன்னராட்சியை ஆதரிக்கிறார் என்பது வெளிப்படையானது. அதற்கு அவர் கூறும் காரணங்கள் யாதெனில், தனியார் விருப்பம், பொது விருப்பம் என்று இல்லாது அனைத்து விருப்பமும் அரசரிடம் இருக்கும். எனவே கொள்கை உருவாக்கத்திலும் செயலாக்கத்திலும் தொடர்ச்சியும், பொருத்தமும் இருக்கும். அரசன் சில நண்பர்களைத் தான் வைத்திருப்பான். எனவே அதிகாரத்திற்கும் பதவிக்கும் போட்டி என்பது குறைவாகவே இருக்கும் தனியாகச் செயல்களை எளிதில் செய்யலாம். எனவே மன்னராட்சியில் தீமைகள் குறைவாகவே இருக்கும் என்கிறார்.

*1.8 இறைமை:*

இறைமையின் பொருள் யாதெனில் வரம்பற்ற அதிகாரத்தை ஏகபோக முழு உரிமை பெற்று இருப்பதாகும். இயற்கைகை நிலையில் மக்கள் அனைவரும் தங்கள் உரிமைக்ள விட்டுக் கொடுத்தனர். ஆனால் இறைமையுடையவன் மட்டும் தனது உரிமைகளைவிட்டுக் கொடுக்கவில்லை. எனவே வரம்பற்ற இயற்கை உரிமை கொண்டவனாக இறைமையுடையவன் திகழ்ந்தான். இந்த வரம்பற்ற ஏகபோ உரிமை மன்னரிடம் கொடுக்கப்பட்டது.

மன்னர் உரிமைகளை மக்களிடமிருந்து பெற்றாரெனினும், மக்களுக்காக கடமைகளைச் செய்ய வேண்டுமென்ற கட்டாயத்திற்குள்ளாக்கப்படவில்லை. ஆகவே தான் மன்னர் நினைத்ததுபோல் ஆட்சி செய்யப்பட்டது. இவருடைய எண்ணம் தான் சட்டம். இவருடைய அதிகாரத்திற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. எனவே முழு அதிகாரம் பெற்று ஆட்சி புரிபவனாக் இருந்தான், அரசன்.

இறைமையுடையவன் தவறு செய்யமாட்டான் என்று கருதப்பட்டது. ஏனெனில் அவனைக் கட்டுப்படுத்த முடியாது. இவன் மக்களுக்கு எந்தவிதக் கெடுதலும் செய்யமாட்டான். ஏனெனில் மக்களுக்கு எப்போதும் நல்லதுதான் செய்வான் என்று எண்ண வேண்டும். இறைமையுடையவனின் சட்டத்திற்குக் கீழ்ப்படியவில்லையேல், அது முறையற்றது. எனவே மக்கள் சட்டங்களுக்கு கீழப்படிய வேண்டும். அரசனுக்கு எதிராக இயற்கைச் சட்டங்களை எடுத்துக் கூற வாதிட எவராலும் முடியாது. கடவுள், ஒப்பந்தம் என்று அரச சட்டத்தை மீற முடியாது. ஏனெனில் கடவுளிடம் கூட அரசன் அனுமதியில்லாமல் மக்கள் ஒப்பந்தம் செய்ய முடியாது என ஹாப்ஸ் விளக்கமளிக்கிறார். அரசன் ஒப்புதல் இல்லாமல் மக்கள் எவருடனும் எந்த வித உடன்பாடும் ஒப்பந்தமும் செய்து கொள்ள முடியாது. தான் ஒப்பந்தத்தில் ஒரு பிரிவாக இல்லாததால், அரசன் ஒப்பந்தத்தை மீறுவத எந்தவகையிலும் சட்டத்தை மீறுவதை ஆகாது. ஏனினல் ஒப்பந்தம் சமுக ஒப்பந்தமே தவிர அரசாங்க ஒப்பந்தம் அல்ல.

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
> 3. இறையின் பண்புகளை விளக்குக.

இறைமையுடையவன், அதாவது அரசன் மக்களின் கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் உரிமை கொண்டவன். சுதந்திரமாக் கருத்துக்களை வெளியிடுவது அரசிற்கு ஒரு மிகப் பெரிய கெடுதல் என்கிறார். எனவே மக்களின் எண்ணங்கள் திறமையாகக் கட்டுப்படுத்தினால் தான் திறமையாக ஆட்சி செய்ய முடியும் என்கிறார். தனிநபர் சொத்துக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசனுக்கு உண்டு. ஏனெனில் அந்த அதிகாரம் மக்கள்தாங்களே விட்டுக் கொடுத்த இயற்கை உரிமைகளில் ஒன்று தான் நீதியின் உறைவிடம் அரசன். அரசன் வழங்குவது தான் நீதி, போர் தொடுப்பது அமைதியை ஏற்படுத்துவது ஆகியன அரசன் கொண்டுள்ள அதிகாரமாகும். அரசன் ஆன்மீக அதிகாரம் மற்றும் நிர்வாக அதிகாரம் ஆகிய இரண்டிலும் முழுமையான அதிகாரம் கொண்டவன். இந்த அதிகாரத்தைத் தனித்தனியாக்கப் பிரிக்க முடியாது என்கிறார். திருச்சபை என்பது மன்னருக்கு நேரடியான எதிர் சக்தி என்றும், திருச்சபை அரசிலிருந்து வேறுபட்டதல்ல வென்றும், தன்னிச்சையானது அல்ல வென்றும் கூறுகின்றார். இரண்டு அதிகாரத்தையும் கொண்டுள்ளவன் அரசன் என்கிறார் ஹாப்ஸ்.

ஹாப்ஸ் உரிமைக் கோட்பாட்டையும் கூறியுள்ளார். இவர் கூறும் உரிமை இரண்டு. ஒன்று ஆட்சியாளருக்கு, மற்றொன்று மக்களுக்கு. அரசன் எதை வேண்டுமானாலும் செய்யும் அதிகாரம் கொண்டவன் என்றும் மக்கள் இதற்கு நேரடியாக எதையும் செய்ய முடியாதவர்களாக இருப்பார்களளெனவும் கூறுகின்றார். அரசன் நினைத்ததைச் செய்வான்; மக்கள் எதையும் செய்ய முடியாது என்பது ஹாப்ஸ் கூறும் உரிமை. அரசால் நடைசெய்யப்பட்ட எதையும் மக்கள் செய்யக்கூடாது என்ற தடை நியாயமானதா என்று கேள்வி கேட்கக் கூடாது. கீழப்படிதல் ஒன்று தான் மக்களிடம் அரசு எதிர்பார்ப்பது என்கிறார் ஹாப்ஸ்.

தெய்வீகச் சட்டம், மனிதர்களுடைய சட்டம் என்று சட்டத்தைப் பிரித்துக் காட்டுகிறார். ஹாப்ஸ். தெய்வீகச் சட்டம் என்பது சட்டமல்ல. ஏனெனில் இந்தச் சட்டத்தை அரசன் பிரகடனப்படுத்தவில்லை. இதே போல் மரபு என்பதுவும் சட்டமல்ல. மரபை அரசன் அங்கீகரித்தால் தான் அது சட்டமாகும். எனவே சட்டம் என்பது அரசனின் அங்கீகாரத்திற்குட்பட்டது.

## 1.9 தொகுப்புரை:

அரசியல் தத்துவத்தைத் தெளிவாகக் கூறிய முதல் ஆங்கிலேயத் தத்துவஞானி உறாப்ஸ். இவர் தான் அரசை மதத்திற்கு மேலானது என்று முன்னிறுத்தினார். அரசு உருவாக முதன் முதலாக முயற்சி எடுத்தவர் ஹாப்ஸ். ஆனால் இவருடைய சமுக ஒப்பந்தக் கோட்பாடு சரியானதல்ல. ஏனெனில் தேு சமுகப் பிரச்சனைகளின் உண்மையான பகுப்பல்ல, ஏன் இயற்கைநிலை மக்கள் அரசை நாடினார்கள் என்பதற்கும் சரியான விளக்கத்தை ஹாப்ஸ் தரவில்லை. ஹாப்ஸ் தரவில்லை. உறாப்ஸ் உருவாக்கியுள்ள அரசு காவல் அரசு. மக்களுக்கு வழிகாட்டல் செய்யும் அரசு அல்ல. கிரேக்க இலட்சிய அரசுகளின் எண்ணம் ஹாப்ஸ் சிந்தனையில் பிரதிபலிக்கவில்லை.

பாசிசம், பொதுவுடைமை, எதேச்சதிகாரம் ஆகிய கோட்பாடுகள் ஒப்பந்தக் கோட்டை மறுக்கக் கூடியவை. ஆனால் உறாப்ஸ் ஒப்பந்தக் கோட்பாட்டை ஆதரிக்கக் கூடியவர். அரசு என்பது தனியுரிமையுடையது. சிக்கனம், திறமை, ஆடம்பரவாழ்க்கை போன்றவையெல்லாம் தனிநபர் ஏகாதிபத்தியத்திற்கு வழிவகுப்பது தானே தவிர, ஒட்டுமொத்தமாக பாசிசம், பொதுவுடைமை என்பதற்குப் பொருத்தமானதாக அமையவில்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கோட்பாட்டை இவர் கூறியுள்ளார். இருப்பினும் அரசு தனிநபர் உரிமையில் குறுக்கிடும் சுதந்திரத்தை ஆதரிப்பது, சமத்துவத்தை எங்ஙனம் காக்கும் என்பது தெரியவில்லை. இன்றைய அதிகாரம் ஒருவரடிடமோ, சிலரிடமோ, பலரிடமோ இருக்குமென்று கூறினாலும், மன்னராட்சியைத்தான் இவர் ஆதரிக்கிறார் என்பது தெரிந்த உண்மை.

போர் என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்று கூறினாலும் பேருக்கும் புகழுக்கும் போர் தொடுக்கக் கூடாது என்ற அரசனை எச்சரிக்கிறார். மக்கள் சட்டத்திற்குப் கீழப்படியவேண்டுமென்கிறார்.அதை அவர்கள் ஏற்க வேண்டுமென்பதில்லையென்றும் உண்மைக்காக மக்களைப் பலி கொடுக்க வேண்டுமென்றும் கூறுகின்றார். ஏனெனில் அரசு மக்களுக்காக உள்ளதே தவி, மதிப்புகளுக்காக அல்ல.

ஹாப்ஸ் கூறும் அரசு இன்றைய மக்களாட்சி அரசு அல்ல. இது ஏதேச்சதிகா சர்வாதிகார ஆட்சியுமல்ல. அரசு என்பது மக்களுக்காக, மக்களின் ஒப்புதலோடு ஏற்பட்டது. மக்கள் வழங்கிய அதிகாரத்தை அரசு பயன்படுத்திய ஒப்புதலோடு ஏற்பட்டது. மக்கள் வழங்கிய அதிகாரத்தை அரசு பயன்படுத்தியதென்று ஒப்பந்தக் கோட்பாட்டை வலியுறுத்தி ஹாப்ஸ் தனது கருத்துக்களை உருவாக்கியுள்ளார்.

### 1.10 முக்கிய வார்த்தைகள் :

பாரளுமன்றம் , அறிவியல் முறை, இயற்கை உரிமைகள் , சமூக ஒப்பந்தம்.

### 1.11 பரிந்துரை நூல்கள் :


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.


### 1.12 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவு சோதனை கேள்விக்களுக்கான பதில்கள்

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:4 - ல் அறிக.*

கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:4 - ல் அறிக.

கேள்வி எண்.3. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:5 - ல் அறிக.

கேள்வி எண்.4. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:8 - ல் அறிக.

## 1.13 மாதிரி வினாக்கள்:

1.ஹாப்சின் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை ஆராய்க.

## அலகு - 6

## ஜான் லாக்
*(1632-1704)*

**அறிமுகம் :**

ஜான் லாக் தமது சம காலத்தை வெளிக்காட்டும் கண்ணாடி போல் இங்கிலாந்தின் அரசியல் நிலையைத் தெளிவாக்க குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்தில் ஏற்பட்ட இரத்தம் சிந்தாப் புரட்சி அல்லது மாண்புறு புரட்சி என்று 1688ல் ஸ்டுவர்ட் அரசர்களுக்கு எதிராக நடந்த புரட்சி ஜான் லாக்கின் அடிப்படை சிந்தனையாக அமைந்தது. ஏனெனில் இப்புரட்சி நியாயமானதெனக் கூறியதால் தண்டனைக்குள்ளானார். ஜான் லாக் ஒரு சிறந்த அறிஞர். தத்துவம், அறநெறி மற்றும் கல்வி ஆகியவற்றில் இவரது ஆற்றல் அளவிட முடியாத ஒன்றாகும்.

**நோக்கங்கள் :**

1. இயற்கை நிலையில் மக்களின் சுதந்திரம் இயற்கைச் சட்டங்கள் பற்றி விளக்கம்.
2. சமூக ஒப்பந்தங்கள் எவ்வாறு நிகழுந்தன என்பதை விளக்குதல்
3. அரசாங்க வகைகள் மற்றும் அதன் பணிகளை விளக்குதல்.

**வடிவமைப்பு :-**

இளமைப்பருவம்
நூல்கள்
இயற்கை நிலை
இயற்கை சட்டம்
சமூக ஒப்பந்தம்
அரசும் சமூகமும்
அரசாங்க வகைகள்
அரசின் பணிகள்
சொத்துரிமை
தொகுப்புரை
முக்கிய வார்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவுச் சோதனைக் கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

## 1.1. இளமைப்பருவம்:

அரசியல் சிந்தனை வரலாற்றில் தனக்கென ஓர் இடம் பிடித்வர் ஜான் லாக். இவர் 1632ம் ஆண்டு சட்ட வல்லுநர் சோமர்செட் குடும்பத்தில் பிறந்தார். இங்கிலந்தில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற போது, பாராளுமன்றப் படையின் தலைவராக ஜான் லாக்கின் தந்தை பணிபுரிந்தார். இளமையிலேயே தனது பெற்றோர்களை இழந்தார். வெஸ்ட்மின்ஸ்டர் பள்ளியில் படித்தவர். அறிவியல் படிக்க வேண்டுமென்ற வேட்கை கொண்டிருந்தார். 1652ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு சர்ச் கலலூரியில் ஆசிரியராகப் பணியில் அமர்ந்தார். இவர் மருத்துவப் படிப்பு படித்தாலும், மருத்துவத்தில் பட்டம் பெறவில்லை. அரசவை சமூகத்தில் 1688ம் ஆண்டு உறுப்பினரானார். ஐசக் நியுட்டன், இராபர்ட் பாய்ல் ஆகியயோர். இவரது சிறந்த நண்பர்களாக விளங்கியதால், இயற்கை அறியியலில் அதிகமாகக் கவனம் செலுத்தினார். பின்னர் டெகார்டின் தத்துவம் இவரைத் தத்துவப் படிப்பிற்கு இழுத்தது. 1666ம் ஆண்டு ஆஸ்லி பிரபுவை ஒரு விபத்திலிருந்து காப்பாற்றியதால், இவர் அரசியல் உலகில் அடியெடுக்க வேண்டியதாயிற்று. ஆஸ்லிபிரபு ஆரம்பித்தார் லாக். ஆஸ்லி பிரபு சாப்ட்ஸ்பரி பிரபுவாக நியமனம் பெற்றார். பின்னர் இங்கிலாந்தின் சட்டபிரபுவாக நியமனம் பெற்றார். சட்ட பிரபுவின் முக்கிய ஆலோசகராக லாக் நியமிக்கப்பட்டார். நடைமுறை அரசியலில் நேரடித் தொடர்பு லாக்கிற்கு ஏற்பட்டது. இதனால் அரசியல் கோட்பாட்டைத் தெளிவாக எழுதுவதற்கு வாய்ப்பாயிற்று.

சாப்ட்ஸ்பரி பிரபு (ஆஸ்லி) தன்னுடைய சட்ட பிரபு பதவியை 1675ஆம் ஆண்டு இழந்ததால், லாக் பிரான்சிற்குச் சென்றார். பிரா்ன்சில் நான்கு ஆண்டுகள் இருந்தபொழுது அந்நாட்டு அரசியலைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் இங்கிலாந்து திரும்பினார். அப்போது சாப்ட்ஸ்பரி பிரபு எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டால் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் அவர் சிறையிலிருந்து தப்பித்து உறாலந்து நாட்டிற்கு சென்று விட்டார். பின்னர் அவர் 1683ம் ஆண்டு இறந்தார். ஜான் லாக்கும் ஹாலந்திற்குச் சென்று 1689ம் ஆண்டு வரை தங்கினார். பின்னர் இங்கிலாந்து திரும்பினார். பத்திரிக்கைச் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தினார். 1696ஆம் ஆண்டு தொழிலாளர் வணிக வாரியத்தின் ஆணையாளராக நியமிமக்கப்பட்டுப் பணிபுரிந்தார். பின்னர் 1704ம் ஆண்டு எஸ்சக்ஸ் என்ற இடத்தில் உயிர் நீத்தார்.

### 1.2 நூல்கள்:

ஜான் லாக்கின் முதல் நூல் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டதாகும். இந்நூலின் தலைப்பு சகிப்புத் தன்மைப் பற்றியதாகும். இந்நூலைப் பலரும் பாராட்டிய காரணத்தால். அதே ஆண்டில் ஆங்கிலத்தில் அந்நூலை மொழியாக்கம் செய்தார். பின்னர் 1690ம் ஆண்டு தனது தத்துவ நூலான மனிதர்களைப் புரிதல் (Humaj Understanding) என்ற நூலை எழுதினார். Two Treatises on Civil Govt சிவில் அரசாங்கம் பற்றிய தனது கருத்தை 1693 ஆம் ஆண்டு வெளியிட்டார். தனது கடைசிக் காலத்தில் முதலில் எழுதிய சகிப்புத் தன்மையின் கடைசிப் பாகத்தை எழுதி, வெளியிட்டார். இவரது சிவில் அரசாங்க ஆய்வு என்ற நூல் இவ்ரை உலகிற்கு வெளிச்சம் காட்டியது. ஜான் லாக்கின் கருத்துக்கள் மாண்புறு புரட்சியினால் உருவாக்கப்பட்டது என்று ஏற்கெனவே அறிந்தோம். அதாவது மனிதர்கள் பண்பாளர்களாக, நேர்மையாளர்களாக ஒழுங்குடையவர்களாக, சமூக எண்ணம் கொண்டவர்களாக தங்களைத் தாங்களே ஆளும் சக்தி படைத்தவர்களாகத் திகழ்பவர்கள் என்பதைப் புரட்சியின் மூலம் லாக் உணர்ந்தார்.

### 1.3 இயற்கை நிலை:

இயற்கை நிலை பற்றிய கருத்தில் ஹாப்ஸிடமிருந்து முழுவதும் லாக் வேோறுபடுகின்றார். இயற்கை நிலையில் மக்கள் முழுச் சுதந்திரத்துடனும் சமுத்துவத்துடனும் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த வாழ்க்கை முறையைகட கடைப்பிடித்தனர். பிறரது எந்தச் கட்டாயத்திற்கும் உட்பட்டு வாழவில்லை. இயற்கை நிலையில் அமைதியாகவும், பரஸ்பர உதவியுடனும், ஒவ்வொருவரும் நல்லெண்ணத்துடனும் பாதுகாப்பாகவும் வாழந்து வந்தனர் எனலாக் கூறுகின்றார். இயற்கை நிலையில் ஒருவரும் சிறப்புரிமை பெற்றவர்களாக இருக்கவில்லை. அரசாங்கம் என்பது எதுவும் கிடையாது. பிறரைக் கட்டுப்படுத்த யாரும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றவர்களாகவும் இருக்கவில்லை. மனிதர்கள் அனைவரும் சேர்ந்து இருந்தனர். ஏனெனில் மனிதர்கள் பகுத்தறிவு மிக்கவர்களாக இருந்தால், ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்போடு வாழ்ந்தனர். பொதுவான தலைவர் என்று எவரும் அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. மக்களுடைய செயல்கள் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகியிருந்தன. அவருடைய செயல்கள் பகுத்தறிவினால் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. எனவே ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளைச் செய்து அவர்களுடைய உரிமைகளைப் பெற்றுக்

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
2. லாக்கின் இயற்கைநிலை கருத்தை கூறுக.

கொண்டனர். இயற்கை நிலையில் ஒருவர் மற்றவருக்குத் தீங்கிழைப்பது இயற்கைச் சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தால் அவை தவிர்க்கப்பட்டன. இதனால் ஒவ்வொருவரின் உயிரும் உரிமையும் இயற்கை நிலையில் பாதுகாக்கப்பட்டன.

### 1.4 இயற்கைச் சட்டம்:

இயற்கை நிலையை, இயற்கைச் சட்டங்கள் ஒழுங்குபடுத்தின என்று லாக் கூறுகின்றார். லாக்கின் இயற்கை நிலைக் கோட்பாடு அவரது அரசியல் தத்துவத்தின் முக்கியமான கோட்பாடு ஆகும். இயற்கை நிலையில் மக்கள் சமத்துவத்துடனும், தங்களது சுயகட்டுப்பாட்டுடனும் செயல்பட்டனர் என்பதை அறிவோம். எவரும் பிறரை அடக்கி ஆளும் உரிமை பெற்றிருக்கவில்லை. உண்மையுடனும், பிறர் மீது நம்பிக்கை வைத்தும் மக்கள் இயற்கை நிலையில் வாழ்ந்தனர். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தரவேண்டுமென்ற கட்டாயம் இயற்கை நிலையில் இருந்தது. இதற்குக் கைமாறாக மக்கள் தங்களது பெற்றோர்களுக்கு பாதுகாப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டும் என்கிறார். இதுதான் இயற்கைச் சட்டமாகும். மூன்றாவதாக, எதேச்சதிகாரம் கொண்டு எவரையும் அடக்கி ஆளுவது இயற்கைச் சட்டத்திற்கு முரணானது. நான்காவதாக இயற்கை நிலையில் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடும் உரிமையை மக்களுக்கு வழங்கியுள்ளது. இயற்கைச் சட்டம் தனியார் சொத்து மக்களுக்கு வழங்கப்படுட்டுள்ளது. அந்த சொத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று யாராவது தனியார் சொத்தை பறிமுதல், குறுக்கீடு ஆகியன செய்யக் கூடாது என்றும் இயற்கைச சட்டம் கூறுகின்றது. ஏராளமான உரிமைகளுடனும், உத்திரவாத்துடனும் வாழ்நத மக்கள் ஏன் தங்களது சிவில் உரிமைகளை அரசுக்காக விட்டுக் கொடுத்தனர் என்ற ஒரு கேள்வி பலரால் கேட்கப்படுவதுண்டு. இதற்கு லாக் முன்று காரணங்களைக் கூறியுள்ளார். முதலாவதாக இயற்கை நிலையில் ஏராளமான கஸ்டங்கள் இருந்தன. ஒருவர் பார்த்துக் கொண்டனர். இரண்டாவதாக மக்களின் பரச்சனைகளைத் தீர்த்து வைக்க நடுநிலையினர்யாரும் இல்லை. ஏனெனில் அனைவரும் சமம். முன்றாவதாக மக்களின் உரிமைகளை எவராவது பறித்துக் கொண்டால், அவர்களைத் தண்டிக்கக் கூடிய அதிகாரம் எதுவுமில்லை. எனவே இயற்கை நிலையில் மக்கள் சுதந்திரமாக, சமத்துவமாக இருந்தாலும், அவர்கள் மனதில் -

அனம் தெரியாத அச்ச உணர்வு இருந்து கொண்டே வந்தது. மக்களின் உரிமைகளுக்கும் அவ்வப்போது தன்னலவாதிகளால் ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருந்தது என்பதும் உண்மை. இயற்கை நிலையில் சட்டம் என்பதற்கு விளக்கமும் இல்லை. எனவே மக்களது வாழ்க்கை நிலை அவ்வளவு எதிர்பார்த்த அளவு மகிழ்ச்சிகரமாக இல்லை. எனவே இந்த நிலை மாறி அமைதிமையும், ஒழுங்கினையும் நிலைநாட்டக் கூடிய வல்லமை படைத்த, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அதிகாரம் தேவைப்பட்டது. இவ்வதிகாரம் தான் சமூக ஒப்பந்தத்தால் பின்னர் உருவாயிற்று.

### *1.5 சமூக ஒப்பந்தம் :*

சிவில் அரசாங்கம் என்பது பொது மக்களின் ஒப்பந்தத்தால் ஏற்பட்டது. முன்னர் கூறியவாறு, மூன்று பிரச்சனைகள் இயற்கை நிலையில் வாழ்ந்த மக்களுக்கு இருந்தன. இவற்றின் விளைவாக மக்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு, சமூகத்தை அமைத்தனர் என்று லாக் கூறுகின்றார். இயற்கை நிலையில் முதலாவதாக் தேவைப்பட்டது சட்டம். எனவே இயற்கை நிலை மக்களுக்கு வரையறுக்கப்பட்ட சட்டம் தேவைப்பட்டது. இராண்டாவது மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க ஒரு நீதிபதி தேவைப்பட்டார். சட்டத்தைப் பின்பற்றாக, மீறுகின்ற தனிநபர்களை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் வாய்ந்த நீதிபதி தேவைப்பட்டார். முன்றாவதாக, பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு வெளியிடும் தீர்ப்புகளைச் செயல்படுத்த வலுவான ஆட்சித்துறை வேண்டுமென்கிறார். எனவே இயற்கை நிலையை ஒழுங்குபடுத்தப் பொது அதிகாரம் தேவைப்பட்டதென்பதை இதன் முலம் அறிகின்றோம். முதலில் அமைந்த சேரந்து வாழும் நிலை வளர்ந்து பெரிய அரசியல் சமுதாயமாக உருவெடுத்தது. இயற்கை நிலையிலிருந்து விடுபட எண்ணிய மனிதர்கள் தங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக அரசியல் சமுதாயத்தை உருவாக்கினர். ஒவ்வொரு மனிதனும் பிறரோடு சேர்ந்து சமுதாய ஒருங்கிணைப்புக்கு வழி வகுத்தான். இயற்கைச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மக்கள் தங்களுடைய இயற்கை உரிமைகளை விட்டுக் கொடுத்தனர். இது ஹாப்ஸ் கூறிய ஒப்பந்தத்திலிருந்து வேறுபடுகின்றது. ஏனெனில் இயற்கை நிலையில் அனுபிவத்த எல்லா உரிமைகளையும் மன்னருக்கோ அல்லது ஒரு குழுவடமோ ஒப்படைத்ததாக ஹாப்ஸ் கூறுகின்றார். ஆனால் வாக்கின் ஒப்பந்தத்தில் மக்கள்

சட்டங்களைச் செயல்படுத்தும் ஒரே ஒரு உரிமையைத்தான் ஒப்படைத்தார்கள் பிற உரிமைகள் மக்களிடமே இருந்தன என்கிறார். மக்கள் தமது உரிமைகளை தனிநபரிடம் ஒப்படைக்கவில்லை. இவ்வுரிமைகள் சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. எனவே சமூகம் வரையறுக்கப்பட்ட அரசியல் அதிகாரம் இருந்தது. எனவே இச்சமூகம் உருவாக பின்னர் அரசாங்கத்தை தர்மகர்த்தா உருவாக்கும், சமூக ஒப்பந்தம் அரசாங்கத்தை உருவாக்காது.

### 1.6 அரசும் சமூகமும் :

அரசையும் சமூகத்தையும் லாக் மிகத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். அரசாங்கம் கலைக்கப்பட்டால் சமூகமும் கலையும் என்கிறார் ஹாப்ஸ். இவ்வாறு சமுகத்தையும் அரசாங்கத்தையும் ஒன்றாகப் பாவிக்கிறார். ஊனால் லாக், அரசாங்கம் கலைக்கப்பட்டால் சமூகம் கலைய வேண்டியதில்லை. சமூகம் மாற்று அரசாங்கத்தை அமைத்தச் செயல்படும் என்கிறார்.

### 1.7 அரசாங்க வகைகள் :

லாக் முன்று வகையான அரசாங்க முறைகளைக் கூறுகின்றார். முதலாவதாக, மக்களாட்சியைப் பற்றிக் கூறுகின்றார். மக்கள் அனைவரும் நேரத்திற்கு நேரம் கூடி தங்களது பெரும்பான்மைப்படி சட்டங்கள் ஏற்படுத்திக் கொள்வர் என்கிறார். இதுதான் மக்களாட்சியின் உண்மை நிலையாகும். பெரும்பான்மைக் கருத்துக்கள் அரசாங்கத்தை ஆள வேண்டும். இரண்டாவதாக, சட்டமியற்றும் அதிகாரம் ஒரு சிலர் கையில் அமைந்தால் அது பிரபுக்களாட்சி என்கிறார். இதில் மக்களில் வரையறுக்கப்பட்ட தேர்வின் முலம் சிலர் தான் ஆட்சியில் அமர முடியும். சட்டமியற்றக் கூடிய அதிகாரம் ஒருவர் கையில் அமையப் பெற்றால் அது மன்னராட்சி என்கிறார். லாக் மன்னராட்சிளை ஆதரிக்கவில்லை. ஏனெனில் இது ஏதேச்சதிகார ஆட்சிக்கு வழி வகுக்கும் என்கிறார். பிரபுக்கள் ஆட்சி ஒரு குறிப்பிட்ட சிலரின் நலனுக்காகவே செயல்படவல்லது. எனவே ஏற்கக் கூடிய அரசாங்க முறை அல்ல என்கிறார். மக்களாட்சி ஒன்று தான் சிறந்த அரசாங்க முறை என்கிறார். இவர் ஆதரிக்கக் கூடிய அரசாங்க முறை ஏறத்தாழ ஆங்கிலேயே அரசியலமைப்பு மாதிரி தான் எனினும் அது மன்னராட்சியைக் கொண்டதல்ல.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
2. லாக்கின் அரசாங்க வகைகளை கூறுக.

எல்லா அரசாங்களின் அடிப்படை அது செயல்படுத்தும் செயல்களைச்சார்ந்ததென லாக் கூறுகின்றார். உதாரணமாக புரட்சி செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு என்று கூறுவதிலிருந்து எதேச்சிகாரம் எந்த வகையில் வந்தாலும் ஏற்பதற்கில்லை என லாக் கூறுகின்றார். 1676ஆம் ஆண்டு தனிநபர்கள் அரசாங்கத்தை எதிர்க்கக் கூடிய உரிமை பொண்டவர்களல்ல என்ற கருத்தைக் கொண்டிருந்தார் லாக். பின்னர் சார்லஸ் மன்னர் இவரை நாட்டைவிட்டு விரட்டிய காரணத்தால், இவருடைய மேற்படி கருத்து மாற்றத்திற்குள்ளாயிற்று. 1689ல் புரட்சி நியாயமானதென்று மாண்புறு புரட்சியை ஆதரித்தார். இது பற்றி ஏராளமான கட்டுரைகளும் எழுதினார். சட்டத்தைக் காப்பாற்ற மக்கள் எதேச்சதிகார ஆட்சியாளர்களை எதிர்க்காலம் என்கிறார். கட்டாயமாக, பலவந்தமாக ஆட்சி செய்யக் கூடாது என்கிறார். ஆட்சி செய்ய கட்டாயம் வலிமை தேவைப்பட்டால், மக்கள் அதனை அங்கீகரிக்க வேண்டும். இல்லையேல் போர்க்களத்தில் ஆக்கிரமிப்புச் செய்யும் அத்துமீறிய செயல் மாதிரியே அச்செயலும் மதிக்கப்படும். மேலும் எதேச்சதிகார அரசாங்கத்தை அரசாங்கமாகவே நினைக்கக் கூடாது என்கிறார். ஏனெனில் இது போர்க்கள அரசியல் அரசாங்கம், மக்களது ஒப்புதல், அங்கீகாரம் ஆகிய எதுவுமே இல்லாது ஆட்சிபுரியக் கூடியது எனக் குறை கூறுகின்றார். எனவே அரசாங்கம் அறநெறித் தன்மை வாய்ந்த தர்மகர்த்தா. புரட்சி செய்யக் கூடிய அதிகாரம் மக்களிடம் இருக்கலாம். அதைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. இக்கட்டான கால கட்டத்தில், தேவைப்படும் சமயங்களில் மட்டும்தான் புரட்சி செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்கிறார். நியாயமற்ற, சட்ட விரோதமான அரசாங்கத்தை எதிர்த்து புரட்சி செய்யலாம் என்கிறார். புரட்சியில் ஒருவரோ, ஒரு சிலரோ பங்கு பெறாமல் அனைத்து மக்களும் சேர்ந்து போராட வேண்டுமென்கிறார். அரசாங்கத்தை மீறிப் போராடலாம் என்கிறார் லாக். அரசாங்கம் எப்போது மக்கள் நலன் பேணக் கூடியதாக இருக்க வேண்டும் என்கிறார்.

### 1.8 அரசின் பணிகள்:

முதன் முதலாக அரசின் சட்டமன்றப் பணிகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். சட்டமியற்றி மக்களின் உரிமை, சொத்து, வாழ்க்கை ஆகியவற்றைப் பாதுகாப்பதேசட்டமன்றத்தின் பணியாகும். சட்டமன்றம் இயற்றய சட்டங்களைச் செயல்படுத்துவது ஆட்சித் துறையாகும். இதனை அரசின் இரண்டாவது பணியாகக் கூறுகின்றார். மூன்றாவது பணி

இணைப்பு அல்லது கூட்டமைப்புப் பணி என்கிறார். இது உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளும் செயலைச் செய்கின்றது. பிற சமுகங்களோடு உடன்படிக்கை செய்வதை இது குறிகின்றது. சட்டமன்றத்திற்கும் ஆட்சித்துறைக்குமிடையே உள்ள தொடர்புகளை லாக் வரையறுக்கின்றார். சட்டமன்றம் என்பது உயர்வானது; அதற்குக் கீழ் இயங்கக் கூடியது ஆட்சித்துறை. பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாகவும் இயங்கக் கூடியது ஆட்சித்துறை. சட்டமன்றம் எப்பொழுதும் தொடர்ந்து செயல்படுவதில்லை. குறுகிய கால அளவில் சட்ட மன்றம் தனது பணிகளை முடித்துக் கொள்கிறது. ஆனால் ஆட்சித் துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சட்டமன்றத்திற்குச் சட்டங்களைச் செயலாக்கும் பணியை அளித்தல் கூடாது. ஏனெனில் அவர்கள் இயற்றிய சட்டங்களுக்கு அவர்களே கீழப்படியமாட்டார்கள் மேலும் அரசாங்க மற்றும் சமுக நடைமுறைகளுக்கு விரோதமான அளவில் தங்களுடைய சுயநலனுக்கு உகந்த வண்ணம் சட்டங்களை மாற்றி அமைத்துக் கொள்வர். எனவே தான் சட்டமியற்றும் பணி சட்டமன்றத்திலும், சட்டத்தைச் செயலாக்கும் பணி ஆட்சித்துறையிடமும் இருக்க வேண்டுமென்கிறார் லாக். கூட்டமைப்பு அதிகாரம் உடன்படிக்கைகள் மூலம் பிற சமுதாயங்களையும் பிறநாட்டினரையும் இணைக்கும் வெளிநாட்டு உளவு என்று லாக் கூறாவிட்டாலும் வெளிநாட்டு உறவு மாதிரி தான் இது காட்சியளிக்கின்றது. லாக் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை ஆதரிப்பதால் தான் இரண்டு அதிகாரங்கள் ஒருவரிடம் இருக்கக்கூடாது என்கிறார். ஆனாலும் அதிகாரப் பிரிவினையத் தனித்தனியாகப் பிரிப்பது கடினமென்றும் கூறுகின்றார்.

லாக் அரசாங்க அதிகாரத்திற்கு ஒரு எல்லையை வரையறுத்துள்ளார். சட்டமன்றம் விதிகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும். பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சட்டமன்றம் இயங்கவேண்டுமென்பது தான் எல்லையாகும். முன்னேற்பாடின்றி உடனடியாக்ப பிறப்பித்த சட்டங்கள் முலம் சட்டமன்றம் ஆள முடியாது. முன்னேற்பாட்டோடு இயற்றப்பட்ட சட்டங்களையும் நியமிக்கப்பட்ட நீதிபதிகளையும் நன்குணர்ந்த மக்கள் சமூகம் என்ற அமைப்பில் தங்களை ஒருங்கிணைத்ததுக் கொள்கின்றனர். பிரகடனம் செய்ப்பட்ட சட்டங்களின் வாயிலாக ஆளுநர்கள் நாட்டை ஆள வேண்டும். முன்னனேற்பாடின்றி உடனடியாகப் பிறப்பிக்கின்ற சட்டங்களின் வாயிலாக ஆளக் கூடாது என்று லாக் கூறுகின்றார். தினநபர்களிடமிருந்து பிறப்பிக்கின்ற சட்டங்களின் வாயிலாக ஆளக் கூடாது என்று லாக் கூறுகின்றார். தனிநபர்களிடமிருந்து

பிறப்பிக்கின்ற சட்டங்களின் வாயிலாக ஆளக் கூடாது என்று லாக் கூறுகின்றார். தனிநபர்களிடமிருந்து அவர்தம் சம்மதம் இன்றி உடைமைகளைப் பறிமுதல் செய்ய முடியாது. ஏனென்றால் சொத்துரிமை ஒரு இயற்கை உரிமையாக்க கருதப்பட்டது. இவ்வுரிமை அரசியல் நிறுவனங்களாக ஆட்சித்துறை, சட்டமன்றம் ஆகியன உருவாவதற்கு அரசு தோன்றிற்று என்றால மிகையல்ல.

## 1.9 சொத்துரிமை:

லாக் சொத்துரிமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கினறார். இயற்கை நிலையிலேயே மக்கள் இவ்வுரிமையை வைத்திருந்தால், மக்கள்தம் ஒப்புதலின்றி சொத்துரிமையை எடுக்க அரசிற்கு அதிகாமில்லை என்கிறார். ஏனெனில் அரசு சொத்தை உருவாக்கி, மக்களுக்கு அளிக்கவில்லை. மாறாக சொத்தைப் பாதுகாக்க உருவானது தான் அரசு என்கிறார்.

சொத்து என்பது பொதுவானது, தனிப்பட்டு எவரும் உரிமை கொண்டாடக் கூடாது என்று நிலவிய போட்பாட்டிற்கு எதிரான கருத்துக் கொண்டவர் லாக். இவ்வுலகையும், அதில் காணப்படும் எல்லாவற்றையும் எல்லா மக்களின் பயன்படுத்துவதற்காக இப்பரிசுகள் கடவுளால் வழங்கப்படுள்ளன. உலக மக்கள் முழுமையாக அனுபவித்தல்வேண்டும் என்கிறார். ஒருவனுடைய உடலாலும், கைகளாலும், ஏற்படும் உழைப்பு, அதனால் ஏற்படும் பயன் அவனுடையது என லாக் எடுத்தியம்புகின்றனார். காட்டில் ஆப்பிள் காய்த்துத் தொங்குகிறது என்றால், அது கடவுள் நமக்களித்த வரப்பிரசாதம். மனிதன் மரத்திலுள்ள ஆப்பிள்களைப் பிடுங்கிச் சாப்பிட உரிமை கொண்டவன். ஏனெனில் அவன் உழைப்பு அதில் உள்ளது. அதே நேரத்தில் அனைத்து ஆப்பிள்களையும் பிடுங்கிக் கொண்டு வந்து, அவற்றை அழுகச் செய்வானேயாயின் அது சமுதாயத்திற்கு இழைக்கும் குற்றம். ஏனெனில் ஆப்பிள் பொதுச் சொத்து. தேனை அனுபவிக்க உரிமை வழங்கப்பட்டுள்ளதே தவிர, அழிப்பதற்கு அல்ல. ஒருவனால் எவ்வளவு நிலத்தை உழுது, பண்படுத்தி பயிரிட்டு வளர்த்து, உற்பத்தி செய்து அனுபவிக்க முடியுமோ அவ்வளவு நிலமும் அனுடைய நிலமாகிறது. வெறுமனே எல்லைக் கல் நாடடின் உரிமையகை் கோருவது சொத்துரிமை அல்ல. ஏனெனில் மனித உழைப்பு, அவனுடைய தேவை ஆகியன சொத்துரிமையை நிர்ணயிக்கிறது. உலகிலுள்ள அனைத்து

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
> 3. லாக்கின் சொத்து உரிமை கோட்பாட்டை விளக்குக.

சொத்துக்களும் பொதுவானவை. மனிதன் தனது ஆற்றலுக்கேற்ப, திறமைக்கேற்ப இந்தச் சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது தான் லாக்கின் சொத்துரிமை பற்றிய ஆரம்பக் கருத்து பின்னர் இது சட்டபூர்வ சமுதாய உரிமையாக மாறியது. நாளடையில் இவரது சொத்து பற்றிய கருத்து முதலாளித்துவ கொள்கைக்கு ஆதரவாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

## 1.10 தொகுப்புரை:

லாக்கின் எழுத்துக்கள் அவர் வாழ்ந்த காலத்தின் பிரச்னைகளையும், அவர் காலத்தில் நிலவிய அரசியல் தத்துவத்தையும் வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளது. இவருடைய கருத்துக்கள் இங்கிலாந்தில் மட்டுமல்ல பிரான்சு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் பரவியது.இவருடைய கருத்துக்களால் மக்களாட்சி நிறுவனங்கள் மற்றும் மக்களாட்சிச் செயல்முறைகளை மேம்படுத்தவில்லவையாகத் திகழ்ந்தன. முதல் உலகப் போர் ஏற்படும் வரை இவரது கருத்துக்கள் அனைத்து நாடுகளிலும் ஏற்கப்பட்டன. இவரது கருத்துக்கள் இன்றும் பயனுள்ளதாக நடைமுறைப்படக் கூடியதமாகவே உள்ளது. அரசையும் சமூகத்தையும் வேறுபடுத்திக் காட்டிய முதல் சிந்தனயையாளர் இவர் தான். இருப்பினும் இவரது ஒப்பந்தக் கோட்பாட்டை உருவாக்கும் வல்லமை படைத்தவர்களாக மக்கள் இருந்திருப்பார்களா என்ற கேள்வி சிந்தனையாளர்களிடம்இன்றும் கேட்கப்படுகின்ற கேள்வியாகவே உள்ளது.

## 1.11 முக்கிய வார்த்தைகள் :

இயற்கை நிலை, இயற்கைச் சட்டங்கள், சிவில் உரிமைகள், சமூக ஒப்பந்தங்கள், புரட்சி , சொத்துரிமை.

## 1.12 பரிந்துரை நூல்கள் :


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.

4. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
5. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
6. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
7. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.

## 1.13 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவு சோதனை கேள்விக்களுக்கான பதில்கள்

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:3 - ல் அறிக.*

*கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:7 - ல் அறிக.*

*கேள்வி எண்.3. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:9 - ல் அறிக.*

## 1.14 மாதிரி வினாக்கள்:

*1.லாக்கின் இயற்கைச் சட்டம் பற்றிய கருத்தை விளக்குக.*

*2. ஜான் லாக்கின் சமூக ஒப்பந்த கோட்பாட்டை ஆராய்க.*

## அலகு - 7
## ரூசோ
## (1712-1778)

**அறிமுகம் :**

ரூசோ 1712ஆம் ஆண்டு ஜெனிவாவில் பிறந்தார். இவருடைய தந்தை குடும்பத்தைச் சரிவரக் கவனிக்க முடியாத அளவிற்கு சில தீய செயல்களில் ஈடுபட்டதால், தன்னுடைய மனைவியை இழந்தார். தாயற்ற ரூசோவை தந்தை யாரால் கவனிக்க முடியாத காரணத்தால், ரூசோ தனது உறவினர்கள் ஒருவர் வீட்டில் வளாந்தார். ரூசோவின் தந்தை ஒரு சிறு பிரச்சனை காரணமாக ஜெனிவாவை விட்டே ஓடிவிட்டார். ரூவோவிற்கு அப்போது வயது 10. பின்னர் சிறிய தொழில்களில் உதவிபுரிதலில் ஈடுபட்டாலும், இவரால் தனது உயரதிகாரிகளிடம் நல்ல பெயர் கிடைக்கவில்லை. எனவே வேலையில்லாது நாடோடி மாதிரியாகத் திரிந்தார். பின்னர் கத்தோலிக்க குரு ஒருவர் இவரை கிறிஸ்தவமறைக்கு மாற்றினார். ரூசோவின் இளமைக்க காலமும் அரசது தனிநபர் வாழ்வும் சரியாக அமையில்லை. அதற்குக் காரணம் அவரது குடும்பச் சூழ்நிலையே தான் ஆகும். ரூசோ தனது பல கஸ்டங்களுக்கிடையேயும் ஒரு இசை நாடகத்தை எழுதி பாரிசில் அரங்கேற்றம் செய்தார். இது இவரது புகழைப் பறைசாட்டும் வகையில் அமைந்தது. படித்தவர்கள் மத்தியில் இவர் இடம் பிடித்தார். 1746ஆம் ஆண்டு முதல் பலரும் இவரது இலக்கிய அறிவைப் பாராட்டினர். மனிதன் இயற்கையிலேயே நல்லவன் என்றும் அவனைச் சமூக நிறுவயங்கள் தான் கெட்டவனாக்குகின்றன என்பதை உணர்ந்து கொண்டார். பல இலக்கிய வாதிகளோடு அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. இருப்பினும் அவரது கருத்தை ஏற்காத அரசாங்கம் அவரைக் கைது செய்ய முற்பட்டது. எனவே மறுபடியும் நாட்டைவிட்டு சுவிட்சர்லாந்திற்குச் சென்றார். டேவிட் ஹியுமம் அழைப்பிற்கிணங்க இங்கிலாந்து சென்றார். சிறிது காலத்தில் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்படவே மறுபடியும் பாரிசு திரும்பினார். பின்னர் 1778 ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

**நோக்கங்கள் :**

1, அரசியல் சமூகமும் அரசியல் ஒப்பந்தமும் எவ்வாறு நடைபெற்றன என்பதை விளக்குதல்.
2. ரூசோ பொது விருப்ப கோட்பாட்டு விளக்கம்.
3. இயற்கை நிலையில் மக்களின் நிலையை விளக்குதல்.
4. ஹாப்ஸ்,லாக்,ரூசோ சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஒப்பீடு விளக்கம்.

**வடிவமைப்பு :**

நூல்கள்
இயற்கை நிலை
அரசியல் சமூகமும் அரசியல் ஒப்பந்தமும்
ஒப்பந்தத்தின் பண்புகள்
விளைவுகள்
குறைபாடுகள்
அரசு
பொதுவிருப்பம்
குறைபாடுகள்
இறைமை
தொகுப்புரை
ஹாப்ஸ் , லாக், ரூசோவின் ஒப்பந்த ஒப்பீடு
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தினை அறிவதற்கான தன்னறிவுச் சோதனை கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

### 1.1 நூல்கள்:

ரூசோவின் அணுகுமுறை அரசியலில் வித்தியாசமான உன்று என்றும் அறிவின் குழந்தை ரூசோ என்று டன்னிங் கூறுகின்றார். இவர் 1754ஆம் ஆண்டு சமத்துவமின்மையின் தோற்றம் என்ற உரையாடலை எழுதினார். பின்னர் 1755ல் பிரெஞ்சு கலைக்களஞ்சியத்திற்கு அரசியல் பொருளாதாரம் என்ற கட்டுரையைக் கொடுத்தார். பின்னர் மூன்று முக்கிய நூல்களை எழுதியுள்ளார். அவை:

1. Novelle Helorse
2. எமிலி
3. சமுக ஒப்பந்தம்

1762 ல் எழுதினார். பிரான்சில் நிலவிய அரசியல் சூழ்நிலை இவரது நூல்களில் பிரதிபலிக்கப்படுகின்றன. ஏனெனில் ஏழை மக்கள் அதிகமான வரிவிதிப்பினால் கஷ்டப்பட்டனர். பதினான்காம் லூயிசின் அடக்கு முறை ஆட்சியில், பிரபுக்கள் ஏராளமான சலுகைகளைப் பெற்று, ஆடம்பர -

வாழ்கையில் திளைத்தனர். இக்குறைகள் அனைத்தும் மான்டேஸ்க்யூ ,வால்டயர், டிடர்ட் ஆகியோரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.மொத்தத்தில் ரூசோ உணர்ச்சி மிக்கவராக எதையும் உடனடியாக மாற்ற வேண்டுமென்ற எண்ணமுடையவராக தனக்கென ஒரு கொள்கையை வைத்துக் கொண்டவர். எனவே தன்னுடைய கருத்திற்கெதிராக எவர் கூறினாலும் அவர்களுக்கு எதிராகச் செல்பவர். தனது கருத்தை வலியுறுத்த வல்லவர். இவருக்கு அதிகமான பிரச்சனை தன்னுடைய கருத்தை மீறிச் சொல்பவர்களில் தான் ஏற்பட்டதென்றால் மிகையல்ல.

**இயற்கை நிலை:**

ரூசோவின் இயற்கை நிலையில் மக்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு அல்லது சமத்துவின்மை ஏற்படாததற்குக் காரணம் மனிதனின் உள்ளார்ந்த மகிழ்ச்சி அல்லது திருப்தியாகும். அது எந்த பகுத்தறிவின் அடிப்படையிலும் அமையாத ஒன்று, உணர்ச்சிபூர்வமானது, சுதந்திரமானது. பின்னர் தான் பணக்காரன் - ஏழை என்ற பேதம் உருவானது. இது ஏற்கக் கூடியதல்ல. இயற்கையில் மனிதன் எந்த அடிப்படை அறிவின்படியும் செயல்படவில்லை. எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. எனவே மொழி, கருத்து என்ன செய்ய வேண்டும், என்ன இலட்சியம் போன்றவை அவனிடம் கிடையாது. எதற்கும் கவலைப்படாத மனிதனாக வாழ்ந்தான். நல்ல உள்ளம் உடைய நாகரிகமற்றவனாய் வாழந்த மனிதன் எந்த அதிகாரத்திற்கும் கட்டுப்படவில்லை. சாவதைக் குறித்த அச்சம் அவனிடம் அறவே இல்லை.

தன்னுடைய சுயநலத்திற்காக தன்னைக் காக்க வேண்டும். உயரி வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன் இயற்கை மனிதன் வாழ்ந்தான். அதே நேரத்தில் அவனோடு இருந்த மற்றவர்களைப் பற்றிக் கவலைப்பட்டான் என்றால் அதுவும் கிடையாது. ஏனெனில் மற்றவர்களைப் பற்றி நினைக்கக் கூடிய நிலையில் அவன் இல்லை. எனவே சுயநலமும் பிறர் மீதான விருப்புவெறுப்பற்ற அக்கறையும் தான் ரூசோவின் இயற்கைச் சட்டத்தின் அடிப்படையாகும். இதிலிருந்து உருவாக்கப்பட்டது தான் இயற்கை உரிமைகள் ஆகும்.

மனிதன் விலங்குகள் போல், காட்டில் மிருகங்களை வேட்டையாடி, கிடைத்ததைச் சாப்பிட்டு உயிர் வாழந்து வந்தான். பின்னர் அவன் விவசாயம் செய்ய முற்பட்டான். அவனுடைய உணவை அவனே உருவாக்க முயற்சித்தது தான் விவசாயம். இதனால் நிலத்தில் சொத்துரிமை அதாவது

தனியார் சொத்து என்ற கோட்பாடு உருவாயிற்று. எனவே தனியார் சொத்து என்பது விவசாயத்தால் ஏற்பட்ட ஒன்றே தவிர, பணப் பொருளாதாரத்தால் அல்ல. நாளடையில் அதிகச் சொத்துள்ளவர் சொத்தில்லாதவர் என்ற பிரச்சனை பணக்காரன் - ஏழை என்று பரிணமித்தது. சொத்துள்ளவர்கள் ஆட்சியாளர்களாக மாறினர்.

### 1.2 அரசியல் சமுகமும் அரசியல் ஒப்பந்தமும்:

சொத்துடையவர்கள் சொத்தில்லாக அனைவரோடும் சேர்ந்து ஓர் ஒப்பந்த்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதனால் தனியார் சொத்திற்கு உத்திரவாதம் கிடைத்தது. ஓர் அரசாங்கம் உருவாயிற்று. அறிவுடையோர் ஆளும் வகையில் எல்லா ஆக்கிரமிப்புக்களையும் முறியடிக்கும் பணி அரசாங்கத்தினுடையதாயிற்று. அனைவருக்கும் பாதுகாப்பு கடைத்தது. சொத்திற்கு அங்கீகாரம் கிடைத்தது. ரேசாங்கம் சொத்துக்கார்களுக்கு உகந்ததாக அமைந்தால் சொத்தில்லாதவர்கள் பாதிக்கப்பட்டனர். எல்லா இடங்களிலும் ஏதேச்சதிகார அரசாங்கங்கள் ஏற்பட்டன. எனவே மனிதன் தனது உரிமையை இழக்கலானான். சமத்துவமென்பது மறயைலாயிற்று. எனவேதான் மனிதன் சுதந்திமாகப் பிறக்கிறான்; ஆனால் எல்லா இடத்திலும் கட்டுண்டு கிடக்கிறான் என ரூசோ அரசாங்க எதேச்சதிகாரத்தையும், மக்கள் உரிமைகள் அனைத்தும் அரசாங்கத்திற்காக என்பதையும் மறுக்கிறார். ஏனெனில் மக்கள் அளித்த ஒப்பந்தத்தால் ஆட்சி செய்யக் கூடிய அதிகாரம் அனைத்து மக்களின் உரிமைகளுக்கு இணங்க மதித்து நடக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எதேச்சதிகாரமாக இருக்கக் கூடாது என்கிறார். எல்லா மனிதர்களும் சேர்ந்து வாழும் போது ஒரு அரசாங்கம் எல்லோருக்குமாக உருவாகின்றது என்கிறார். இந்தச் சங்கம் அறநெறியுடையதாக அனைவருக்கும் செயல்படும் கூட்டமைப்பாக இருக்க வேண்டுமென்கிறார். இந்த சங்கத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து அரசை உருவாக்குவர். இது அதிக அதிகாரம் கொண்ட இறைமைத் தன்மை கொண்டதாக இருக்கும் என்கிறார் ரூசோ.

### 1.3 ஒப்பந்தத்தின் பண்புகள்:

மனிதனின் இயற்கையான் நிலையை ரூசோ முதலில் கூறுகின்றார். பின்னர் இயற்கை நிலை கஸ்டங்களை அதாவது ஒவ்வொருவருடைய கஸ்டங்களைத் தவிர்ப்பதற்காக எல்லா மனிதர்களும் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். தனி மனிதன் தனக்குரிய அத்தனை உரிமைகளை

-யும் சமூகத்திடம் ஒப்படைக்கின்றான். பின்னர் சமூகத்தின் அங்கம் என்ற வகையில் தான் அர்ப்பணித்த அத்தனையையும் திரும்பப் பெற்றுக் கொள்கிறான். சமுதாயம் என்பது உருவாகின்றது. பின்னர் அது அவனுக்குத் தேவையான ஒரு பாகமாக மாறுகின்றது. எல்லா உறுப்பினர்களும் முழுமையான இசைவால் தான் தங்கள் உரிமைகளை ஒப்படைக்கின்றனர். ஒப்பந்தம் என்பது முழுமையானது. எனவே தான் ரூசோ அரசாங்கம் முழுமையானதா அல்லது மக்களின் உரிமைகளை மாற்ற முடியாத வகையில் மக்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்துள்ளாரா என்ற விவாதம் ஏற்படுகின்றது. தனிநபர் உரிமையை பறிக்கக் கூடியதல்ல ரூசோவின் ஒப்பந்தம். தனிநபர்கள் பொது நலத்திற்காக உரிமைகளை ஒப்படைக்க வேண்டுமென்பதிலும் ரூசோ விலகவில்லை. ஒப்பந்தம் எல்லோருக்குமாக ஏற்படக் கூடியது. ஒப்பந்தம் ஏற்பட்ட உடன் அனைவரும் சமமாகின்றனர். அனைவரும் உரிமைகளைப் பிறருக்காக ஒப்படைக்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் எல்லோருக்குமாக உரிமையை விட்டுக் கொடுக்கிறான். எந்தவொரு தனிமனிதருக்காக உரிமையை விட்டுக் கொடுப்பதில்லை என ரூசோ விளக்குகின்றார். ஒப்பந்தத்தின் மூலம் ஒவ்வொருவரும் தங்களிடம் உள்ளதை இழப்பதற்குப் பதிலாக, அதிக சக்தியைப் பெறுகிறார்கள். தனிமனிதனுக்குப் பதிலாக, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமுதாயத்தினரிடம் உரிமைகள் அர்ப்பணிக்கப்படுகின்றன. ஒழுக்கம், கூட்டாண்மை போன்ற குணநலன்களைத் தன்னகத்தே கொண்டதாக ஒப்பநன்தம் திகழ்கின்றது. ஒப்பந்தம் தனிமனிதனுடைய சக்தியினையும் ஒழுக்க நெறியினையும் மாற்றியமைக்கும் என்கிறார்கள். அரசியல் வல்லுநர்கள். ஒப்பந்தம் ஒரே ஒரு ஒப்பந்தம் தான். இது தான் அரசு மற்றும் இறைமை ஆகியவற்றை உருவாக்கவல்லது. அது அரசாங்கம் ஒப்பந்தம் அல்ல என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
3. ஒப்பந்தத்தின் பண்புகளை கூறுக.

### 1.4 விளைவுகள்:

அரசு என்பது செயற்கையாக உருவாக்கப்பட்டதென்றாலும் ஒட்டு மொத்த தன்மை படைத்ததாகும். இது அறநெறி பொருந்திய கூட்டமைப்பு. தனிமனிதர்கள் மாதிரியே தான் அரசும். அதற்கென தனி வாழ்க்கை, தனி எண்ணம் மற்றும் பொது நலவேட்கை உடையது. அது தன்னைச் சார்ந்துள்ள தனிநபர்களிடமிருந்து வேறுபட்டது. அமைப்பில் சார்ந்துள்ளவர்களின் எண்ணப்படி இது இயங்கும். இதனுடைய எண்ணம் பொது விருப்பம் என்கிறார் ரூசோ. ரூசோவின் சமுகத்தில் சகோதரத்துவம் கொண்டுவரக் கூடிய அனைவரின் விருப்பமே பொது விருப்பம். சகோதரத்துவம் என பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது இவருடைய பொது விருப்பக்

கோட்பாடுதான் ஆகும்.

### 1.5 குறைபாடுகள்:

ரூசோவின் ஒப்பந்தம் உறப்ஸ் கூறும் ஒப்பந்த மாதிரியகா சமூகத் தன்மை கொண்டதாக உள்ளது. அதே நேரத்தில் லாக் கூறும் அரசாங்க அமைப்பு மாதிரியாகவும் உள்ளது. எனவே ஆளப்படக்கூடிய உறுப்பினர்களின் ஒட்டு மொத்த இணக்கமே இவரது ஒப்பந்தம். எனவே ஹாப்ஸ் மற்றும் லாக் கூறிய இரண்டின் கூட்டுத் தான் ரூசோவின் ஒப்பந்தம். முதன் முதலாக இயற்கை நிலை அதாவது ரூசோ கூறுவது மாதிரியான இயற்கை நிலை இருந்ததாகத் தெரியவில்லை. ஆரம்ப காலத்தில் கூட மக்கள் சேர்ந்து வாழந்தனர். நடத்தை விதிகளும் சில சூழ்நிலைகளும் அவர்களைச் சேர்ந்து வாழ வைத்தன. முதலில் தோன்றிய அமைப்பு குடும்பம் என்பதாகும். குடும்பத் தலைவர் எல்லோருக்கும் பொதுவான தலைவர். அவர் தனது விருப்பப்படி ஆட்சி செய்தார். ஒப்பந்தம் என்ற கோட்பாடு அப்போது கிடையாது. அது பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம். ஒப்பந்தம் உருவாவதற்கு சில அடிப்படை நியாயங்கள் அல்லது சட்டங்கள் அமைந்து இருந்தால் தான் அந்த முறையைச் செயல்படுத்த முடியும். ஆனால் இயற்கை நிலையில் அந்த மாதிரியாக சட்டம் எதுவும் இருந்ததாக்க கூறப்படவில்லை. ஒப்பந்தம் என்ற கோட்பாட்டை உணரும் வகையில் ஆரம்ப கால மனிதன் இருந்தான் என்று சொல்ல முடியாது. அந்த அளவிற்கு பக்குவம் நிறைந்தவனாகக் காணப்படவில்லை. இதுவரையிலும் அரசாங்கமென்பது ஒப்பந்தம் மூலம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மனிதன் இயற்கையிலேயே வித்தியாசமான குணமானவனாக, சுயநலவாதியாக, போட்டி, பொறாமையுள்ளவனாக இருப்பதால், ஒப்பந்தம் செய்து கொள்வான் என்பது நம்பமுடியாத ஒன்று.

ஒப்பந்தக் கோட்பாடு என்பது பொருந்தக் கூடியதாக இல்லை. வரலாற்றுப் பூர்வமான ஆதாரமும் கிடைக்கவில்லை. இன்று நிலவும் எல்லா அரசாங்கங்களுமே அதிகாரத்தைப் பறிப்பதன் முலமும், படையெடுப்பின் முலம் தான் ஏற்பட்டதே தவிர, ஒப்பந்தத்தால் அல்ல. ஜெரமி பென்தாம் ஒப்பந்தம் என்பது ஒரு கட்டுக்கதை, பதவிப்பிரமாணம், மணிமகுடம் தரித்தல் என்ற சடங்குகளையெல்லாம் நம்பத்தக்கது அல்ல. எனவே பயன்பாடு என்பதை வைத்துத்தான் அரசாங்கம் தோன்றுமே தவிர ஒப்பந்தத்தால் அல்ல என்று கூறுகின்றார். ஒப்பந்தக் கோட்பாடு மூன்று வகைக் குறைகளைக் கொண்டிருக்கிறதென்கிறார் பெந்தாம்.

சட்டமன்றத்தை உருவாக்கும் முன்னரே என்னென்ன செய்யவேண்டுமென்று வரையறுத்து விட்டால், சட்டத்தினால் எதுவும் செய்ய முடியாது. ஒவ்வொரு சட்டம் இயற்றும் போதும் ஏராளமான முரண்பாடு ஏற்படும். ஒப்பந்தத்தை மீறும் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒரு நிலையான அரசை அமைக்க இயலாமல் செய்து விடும். அரசு மீது மக்கள் சரியான மதிப்பும் மரியாதையும் கொடுப்பார்களென எதிர்பார்க்கமுடியாது. மேலும் ஒப்பந்தத்தால் மக்களின் உரிமைகளையும் அரசின் கடமைகளையும் வரையறுக்கத் தேவையில்லை. உரிமைகளும் கடமைகளும் ஒன்றுக்கொன்று பரஸ்பர அங்கீகாரத்தால் உருவாகுமென்பது கடினம். சட்டங்கள் அரசு நடைமுறைக்குக் கொண்டு வருவதில் சிக்கல் ஒன்றுமில்ல. ஆனால் சட்டங்கள் சட்டபூர்வான ஒப்பந்தங்களாக அங்கீகரிக்கப்படமாட்டாது. ஏனெனில் ஒப்பந்தம் என்பது மாயை அல்லது கட்டுக்கதை. இது வரை ஒரு சமூகம் கூட ஒப்பந்தத்தால் உருவாகவில்லை. எனவே நடைமுறை சாத்தியமற்ற ஒரு கட்டுக்கதை தான் ஒப்பந்தமாகும். ஒப்பந்தக் கோட்பாட்டில் ஒப்பந்தத்திற்கும் கடமைக்குமிடையே உள்ள தொடர்பு தவறாகக் கூறப்பட்டுள்ளது. உண்மையில் கடமைக்கும் ஒப்பந்தத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. எனவே அரசியல் அறிவியல் வளர்ச்சியின் தடைக்கல்லாகவே ஒப்பந்தக் கோட்பாடு மதிக்கப்படுகிறது. சுதந்திரத்திற்கு காரணமானதென்ற இக்கோட்பாடு என்று சொல்வதற்கு எந்தவித ஆதாரமும் வரலாற்று பூர்வமாக்க கிடைக்கவில்லை.

### *1.6 அரசு:*

அரசு என்பது ஓர் ஆக்கப்பூர்வமான சக்தி என்று ரூசோ வர்ணிக்கிறார். இது நாகரிக மிக்க சக்தி. அனைவரையும் கற்க வைக்கும் சக்தி, இயற்கை நிலையில் மக்களால் சகிக்க முடியாத பிரச்சனைகளும் தொல்லைகளும் இருந்ததாலும், நிலைத்தன்மை மக்கள் வாழ்வில் இல்லாததாலும் மக்கள் அதிலிருந்து விலகிச் சென்று விட்டார்கள் என்று ரூசோ கூறவில்லை. அரசு என்பது அனைத்து மக்களின் சுதந்திரமான விருப்பதால் உருவான ஒன்று என்று தான் கூறுகிறார். அரசாங்கத்தின் நோக்கம் எப்போதும் மக்களுக்கு நல்லது செய்வதற்காகத்தான் இருக்க வேண்டுமே தவிர மக்களால் மக்களுக்காக ஆள வேண்டுமென்ற அவசியமில்லை. எனவே தான் அராசாங்கம் எவ்வாறு சுய அரசாங்மாகச் செயல்பட வேண்டுமென்று ரூசோவிற்குப் பின்னர் வந்த சிந்தனையாளர்கள் கவனம் செலுத்தினர். ஆனால் ரூசோ மட்டும் நல்ல அரசாங்கத்தை கூறிய பொது விருப்பத்தின்

முக்கிய அம்சமாகும். சமுதாயத்திற்கு நல்லது செய்யவேண்டுமென்பது மட்டுமல்ல, சமுதாயமே அந்த நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்மென்பது தான் ரூசோவின் விருப்பம். எட்மண்ட் பர்க் போன்றே ரூசோவும் மக்களுக்கு சுதந்திர உரிமை தேவை என்பதை வலியுறுத்துகிறார். தங்களுகடைய அரசாங்கத்தைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே சுய அரசாங்கம். எதேச்சதிகார ஆட்சியை எல்லா வகைகளிலும் ரூசோ வெறுக்கின்றார்.

ஒரு நல்ல அரசு சுதந்திரம் மற்றும் நீதி ஆகிய அடிப்படைகள் மூலம் அமைக்கப்பட வேண்டுமென்கிறார். அரசு மூலம் நல்ல வாழ்க்கையை மக்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்கிறார். மனிதனுடைய பொருள் தேவையினால் சமுதாயத்தில் சிறிது பிரச்சனைகள் கூட ஏற்படலாம். ஆனால் மனிதன் பிறரோடு சேர்ந்து வாழத்தலைப்பட்டவன். எனவே மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடிய ஒரு சாதனமாக அரசு இருக்க வேண்டும் என்று ரூசோ வரையறுக்கின்றார்.

அரசு என்பதையும் அரசாங்கம் என்பதையும் ரூசோ பிரித்துக் காட்டுகின்றார். அரசியல் நடவடிக்கைகளின் மொத்த அங்கமே அரசு என்கிறார். இரு இறைமையானது, உயர்வானது, பொதுவிருப்பத்தை உள்ளடக்கியது என்று அரசைக் குறிப்பிடுக்கின்றார். அரசாங்கம் என்பது மக்ளின் பொதுவிருப்பத்தை நிறைவேற்றத் தேர்வு செய்யும் சில நபர்களே என்கிறார். அரசுக்குக்கீழாக அரசின் செயல்களைச் செய்யக் கூடியது அரசாங்கம். அரசாங்கத்திற்குத் தேர்வு செய்யும் பிரதிநிதிகள் சரியாகச் செயல்படவில்லையேல் அவர்களை மாற்றியமைக்கும் உரிமை மக்களுக்கு உள்ளது. இதனைச் செய்யக் கூடியது இறைமை வாய்ந்த அரசு ஆகும். எனவே அரசில் ஓர் அங்கமாக அரசாங்கம் உள்ளதென்பதை ரூசோ தெளிவாகக் கூறியுள்ளார்.

## 1.7 பொதுவிருப்பம்:

ரூசோவின் அரசியல் தத்துவத்தின் அடிப்டைக்க கருத்து பொது விருப்பம் பற்றியதாகும். அரசியல் சமூகம் முழுமையும் கொண்டிருக்கும் விருப்பமே பொது விருப்பம் என ரூசோ கூறுகின்றார். தனிநபர்கள் தங்களது விருப்பங்களைப் பொது நலத்திற்காகத் தியாகம் செய்து, அனை

-வரது நலனைக் காக்க உருவாவதே பொது விருப்பம். அனைத்து தனிநபர்களின் உண்மையான விருப்பம் பொது விருப்பத்தில் இடம் பெறும். எனவே அனைத்து மக்களின் விருப்பத்திற்கும் பொது விருப்பத்திற்கும் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது என்கிறார். ஏனினல் மக்கள் விருப்பமே பொது விருப்பம் என்பதைத் தெளிவாக கூறுகின்றார் ருசோ.

பொது மக்களின் நன்மைக்காக உருவானது பொது விருப்பம் என்பதால், அது பொது மக்களின் நலனிற்காகவே செயல்படும். பொது விருப்பம் மக்களின் எண்ணிக்கையை வைத்துத் தீர்மானிக்கப்படுவதில்லை. பொது மக்களுக்கு சிறந்த தகுதியான செயல்களை அளிப்பதாகும். பொது விருப்பம் இரண்டு தன்மைகளைக் கொண்டது, ஒன்று பொது நன்மையை நோக்கமாக்க கொண்டது. பொது தன்மை என்பது எல்லோரும் சொல்லக் கூடியது. எல்லோராலும் பயன்பெறக் கூடியதும் ஆகும். பொது விருப்பம் பொதுவான செயல்களோடு தொடர்புடையது. ரூசோ பொது விருப்பம் மற்றும் அனைவர்து விருப்பம் என்பதை வேறுபடுத்திக் காட்டுகின்றார். பொது விருப்பம் மக்களின் பொதுவான நலன் பற்றியதாகும். அனைவரது விருப்பம் என்பது ஒவ்வொருடைய மக்களின் பொதுவான நலன் பற்றியதாகும். அனைவரது விருப்பம் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விருப்பங்களின் தொகுப்பாகும். பொது விருப்பத்தை அனைவரும் தெரிவிக்க வேண்டியதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது ஆட்சியாளர் ஒருவர் மட்டும் தெரிவித்தால் கூடி அது பொது விருப்பம் ஆகும்.

பொது விருப்பம் என்பது நடைமுறையில் சாத்தியப்பட்டது அல்ல. இது அறநெறி நிறைந்தது. மக்களின் மனதில் எழுந்துள்ள அறநெறித்தன்மை கொண்டதுதான் பொது விருப்பம். ரூசோவின் பொது விருப்பம் இரட்டைக் குழல் துப்பாக்கி மாதிரிஎன வர்ணப்பர். ஏனெனில் பொது விருப்ப அடிப்படை மக்களாட்சியைச் சார்ந்ததென்பர். ஆனால் முடிவில் மக்களாட்சியானது எதேச்சதிகார ஆட்சியாக மாறி விடும் என்கிறார். பாராளுமன்ற மக்களாட்சியை ரூசோ ஆதரிக்கவில்லை. ஏனெனில் பாராளுமன்ற மக்களாட்சியில் பொது விருப்பம் இடம்பெற முடியாது என்கிறார். பிரதிநிதித்துவ மக்களாட்சி பொது நலன்களைப் பிரதிபலிப்பதில்லை என்கிறார். எனவே கட்சி அரசாங்க முறை தான் சிறந்ததென்றும் மக்கள் அதில் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்றும் ரூசோ

நம்புகின்றார். பொது விருப்பத்தைத் தனிநபர்கள் பின்பற்றினால் சுதந்திரமாக இருப்பார்கள். பொது விருப்பத்தைக் கட்டாயமாக ஏற்பினாலும் தனிநபர்கள் சுதந்திரமாக இருப்பார்கள். ஆனால் அது கட்டாயத்திற்குட்பட்ட சுதந்திரமாகும்.

அரசில் பல சங்கங்களை மக்கள் ஏற்படுத்திக் கொள்வர் என்பதை ரூசோ அறிவார். அரசும் ஒரு சங்கம் தானேயாயினும் பொது விருப்பம் கொண்டது என்கிறார். சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களின் விருப்பத்திற்கிணங்க பொது விருப்பம் உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் அரசியல் சமுதாயத்தின் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் ஒட்டு மொத்த உணர்வுகளே பொது விருப்பம். மக்களின் நலவாழ்வைக் காப்பதும், மேம்படுத்துவதும் பொது விருப்பத்தின் குறிக்கோள். சட்டத்தின் ஆதாரம் பொது விருப்பம். பொது விருப்பம் அனைவரது நலனையும் பேணுவதால், சரியானதாகவும், நியாயமானதாகவுமே இருக்கும். எங்கெங்கு பொது விருப்பம் ஏற்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் சமஉரிமைகள் நிலவும். சம உரிமைகள் நாளடைவில் சிவில் உரிமைகளாக வளர்ச்சி பெறும். சிவில் உரிமைகள் எப்போதும் உயர்வானதாக இருக்கும். தனிநபர் விருப்பம் சரியானதாகவோ அல்லது தவறானதாகவே இருக்கும். ஆனால் பொது விருப்பம் எப்போமே சரியானதாகவே இருக்கும். ஏனெனில் அரசு தவறு இழைக்கக் கூடாது. எனவே தான் பொது விருப்பத்தின் ஒவ்வொரு செயலும் சரியானதாகவே இருக்கும்.

### *1.10 குறைபாடுகள்:*

ரூசோவின் பொது விருப்பக் கோட்பாடு முழுமையானதல்ல. மக்களின் கருத்துக்களைத் திரட்டுவதென்பது எளிதான செயல் அல்ல. மக்களின் கருத்துக்கள் பல்வேறு காரணிகளால் உருவாகக் கூடியன. அனைவரது விருப்பம் என்பதையும் பொது விருப்பம் என்பதையும் வேறுபடுத்திக் காட்டுவது கடினம். செயற்கையான முறையில் பிரச்சாரம் மற்றும் பிற நடவக்கைகளால் பொது விருப்பத்தை ஏற்படுத்தலாம் என்கிறார். இது குறுகிய தன்மை படைத்ததாகவும், தெளிவில்லாமலும் உள்ளது. மேலும் அரசாங்கத்தையும் அரசையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார். ஆனால் நடைமுறையில் ஆட்சியில் வரும் அரசின் வரையறுக்கபடாத இறையை அதிகாரம் முழுவரையும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. அரசாங்கம் பொது விருப்பத்தைச் செயல்படுத்தக் கூடிய அங்கமாக திகழ்ந்தாலும் அரசாங்கமே பொது விருப்பத்தைத் தமக்கு

உகந்த வகையில் உருவாக்கி வருகின்றது. பொது விருப்பம் பொது நலனிற்கு முக்கித்துவம் அளிக்கின்றது. ஆனால் பொது நலன் எது என வரையறுப்பதே கடினமாக உள்ளது. பொது விருப்பக் கோட்பாடு சிறிய அளவிலான அரசுகளுக்கு வேண்டுமானால் பொருந்துமே தவிர, பெரிய அளவிலான அரசுகளுக்கு நிச்சயமாகப் பொருந்தாது. ஆனால் பொது விருப்பம் சமூகத்தின் மொத்த தன்மைகளையும் பிரதிபலிப்பதாக உள்ளதென்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை.

### 1.11 இறைமை:

இறைமைக் கோட்பாட்டில், ரூசோ ஹாப்ஸ் மற்றும் லாக் ஆகியோர்களது கருத்திலிருந்து வேறுபடுகின்றார். ஹாப்ஸின் கருத்துப்படி இறைமை பொது அதிகாரமாகும். இது ஒப்பந்தத்தால் ஏற்பட்டதும், எல்லோருடைய அதிகாரமும் அடங்கிய மொத்த அதிகாரம் ஆகும். ஆனால், லாக் இறைமை மக்களிடம் இருப்பபதாக கூறுகின்றார். அவர் அரசாங்கத்தை ஏற்படுத்திய பின்னரும் இறைமை மக்கிளடத்திலேயே தான் இருக்கும் என்கிறார்.அவர் அரசாங்கத்தை ஏற்படுத்திய பின்னரும் இறைமை மக்களிடத்திலேயே தான் இருக்கும் என்கிறார். ரூசோவின் கருத்துப்படி இறைமை என்பது சமூக ஒப்பந்தமாகும். பொது விருப்பத்தின் முலம் சமுதயாத்திலுள்ள எல்லா தனிநபர்களுக்கும் கொடுத்துள்ள ஒரு முற்றுப் பெற்ற அதிகாரமாகும். ரூசோ இறைமை அதிகாரத்தை வலியுறுத்துகிறார். இது நபரிடமோ அல்லது தனிநபர்கள் தங்களது உரிமைகளைச் சரணடைந்த குழுவிடமோ இருக்கும். இக்குழு ஒப்பந்தத்தால் ஏற்பட்டது. அதிகாரமிக்கது, ஒப்பந்தத்தில் இறைமை அதிகாரம் கொண்டவர் எதேச்சதிகாரமாகிவிடுவார். மக்கள் இறைமை அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். ஒப்பந்தத்தை மீறக் கூடாது. இறைமை வாய்ந்த அரசு முதலில் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை மீறுவது தவறல்ல. இவ்வாறு இறைமை ஏதேச்சதிகார, வரையறுக்க முடியாத எண்ணற்ற அதிகாரம் கொண்டதாகத் திகழ்கிறது. மக்களின் கருத்துக்களை, எண்ணங்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் இறைமை பெற்று விடுகிறது. எண்ணங்களை வெளிப்படுத்தும் உரிமைதான் தவறுகள் செய்ய வைக்கும் வழிமுறை என ஹாப்ஸ் கருதுகிறார்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
2. ரூசோவின் இறைமைக் கோட்பாட்டை விளக்குக.

மக்களின் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்து வைக்கும் உரிமையை இறைமை பெற்றுள்ளது. வெளிநாடுகளுடன் போர் தொடுக்கவோ, அமைதியை நிலவச் செய்யவோ இறைமைக்கு அதிகாரம் உண்டு. எனவே மாற்ற இயலாத, எதேச்சதிகார, பிரிக்க முடியாத தனிநபர் அதிகாரத்தை இறைமை பெற்றுவிடும் என்று ரூசோ கூறுகின்றார். இறைமை மக்களிடம் இருந்தால் ஏதேச்சதிகாரத்தை நீக்கிவிடலாம் என்கிறார். அரசனிடம் இருந்தால் எதேச்சதிகாரத்தை நீக்குவது முடியாத செயல். ரூசோவின் இறைமை உண்மையான பொது விருப்பமாகும். இறைமை அரசியல் கட்சிகள் இல்லாத இடங்களிலும் செயல்படும். ஏனெனில் அரசியல் கட்சிகள் அதிகார ஆதிக்கத்திற்குப் போட்டி போடக் கூடியவை. ஆனால் அரசியல் கட்சிகள் தான் மக்களின் கருத்துக்களை திரட்டக் கூடியவை. தேசிய நல்ன கருதி பாடுபடக் கூடியவை. எனவே அரசியல் கட்சிகளின்றி பொது நலன் பேண முடியாது என்கிறார் ரூசோ.

### 1.12 மதம்:

அரசிற்கும் திருச்சபைக்கும் உள்ள தொடர்பினால் இரண்டு இறைமை, இரண்டு சட்டமன்றமென்று இரண்டு அதிகார மையங்களை உருவாக்குவது சிக்கலை விளைவிக்கிறதென ரூசோ கூறியுள்ளார். ஏனெனில் தனிநபர்கள் மதத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டுமா, அரசிற்கு விசுவாசமாக இருக்க வேண்டுமா என்ற எண்ணம் தலைதூக்குகின்றது. தற்கால அரசில் வேண்டுமானால் இந்த மாதிரியான விசுவாசம் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஆனால் அரசு மதத்தில் தலையிடக் கூடாது என்பதில் எல்லா அரசியல் சிந்தனையாளர்களும் வலியுறுத்தியுள்ளனர். ரூசோ மூன்றுவகையான மதங்களைக் குறிப்பிடுகின்றார்.

1. தனிமனிதனின் மதம் - இது தனிமனிதனுடையது.

2. குடிமக்களின் மதம் - வெளிப்படையானது. இது சடங்குகளையும் சமயச் சடங்குகளையும் கொண்டது. சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்டது.

3. சமயக் குழுக்களின் மதம் - இவற்றில் இரண்டாவது வகையான மதம் அரசிற்கு உபயோகமுள்ளது. அது நாட்டுப்பற்றுடன்விளங்குகிறதென்கிறார். மூன்றாவது வகையான மதம் தீமை பயக்கவல்லதென்கிறார் ரூசோ.

ரூசோ மதச் சார்பற்ற செயல்களுக்கு முன்னுரிமை அளிக்கிறார். எனவே சிவில் மதம் என்பதை அனைவருக்கும் பொதுவாக ஏற்படுத்தலாம் என்று வலியுறுத்துகின்றனார். ஒவ்வொரு தனிமனிதனும் இதனைக் கடைப்பபிடிக்க வேண்டும் என்கிறார். சிவில் மதத்தை அழிக்க முற்படுபவர்களைத் தண்டிக்க வேண்டும். தூக்குத் தண்டனை கூட வழங்கலாம் என கடுமையான தண்டனையைக் கூறுகின்றார். மத உணர்வில்லாமல் மனிதர்கள் நல்லவர்களாக இருக்க முடியாதென்கிறார். இந்தக் கருத்து கிரேக்க தத்துவஞானிகளிடமிருந்து ரூசோ பெற்றுள்ளார் எனலாம். அதே நேரத்தில் மத மூட நம்பிக்கைகளை அறவே வெறுக்கின்றார். கிறிஸ்துவ மதத்தை அடிமைகளின் மதமென்கிறார். அரசியல் முறைமைகளின் ஒற்றுமையை அழித்தது கிறிஸ்தவ மதமென்கிறார். கிரிஸ்தவர்களை நம்முடையவரகள், வெளி நாட்டினர்களௌன பிரித்துப் பார்க்க முடியாது என்கிறார். மதக்ககுருமார்களின் எதேச்சதிகாரத்திலிருந்து மக்களை விடுவித்து சுதந்திரமா..வர்களாக்குவதே ரூசோவின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

### 1.11 தொகுப்புரை :

ரூசோ தத்துவஞானியாக இடம்பெறுகிறாரே தவிர வரலாற்றுச் சிந்தனையாளர் வரிசையில் இடம் பெறவில்லை. இவருடைய கருத்துக்கள் பெரும்பாலும் இவருடைய சிவில் அரசாங்க ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளது. அரசின் கருத்து புதிதானது அல்ல. இவர் வலியுறுத்தும் மக்கள்தான் அதிகாரமிக்கவர்கள். அரசாங்கத்தை அமைப்பவர்கள். அரசாங்கமென்பது மக்களுக்காகச் செயல்படும் கருவி என்பதெல்லாம் புதிதல்ல.

இவருடைய உரிமை, சுதந்திரம், இறைமை என்ற தாரக மந்திரம் பிரெஞ்சு புரட்சிக்கு வழிவகுத்தது. நெப்போலியன் கூறியது போல் ரூசோ இல்லையேல் பிரெஞ்சு புரட்சியே நடந்திருக்காது என்பது உண்மை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இவருடைய செல்வாக்கும் பரவியுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பலும் அமெரிக்கச் சுதந்திர பிரகடனத்திலும், ரூசோவின் உரிமைக் கோட்பாடு பிரதிபலிக்கின்றது. ஜெர்மனியச் சிந்தனையாளர் காண்ட் ருசோவின் கருத்தை மிகவும் மதித்தார். ஹெகல் மற்றும் பின்னாளில் பயன் கருது கோட்பாட்டாளர்கள் ஆகியோர் ரூசோவின் பொது விருப்பத்தை பிரதிபலிக்கும் வகையில் தங்களது கருத்துக்களை உருவாக்கிக் கொண்டனார். ஒட்டு மொத்தத்தில் இன்றைய நாளில் கூறப்படும் பொது மக்கள் கருத்து என்பது கூட ரூசோவின் பொது விருப்பம் தான் என்பது மிகையல்ல.

## 1.12 முக்கிய வார்த்தைகள் :

அரசியல் சமூகம், ஒழுக்க நெறி, பொது விருப்பம், இறைமை, சுதந்திரம்

## 1.13 பரிந்துரை நூல்கள் :

1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.

## 1.14 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவு சோதனை கேள்விக்களுக்கான பதில்கள்

கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:3 - ல் அறிக.

கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:11 - ல் அறிக.

## 1.15 மாதிரி வினா:

1. ரூசோவின் பொதுவிருப்பக் கொள்கையை விளக்குக.
2. ரூசோவின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை விளக்குக.
3. ஹாப்ஸ், லாக், ரூசோவின சமூக ஒப்பந்த கோட்பாட்டை ஒப்பீடுக.

# ஜான் ஸ்டுவர்ட் மில்
(1806 - 1873)

## அறிமுகம் :

ஜான் ஸ்டுவர்ட் மில் 1806 ஆம் ஆண்டு இலண்டனின் பிறந்தார். இவடைய தந்தையின் பெயர் ஜேம்ஸ் மில் : பெந்தாமின் பயன்கருத்து கோட்பாட்டை ஆதரித்ததோடு அதில் மிகவும் ஈடுபாடும் கொண்டார் ஜேம்ஸ் மில், தனது மகனுக்கு பயன்கருது கோட்பாட்டைப் பின்பற்றும்படி அறிவுரை கூறி, அந்த வழியில் நட்கக வேண்டுமென்று முயற்சித்தார். இளமையில் வறுமை கொடிது. என்று கூறுவதற்கிணங்க, அவருடையய தகப்பனார் இறப்பிற்குப் பின்னர் வறுமையில் வாடலானார். இதுதான் இவரை உண்மையான மனிதனாக மாற்றியது என்றும் கூறலாம். ஆங்கிலப் புலவர்களாக வோட்ஸ்வோர்த், கோலரிட்ஜ் ஆகியோர் நூல்களை விரும்பிப் படித்தார். கார்லைல் எழுத்துக்களில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார். எனவே இலக்கிய அறிவு, உண்மையான உலக நிலை ஆகியன தெரிந்த காரணத்தால், பிரச்சனைகளைத் தெளிவாக ஆராயும் பக்குவம் ஜான் ஸ்டுவர்ட் மில்லுக்குக் கிடைத்தது. ஒழுக்கநெறி, அரசியல் கோட்பாடுகள், பொருளாதாரக் கோட்பாடுகள் ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்.

## நோக்கங்கள்:

1. சுதந்திரம் பற்றிய மில்லின் விளக்கம்
2. சோசலிசம் பற்றிய மில்லின் கருத்து அறிதல்
3. தனியுரிமை பற்றிய விளக்கம் அறிதல்

## வடிவமைப்பு:

இளமைப் பருவம்
நூல்கள்
சுதந்திரம் பற்றி மில்லின் கருத்து

சோசலிசம்
பிரதி நித்தவ அரசாங்கம்
பயன்கருது கோட்பாடு
தாராளக் கொள்கை
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனைக்
கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

## 1.1 இளமைப் பருவம்:

ஜான் ஸ்டுவர்ட் மில் தனது 15வது வயதிலேயயே பெந்தாமின் கருத்துக்களில் திழைந்தார். பயன்கருது கோட்பாடு இவருக்கு பிடித்த முக்கியமான கோட்பாடாகும். 1823 ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியின் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தியக் கடிதப் போக்குவரத்து அலுவலகத்தில் அவருடைய தந்தையாரின் கீழ் பணிபுரிந்தார். பணியில் 1858 ஆம் ஆண்டு வரைப் பணியாற்றி, பதவி ஓய்வு பெற்றார்.

ஜான் ஸ்டுவர்ட் பயன்கருது கோட்பாட்டை ஆதரித்தவர் மட்டுமல்ல, அதனைப் பலருக்கும் பறைசாட்ட வேண்டுமென்று பிரச்சாரமும் செய்தவர். இளமையிலேயே பல நூல்களைப் படித்ததாலும், உலக அனுபவத்தைப் பெற்றதாலும், தன்னுடைய கருத்துகள் பிறருக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் கட்டுரைகளை பத்திரிக்கைகளுக்கு அனுப்பினார். இவரது கட்டுரைகளைத் தவறாது பிரசுரிக்கும் பத்திரிக்கைளாக Morning Chronicle மற்றும் Minster Review ஆகிய இதழ்கள் திகழ்ந்தன . இவருடைய கட்டுரைகளை மக்கள் விரும்பிப் படித்தனர். வோட்ஸ்வோர்த், கோலரிட்ஜ் போன்ற அறிஞர் எழுத்துக்கள் மட்டுமல்ல திருமதி டெய்லரின் எழுத்துக்களும் மில்லைக் கவர்ந்தன. 1851 ஆம் ஆண்டு திருமதி மில்லைத் திருமணம் செய்து கொண்டார். ஜான் ஸ்டுவர்ட் மில் சிறப்பாக வருவதற்கு

மிகவும் உறுதுணையாக இருந்தவர் திருமதி டெய்லர் ஆவார். 1859 ஆம் ஆண்டு அவர் இறந்த பிறகு, மில் மிகவும் கஸ்ட்டப்பட்டார். மனைவி இறந்த வேதனையை மறக்கும் வகையில் தன்னுடைய கருத்துக்களை கட்டுரைகளாக எழுதிக் குவித்தார். எனவே தான் அவருடைய நூல்கள் அழியாத பெயருடன் இன்றும் திகழ்ந்து வருகின்ற. பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். ஆனால் அரசியல் எப்போதும் அனுசரனையாக இருக்காதென்பதை 1868 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கண்டபின் உணரந்தார். பின்னர் தன்னுடைய மகள் வீட்டில் மகளுக்கு ஆதரவாக இருந்து 1873 ஆம் ஆண்டு பிரான்சில் காலமானார்.

### 1.2 மில்லின் நூல்கள்:

ஸ்டுவர்ட் மில் . எப்போதும் ஏதாவது எழுதவேண்டுமென எண்ணக்கூடியவர். இவர் பணியிலிருக்கும் போது, ஓய்வு நேரங்களில் கூட தன்னுடைய கருத்துக்களை எழுதிக் கொண்டிருப்பார். எனவே எப்போதும் எழுத்திலேயே இருந்த காரணத்தால் பல நூல்களை எழுதியவர் என்ற பெருமையுடையவர் ஜான் ஸ்டுவர்ட் மில். System of Logic என்ற நூடிர 1843ஆம் ஆண்டு வெளியிட்டார். பின்னர் 1848 ஆம் ஆண்டு அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் என்ற நூலை வெளியிட்டார். இந்நூலுக்குப் பின்னர் மில் ஒரு பொருளாதாரவாதியாகப் பரிணமித்தார். இவரது புகழை உயரத்திய நூல் உரிமைகள் பற்றிய நூலாகும். இது 1859 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பின்னர் பிரதிநிதித்துவ அரசாங்கம் என்ற நூல் 1861 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பயன்கருது கோட்பாடுமுறை (Utilitarianism) என்ற நூல் 1865ல் வெளி வந்தது. மனிதமனம் (Human Mind) என்ற இவரது தந்தையார் கருத்தை . 1869 ஆம் ஆண்டில் வெளியிட்டார். பெண்கள் பற்றியும் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இவரது மறைவிற்குப் பின்னர் கூட இவரது எழுத்துக்கள் இயற்கை, மதம், மதநம்பிக்கை போன்ற தலைப்புக்களில் கட்டுரையாக வெளிவந்துள்ளன. இவரது சுயசரிதையும் இவரது கருத்தைப் பறைசாற்றும் வகையில் இவரது இறப்பிற்கு பின்னர் 1874 ஆம்ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. பெந்தாமின் பயன்கருதுகோட்பாட்டை மிகவும் விரும்பியவர் ஜான் ஸ்டுவர்ட் மில் என்பதை அறிவோம். ஜேம்ஸ் மில் மற்றும் பெந்தாம் ஆகியோர் மனிதனுடைய மகிழ்ச்சி அளவில் வேறுபடுகின்றது என்று கூறியிருந்தனர். இதனை ஜான் ஸ்டுவர்ட் மில் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் அவருக்கென்று தனிக்கருத்து இருந்தது. இவர்

சந்தோஷம் அல்லது மகிழ்ச்சி என்பதை அளவில் மட்டுமல்ல தரத்திலுமாக இரண்டு வகைகளாகத் காட்டிலும் சம மகிழ்ச்சி தரமானதாக இருக்க வேண்டுமென்று கூறினார். மகிழ்ச்சியானது உயர்தர மகிழ்ச்சி, குறைந்த தர மகிழ்ச்சி தரமானதாக இருக்க வேண்டுமென்று கூறினார். மகிழ்ச்சியானது உயர்தர மகிழ்ச்சி, குறைந்த தர மகிழ்ச்சியென்று இரு வகைகளாக உள்ளதென்று கூறினார். ஏனெனில் இவர் ஒழுக்க நெறிக்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தால், ஒழுக்கநெறிக்கு எதிராக இருக்கக்கூடிய நிலையில் மகிழ்ச்சி இருக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார். இவ்வாறு இவர் போற்றும் பெந்தாமின் கருத்துக்களிலிருந்தும் வேறுபடுகிறார். பயன் கருது கோட்பாட்டிற்கு இவரும் ஸ்பென்சரும் சேர்ந்து முடிவாக சில மாற்றங்களைச் செய்தனர். ஏனெனில் பயன்கருது கோட்பாட்டை முழுமையாக மாற்ற வேண்டுமென்ற இவரது முயற்சி வெற்றியடையவில்லை. ஆயினும் பயன்கருது கோட்பாட்டில் சில அடிப்படைக் கருத்துக்களை மாற்றியுள்ளளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### *1.3.சுதந்திரம் பற்றிய மில்லின் கருத்து:*

இங்கிலாந்து நாட்டின் முதன் முதலாக சுதந்திரம் என்ற நூலை எழுதிப் பிரபலமானவர் ஜான் ஸ்டுவர்ட் மில் ஆவார். சுதந்திரமான சிந்தனை, சுதந்திரமான வாக்குவாதம் ஆகியவற்றை வலியுறுத்திக் கூறினார். பயன்கருது கோட்பாட்டாளர்கள் எவரும் மில் போன்று சுதந்திரத்தைப் பற்றி வலியுறுத்திச் சொல்லவில்லை. எனவே அரசியல் இலக்கியத்தில் அச்சாணியாக மில்லின் சுதந்தரக் கருத்து இடம் பெற்றுள்ளது. தவிர, இவருடைய காலத்தையும் இதற்கு உறுதணையாகச் சொல்லலாம். ஏனெனில் ஆட்சிகள் அனைத்தும் பெரும்பான்மையோர் ஆட்சியாக, எதேச்சதிகாரமாகச் செயல்பட்டு வந்தன. சிறுபான்மையோர் ஆட்சியாக எதேச்சதிகாரமாகச் செய்லபட்டு வந்தன. சிறுபான்மையோர் பாதுகாப்பு என்பது இல்லாமல் இருந்தது. எனவே தான் சுதந்திரம் என்ற எண்ணம் இவர் மனதில் முழுமையாக நிறைந்து விட்டது.

ஜான் ஸ்டுவர்ட் மில் முதலில் சமூக நலனிற்கு இன்றியமையாத உரிமைகளாக சிந்திக்கும் உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை கருத்து வெளியிடும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை ஆகியவகைளைக் கூறுகின்றார். ஏனெனில் அறிவியல் தான்அறிவை விரிவாக்கும் சிந்தனையாகும். சிந்தித்ததை வெளியிடுவதற்கும் உரிமை இருக்க

வேண்டும் என்கிறார். மேற்கூறிய இவ்வளவு உரிமை கூளும் இல்லையெனில் உண்மையகைக் கண்டறிய முடியாது இவ்வளவு உரிமைகளையம் நிலை நாட்ட வேண்டுமெனின் அரசின் பணிகளைக் குறைத்து, அரசு இப்பணிகளை ஒழுங்கு படுத்த வேண்டும். அரசின் தலையீட்டிலிருந்தும் பிறர் தலையீட்டிலிருந்தும் மக்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். அவனுடைய சொந்தக் கடிதங்களை அரசாங்கம் பறிமுதல் செய்து ஆய்வு நடத்தக் கூடாது. மனிதகுலத்தைச் சார்ந்த அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருக்க முடியாது. பெரும்பான்மையான மக்கள் கருத்திற்கு எதிராக ஒரு சிலர் கருத்துக்கள் கூட இருக்கும். இந்த பொரும்பான்மைக்கெதிரான கருத்தை பெரும்பான்மையோர் நசுக்க முயற்சிக்கக் கூடாது. ஏனெனில் அந்த உரிமை அவர்களுக்குக் கிடையாது. மேலும் எந்தக் கருத்தை நசுக்க முற்படுகிறோமோ அந்தக் கருத்தில் உண்மை அடங்கியிருக்கலாம் என்று மில் தனிமனிதனின் உரிமையைப் பற்றிக் கூறுகின்றார்.

தனிமனிதனின் சுதந்திரம் என்று கூறும் பொழுது பிறர்க்கு தீங்கிழைக்கக் கூடிய நடத்தைகள் அரசால் கட்டுப்படுத்தபடும் என்பதில் சந்தேகமில்லை. மில் தனிமனிதனின் சுயவளர்ச்சியை வலியுறுத்துகிறார். இத்தனிமனிதன் சுயவளர்ச்சி என்பது பிறரைச்சார்ந்ததிராக கொள்கைகளில் செயல்களைக் கூறுகின்றார். அரசின்கட்டுப்பாட்டிலுள்ள பிரறது வாழ்க்கையபைப் பாதிக்கக்கூடிய நடத்தைகள் பிறரது வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய நடத்தைகள் என இரு வகைகளைக் குறிக்கின்றார். ஆனால் பயன்கருது கோட்பாடு தனிநபர் உரிமையோடு முரண்பாடு கொண்டதென்பதை அறிவோம். இவ்வாறு மில் பயன்கருது மக்கள் மன்னரிமிருந்து உரிமைகள் பெற இரண்டுவழி முறைகளைக் கடைப்பிடித்தனார் என மில் கூறுகின்றார். மன்னரிடமிருந்து அரசியல் உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றைப் பெற வேண்டும் என்பது ஒரு வழி. மக்கள் பிரதிநிதிகள் ஒப்புதலுடன் அரசியலமைப்பு விதிகள் முலம் மன்னரைக் கட்டுப்படுத்துதல் என்பது மற்றொரு வழி. மாறுகின்ற சூழ்நிலைக்கேற்ப நாளடைவில் மக்களே ஆட்சியாளர்களாக மாறுகையில் யாரால் அவர்களாது அதிகாரங்களைத் தடை செய்ய முடியும்? அல்லது யார்தான் அவர்களுடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்த விரும்புவர்? இதுவே மில்லின் சுதந்திரம் பற்றிய அடிப்படை வாதமாகும்.

மக்களாட்சிக் குடியரசில் சுதந்திரத்திற்கு அதிக ஆபத்து உள்ளதென்று மில் வாதாடுகின்றார். அதிகாரத்தில் இருப்பவர்கள் எப்போதும் ஒரே மாதிரியான மக்கள் இல்லை. மக்களாட்சி என்பதில் ஒவ்வொரும் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளவேண்டுமென்பதற்குப் பதிலாக பிறர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்து விடுகின்றது எனச் சுட்டிக் காட்டுகின்றார். மக்கள் விருப்பம்என்பது பொரும்பான்மையோர் விருப்பம். இத்தகையோர் பெரும்பான்மைக்கெதிராக உள விருப்பத்தை ஆதரிப்பார்களா, நசுக்குவார்களாக என்ற கேள்வி எழுகின்றது. நசுக்குவாரா? ஜான் ஸ்டுவர்ட் மில் மக்களாட்சியயல் தீவிர நம்பிக்கையுடையவர் எனினும் மக்களாட்சியில் சிறுபான்மையோரின் மீது பெரும்பான்மையினரின் கொடுமை ஏற்பட வழியுண்டு என அஞ்சினார். இது தனிமனித உரிமைக்கும் தீங்காகும். அரசின செயல்களிலன் நன்மை, தீமைகளை தீவிரமாக விவாதிக்க சிறுபான்மையினல் மற்றும் பொரும்பான்மையினர் ஆகியோர்களின் பிரதிநிதிகளுக்கு சமவாய்ப்பு இருக்கவேண்டும என்கிறார். மில்லின் கூற்றுப்படி, மக்களாட்சிக்குள்ள இரண்டாவது ஆபத்து சமுகக் கொடுங்கோன்மை ஆகும். சமூகச் சட்டங்களும் வழக்காறுகளும் சமூகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அம்சங்களாகும். வழக்காறுகள், நடைமுறைப் பழக்கங்கள் ஆகியன பகுத்தறிவு அடிப்படையில் சமுத்தால் உருவாக்கப்படாமல், ஆட்சியாளர்களின் விருப்பு வெறுப்புகளால் எண்ணுபவர்களையும்,செயல்படுபவர்களையும் பொறுத்துக் கொள்வதில்லை சமூகம். எனவே சமூகம் அதன் எண்ணங்களையம் பழக்கவழக்கங்களையம் அவற்றை விரும்பாதவர்களின்மீதும் சுமந்த முடியாது. ஆயினும், ஒருவர் பிறருடைய சுதந்திரத்தைப் பறிக்க முயல்வாரேயானால் அவரது செயல்கள் தடுக்கப்படவேண்டும். எனவே, மில் தனிநபரின் செயல்களில் தலையிடாமைக்காகப் போராடுகின்றார். அதே நேரத்தில் தனிநபர் பிறர்க்குப் பிரச்சினை கொடுப்பவராக இருக்கக் கூடாது. ஒருவரது செயல் பிறர்களது உரிமைகளுக்கும் செயல்களுக்கும் எதிராக இருந்தால், அவரைக் கட்டுப்படுத்த சமுகம் அதிகாரம் கொண்டதென்கிறார். உரிமைதான் மக்களின் தனிநபர் வளர்ச்சியை உருவாக்கக் கூடியது என்கிறார். மக்களுக்கு அரசு ஏராளமான நன்மைகளைச் செய்யவேண்டுமேன்கிறார். தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனிற்காக சட்டங்கள் இயற்ற வேண்டும் என்கிறார். தொழிலாளர்களுக்கு வேலை நேரம் அதிகமாக இருக்கக்கூடாது என்கிறார்.

### 1.4 சொத்து பற்றி மில்:

சொத்து என்பது ஒரு சமூக நிறுவனம். மனிதனுடைய நல்வாழ்விற்கு தேவையான ஒன்று. தனிநபர் தன்னுடைய திறமையால் உருவாக்கபட்ட உறுபத்திப் பொருளை அவருக்கே உரித்தானது என உரிமை கொண்டாடலாம். அதை அவர் மற்றவர்களிடமிருந்து பிரித்து தன்னுடையது என உரிமை கொண்டாடலாம். இது போன்று பிறிதொரு தனிநபரும் இதேபோல் உரிமை கொண்டாடலாம். அவற்றை ஒவ்வொருவரும் அங்கீகாரம் செய்தால் அது தனிநபர் சொத்துரிமையாக மாறி விடுகின்றது. ஆனால் இவ்வுரிமைக்கு சில கட்டுப்பாடுகளை அரசு விதிக்கலாம். எத்தனை குழந்தை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாமெனச் சொத்துரிமை கொடுக்கப்பட்டாலும், அக்குழந்தைகளை அவர்களது தகப்பனார் வளர்க்க முடியுமானால்தான் குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். மாறாக, குழந்தைகளைப் பெற்று, நடுத் தெருவில் போட அவருக்கு உரிமை கிடையாது. எனவே உரிமை என்பது சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்பது மில்லின் கொள்கை. ஆனாலும் மில் பின்னாளில் இக்கருத்திற்கு எதிரான கருத்துக் கொண்டவரானார். எல்லா நிலங்களும் அரசுக்குச் சொந்தமானவை. தனிநபருக்கு அல்ல என்று பின்னாளில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
> 3. சொத்தை பற்றி மில்லின் கருத்தை கூறுக.

### 1.5 தொழிலாளர் பற்றி மில்:

தொழிலாளர்களுடைய நலனில் மிகவும் அக்கறை கொண்டவர் ஸ்டுவர்ட் மில் தொழிலாளர்களுடைய கல்வி வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். நீதி மற்றும் தன்னாட்சி இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார். திட்டமிட்ட குடும்பம் தொழிலாளர்களுக்கு ஏற்றது என்கிறார். அறநெறி, ஒழுக்கம் ஆகியவற்றுடன் கூடிய துயவாழ் வாழ வேண்டும் என்கிறார். குடும்பக்கட்டுப்பாடு போன்றவை கூடத் தேவைதான் என குடும்பத்தினார் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென மில் வலியுறுத்துகிறார்.

## 1.6 சோசலிசம்:

சோசலிசக் கருத்து இவருக்கு உடன்படாத கருத்தாக ஆரம்பத்தில் இருந்தது. பின்னர் ஏராளமான சோசலிசம் பற்றிய நூல்களைப் படித்து அறிந்தவுடன், சோசலிசத்தில் நம்பிக்கை கொண்டார். ஆயினும் தவிர சோசலிசவாதியாக இருக்கவில்லை. வணிகத்திற்குப் போட்டி கட்டாயம் தேவை என்பதை உணர்ந்தார். தொழிற்சங்கங்களை ஆதரித்து வந்துள்ளார். இவரது சோசலிசம் கில்டுசோசலிசம் மாதிரியாக இருந்தாலும் நடைமுறைப்படக் கூடிய சோசலிசமாக இருக்கவில்லை. தொழிற்சாலைச் சட்டங்களை ஆதரித்தார். தொழிலாளர் நலன் காப்பீடு, ஓய்வுதியும் போன்றவற்றை ஆதரித்தார். நிலச்சீர்திருத்த இயக்கங்களில் பங்குபெற்றார் இருப்பினும் சில தனிநபர் உரிமைகளையும் ஆதரித்தார். பொருளாதார விஸயங்களில் அரசு தரையீடு இருக்கக் டாது என்றார். தனிநபர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை மில் ஆதிரித்தார்.

## 1.7 பெண் உரிமை:

மில் பெண் உரிமைக்காகப் போராடியவர். உயர்கல்வியில் அதிகமான பெண்கள் நுழைய வாய்ப்பளித்தது இவரது பெண் உரிமை பற்றிய கருத்தாகும். பெண்களுக்கு சில உரிமைகள் தரப்பட வேண்டுமென்றார். பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார். சமுகத்தில் உயர்பதவிகள் பெண்களுக்கு வழங்காமலிருப்பது அநீதி என்றும், இது உடனே களையப்பட வேண்டும் என்கிறார். பெண்கள் மேம்பாட்டிற்கு உடனடியாக சில நடவடி;கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றார்.

> **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
> 2. மில்லின் பெண்ணுரிமை பற்றிய கருத்தை விளக்குக.

## 1.8 தனியுரிமை:

தனிநபர்களின் அறிவு, அறநேறித் தன்மைகள் மேம்பாட்டைய வேண்டுமென்பது மில்லின் நோக்கமாகும். வளர்சிசயென்பதே அறிவும் அறநெறி வள்ர்சிதான். இவை இரண்டும் இல்லையேல் முன்னேற்றம் என்பது கிடையாது. அரசிடம் கல்வி இருப்பதை மில் விரும்பவில்லை. ஏனெனில் இது தனிநகர்களின் தனித்தன்மையைச் சொல்வதாக அமைந்துவிடும் என்கிறார். சுதந்திரமான சிந்தனை, பேச்சு, செயல் ஆகியன வேண்டுமென முறையிடுகிறார். சமுகத்தில் ஒரு அங்கமாக மனிதன்

மனிதன் இருப்பதால் அவன் கட்டுப்பாடுகளுக்கு இலக்கானவனாயினும் முழுக்கட்டுப்பாட்டை அவன் மீது சுமத்தக் கூடாது. ஆக்சன் பிரபு கூறியதிற்கிணங்க வளர்ச்சி என்பது புதுமைப்பாங்குதான் என்பதை இவரும் ஏற்கிறார். எனவே நடைமுறை அனுபவத்திற்கு முழு சுதந்திரம் மக்களுக்கு கொடுக்க வேண்டுமென மில் கூறுகிறார். சமூக நல்வாழ்விற்கு அரசின் குறுக்கீடு தேவையென்பதைக் கூறுகிறார். இவருடைய கோட்பாடு அரசியல் சுதந்திரமும் பொருளாதாரச் சோசலிசம் ஆகிய இரண்டும் சேர்ந்த இணைப்புதான் ஆகும். சமூக நலவாழ்வும் தனிநபர் சுதந்திரமும் வேண்டுமென்பது இவருடைய கருத்து. மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியிருக்கும் சமயத்தில் தனிநபர் சுதந்திரமும் காக்கப்பட வேண்டும் என்கிறார். தனிநபர் எல்லோருடைய மகிழ்ச்சியையும் விரும்பி வளர்க்க வேண்டும் சமூகம் என்பதே அறநெறியைப் பெறுவதுதான். எனவே அறநெறி மேம்பட ஒவ்வொரு தனிநபரும் பாடுபட வேண்டும் என்கிறார்.

### 1.9 மில்லின் அரசியல் கருத்துக்களும் பிரதிநித்துவ அரசாங்கமும்:

அரசியல் நிறுவனம் ஒவ்வொரு நிலையாக, படிப்படியாக வளர்ந்தது என்கிறார். அரசாங்கம் என்ற அரசியல் நிறுவனம் அதில் அங்கம் வகிக்கும் மக்களின் திறமைகள் தகுதிகளுக்கேற்ப அமையக் கூடியதென்கிறார். ஒரு நல்ல அரசாங்கம் என்பது கீழ்க்கண்ட பண்புகள் கொண்டதாக விளங்கவேண்டும் என்கிறார். அவை:

1. மக்களின் அறிவு மற்றும் அவர்களின் நலன், ஒழுக்கம் ஆகியவற்றை மேம்படுத்தக் கூடியதாக அரசாங்கம் இருக்க வேண்டும்.
2. வாக்குரிமை என்பது வெளிப்படையாக பயன்படுத்தக் கூடிய அளவில் இருக்க வேண்டும். இரகசிய வாக்குரிமை என்பது தவிர்க்க முடியாத நேரங்களில் அளிக்கலாம்.
3. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்.
4. சட்டங்களை ஏற்பதும் மறுப்பதுமாகிய உரிமை மக்களிடம் இருக்க வேண்டும்.

சட்டங்களை மக்கள் ஏற்பதும் மறுப்பதுவும் அவர்கள் கையில் தான் என்பதால் அவர்கள் நிர்வாகத்தில் அங்கம் வகிக்கிறார்கள் என்று பொருள் அல்ல. ஏனெனில் நிர்வாகம் சிக்கல் நிறைந்தது. அறிவுடைய, ஒழுக்கத்தைப் பேணவிழையக் கூடிய மக்களால் கூட நிர்வாகத்தைப் புரிந்து கொள்ள முடியாது. பிரதிநிதித்துவச் சட்டமன்றம் என்ற அமைப்பு தேவை. இது

நிர்வாகத்தைக் கண்காணித்து கட்டுப்பாடு செய்யக்கூடிய கண்காணிப்புப் பணியை மட்டும் செய்யவல்லது.

மனிதர்கள் சுயநலமிக்கவர்கள் என்பதை மில் கூறுகின்றார். மக்களாட்சி ஒன்றுதான் மக்கள்நல்ன பேணக்கூடியது. பிற ஆட்சிமுறைகள் ஆட்சியாளர்களின் நன்மைக்காகவே செயல்படக்கூடியன என்கிறார். எனவே மக்களாட்சியல்லாத ஆட்சி, மக்கள் நல்ன முழுவதையும் புறக்கணிக்கும் என்கிறார்.

ஜான்ஸ்டுவர்ட் மில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார் என்பதை அறிவோம். எனவே நடைமுறையில் மக்களாட்சியின் குறைகளை அறிந்த காரணத்தால் அக்குறைபாடுகளைக் களையவேண்டுமென்று முயற்சித்தார். பெரும்பான்மையோர் கையில் சிறுபான்மையோர் பாதிக்கின்ற செயல்களைப் பார்த்தார். பின்னர் பெரும்பான்மையோர் போலவே, சிறுபான்மையோருக்கு உரிமையுண்டு என்று உணர்ந்து, அவர்களுக்காகப் போராடினார். ஏனெனில் சிறுபான்மையினரின் குரல் அரசின் செவிகளுக்கு எட்டவில்லையெனில் மக்களாட்சியானது சிறப்பானதாக அமையாது. சிறுபான்மையோர் பெறுகின்ற பாதுகாப்பினைப் பொறுத்துத்தான் மக்களாட்சி,நல்லதா, கெட்டதா என்பது நிர்ணயிக்கப்படும்.

### 1.10 பிரதிநிதித்துவ அரசு:

சமுதாயத்தின் கைகளில் இறைமையானது அமையப்பெற்றால் அங்கு சிறப்பான அரசு அமையும் என்கிறார். ஏனெனில் அந்த அரசில் ஒவ்வொரு குடிமகனுக்கும் இறைமை அதிகாரத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும். மக்கள் அரசில் பங்கேற்கவும், அவர்களது கடமைகளைச் செய்யவும் இயலும். எல்லா மக்களும் பங்கேற்கக் கூடிய, மக்களுடைய சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசாக அது திகழும். நாட்டின் இறைமையில் அனைவரையும் சேர்த்துக் கொள்வதே அனைவராலும் விரும்பக்கூடிய தென்று மில் வாதிடுகின்றார். ஒரு சிறு சமுதாயத்தில் மட்டுமே அனைவரும் அரசியல் பங்கேற்க முடியும். பெரிய அரசுகளில் முடியாது. எனவே பிரதிநிதித்துவ அரசே நிறைவான அரசாகும். சாதாரண மக்களைய செயல்பட வைக்கும் பிரதிநிதித்துவ அரசே சிற்பபானதாகும் என்பது மில்லின் கருத்து. ஒவ்வொரு அரசியல்

சமுதாயத்திலும் திட்டவட்டமான முழுமைபெற்ற இறைமை இருக்க வேண்டுமென்ற ஆஸ்டினின் கொள்கையை மில் ஏற்றுக் கொள்கின்றார். இங்கிலாந்தில்-பாராளுமன்றம் இத்தகைய இறைமையைக் கொண்டுள்ளது என்கிறார்.

மில் கூறும் பிரதிநிதித்துவ அரசு என்பது மக்களாட்சி அரசு தான் ஆகும். மக்களாட்சியின் குறைகளையும் தீமைகளையும் அவர் உணர்ந்து கொண்டபோதிலும் அவற்றை நீக்க வேண்டுமென்பதில் கவனம். செலுத்தினார். சிறுபான்மையோர். பெரும்பான்மையால் நசுக்கப்படுவதால், பிரதிநிதித்ததுவ விகிதாச்சார முறையைக் கொண்டு வந்து சிறுபான்மையோர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்கிறார். பிரதிநிதித்துவ விகிதாச்சார முறையில் ஒற்றை மாற்றத்தக்க வாக்கு முறையை ஆதரிக்கின்றார். ஏனெனில் வாக்குகள் எப்படியும் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இம்முறையை வலியுறுத்தியுள்ளார். மக்களாட்சியின் மாண்பே சமத்துவம் தான். ஆனாலும் பிரநிதித்துவ அரசு எல்லா மக்களுக்கும் நன்மை செய்வதில்லை என்பதையும் நம்புகின்றார். தவிர, பிரதிநிதித்துவ விகிதாச்சார முறையின் குறைகளை இவர் அதிகமாகச் சுட்டிக் காட்டவில்லை.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
3. பிரதி நிதித்துவ அரசின் முக்கியத்துவத்தை விளக்குக.

ஜான் ஸ்டுவர்ட் மில் அறிவாற்றல் கொண்ட ஒழுக்கம் நிறைந்தவர்களுக்கு பன்முக வாக்குகள் கொடுக்கலாம் என்பதையும் ஆதரிக்கிறார். ஆண், பெண் அனைவருக்கும் வயது வந்தோரென்று அடிப்படையில் வாக்குரிமை வழங்க வேண்டுமென்கிறார். சமுதாயத்தின் அனைத்துத் தரப்பட்ட கருத்துக்களுக்கும், நலன்களுக்கும் சம முக்கியத்துவம் கொடுக்கிறார். சட்டமன்றத்தில் ஏதேனும் ஒரு பிரிவினரின் ஆதிக்கம் ஏற்பட்டு விட்டால், மக்களாட்சி ஒரு சிறந்த ஆட்சியாகச் செயல்படாது என எச்சரிக்கின்றார். மன்னராட்சியைச் கூறாத இவர், பிரபுக்கள் சபை சட்டவரைவுகளை உருவாக்க உதவி செய்யும் ஓர் அமைப்பு என்று கூறுகிறார்.

மில்லின் மக்களாட்சி கருத்துக்கள் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்று சிலர் இக்கருத்தைப் பற்றிக் குறை கூறுனர். மில் மக்களாட்சி பற்றிப் பயந்ததை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். மக்களாட்சி தற்போது தன்னலக் குழுக்கள், பேச்சு எழுத்தாதிக்கம், தன்னல அரசியல், தனிமனித ஆதிக்கம் நிறைந்தது, மக்களாட்சி செயல்பட இயலாமல்

இருப்பதைக் காணும் போது மில்லின் கருத்துக்கள் உண்மையாகிவிட்டதென உணர்கிறோம்.

### 1.11 குறைபாடுகள்:

மில்லின் கருத்துக்கள் ஒரே சீராக அமையவில்லை என்று சிலர் குறைபடுகின்றனர். இவர் கூறும் மகிழ்ச்சி என்ற கோட்பாடு பலவித மாறுபட்ட கருத்துகளுக்கு இலக்காகியுள்ளது. மகிழ்ச்சி என்ற கருத்து திசைதிருப்புவனவாக உள்ளது. பன்முக வாக்கு என்பது அவர் கூறும் சிறுபான்மையோர்களுக்குச் சரியென எடுத்துக் கொண்டாலும், வயதுவந்தோர் வாக்குரிமைக்கு எதிராக அமைந்துள்ளது. பெந்தாமின் கருத்துக்களை ஏற்றார் எனினும் தனிநபர் உரிமையிைப் பொறுத்தவரை சரியாக விளக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. அரசியலில் தனிநபர் சுதந்திரம் பொருளாதாரச் சோசலிசமென்பது சொல்லில் சரியாக இருக்குமே தவிர, நடைமுறையில் கடினம்.

### 1.12 ஜே.எஸ். மில்லும் பயன்கருது கோட்பாடும்:

பெந்தாமின் பயன்கருது கோட்டில் காணக்கூடிய தீவிரத்தை ஜெ.எஸ். மில் ஓரளவு மட்டுப்படுத்தி அக்கோட்பாட்டை மனிதனுக்கும் பயன்படக் கூடியதாக மாற்றினார். ஆனால், அவர் அவ்வாறு செய்ததன் முலம் பயன்கருது கோட்பாட்டில் ஒரு சில முரண்பாட்டையும் புகுத்திவிட்டார். மனித இன்பம் அளவில் மட்டும்தான் மாறுபடுகின்றன என்று மில் கருதினார். திருப்தியுடன் ஒரு பன்றியாக வாழ்வதைவிட, அதிருப்தியுடைய சாக்ரடீஸாக இருப்பது மேல் என்பது அவருடைய கருத்தாகும். மேலும், மில் பெந்தாமின் கோட்பாட்டில் காணக்கூடிய சுயநலம் பொதுநலம் ஆகியவற்றின் பிளவையும் குறைத்தார். மில்லுடைய பயன்கருது கோட்பாடு ஒரு தனிமனிதனுக்கு அதிகபட்ச இன்பத்தை ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. எல்லா மக்களுக்கும் கூட்டாக அதிகபட்ச இன்பத்தை ஏற்படத்துவதே அதன் குறிக்கோளாகும். மேலும், தனிநபர்களுக்குப் பொது நலத்தைப் பேண வெளி நிர்ப்பந்தங்கள் காரணம் என பெந்தாம் கருதினார். ஒவ்வொரு மனிதனுக்கும் மனித இனத்தின் இன்பத்தைப் பற்றி மனதில் எண்ணமிருப்பதால், அவர்கள் பொதுநலத்தைப் பேணிப் போற்றுகின்றனர் என மில் நம்பினார்.

## 1.13 மில்லின் தாராளக் கொள்கை:-

ஜான் லாக்கினால் உருவாக்கப்பட்ட தாராளக் கொள்கையின் வளர்ச்சியில் மில்லின் கருத்துக்கள் ஒரு முக்கிய கட்டமாக விளங்குகின்றன. 19 ஆம் நூற்றண்டில் பயன்கருது கோட்பாட்டின் விளைவாக ஏற்பட்ட சீர்திருத்தங்கள் அரசின் நிர்வாகப் பணிகளைப் பன்மடங்கு பெருக்கியது. சட்டமியற்றும் அதிகாரம் படைத்த பாராளுமன்றம் ஏராளமான சட்டங்களை இயற்றித் தள்ளியது. சட்டமியற்றும் அதிகாரம் படைத்த பாராளுமன்றம் ஏராளமான சட்டங்களை இயற்றித் தள்ளியது. சட்டங்களின் எண்ணிக்கை பெருகப் பெருக தனிமனிதனின் உரிமைக் பாதிக்கப்படத் தொடங்கின. சமூக அரசியல் வளர்ச்சிக்குத் தனிமனிதன் கட்டுப்பாடின்றிச் செயல்படக் கூடிய சூழ்நிலை மிகவும் அவசியம் என வற்புறுத்திய மில் தனிமனித உரிமைகளின் தீவிர ஆதரவாளராக மாறினார். J.S. மில்லின் On Liberty தனிமனித உரிமை ஏன் தேவை என்பதற்கு ஆணித்தரமான காரணங்களை எடுத்துக்காட்டி எழுதப்பட்ட ஒரு நூலாகும். சமுதாயநலுக்கு இன்றியமையாத உரிமைகளாக சிந்திக்கும் உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்து வெளியிடும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை ஆகியவகைகளைக் கொண்டார். விஞ்ஞானத்தின் மூலம் தான் உண்மையைக் கண்டறிய முடியும்; காரணம் விஞ்ஞானம் விரிவாக சிந்திக்கிறது. சிந்தித்ததை வெளியிடுவதற்கும் கூடுதல் வாய்ப்பளிக்கிறது என அவர் நம்பினார். மேற்கூறிய உரிமைகள் இல்லையெனில் அரசின் பணிகளைக் குறைத்துக் கட்டுப்படுத்த வேண்டும். சமுதாய நலனைப் பற்றியுள்ள பெரும்பான்மையோரின் கருத்து சமுதாய நலனுக்கு உகந்தாக இருக்க வேண்டுமெனபதில்லை என்பதை மில் சுட்டிக்காட்டுகிறார். சிறுபான்மையோரின் கருத்துக்கூட சமுதாய நலனுக்கு உகந்ததாக இருக்க வாய்ப்பு உண்டு.

ஜே. எஸ். மில்லின் கருத்துப்படி, ஒவ்வொரு மனிதனுக்கும் சிந்திக்கும் உரிமையும் பேச்சுரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும். அரசின் தலையீட்டிலிருந்தும் மாற்றானின் தலையீட்டிலிருந்தும் அவனுக்கு விடுதலை இருக்கவேண்டும். அவனுடைய சொந்தக் கடிதங்களை அரசு பறிமுதல் செய்து ஆய்வு செய்யக்கூடாது. மனித குலத்தைச் சார்ந்த அனைவரும் ஒரு கருத்தைக் கொண்டு ஒருவர் மட்டும் மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பாரேயாயின் மாற்றுக்கருத்தைக் கொண்டுள்ள அந்த ஒரு நபரை மற்றவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நசுக்க அவர்களுக்கு

உரிமை கிடையாது என மில் தனிமனிதனின் உரிமையைப் பறைசாற்றுக்கிறார். ஒரு தனிமனிதனின் கருத்தை நசுக்க முற்படுவது மனித குலத்திற்கே உண்மையைப் இழக்கச் செய்வதற்கு ஒப்பாகும். தவறில்லாத ஒரு மனிதன் இருக்க முடியாது. எந்த நபருடைய கருத்தை அழிக்க முற்படுகிறோமோ அந்தக் கருத்தில் உண்மை அடங்கியிருக்கலாம் என்று கூறி மில் தனிமனித உரிமையின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

சங்கங்கள் அமைப்பதற்குள்ள உரிமையைப் பயன்படுத்தச் சிந்திக்கும் உரிமையும், சிந்தனையை வெளியிடும் உரிமையும் அவசியமாகும். மக்களுடைய கருத்தைப் பிரதிபலிக்க பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஒரு சிறந்த கருவியாகும் என்பது மில்லின் கருத்தாகும். ஆயினும், அக்கருவியின் மூலம் பிரதிபலிப் மக்களுடைய உண்மையான கருத்தும். அவர்களுடைய நலனும்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

ஜெ.எஸ். மில் மக்களாட்சி தீவர நம்பிக்கையுடையவராவார். ஆனால், மக்களாட்சியில் சிறுபான்மையினரின் மீது பெரும்பான்மையினரது கொடுங்கோன்மை வழியுண்டு என அஞ்சினார். இது தனிமனித உரிமைக்குத் தீங்காகும். அரசில் செயல்களின் நன்மை தீமைகளை தீவரமாக விவாதிக்க சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் ஆகியோர்களின் பிரதிநிதிகளுக்குச் சமவாய்ப்பு இருக்க வேண்டும். மேலும், மில்லின் கூற்றுப்படி, மக்களாட்சிக்குள்ள இரண்டாவது ஆபத்து சமூகக் கொடுங்கோன்மையாகும். சமூகம் அதன் எண்ணங்களையம் பழக்கவழக்கங்களையும் அவற்றை விரும்பாதவர்களின் மீதும் சுமத்த முற்படுவதுண்டு. சமூகத்தின் இப்படிப்பட்ட கொடுங்கான்மையைத் தடுக்க தனிநபர்களால் முடியாது. பொருளாதாரத் துறையில் ஜெ.எஸ்.மில் தனிமனித உரிமையை வெறித்தனமாகக் கடைப்பிடிக்கவில்லை. சமுதாய நலனைக்க கருதி அரசு பொருளர்தாரத் துறையில் தலையிட்டு, ஏராளமான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நிலை இருந்தாலும், அரசு தனிநபர் விஸயங்களில் தேவையற்ற தலையீடு செய்யாதிருத்தல் தேவை என்னும் தாராளப்போக்கினை மில் ஆதரித்தார்.

ஜெ.எஸ். மில் அர்த்தமற்ற சுதந்திரம் தனிமனித உரிமை அகியவற்றிற்காக மட்டும் வாதாடிய ஒரு அறிஞர் அல்லர். அவருடைய கருத்துக்களின் ஆக்கப் பூர்வமான அம்சங்கள் உண்டு.

### 1.14 பிரதிநிதித்துவ அரசாங்கத்தைப் பற்றி J. S. மில்

நடைமுறை அரசியலில் மில் ஒரு தீவரவாதியாக விளங்கினார். 1886 முதல் 1888 ஆம் ஆண்டு வரை அவர் பாராளும்மனறத்தில் ஒரு தீவிர அங்கத்தினராகச் செயல்பட்டார். அக்காலத்தில் அவர் தொழிலாளர்களின் நலம் நிலச்சீர்திருத்தம், பெண்களின் வாக்குரிமை ஆகியவற்றிற்காக கடுமையாகப் பாடுபட்டார். சமுதாயத்திலுள்ள வகுப்பு பேதங்களைப் பலமாக எதிர்த்தார். பிரிட்டிஸ் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினருக்குப் போதிய பிரநிதித்துவம் இல்லை என்று அவர் நம்பினார். இக்குறையை அகற்ற விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையை அவர் ஆதரித்தார். வரிசெலுத்வோர் அனைவரும் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்பது அவரது கருத்தாகும். நல்லொழுக்கம், அறிவாற்றல் ஆகியவற்றையுடையவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகள் அளிக்கப்பட வேண்டுமென்று அவர் கூறினார். பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு ஊதியம் வழங்கும் முறையை அவர் வெறுத்தார். இம்முறை அரசாங்கத்தின் நேர்மையையும் திறமையையும் சீர்குலைத்துவிடுமென்பது அவரது நம்பிக்கையாகும். ரகசிய வாக்குமுறை மக்களிடையே பொறுப்பின்மையையம் சுயநலத்தையும் ஏற்படுத்துவதால் அம்முறையை மில் எதிர்த்தார். சட்டமியற்றுவதில் பாராளுமன்றத்தின் கீழவையான மக்கள் சபைக்கு அதிய அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்றார். ஆயினும், சட்ட நுணுக்க அறிவு படைத்த நபர்கள் பிரபுக்கள் சபையில் இருப்பதால், அச்சபையிடம் பாராளுமன்றத்திற்கு வரும் மசோதாக்களை வரைவதற்குள்ள அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டுமென அவர் விரும்பினார். கட்டாயக் கல்வி முறையைஅவர் ஆதரித்தார். ஆயினும் அக்கல்வி முறை முலம் ஒரே பாணி மக்கள் தோன்றுவதற்குள்ள ஆபத்து உண்டு என்று அவர் அஞ்சினார்.

### 1.14.தொகுப்புரை:

மில்லின் எழுத்திலும், பேச்சிலும் காணக்கூடிய அவருடைய முக்கிய குறிக்கோள் சமுதாய நலனை எவ்வாறு பேணுவது, தனிமனித உரிமையை எவ்வாறு காப்பது என்பதேயாகும். அறிவோடு மனிதர்கள் செயல்பட்டால் மனிதகுலத்தின் நிலையை உயர்த்த வாய்ப்புண்டு என அவர் நம்பினார். தனிமனிதர்கள் பெண்கள் ஆகியோரின் உரிமைக்காகத்தான் அவர் அயராது பாடுபட்டாரே ஒழிய சமுதாயத்திலுள்ள ஒரு சில பிரிவுகளின் உரிமைகளுக்காக

அல்ல. அவருடைய கோட்பாடுகளின் சிறப்பு எல்லா சமுகப் பிரச்சனைகளையும் மனித குலத்தின் நன்மை என்ற கோணத்திலிருந்துதான் ஆராய்ந்துள்ளார் என்பதாகும். இந்த தயக்கமுள்ள ஜனநாயகவாதியின் சமூக அரசியல் சிந்தனையில் சில குறைபாடுகள் இருந்தபோதிலும் அவற்றில் நிரந்தர முக்கியத்துவமுடைய பல அம்சங்கள் உண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

***1.15 முக்கிய வார்த்தைகள் :***

ஒழுக்க நெறி, பயன் கருது கோட்பாடு, பிரதிநித்தவ அரசு

***1.16 பரிந்துரை நூல்கள் :***


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.


***1.17 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவு சோதனை கேள்விக்களுக்கான பதில்கள் :***

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:4 - ல் அறிக.*

*கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:7 - ல் அறிக.*

*கேள்வி எண்.3. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:3 - ல் அறிக.*

## 1.18 மாதிரி வினாக்கள் :

1. மில்லின் சுதந்திரம்பற்றிய கோட்பாட்டை விளக்குக.
2. மில்லின் பயன்கருத்து கோட்பாட்டை விவரி.

## அலகு - 9
## மார்க்கசிய சிந்தனையாளர்கள்
## கார்ல் மார்க்ஸ் (1818 - 1883)

**அறிமுகம் :**

உலக சோசலிசச் சிந்தனையில் முதல் இடம் பிடித்தவர் கார்ல் மார்க்ஸ் என்றால் மிகையல்ல. இவர் ஜெர்மானியத் தத்துவ ஞானி ஆவார். இவர் 1818 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் பிரஷ்யாவில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் யுதர்கள். 1824 ஆம் ஆண்டு இவருடைய தந்தை கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். அவர் ஒரு சட்டவல்லுநர் இவருடைய குடும்பத்தினர் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். பான், பெர்லின் ஆகிய பல்கலைக் கழகங்களில் மார்க்ஸ் தனது படிப்பைத் தொடங்கினார். வரலாறு, தத்துவம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டிப் படித்து வந்தார். 17 ஆம் வயதில் ஒரு பணக்கார வீட்டுப்பெண் மீது அன்பு செலத்தினார். திருமணம் செய்வதற்கு இரு வீடடினர்களும் மறுப்புத் தெரிவித்ததால், 7 வருடங்களுக்குப் பின்னரே இவர்கள் திருமணம் நடைபெற்றது. கார்ல் மார்க்ஸின் சிந்தனைகளை பின்வரும் பகுதிகளில் காண்போம்.

**நோக்கங்கள் :**

1. மார்க்ஸின் இளமைக் காலம் விளக்கம்
2. மார்க்ஸின் தத்துவம் விளக்கம்

**வடிவமைப்பு:**

மார்க்ஸ் வாழ்கை வரலாறு
இயற்பொருள் வாதமுறை
மிகை மதிப்புக் கோட்பாடு
வர்க்கப் போராட்டம்
மதம் பற்றிய மார்க்ஸ்
வேறாதல்
அரசு பற்றிய கோட்பாடு
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்ததை அறிவதற்கான தன்னறிவுச் சோதனை
கேள்விக்களுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

### 1.1 மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு:

மார்க்ஸ் சிறுவயது முதலே கவிதைகள் எழுதும் பழக்கமுடையவராக இருந்தார். இவர் தனது 19 ம் வயதில் 3 தொகுப்பு கவிதைகள் எழுதிவைத்திருப்பதாக தன்னுடைய தகப்பனாரிடம் தெவிவித்துள்ளார். இவருக்கு பிடித்த படிப்பு இதழியல். கல்லூரிப் படிப்பு நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு முடிவு செய்ய உதவுவதாக் தெரியவில்லை என்கிறார். ஏனெனில் பொருளாதாரப் பிரச்சனைகள் எதுவும் பாடத்தில் இடம் பெறவில்லை என்று ஆதங்கப்பட்டா ர். பின்னர் பிரான்சு நாட்டிற்குச் சென்றார். அங்குதான் உலகமே பாராட்டும் பொதுவுடைமைக் கோட்பாட்டை உருவாக்கிய எங்கல்ஸை சந்தித்தார். இருவரது மனமும் எண்ணமும் ஒரே மாதிரியான அமைந்ததால், நட்பு ஏற்பட்டது. எங்கல்ஸ் பொதுவுடைமையில் தீவிரவாதியாக இருந்து வந்தார். எனவே மார்க்ஸ் சந்தித்த போது பொதுவுடைமயை இருவரும் விரிவாகப் பேசச் சந்தர்ப்பம் வாய்ந்ததது.

பாரிசிலிருந்து 1845 ஆம் ஆண்டு மார்க்ஸ் பிரஷ்ய அரசாங்கச் செல்வாக்கால் வெளியேற்றபட்டார். மார்க்ஸ் புருஸ்சல்ஸ் சென்றார். அங்கு பொதுவுடைமை மருத்துவமனையில் பணிபுரிந்தார். 1848 ஆம் ஆண்டு பொதுவுடைமை அறிக்கையை வெளியிட்டார். இதுதான் மார்க்ஸ்க்கு சோசலிச இயக்கத்தில் ஒரு உன்னதமான, உயர்வான இடத்தை அளித்தது உலகமெங்கும் இவர் புகழ் பரவ ஆரம்பித்தது.1848 ஆண்டு பாரிஸ் மற்றும் ஜெர்மனியில் புட்ரசி ஏற்பட்டது. மார்க்ஸ் ஜெர்மனியில் இருந்து புரட்சி செய்ய நினைத்தாரென்று அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். பாரிஸ் நகரத்திற்குச் சென்றார். அங்கும் அவரை அரசாங்கம் வெளியேறியது. பின்னர் இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்து, தனது எஞ்சிய நாளைக் கழித்து வந்தார். 1848 ஆம் ஆண்டு புரட்சி வெற்றி பெற்றிருந்தால் செல்ல வாழ்வில் திளைத்திருப்பார் மார்க்ஸ். ஆனால் புரட்சி தோல்வி பெற்றதால், இவரது வாழ்வும் வறுமைக்குள்ளாகியது. மார்க்ஸின் தனிப்பட்ட வாழ்க்கை துயரமிக்கதாக இருந்தது. நிதிப்பற்றாக்குறை அவரது வாழ்வை நிலைகுலையைச் செய்து விட்டது. தனது மகனின் ஈமச் சடங்குகூட செய்ய இயலதா அளவிற்கு வறுமையில் வாழ்க்கையை நடத்தியவர் மார்க்ஸ். எங்கல்ஸ் இவருக்கு அதிகமான உதவியைச் செய்தார். எங்கல்ஸ் மட்டும் உதவி செய்யவில்லையேல், மார்க்ஸ் என்பவர் வெளியில் தெரிந்திருக்கமாட்டார். ஆங்கிலேயே

அருங்காட்சியகத்தில் மார்க்ஸ் தனது வாழ்நாள் முழுவதும் பணிபுரிந்தார். இவரது பணியை வறுமை வதைக்கவில்லை. இவரது பணி சீராக நடைபெற்றது.

மார்க்ஸ் கருத்துப்படி ஜெர்மனி, பிரான்சு இங்கிலாந்து ஆகிய நாடுகள் அரசியல், பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளால் உருவாக்கபட்டன என்பர். ஜெர்மானியத் தத்துவ, இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரக் கோட்பாடு, பிரான்சின் புரட்சியின் புரட்சிப் பண்பாடு ஆகிய மூன்றின் பின்னணியில் உருவானதே மார்க்சியம். ஜெர்மானியத் தத்துவ அளவில் வரலாற்று இயற்பொருள் வாதக் கோட்பாட்டை உருவாக்கினார். இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் மிகை மதிப்புக் கோட்பாட்டை வெளியிட்டார். பிரான்சின் புரட்சிப் பின்னணி பாட்டாளி வர்க்கப்போர் மற்றும் பாட்டாளி எதேச்சதிகாரம் ஆகிய கோட்பாடுகள் பரிணமிக்க காரணமாயின.

### 1.2 இயற்பொருள் வாதமுறை:-

பொதுவுடைமை அறிக்கையில் இடம் பெற்றுள்ள மூலமே இயற்பொருள் வாதமுறை என லாஸ்கி இம்முறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். முதலாளித்துவ முறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எதுவான தத்துவத்துவத்தைத் தேடி அலைந்தார். மார்க்ஸ் ஹெகலின் இயற்பொருள் இலட்சியத்தை நன்றாகத் தெரிந்து கொண்டார். பின்னர் அம்முறையைக் கடைப்பிடித்து, அக்கோட்பாட்டையே இயற்பொருள் வாத முறையாக மாற்றியமைத்தார் மார்க்ஸ். உண்மையை அறியும் பொருட்டு ஒன்றுகொன்று முரண்பட்ட இருவாதங்களில் பங்குபெறும் முறைதான் இயற்பொருள் வாதமுறையாகும். எந்தவொரு வாதத்திலும் தொடக்கத்தில் முன்மொழியப்படுவது முற்கோள் எனப்படுகிறது. அதற்கு எதிரான கருத்துக்கள் முரண்கோள் ஆகும். இவ்விரு கோள்களிலும் உள்ள உண்மைகளை எடுத்துக் கொண்டு, அவற்றினின்று ஒரு புதிய முற்றுக்கோள் ஏற்படும். அதுதான் முற்றுக்கோள் உதாரணமாக, முதலாளித்துவ சமுதாயத்தை முற்கோள் ஆகவும், அதனை எதிர்க்கும் பாட்டாளி வர்க்கத்தின் எதேச்சதிகார முறையை முரண்கோள் ஆகவும், இவ்விவரு சாரார்களுக்கும் இடையே நிகழும் வர்க்கப் போராட்டத்தின் இறுதியில் உருவாகும் முற்றுக்கோள் இன வகுப்பற்ற சமுதாயம் தான் என விளக்குகிறார் மார்க்ஸ்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
1. மார்க்ஸின் இயற்பொருள் வாதமுறையை கூறுக.

### 1.3 மிகை மதிப்புக் கோட்பாடு:

ஒரு பொருளின் மதிப்பு அப்பொருளை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் உழைப்பை வைத்ததுதான் முடிவு செய்யப்படுகின்றதென மார்க்ஸ் கருத்துத் தெரிவிக்கின்றார். இதில் தொழிலாளர்கள் ஊதியமாகப் பெறுவது அவர்கள் வாழ்வதற்காக அளிக்கப்படும் ஒரு சிறு தொகைதான். முதலாளிகள் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியம் அவர்கள் உற்பத்தி செய்த பொருளின் மதிப்பில் ஒரு சிறு பகுதிதான். பெரும்பகுதியை முதலாளிகள் இலாபமாகப் பெறுகின்றனர். இது தான் கார்ல் மார்க்சின் மிகை மதிப்புக் கோட்பாடுஆகும். இக்கோட்பாடு ரிக்கார்டோ என்ற பொருளாதார நிபுணரின் வாடகைக் கோட்பாட்டின் விரிவாக்கம் என்று கூடக் கூறலாம்.

முதலாளிகள் தங்கள் இலாபத்தை அதிகரித்துக் கொள்ள ஒருவரரோடொருவர் அபாட்டு போட்டு கொண்டு உற்பத்தியில் இறங்குகின்றனர். அவர்கள் போடும் முதலீடு உற்பத்தியை உருவாக்காது. தொழிலாளியின் உழைப்பே உற்பத்தியை உருவாக்கும். உழைப்பு இருவித மதிப்பக்களை உருவாக்குகின்றது. ஒன்று தேவையானது. மற்றொன்று மிகையானது. ஒரு தொழிலாளிக்கு அளிக்கப்படும் ஊதியம் அல்லது கூலி தேவையான மதிப்பாகும். ஒரு பெருளின் மதிப்பு அதை உருவாக்கிய தொழிலாளியின் ஊதியம் தவிர்த்து உள்ள மதப்பு மிகை மதிப்பு ஆகும். மார்க்ஸ் மிகைமதிப்பை மறைக்கப்பட்ட உழைப்புத்திறன் என்கிறார். தொழிலாளி சரண்டப்படுவதன் அளவுகோலாக மிகை மிப்புள்ளது. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக தொழிலாளி சுரண்டப்படுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு மிகை மதிப்பு அதிகரிக்கும் என்று மார்க்ஸ் கூறுகின்றார்.

### 1.4 வர்க்கப்போராட்டம்:

மார்க்சின் பொருள் முதல்வாதக் கோட்பாட்டோடு மிகவும் தொடர்புடையது வர்க்கப் போராட்டம் ஆகும். பொருள் முதல் வாதம் சமூக மாற்றம் பற்றியது. அச்சமூக மாற்றத்தை அடைவதற்கான கருவியாக வர்க்கப் போராட்டம் அமைந்துள்ளது. ஒவ்வொரு சமுதாயமும் இரு மாறுபட்ட போராடும் வர்க்கங்களாகப் பிரிக்கப்படுகிறதென மார்க்ஸ் கூறுகிறார். அப்பிரிவினை பொருளாதார அடிப்படையில் அமைகின்றன. பொருட்களின் உற்பத்தி, பங்கீடு, பரிமாற்றம் ஆகியவற்றில் கொண்டுள்ள தொடர்புகளை வைத்தே அவ்வர்க்கங்கள் உருவாகின்றன. பொதுவுடைமை

அறிக்கையில் இது வரை இருந்துள்ள வரலாறு வர்க்கப் போராட்டத்தில் வரலாறேயாகும். நில உடமையாளர் நிலமற்றோரையும், தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர்களளைச் சுரண்டுகின்றனர். வர்ககங்களிடையே காழ்ப்புணர்ச்சியும், கசப்பும் உள்ளன. எனவே முதலாளித்துவச் சமுதாயம் ஒரு வர்க்கச் சமுதாயமாய் உள்ளது. எல்லாச் செயல்களும் வர்க்கச் செயல்களே, எனவே வர்க்கமே சமுதாய மாற்றத்தின் காரணியாக அமைந்து விடுகிறது. சுதந்திரமுள்ளவன், அடிமை, மேட்டுக்குடியைச் சார்ந்தவன், சாமானியன், பிரபு, குத்தகையாள் என சுரண்டுவோனும் சுரண்டப் படுவோனும் எப்போதும் ஒருவன் மற்றொருவனை எதிர்த்து வந்துள்ளனர். இந்தப் போராட்டம் எவ்விதத் தடையுமின்றி தொடர்ந்து நடைபெற்றுள்ளது. சில சமயம் வெளிப்படையாகவும், சில சமயம் மறைமுகமாகவும் நிகழ்ந்துள்ளது. ஒவ்வொரு முறையும் இப்போராட்டமானது புரட்சிகரமான மாற்றம் ஏற்படச் செய்துள்ளது என மார்க்ஸ் கூறியுள்ளார். தற்போதுள்ள பணக்கார (பூர்ஷ்வா) சமுதாயம் நிலமான்ய முறைச் சமுதாயத்தின் அழிவின்று தொன்றியதாகும் என்கிறார். ஆனால் வர்க்கப் போராட்டம் மறைந்து விடவில்லை. தற்போதுள்ள புதிய வர்க்கங்களும் புதுவிதமான சுரண்டல் சூழ்நிலைகளும் புதிய போராட்ட முறைகளாகத் தோன்றுகின்றன. இப்போராட்டம் பல்வேறு கட்டங்களைக் கடந்து இறுதியில் முதலாளி வர்க்கத்தினருக்கும் தொழிலாளி வர்க்கத்தினருக்குமிடையே நேரடி மோதல் ஏற்பட்டு, இறுதியாக வர்க்கபேதமற்ற சமுகம் உருவாகின்றது என்கிறார்.

மார்க்ஸ் இருவகை போராட்டங்களைப் பற்றி கூறுகின்றார். அவை, ஒன்று பொருளாதாரப் போராட்டம் மற்றொன்று அரசியல் போராட்டம். பொருளாதாரப் போராட்டத்தின் மூலம் கூலி உயர்வு, வேலை நேரக் குறைப்பு, வேலை சூழ்நிலை ஆகியன கோரப்படுகின்றன. தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தினர் அனைவரும் எதிராகவும் இவ்வர்க்கத்தை ஆதரிக்கும் அரசாங்கத்திற்கு எதிராகவும் அரசியல் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. தொழிலாளர்கள் தமக்கென ஒரு பாட்டாளி அரசியல் கட்சியைக் கொண்டிருக்க வேண்டும். அக்கட்சி அவர்களுக்கு சோசலிசம் பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறி, தொழிலாளர் இயக்கத்தை வழி நடத்திச் செல்லும். பொருளாதார, அரசியல் போராட்டங்கள் முடிவுகள் அல்ல. சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்கான கருவிகள் ஆகும். முதலாளித்துவ முறையின் பயனாக முதலாளிகள் பலன் அடைந்த போதிலும், காலப்போக்கில் அறிவியல் முன்னனேற்றத்தின் துணையுடன்

உலகமெங்கிலும் தொழிலாளர் யாவரும் ஒன்றிணைந்து முதலாளிகளுக்கு எதிராகப் போராடி வெற்றியடைவதுதான் வர்க்கப் போராட்டத்தின் இறுதிக்கட்டம் என மார்க்ஸ் கூறுகின்றார்.

### 1.5 மதம் பற்றி மார்க்ஸ்:

மதத்தைப் பற்றிய பகுப்புத் தான் எல்லாப் பகுப்பிற்கும் ஆரம்பமென மார்க்ஸ் கூறுகின்றார். மனிதன் தான் மதத்தை ஏற்படுத்துகிறானே தவிர மதம் மனிதனை உருவாக்குவதில்லை. அரசு சமுதாயம் என அனைத்தையும் உருவாக்குவது மதம். மதம் பணக்கார வர்க்கத்தின் படைப்பு, மதம் என்பது அடக்கப்படும் ஆட்களின் குறியாகும், இதயமற்ற உலகின் உணர்ச்சி ஆன்மாவற்ற நிலைகளில் ஆன்மாவாகும். அது மக்களின் போதைப் பொருள் என்கிறார். மதத்தை முதலாளித்துவச் சுரண்டலோடு தொடர்புபடுத்துகிறார். முதலாளிகள் தமது சுரண்டல் முறைகளை மறைப்பதற்காக மதத்தை ஒரு போர்வையாகப் பயன்படுத்துகின்றனர். எனவே மதம் என்பது கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். சமுக அநீதி, சமத்துவமின்மை ஆகியவற்றின் கருவி மதம். மனிதன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் முன்னேற வேண்டுமெனில், தான் அறியாத ஒன்றுக்கு அஞ்சுவதைத் தவிர்த்து, மதத்தின் கொடுமைகளிலிருந்து விடுபடவேண்டும் என்கிறார். இவர் நாத்திகத்தையோ, ஒழுக்கமின்மையையோ பிரச்சாரம் செய்யவில்லை. ஆனால் சமூகத்தில் மதத்தின் உண்மையான பங்கைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

| |
|---|
| **முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**<br>1. மதம் பற்றிய கார்ல்மார்க்ஸ் கருத்தை கூறுக. |

### 1.6 வேறாதல்:

மதம் பற்றிய கருத்துக்களோடு தொடர்பு உள்ள மற்றொரு கோட்பாடு வேறாதல் என்பதாகும். பொருட்கள் வாங்குவோர் அவற்றை உற்பத்தி செய்வோரைப் பற்றி நினைப்பதில்லை. மனிதனுடைய வேலை, அதைப்பற்றிய உணர்வு ஆகியவற்றறோடு இவ்வேறாதலைத் தொடர்புபடுத்துகிறார். மனிதர்கள் தமது உற்பத்திப் பொருளினின்று வேறுபட்டு இருக்கின்றனர். தம்முடைய உழைப்பே உற்பத்திப் பொருளெனினும் அதைச் சொந்தம் கொண்டாட முடியாத நிலையைத்தான் வேறாதல் என்கிறார். இவ்வேறாதலுக்குக் காரணம் வேலை பங்கீட்டு முறையினால் வேலைகள் பிரிக்கப்படுவதாகும். தற்கால உற்பத்தி முறை, இலாபம் திரட்டல் என்ற கொடுமைகளிலிருந்து

விடுபட்டால் மனிதன் சுதந்திரம் பெறுவான் என மார்க்ஸ் கூறுகின்றார்

## 1.7 அரசு பற்றிய கோட்பாடு:

மார்க்சியமானது பரிணாமக் கோட்பாடும் புரட்சிகரக் கோட்பாடும் நிறைந்தது. அரசின் தோற்றம் என்பது செயற்கையானதும் தற்செயலான நிகழ்வும் ஆகும். வர்க்கப் போராட்டத்தின் விளைவுதான் அரசு. ஆரம்ப காலச் சமூகங்களில் அரசு என்பது கிடையாது. பொதுவுடைமைச் சமுகத்திலும் அரசு இருக்க முடியாது. ஏனெனில் இவ்விரு சமுகஙகளிலும் வர்க்கப் போராட்டம் இருக்காது. ஒவ்வொரு மனிதனும் முழுமையடைய அரசு தேவையென்ற எண்ணத்தை மார்க்ஸ் மறுக்கிறார்.

அரசு என்பது ஒருசாரார் மற்றொரு சாராரை நசுக்கி ஆளும் ஒரு கருவிதான் ஆகும். பொருளாதார மிக்கவர்கள் கையில் உள்ள கருவிதான் அரசு. அரசாங்கத்ததை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பொருளாதாரமிக்கோர், பொருளாதாரமில்லாதோரை நசுக்கும் நடவடிக்கைத்தான் அரசின் நடவடிக்கைகளுக்கு. பெருளாதாரத்தைத் தவிர்த்து பிற நடவடி;கைகளுக்கு முக்கியத்தும் கிடையாது என்கிறார். அரசு என்பது முதலாளிகளுக்கும் பாட்டாளி மக்களுக்கும் பொதுவானது என்பதைப் பலகாலமாக வலியுறுத்தி வந்தாலும், அரசு பொருளுடையவர்களுக்குத் தான் என்பதை மார்க்ஸ் தெளிவாக விளக்கியுள்ளார். அரசு என்பது எல்லா செயல்களுக்கும் தீர்வு காணக்கூடிய நிறுவனமல்ல. அது அழிக்கப்படவேண்டிய ஒன்றாகும். பாட்டாளிகளின் எதேச்சதிகாரம் நிறுவப்பட்டவுடன்அரசு மறையத் தொடங்கி பின்னர் அழிந்து விடும் என்கிறார்.

## 1.8 தொகுப்புரை:

மார்க்சின் கருத்துக்கள் 20 ஆம் நூற்றாண்டின் சமுக, அரசியல் தத்துவத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றது. இதற்குக் காரணம் அவருடைய திறமையும் மதிநுட்பமும் ஆகும். இவர் ஹெகலுடைய தத்துவத்தை இங்கிலாந்து பொருளாதாரத்தோடும் பிரான்சு நாட்டின் சமுகவியலோடும் இணைத்ததால் தான் இவருடைய எழுத்துக்கள் கம்பீரமாக அமைந்துள்ளன. பேராசை கொண்ட முதலாளிகளை இவர் மிகவும் வெறுக்கினறார். முதலாளிகளால் இன்னலுக்குள்ளாகும் பாட்டாளி மக்கள் எங்ஙனம் அமைதியான சமூகத்தை உருவாக்க முடியும் எனக் கேள்வி

எழுப்புகிறார். எனவே தான் இவருடைய இயக்கம் தொழிலாளர் இயக்கமாக மாறும். இருப்பினும் இவர் முதலாளித்துவத்தை அதிகமாகச் சாடியுள்ளார் என்று சிலர் குறைபடுகின்றனர். லாஸ்கி என்பார் ஐரோப்பாவின் சிதைவு சக்தி கார்ல் மார்க்ஸ் என்கிறார்.

மார்க்ஸிற்கு கடவுள் நம்பிக்கை, மதம் என்பது கிடையாது. ஆனால் உலகமெங்கும் உயர்வான சக்தியாக மதிக்கப்படுகின்ற மதத்திற்கு ஏன் மரியாதை தரவில்லை என்றும் சிலர் ஆதங்கப்படுகின்றனர். மார்க்சைப் பொறுத்தவரை மதத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

இயற்பொருள் வரலாற்று அணுகுமுறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததாகச் சிலர் சாடுகின்றனர். உற்பத்தியும் பரிமாற்றமும் தான் மனிதனின் தேவைகளை முடிவும் செய்யும் என்பதை நம்ப இயலவில்லை. பிரச்சனைகளைச் சாதாரணமாகப் பார்ப்பதாகத் தெரிகிறது. நடைமுறையில் சாத்தியப் படக்கூடியதல்ல.

வர்க்கப்போராட்டம் என்பது சரியான அணுகுமுறையல்ல என்க குறைபடுகின்றார். இது புரட்சிகர மனப்பாங்கால் பெரிதாக்கப்படுள்ளதே தவிர, எந்த அரசாங்கமும் சுரண்டல் நடவடிக்கைகளையே செய்யும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

முதலாளித்ததுவம் பாட்டாளிகளின் பிரச்சனைகளை அதிகரிக்கும். அவர்களது வாழ்வைப் பாதிக்கும் என்று சொல்வது மார்க்சியத்தின் தவறான குற்றச்சாட்டாகும். வகுப்பு பேதமற்ற பொதுவுடைமைச் சமூகம் என்பது ஒரு பகல் கனவே தவிர, நடைமுறையில் சாத்தியமல்ல. இவரது புரட்சிக் கோட்பாட்டிற்கும் கட்சி வளர்ச்சிக்காகவும் பயனளிக்கும்; உண்மையில் பயனளிக்காது. மக்களின் வாழ்க்கைத் தரம் குறையும், வேலை வாய்ப்பு இருக்காது என்று முன்னுரைக்கும் இவர் கோட்பாடு நடைபெற்றிருந்தால், தற்போது ஒரு அரசாங்கம் கூட இருந்திருக்காது. எனினும் நல்ல சமுகத்ததை ஏற்படுத்த வேண்டுமென்ற இவரது எண்ணம் சரியானது தான் என மார்க்சிய கோட்பாடு வரவேற்பிற்குள்ளாகியுள்ளார்.

### *1.9 முக்கிய வார்த்தைகள்:*

பொதுவுடமை, இயற்பொருள், வார்க்கப்போரட்டம், மிகை மதிப்பு, வேறாதல்.

### *1.10 பரிந்துரைகள் நூல்கள் :*

1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.

### *1.11. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனை கேள்விகளுக்கான பதில்கள்:*

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:2 - ல் அறிக.*

*கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:5 - ல் அறிக.*

### *1.12. மாதிரி வினாக்கள்:*

*1.மார்க்சீயக் கோட்பாட்டின் அடிப்படைகளை விவரி.*

*2.மார்க்சீயக் பொதுவுடமை சிந்தனை நடைமுறைக்கு உகந்ததா என்பதை ஆராய்க.*

## லெனின் (1870 - 1924)

**அறிமுகம்:**

உலக வரலாற்றை மாற்றிய அரசியல் தலைவர்களின் நெப்போலியனுக்குப் பிறகு லெனின்தான் என சேம்பர்லின் (W.H.Chamberlin) கருத்துரைக்கிறார். மார்சின்ன பொருள் முதல்வாதக் கோட்பாட்டை முழுமையாகப் பின்பற்றிய தலைவர் லெனின் ஆவார். இவர் இரஷ்யப் பொதுவுடைமையின் முதல் தீவிரத் தலைவரும், மூன்றாவது பன்னாட்டு முறைமையை உருவாக்கியவரும் ஆவார். மார்க்சியத்தைப் பரப்புவதிலும் பின்பற்றுவதிலும் சளைக்காத நபர் இவர். இவரை அரசயில் சிந்தனையாளர் என்று கூறுவதைவிட செயல்வீரர் எனலாம். முதலாளித்தும், ஜார்வம்சம் ஆகியவற்றை எதிர்த்து, புரட்சி செய்து, அவற்றை நீக்கிய பெருமை லெனினைச் சாரும். எனவே லெனினுடைய அடிப்படைச் சிந்தனைகளை கீழ் வருமாறு விளக்கப்படுகிறது.

**நோக்கங்கள்:**

1. லெனின் பொருளாதார அடிப்படை வரலாற்று விளக்கம்
2. புரட்சி முறை பற்றி லெனின் கோட்பாடு விளக்கம்
3. பாட்டாளி மக்களின் எதேச்சதிகார கோட்பாடு விளக்கம்

**அலகின் வடிவமைப்பு**

இளமைக் காலம்
லெனின் பொருளதார அடிப்படை வரலாற்று ஆய்வு
அரசுக் கோட்பாடு
புரட்சி முறை பற்றிய லெனின் கோட்பாடு
பாட்டாளி மக்களின் ஏதேச்சதிகாரம்
பன்னாட்டு முறையும் உலகப் புரட்சியும்
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்ததை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனை
கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

### 1.1 இளமைக் காலம்:

லெனின் 1870 ஆம் ஆண்டு வோல்கா நதிக்கரையில் அமைந்துள்ள சிம்பார்சிக் என்ற இடத்தில் பிறந்தார். நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர். ஏழு குழந்தைகள் உள்ள குடும்பத்தில் மூன்றாவது குழந்தையாக லெனின் பிறந்தார். இவரும் இவருடைய அண்ணன் அலெக்ஸாண்டர் மிகவும் இணை பிரியாமல் இருந்தனர். சேர்ந்தே கல்வி கற்று வந்தனர். இருவரும்

படிப்பில் கெட்டிகாரர்கள். அதிக மதிப்பெண்கள் பெற்று அனைவரது பாராட்டையும் பெற்று வந்தனர். இவர்கள் வாழ்ந்த நேரம் இரஷ்யாவில் ஜார் மன்னர்கள் ஆட்சி செய்த காலம். 1881 ஆம் ஆண்டு ஜார் மன்னன் இரண்டாம் அலெக்ஸாண்டர் கொல்லபபட்டதால், மூன்றாம் அலெக்ஸாண்டர் ஜார் மன்னன் முன்றாம் அலெக்ஸாண்டர் ஆட்சியில் அமர்ந்தான். எனவே புரட்சி வன்முறை, கலகம் ஆகியவற்றில் ஈடுபட்டோர்மீது கடமையான நடவடிக்கைகளை மேற்கொண்டான். இக்கால கட்டத்தில் லெனின் சுயசிந்தனையோடு, ஊறுதியாகவும், தீர்மானமாகவும் இரஷ்யாவில் நல்லாட்சி கொண்டுவரத் தீர்மானித்தார். லெனின் படிப்பிற்கு முற்றறுப்புள்ளி வைத்தார். இரஷ்யாவில் பொதுவுடமைச் சமூகம் ஏற்பட ஜார் மன்னர்களின் ஆட்சி நீக்கப்பட்டால்தான் இயலும், இரஷ்யா முன்னேற முடியும், மக்கள் அமைதியாக இருக்க முடியும் என்பதை நன்கு உணர்ந்து தனது நடவடிக்கைகள் வகுத்தார்.

தமது மார்க்சியச் சிந்தனையின் இயல்பு யாதென்பதற்கு, லெனின் மூன்று விளக்கங்கள் தருகின்றார். அவை,

1. மார்க்சின் முந்தைய போராட்டத்திற்குப் பின் ஏற்பட்ட மாற்றம்
2. இரஷ்ய சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப்பட்ட மார்க்சியம்
3. ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதும், பாட்டாளி மக்களின் புரட்சியால் அமைந்தது எனவும் விளக்குகிறார்.

### 1.2 லெனின் பொருளாதார அடிப்படை வரலாற்றாய்வு:

லெனின் மார்க்சின் பொருள் முதல்வாதம், பொருளாதார அடிப்படை வரலாற்றாய்வு ஆகிய கருத்துக்களை எந்தவிதத் தயக்கமின்றி முழுமையாக ஏற்றுக் கொண்டார். மதங்கள் மக்களை மயக்கும் போதைப் பொருட்கள் என்று லெனினே கூறியுள்ளார். இருப்பினும் மார்க்கியக் கருத்துக்களில் லெனின் சிறிது மாற்றங்களைச் செய்தார். லெனின் 1961ஆம் ஆண்டு வரை, தொழிற்சாலை முதலாளித்துவமானது நேரடியாக சோசலிசத்திற்கு வழிவகுக்கும் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அதே ஆண்டு தனது கருத்துக்களை மாற்றயமைத்தார். ஏனெனில் இரஷ்யா நீண்டகாலப் போரில் இருந்தால், மக்கள் தாங்கொண்ணா துன்பத்திற்கு

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
1. லெனின் பொருளாதார அடிப்படை வரலாற்றை கூறுக.

ஆளாயினார். தவிர, தொழிற்சாலை முதலாளித்துவம் மூலம் உருவாகும் சோசலிசமானது முதலாளித்துவ ஏகாதிபத்தியம் மூலம்தான் ஏற்படுமே தவிர, பாட்டாளி மக்களில் அல்ல என்பதை உயர்ந்து, தனது கருத்தை மாற்றியமைத்தார். 1789 முதல் 1871ஆம் ஆண்டு வரை இருந்த தொழிற்சாலை முதலாளித்துவ வளர்ச்சியானது மாறுபட்ட விளைவுகளை 1871 முதல் 1913 வரை இரஷ்யாவில் உருவாக்கியது. ஏனெனில் பெரிய வங்கிகளும், நிதிநிறுவங்களும் வளராத நாடுகளைச் சுரண்ட ஆரம்பித்தன. வளராத நாடுகளில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆரம்பித்து விட்டனர். ஐரோப்பாவிலிருந்து வந்த இந்த வங்கிகள். நிதிநிறுவனங்கள் ஆகியன அவை சாரந்த நாடுகளுக்கு ஆதரவாக வளராத நாட்டு மக்களை சுரண்ட ஆரம்பித்தனர். இலாபம் ஈட்டுவதையே முக்கிய நோக்கமாக்கொண்டு அந் நிறுவனங்கள் இருந்ததால், சுரண்டலின் அளவு மிகுதியாயிற்று. எனவே முதலாளித்துவம் எந்தப் பெயரில் இருந்தாலும் அதை அழிப்பதற்கு போர் தேவை என்பதை உணர்ந்தார். முதல் உலகப்போர் (1914 -1918) வளராத நாடுகளின் பொருளாதாரத்தைக் கைப்பற்ற நடைபெற்ற ஆங்கிலேய, பிரான்சு மற்றும் ஜெர்மனின் ஆதிக்கப்போர் தானே தவிர, வேறு ஒன்றுமில்லை. இது முதலாளித்துவப் போர் என்று வர்ணிக்கின்றார். நாட்டின் பொருளாதார வளர்ச்சி மார்க்சியக் கோட்பாட்டின்படி வர்க்கப் போராட்டத்தால் தான் முடியும் என்பதை லெனின் உணர்ந்தார். 1789 முதல் 1871 வரை பாட்டாளி மக்கள் தங்கள் நிலையை அரசியலிலும் பொருளாதாரத்திலும் உயரத்தியுள்ளார் என சபைன் கூறுகின்றார். ஏனெனில் இந்தக் காலத்தில் படைமானிய பிரபுக்கள் பாட்டாளி மக்களின் ஆதரவைப் பெற்றனர். பாட்டாளி மக்கள் எப்போதுமே பிரபுக்களுக்கு எதிராவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வர்க்கப் போராட்டத்தின் பின்னடைவாக 1871 - 1913 காலத்ததை கூறுகின்றார் லெனின். இக்காலத்தில் பாட்டாளி மக்கள் ஒன்று சேர்வதற்கு வழிவகை காணப்பட்டது. பிரபுக்களிடம் இருக்க பாட்டாளி மக்கள் நகரங்களின்தான் இருந்தனர். அவர்கள் தங்களது சக பாட்டாளி மக்களுக்கு எதிராகப் போராட சம்மதிக்கவில்லை. எனவே பாட்டாளி மக்கள் அனைவரும் ஒன்று சேர வாய்ப்பு கிடைத்தது. 1914ஆம் ஆண்டு அடுத்த கட்ட வளர்ச்சியில் பாட்டாளி மக்கள் உற்பத்தியை காட்டிலும் உற்பத்தியைப் பயன்படுத்தக் கூடிய நுகர்வோர்களாகி விட்டனர். எனவே ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. புரட்சி, வன்முறை ஆகியன தேவையற்ற கருவிகளாயின. பாட்டாளி

மக்களின் திறமையை நன்கு உணர்ந்திருந்தார். அவர்களே போராட்டம் செய்வார்கள் என்று நினைத்தாலும், அவர்களை வழி நடத்த ஓர் அமைப்பு தேவை என்பதை உணர்ந்தார். தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தி வழிநடத்திச் செல்ல கட்சி தேவை. அக்கட்சி இருந்தால்தான் தொழிலாளர்களை புரட்சி மனம் படைத்தவர்களாக ஆக்க முடியும். இல்லையேல் அவர்கள் தொழிலாளர் சங்க உறுப்பினர்போல் இருப்பார்களே தவிர, சோசலிசம், புரட்சி ஆகியவற்றிற்குப் பொருத்தமாக இருக்கமாட்டார்கள் என்றார் லெனின். எனவே மையப்படுத்தப்பட்ட அதிகாரமிக்க பொதுவுடைமைக் கட்சியைத் தோற்றுவித்தார்.

### 1.3 அரசுக் கோட்பாடு:

இன்றைய அரசு முதலாளித்துவ முறையோடு பிணைக்கப்படுள்ளதென்றார். வரலாற்றில் அதன் பங்கு யாதெனில், சொத்துக்கள் உள்ளோரின் நலன்களைப் பேணுவதாகும். அது மட்டுமல்ல. சொத்தில்லாதோர்மீது ஆதிக்கம் செலுத்துவதை ஆதரித்து, அத்தகைய ஆதிக்கத்திற்கு எதிரான எல்லா முயற்சிகளையும் முறியடிப்பதே அரசின் பணியாகும். லெனின் வர்க்கப்போராட்டத்தின் விளைவுதான் அரசு என்பதை அறிந்தார். எனவே பாட்டாளிமக்கள் ஆதிக்கம் கொண்டுவரவும் புரட்சிகள் செய்யவும் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். லெனின் எப்போதும் பாட்டாளிகள் புரட்சியில் ஈடுபடுவார்கள் என்பதைக் கூறுகிறார்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
2. லெனின் அரசு கோட்பாட்டை விளக்குக.

இரஷ்யா இன்னும் ஏகாதிபத்திய படைமானிய முறையில்தான் உள்ளது என்று பாட்டாளி மக்கள் தாங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, நசுக்கப்பட்டாலும் முதலாளித்துவத்திற்கு தங்களது உழைப்பை நல்கிக் கொண்டுதான் உள்ளனர் என்கிறார். எனவே இவர் இரஷ்யா திரும்பிய பின்னர் ஏப்ரல் 1917 ஆம் ஆண்டு, புரட்சியின் மூலம்தான் மக்களைக் காக்க முடியுமென்று எண்ணி புரட்சிக்கு வித்திட்டார். இதன் விளைவு ஜார் ஆட்சி மறைந்து, பொதுவுடைமை அரசாங்கத்ததை ஏற்படுத்தினார். இதுவரையிலும் மார்க்ஸின் கருத்தை முழுவதுவாக ஆதரித்து வந்த லெனின், அரசாங்கம் அமைத்தவுடன் சிறிது விலகினார். ஏனெனில் இது இரஷ்யாவிற்குப் பொருத்தமான முறை என வாதிட்டார். அரசாங்கத்தில் அதிகாரம் இருக்காது எனினும் சோவியத் அமைப்பில்தான் இருக்கும் என்று கூறினார். எனவே அனைத்து பாட்டாளி மக்களும் ஒன்று திரண்டு ஓரணியாக

மாறி உண்மையான பாட்டாளி வர்க்க ஆட்சியை, சோசலிச ஆட்சியை இரத்தம் சிந்தாமல் புரட்சி மூலம் 1971 நவம்பர் மாதம் 7 ஆம் நாள் இரஷ்யாவில் ஆட்சியைப் பிடித்தார்.

லெனின் கருத்து மார்க்சியக் கருத்திலிருந்து விலகினாலும், அதை லெனின் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் மார்க்சியக் கருத்தும் தனது கருத்தும் இணைந்த கோட்பாடுதான் இது என்றும், வெறுமனே தனது கருத்தல்ல என்றார். முதலாளித்துவ ஏகாதிபத்தியம் என்பதை லெனின் மார்க்சியம் வாழ்தல் எனப் பெயரிட்டார். ஏனெனில் நாட்டின் உண்மை நிலையை அறிந்து, அதற்கேற்ப கோட்பாடுகள் உருவாக்கப்படவேண்டும் என்றார். பழைய கோட்பாடுகள் மற்ற கோட்பாடுகள்போல் பொதுவான தன்மை படைத்தனவாகவே இருக்குமே தவிர, குறிப்பிட்ட செயல் படைத்தாக இருக்காது. முற்றுரிமைப் பொருளதார முதலாளித்துவமே முதலாளித்துவம் ஒழியவும், புதிய பொருளாதாரச் சமுதாயம் தோன்றவும் காரணமாகிறது என்கிறார். எனவே இரஷ்யாவின் நிலைக்கேற்ப தனது கருத்தை மாற்றியமைத்துக் கொண்டார் லெனின்.

மார்க்சின் கருத்துப்படி பாட்டாளி மக்களின் புரட்சி மேலை நாடுகளில் ஏற்படுகின்ற நேரத்தில் இரஷ்யாவிலும் ஏற்படவேண்டுமென்பதை லெனின் ஏற்றுக் கொண்டார். ஆனால் புரட்சி மேலைநாடுகளில் வெடித்து அந்நாடுகள் பலமிழந்த நாடுகளாகிவிடும் என்றுக் கூறுகின்றார். ஏனெனில் சோசலிச புரட்சிக்கு மேலை நாடுகள் முழு பக்குவம் பெற்ற நாடுகளாகிவிட்டன என்றும் கூறுகிறார்.

### 1.4 புரட்சிமுறை பற்றிய லெனினியக் கோட்பாடு:

மார்க்ஸ் புரட்சிமுறை வளர்ந்த நாடுகளுக்கு ஒரு மாதிரியாகவும் பின்தங்கிய நாடுகளுக்கு மற்றொரு மாதிரியாக இருக்க வேண்டும் என்று உணர்த்தினார். ஆனால் லெனின் புரட்சி முறை என்பது ஒன்றுதான். அது எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமானது என்று கூறினார். வன்முறையுடன் கூடிய புரட்சியில்லாமல் ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளி மக்களின் ஆட்சி அமையாது என்பதை ஆணித்தரமாகக் கூறினார். சமாதான முறையில் மக்களாட்சி நடவடிக்கைகள் மூலம் மாற்றம் கொண்டுவருவதென்பது நடைமுறையில் இயலாத செயல். அது ஒரு கனவாகத்தான் இருக்குமே தவிர, நடைமுறையில் சாத்தியமில்லை.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**

1. லெனின் புரட்சி முறையை விளக்குக.

ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டில் எல்லா செய்திகளையும் அரசாங்கம் கட்டுப்படுத்துவதால், பாட்டாளி மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்திற்கு அனுப்புவதென்பது இயலாத காரியம். எனவேதான் சாத்வீக முறையில் பாட்டாளிமக்கள் ஆட்சியைக் கொணடு வர முடியாது என்கிறார். எனவே பாட்டாளி மக்கள் ஆட்சியை அரசுக்கெதிராக சதி, தந்திரம் மற்றும் அமைதியின்மை ஆகியவற்றின் மூலம் தான் மக்கள் ஆதிக்கத்தைக் கொண்டுவர முடியும் என்கிறார்.

## 1.5 பாட்டாளி மக்களின் எதேச்சதிகாரம்:

பாட்டாளிமக்கள் பெறும் அதிகாரம் நிர்வாகப் பராமரிப்பு போன்றவை பணக்காரர்களுக்கு எதிராக இருக்கும். அந்த ஆட்சி சட்டங்களால் கட்டுப்பாடு இல்லாத நிலையில் செயல்படும். மார்க்சியவாதி மார்க்சின் பாட்டாளிமக்கள் எதேச்சதிகாரத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவன். பாட்டாளிமக்கள் ஆதிக்கம் கொண்டுவர கட்சி தேவை அதன் அமைப்புப் பணிகள் ஆகியவற்றை லெனின் விளக்குகிறார்.

## 1.6 அமைப்பு:

நாடு முழுவதும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சோவியத் பிரதிநிதிகள் தேர்நதெடுக்கப்பட்டு, செயல்பட வேண்டும். பிரதிநிதிகள் படிநிலையாக மேலிருந்து கீழாக அடுக்கடுக்காக அமைக்கப்பட வேண்டும். அகில இரஷ்யச் சோவியத்தின் குடியரசு அமைக்கப்படவேண்டும். இந்த சோவியத்அரசாங்கத்தின் உயர்மட்ட அமைப்பு ஆட்சித்துறை, சட்டமன்றம், நீதித்துறை ஆகியவற்றின் பணிகள் இந்த அமைப்பிற்கு கொடுக்க வேண்டும். பூர்ஷ்வா பாராளுமன்றம் மாதிரியான அமைப்பு இதுவல்ல. பேசிக்கொண்டே காலத்தைக் கழிப்பது இவர்கள் வேலை அல்ல. நடவடிக்கையில் செயலில் இறங்க வேண்டும். மேலும் பாட்டாளிமக்கள் இறைமை கொண்டவர்கள். தங்கள் பிரதிநிதிகள் சரியாகப் பணியாற்றவில்லையெனில் அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளலாம் என்ற மார்க்சியக் கருத்தை இவர் தனது ஆட்சிக் காலம் முழுவதும் ஏற்றுக் கொண்டவர் லெனின்.

பாட்டாளி மக்கள் இறைமை கொண்டவர்கள் என்பது இவர் வகுத்த சோவியத்தில் பின்பற்றினாரா என்ற ஒரு கேள்வி. மார்க்சியக் கருத்தின்

பாட்டாளிகள் இறைமை கொண்டவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டாலும், தனிப்பட்டமுறையில் நிர்வாகத்திற்குத் தேவை வல்லுநர்கள் அல்லவென்றும், கட்டுப்பாடு செய்வதும் கணக்கில் உள்ளனரா என்று பார்ப்பதும் தான் நிர்வாகத்திற்கு முக்கியம் என்று உணர்ந்து கொண்டார். எனவே முதல் முன்று ஆண்டுகள் (1917 - 1920) பொதுவுடைமைப் போர் என்றழைக்கும் இந்த நிலையில் நிர்வாகத்தில் பல குறைக்ள, திறமைக்குறைவுகள் இருந்ததை உணர்ந்தார். எனவே அவற்றைச் சரிக்கட்டும் விதத்தில் பொதுவுடைமைக் கட்சியை பலப்படுத்தினர். ஒரு கட்டுக்கோப்பான, முறையான அதிகாரம் வாய்ந்த கட்சியினால் தான் அரசாங்கத்தை அமைத்து நடத்த முடியுமென்றும் அக்கட்சிதான் சோசலிச உணர்வை மக்களுக்கு ஊட்டும் என்பதை உணர்ந்தனர். எனவே பாட்டாளிகளின் சர்வாதிகாரத்திற்குப் பதிலாக பாட்டாளிகளின் மேல் சர்வாதிகாரம், வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்திற்குப் பதிலாக வர்க்கத்தின் மீது அமைப்புக்களின் ஆதிக்கம் என்பதே லெனின் கட்சி பற்றிக் கூறிய கருத்தாகும். என்பதையும் விளக்கினார். அரசில் பாட்டாளி மக்கள் மட்டும் தான் உள்ளனர் என்பதால், அவர்களை நிர்வகிக்க இரண்டு தலைமைகள் இருப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டுதலைகள் இருப்பதற்கு ஒப்பாக அமையும். பொதுவுடைமைக்கட்சி பாட்டாளி வர்க்கத்தின் உயர்ந்த அமைப்பு; பாட்டாளி வர்க்க மக்களாட்சி கட்சியின் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும் என்று கட்சியின் உன்னத நிலையைத் தெரிவிக்கின்றார் லெனின். பாட்டாளிவர்க்கத்தின் ஆதிக்கமே மக்களாட்சி. இது எளிமையானது, நியாயமானது, முழுமையானது பூர்ஷ்வா மக்களாட்சி என்பது பொய்யானது. பணக்காரருக்குச் சொர்க்கமாகவும், ஏழை எளியவர்களை ஏமாற்றமாக இருக்கும் என்கிறார். பட்டாளி மக்களாட்சி பிற பூர்ஷ்வா மக்களாட்சியைக் காட்டிலும் மில்லியன் தடவை உயர்வானது. சோவியத் அரசாங்கம் எல்லா மக்களாட்சிகளைக் காட்டிலும் மில்லியன் தடவை சிறந்த முறை என்று சோவியத் அரசாங்க மக்களாட்சி முறையைப் புகழ்ந்து பெருமிதமாகக் கூறுகிறார்.

### 1.7 பணிகள்:

பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டும் ஒரு கருவியாகத்தான் கருதினார் லெனின். பணக்காரர் இல்லாத அரசு தங்களுடைய அரசு என பெருமையாக கருதினார் லெனின். விவசாயக் கொள்கைகைத் தவிர்த்து, பிற பொருளாதாரக் கொள்கைகள் அனைத்து

மார்க்சின் கொள்கைகளை லெனின் கடைப்பிடித்தார். தொழிற்சாலைகள், வங்கிகள் ஆகிய பெரிய தொழில்களை தேசிய உடைமை ஆக்கினார். ஆனால் அவற்றை நடத்துவதற்குத் திறமையான பணியாளர்கள் இல்லாமலிருந்தனர். எனவே இவருடைய புதிய பொருளாதாரக் கொள்கை கலப்புப் பொருளாதாரக் கொள்கையாகும். இதனால் சிறிய அளவிலான தொழில்கள் அல்லது சிறு முதலாளிகள் என் போர் மீண்டும் நாடு முழுவதும் உதயமாயினர். இது தற்காலிகமாக செய்யப்பட்டதாயினும், மார்க்ஸ்க்கு எதிராக அமைந்தது. ஆயினும் கூட்டுப் பொருளாதாரச் செயல்கள் செய்யத் திட்டமிட்டு இருந்தார். ஆன்ால் அதனை நிறைவேற்றமுடியாமலேயே காலமாகி விட்டார் லெனின்.

அரசு என்பது பாட்டாளிவர்க்க எதேச்சதிகாரம் ஏற்பட்டவுடனேயே கலைந்துவிடும் என்கிறார். லெனின், பாட்டாளி வர்க்கம் அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி வர்க்கபேதத்தை அழித்தவுடன், அரசும் தானாகவே கலைந்து விடும் என்கிறார். வகுப்பு பேதமற்ற பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்க நினைத்தார் வெனின். திறமைக்கேற்ற வேலை, வேலைக்கேற்ற தேவை என்ற கருத்து ஏற்கப்பட்டாலும், நடைமுறைப் படக் கூடியதாக இல்லை.

## 1.8 பன்னாட்டு முறையும் உலகப் புரட்சியும்:

லெனின் முழுக்க முழுக்க ஒரு பன்னாட்டுவாதி. இவர் எழுத்துக்களில், தேசியம் என்பதைப் பார்ப்பது சிறிது கடினமான ஒன்றாகும். எல்லைகளைப் பிடிக்க வேண்டுமென்ற பேராசை பிடித்த சிந்தனையாளர் அல்ல. இரஷ்யா தன்னுடைய எல்லையைப் பராமரிப்பதே அதிசயம் என்கிறார். முதலாளித்துவமும் சோசலிசமும் ஒன்றையொன்று சார்ந்து செல்லக்கூடிய அல்ல என்று தெளிவாகக் கூறியுள்ளார் லெனின். இரஷ்யப் புரட்சி வெற்றியடைய வேண்டுமாயின் ஐரோப்பா மற்றும் பிற பகுதிகளில் புரட்சி வெற்றியடைய வேண்டும் என்றார்.

## 1.9 தொகுப்புரை:

லெனின் சோசலிச சமுதாய ஏற்பட செய்யக் கூடிய நடவடிக்கைகள் சிலவற்றைக் கூறுகின்றார். அவை,

1. பொதுவுடைமைக் கட்சி பல நாடுகளில் அரசாங்கத்தைக் கைப்பற்ற

வேண்டும் என்கிறார். அவ்வாறு முடியாத நாடுகளில், அரசாங்கத்தின் துறைகளுக்குள் ஊடுருவ வேண்டும். சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் தங்களுடைய வேட்பாளர்களை நியமிக்கவேண்டும். பிற கட்சிகளோடு கூ ட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிடலாம். அக்கட்சிகளின் கூட்டை தே வைப்படும் சமங்களின் உடைத்துக் கொள்ளவேண்டும். பொதுவுடைமை க் கொள்கைகளை நிறைவேற்றவே கட்சிகள் கூட்டணி சேர்கின்றன என்கிறார்.

2. ஐரோப்பிய காலனி நாடுகளின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதை ஆதரித்து, அரசியல் அதிகாரம் அந்நாடுகளுக்கு வந்த பின்னர், அந்த நாடுகளின் அரசாங்கத்தைக் கைப்பற்றவேண்டும்.

3.தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். தொழிலாளர் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று, எல்லா அமைப்புக்களையும் அல்லது எல்லாத் தொழிற்சாலைகளையும் வழிநடத்த வேண்டும்.

4.இராணுவம், துப்பாக்கிப் பயிற்சிக்கழகம் ஆகியவற்றின் மூலம் தொழிலா ளர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்க வேண்டும். இது எதிர்காலத்தில் எழக்கூடிய புரட்சிகளைத் தடுக்க உதவும்.

5.பொதுவுடைமையல்லாத பெயர்களில் அமைப்புக்களை ஏற்படுத்தி, பொ துவுடைமைக் கொள்கையை மேம்படுத்தும் வகையில் செயலாக்க வேண்டும். பொதுவுடைமை வாதிகளின் ஆயுதங்களாக போராட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லாப் பொதுவுடைமை நாடுகளிலும் பொதுவுடைமைக் கட்சியின் ஆதவோடுதான் ஆட்சி நடைபெற்று வருகின்றது. பொதுவுடைமைக் கட்சிகள் அனைத்தும் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைக்கிணங்கவே ஆட்சி செய்கின்றன. இக்கொள்கைகளை வகுக்கக் கூடியவர்கள் எண்ணிக்கை அளவில் சிறிய அளவில் உள்ளனர். எனவே கொள்கை சிதறாது. எண்ணிய நோக்கை எய்யக் கூடியவர்களாக மக்கள் இருந்தால் தான் நல்லாட்சி மலரும் என்கிறார் லெனின்.

### 1.10 முக்கிய வார்த்தைகள்:-

ஏகாதிபத்தியம், வர்க்கப்பேராட்டம், புரட்சி பனை மானியமுறை, பாட்டாளி

***1.11 பரிந்துரை நூல்கள் :***


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Gemino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.


***1.12. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனை கேள்விகளுக்கான பதில்கள்:***

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:2 - ல் அறிக.*

*கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:3 - ல் அறிக.*

*கேள்வி எண்.3. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:4 - ல் அறிக.*

***1.13 மாதிரி வினாக்கள்:***

*1.லெனின் அரசியல் சிந்தனையை மதிப்பிடுக.*
*2.லெனின் அரசியல் சிந்தனையை நடைமுறை அரசியலோடு ஒப்பீடுக.*

# அலகு - 10

## மாவோ

### அறிமுகம் :

மாவோ 1893ஆம் ஆண்டு சௌஷன் என்ற கிராமத்தில், குரான் மாநிலத்தில் பிறந்தார். அவர் இளமையிலேயே மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற வேட்கை கொண்டவராக இருந்தார். அவருடைய கிராமத்தில் எப்போதும் ஏதாவது ஒரு பிரச்சனை மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டு இருந்து வந்ததை இளமையிலிருந்தே அறிந்து, மனம் துடித்தார். ஊழல் அரசியல், திறமையற்ற நிர்வாகம், வெள்ளம், வறட்சி, பஞ்சம் என பல பிரச்சனைகள் எப்போதுமே சீனாவை வாட்டியுள்ளதென்பதை சிறுவயது முதலே புரிந்து அவற்றில் கவனம் செலுத்த வந்துள்ளார். அவரது தந்தை அரசாங்கத்திற்கு ஆதரவாக செயல்பட்டதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதவும் நடைபெறும். இதனால் அவர் 1911 ஆம் ஆண்டு வீட்டைவிட்டு வெளியேறினார். ஐங்ஷா என்ற இடத்தில் உயர்கல்வி பெற்றார். அங்கேயே இராணுவத்திலும் சேர்ந்தார். அப்போது ஏற்பட்ட புரட்சியிலும் தன்னை ஈடுபடுத்தினார். இதனால் அங்கு மஞ்சூரியர்கள் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, புது ஆட்சி அமைக்கப்பட்டது. ஆட்சி மாறினாலும், புரட்சியில் ஈடுபட்டாலும் வயிற்றுப் பிழைப்பிற்கு ஒரு வேலை தேவையென்பதை உணர்ந்தார். இராணுவத்திலிருந்தும் வெளியேறிவிட்டார். வேலையைத் தேடினார். ஒரு வருட காலமாக அவருக்கு வேலை கிடைக்கவில்லை. இந்தக் காலம் அவருக்கு ஒரு வரப்பிரசாத காலமாக மாறியது. ஏனெனில் அரசியல், பொருளாதாரச் சிந்தனைகள் பற்றிய மேலைநாட்டு அறிஞர்கள் நூல்களைப் படித்தார். அப்போது அங்கு நடைபெற்ற ஆட்சி கொடூர ஆட்சியாக இருந்தது. அந்த ஆட்சியை எதிர்த்தார். அந்த ஆட்சியை எப்படியும் அகற்ற வேண்டுமென்றே கங்கணம் கட்டினார். தன்னுடைய நண்பர்கள் அனைவரையும் திரட்டி புரட்சிச் சங்கம் ஏற்படுத்தினார். பின்னர் புதிய குடிமக்கள் சங்கம் என்பதையும் தோற்றுவித்தார்.

### நோக்கங்கள் :

1. மாவோவின் மார்க்சிய சிந்தனை விளக்கம்
2. மாவோவின் உள்நாட்டுச் செயல் திட்டங்கள் பற்றி விளக்கம்

**வடிவ அமைப்பு:**

வாழ்க்கை வரலாறு
மாவோ ஒரு தத்துவஞானி
ஸ்டாலின் பற்றி மாவோ
மாவோவின் உள்நாட்டுச் செயல் திட்டங்கள்
மாவோயிசம்
பிரதிநித்தவ அரசாங்கம் பற்றி ஜெ.எஸ்.மில்
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
பரிந்துரை நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவுச்
சோதனை கேள்விகளுக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

### 1.1. வாழ்க்கை வரலாறு:

மாவோ தன்னுடைய கல்லூரிப் படிப்பிற்குப் பின்னர் பீகிங் பல்கலைக் கழக நூலத்தில் உதவியாளராகச் சேர்ந்தார். இப்பல்கலைக்கழகம் இவரது கருத்திற்கு பக்குவமும் தெளிவும் கொடுத்தது எனலாம். அவர் மார்க்ஸ் எழுதிய வர்க்கப் போராட்டம் அவரை மிகவும் கவர்ந்தது. இவ்வர்க்கப் போராட்டத்தால் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர்களுக்கு சுதந்திரம் கிடைக்கும் என்று எண்ணினார். ஏனெனில் அவர்கள் முதலாளிகளின் அடக்குமுறையினால் தாங்கொண்ணாத் துயர்களை அனுபவித்த வந்தனர். பின்னர் ஜாங்ஷாவிற்கு திரும்பி வந்து, ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவர் அப்போது நடந்த மே 4 போராட்டத்தில் கலந்து கொண்டார். இந்தப் போராட்டம் ஜப்பானியர்களின் சீனாவின் ஜாங்காய் நகரைப் பிடித்ததால் ஏற்பட்டது. தவிர இராணுவத் தளபதிகள் சீனாவை சின்னபின்னமாக ஆட்சி புரிந்தனர். அவர்களின் அத்துமீறல்கள் கணக்கில் அடங்காமல் இருந்தன. இவற்றையெல்லாம் எப்படித் தீர்தது வைக்கலாமென இரவு பகலாச் சிந்தித்தார். வெறுமனே ஆர்ப்பாட்டங்கள், எழுச்சிகள், இயக்கங்கள் ஆகியன எந்த மாற்றத்தையும் கொண்டு வர வாய்ப்பில்லை என்பதை உணர்ந்தார்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
1. மாவோனின் வாழ்க்கை வரலாற்றை விளக்குக.

எனவே சமுதாயத்தில் ஏதாவது ஒரு மாற்றம் செய்ய வேண்டுமாயின் நிச்சயமாக வன்முறைப் போராட்டம் தான் பயனளிக்குமென்று 1920ல் அறிந்து கொண்டார். முதன் முதல் 1921 ஆம் ஆண்டு முதல் பொதுவுடைமைக் கட்சி மாநாட்டில் கலந்து கொண்டார். பின்னர் 1922 ஆம் ஆண்டு சன்யாட் சன் கட்சி பொதுவுடைமைக் கட்சியோடு

கட்சி மாநாட்டில் கலந்து கொண்டார். பின்னர் 1922 ஆம் ஆண்டு சன்யாட் சன் கட்சி பொதுவுடைமைக் கட்சியோடு இணைந்ததால், பொதுவுடைமைக் கட்சி பலம் வாய்ந்த கட்சியாக மாறியது. 1925ஆம் ஆண்டு சன் யாட் சன் இறந்தார். மாவோ பொதுவுடைமைக் கட்சியின் பிரச்சார பிரிவில் சேர்ந்து பணியாற்றினார். மாவோ சூ என்லாயுடன் சேர்ந்து நில உடைமையாளர்களை கொடுமைகளை அடக்க பொது மக்கள் அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென எண்ணினார் இதற்கு மாறாக, பொதுவுடைமைவாதிகளை தேசிய புரட்சிக்கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டுமென அப்போதைய சியாங் அரசு அறிவித்ததுடன் நடவடிக்கையிலும் இறங்கியது. பொதுவுடைமைக் கட்சி அலுவலகம் தீக்கிடையாயிற்று. ஏராளமான பொதுவுடைமைவாதிகள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு, சித்திரவதைக்கு ஆளாயினர். சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கட்சியின் மேலிட நிர்வாகிகள் அச்சுறுத்தப்பட்டு ஆட்சிக்கு விசுவாசமாகச் செயல்பட கட்டாய உறுதிமொழி வாங்கிக் கொண்டனர். மாவோ இதிலிருந்து தப்பித்துக் கொண்டார். இல்லையேல் மாவோ அப்போதே கொல்லப்பட்டு இருப்பார். மாவோ சீனாவில் அரசியல் மாற்றம் கொண்டு வர வேண்டுமெனில் அது குடியானவர்கள் மூலம் தான் ஏற்பட முடியுமென்பதை உணர்ந்தார். ஏனெனில் 99 சதவிகித மக்கள் குடியானவர்கள். எனவே குடியானவர்கள் போராட்டத்தால் மட்டுமே அரசியல் மாற்றம் கொண்டுவர முடியுமென்பதில் முழு அக்கறை எடுத்துக் கொண்டார். மார்க்ஸ், லெனின் ஆகியோர் நகரத்தில் உள்ள தொழிலாளர்கள் தான் போராட்டத்தை நடத்த முடியுமென்று கூறியுள்ளனர். எனவே மாவோ, மார்க்ஸ், லெனின் ஆகியோர்களது கருத்திலிருந்து சிறிது வேறுபடுகின்றார். மாவோ முதல் முதலில் 10,000 பேர்களைத் திரட்டி முதல் சோவியத் என்பதை உருவாக்கினார். இவர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களின் வேலை பொதுவுடைமை சித்தாந்தத்தை பொது மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்பது. இவர்கள் அனைவரும் முழுவீச்சாக பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். சியாங், இராணுவத்தை 1931, 1934 ஆகிய ஆண்டுகளில் அனுப்பி வைத்து, பொதுவுடைமைவாதிகளைப் பிடித்து சிறையிலடைக்க ஆணையிட்டார். ஆனாலும் அவரது முயற்சி வெற்றியடையவில்லை. இக்கட்டத்தில் 1934ஆம் ஆண்டு பொதுவுடைமைவாதிகள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள பல முயற்சிகளை மேற்கொண்டனர். மாவோ கிராமப்புறம் தான் புரட்சிக்கு சரியான இடம் என முடிவு செய்து, மறைந்து தாக்கும் கொரில்லா போர்

முறை நம்முடைய நோக்கத்தை அடைய முடியும் என்பது மாவோவின் உறுதியான எண்ணம். இந்தக் கோட்பாட்டை 1930ல் மாவோ நடைமுறையில் கடைப்பிடித்தார். பின்னர் 1931ஆம் ஆண்டு வெளிப்படையாகவே சிவப்பு இராணுவம் என்பது அமைக்கப்பட்டது. மாவோ தொடர்ந்து சண்டையிடுவரை வெறுத்தார். அதே நேரத்தில் தற்கால மேலை நாட்டு மற்றும் சோவியத் இராணுவ முறை மற்றும் போரிடல் முறை ஆகியவற்றிலும் நம்பிக்கை வைக்கவில்லை. ஏனெனில் போராட்டத்தை மக்கள் தொடங்க வேண்டும். போராட்டத்தை உருவாக்கவும் கட்டுப்பாடாக நடந்து கொள்ளவும் மக்களுக்கு பயிற்சி தர வேண்டும். போராட்டத்தை மூலம் அந்தந்தப் பகுதிகளை மக்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் அந்த இடங்களை வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இராணுவமென்பது பொதுவாக அரசியல் எதிரிகளை அழிக்கப் பயன்படுத்தும் முதலாளித்துவ பங்கு; இதனை அடியோடு மாவோ வெறுக்கிறார். எனவே ஒவ்வொரு பகுதியினரும் தங்கள் பகுதி, தங்களுடைய ஆட்சியில் உள்ளது; அந்நியர்கள் எவருக்கும் கிடையாது என்ற பற்றை, நாட்டுப் பற்றை உருவாக்கியது. மாவோவின் போராட்டமுறை. இந்த போராட்ட முறை நடைமுறையில் வெற்றியைத் தேடித் தந்தது. ஜப்பானியர் சீனாவை ஆக்கிரமிப்பு செய்த போது மக்கள் ஜப்பானியப் படையை மாவோ முறைப்படி விரட்டியடித்தனர். எனவே நாட்டுப் பற்றை வளர்கக்கும் வண்ணம் மாவோவின் போராட்டமுறை அமைந்தது. இதனைப் பலரும் விரும்பி ஏற்றுக் கொண்டனர். இது மாதிரியான இராணுவ முறை சோவியத் இரஷ்யாவில் கிடையாது. சீனாவில் மட்டும் இந்தப் படை இருந்தது. இப்படை நாடு முழுவதும் பரவி இருந்தது. இராணுவம், கட்சி, பல்கலைக் கழகம் ஆகிய அனைத்துப் பகுதியிலும் இந்த இராணுவப் படை இருந்தது. மாவோவின் மக்கள் இராணுவப் படை நான்கு ஆண்டுகளாகப் போரிடாமல் அமைதியாகவே இருந்தது. எந்தப் போராட்டத்தையும் நடத்தவில்லை. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மாவோவும் சிவப்பு இராணுவப் படையான மக்கள் இராணுவமும் சென்சியை அடைந்து, அந்நகரைக் கைப்பற்றி, அங்கு புதிய அரசை நிறுவினர் மாவோ. 1948-49ம் ஆண்டு வரை சீன பொதுவுடைமைக் கட்சியின் தலைமையிடமாக இது இருந்தது. பின்னர் 1949ம் ஆண்டு முதல் மாவோ தன்னுடைய சீனாவிலிருந்து பார்மோசாவிற்கு விரட்டியடித்தனர். 1950ஆம் ஆண்டு முதல் மாவோ தன்னுடைய கோட்பாடுகளை தனது ஆயுள் முழுவதும் சீனாவில் (1976ஆம் ஆண்டு வரை) நடைமுறைப்படுத்தினார். சீன மக்களின் எண்ணங்களில் நிலையாக நிற்பவர் மாவோ.

### 1.2 மாவோ ஒரு தத்துவஞானி :

மாவோ ஓர் சிறந்த அரசியல் தலைவர்; பரந்த மனமுடையவர். கொரில்லா முறைப் போரை ஆதரித்தவர். அதே நேரத்தில் அவரது எழுத்துக்கள் அனைத்தும் அவரது அறிவைப் பறைசாற்றக் கூடியதாக அமைந்துள்ளது. அவருடைய நூல்கள் அனைத்திலும் நடைமுறைக் கருத்துக்கள் தான் பொதிந்து உள்ளன. அதே நேரத்தில் முரண்பாடுகளும் இருக்கத்தான் செய்யும் என 1957ஆம் ஆண்டு கூறினார். இது பொதுவுடைமை இயக்கத்தில் எதிர்பார்க்காத ஒன்று. குருச்சேவ் இக்கருத்தை மறுத்தார். ஆயினும் மாவோ முரண்பாடுகளென்பது உண்மைதான் என மறுபடியும் கூறினார். அறிவென்பது பொதுவாக நடைமுறையிலிருந்து அறியக் கூடிய ஒன்று தான் என்றும், தனிப்பட்ட தனிநபர் திறமையால் உருவானது எனப்து இரண்டாம் நிலை தானே தவிர முதல் நிலை இல்லை என்கிறார். மனிதனுக்கு உண்மையான கருத்து எங்கிருந்து கிடைக்கிறதென்றால் அது சமூக அனுபவத்தால் கிடைக்கிறதென்று கூறுகிறார். சமுக அனுபவம் போராட்டங்களால் வரக் கூடியது என்கிறார். வர்க்கப் போராட்டம், உற்பத்தி போராட்டம், அறிவியல் ஆய்வுகள் ஆகிய அனைத்திலும் பங்கு பெற்றால் உண்மையான சமூக அனுபவம் கிடைக்குமென்றும், அவற்றால் உண்மையான அறிவைப் பெறலாம் எனத் தெளிவாக மாவோ அறிவு பற்றிக் கூறுகிறார்.

### 1.3 ஸ்டாலின் பற்றி மாவோ:-

மாவோ ஸ்டாலின் அளித்த கோட்பாடுகளைத் தான் பின்பற்றி வந்தார். ஸ்டாலின் மீது அபார நம்பிக்கை கொண்டிருந்த காரணத்தால் ஆயுள் முழுவதும் அவரைப் பின்பற்றினார். மாவோ எப்போதும் ஸ்டாலினைக் குறை கூறவில்லை. ஆனால் டரட்ஸ்கியைப் பற்றி அதிகமாகவே சாடியுள்ளார். ஸ்டாலினை குருச்சேவ் குறை கூறிய போதும் அதை மாவோ ஏற்றுக்கொள்ளவில்லையென்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஸ்டாலின் திறமை அபாரமானதென்பதால் அவருடைய குறைகள் தெரியவில்லை என்றார். மாவோ ஸ்டாலின் தலைமையில் சில குறைகளைக் கண்டாராயினும் வெளிப்படுத்தவில்லை. உதாரணமாக ஏராளமான பொதுவுடைமையாளர்களைக் கொல்லச் சொன்னதை மாவோ ஏற்கவில்லை. ஏனெனில் தன்னால் அவ்வளவு கொடுமையைச் செய்ய முடியாது; அதற்கு தனது மனம் இடம் கொடுக்காது என மறுத்து விட்டார். தவிர ஸ்டாலினின் குறைகள் மற்றும் அவருடைய நடைமுறைக்குத் தகாத செயல்கள் அவரை தோல்வியுறச் செய்துள்ளன என மாவோ கருத்துரைத்தார்.

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறவு சோதனை வினா.**
2. ஸ்டாலின் பற்றி மாவோவின் கருத்தைக் கூறுக.

ஸ்டாலினோடு மாவோவை ஒப்பீடு செய்து பார்த்தால், மாவோவின் நடவடிக்கைகள் ஸ்டாலினைக் காட்டிலும் திறம்பட அமைந்துள்ளதாகக் காணப்படுகின்றதென்பது உண்மை. ஜார் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டு வந்த அத்துணை அரசியல் சமூக நிறுவனங்கள் எதையும் மாற்றாது, பொதுவுடைமைக் கட்சியை அதிக அதிகாரம் கொண்ட அமைப்பாக மாற்றினார். சட்டம் ஒழுங்கைத் தீவிரமாக அமல்படுத்தினார். கட்டாய தொழிலாளர் பாசறைகள் மூலம் தொழிலாளர்கள் மத்தியில் ஒழுங்குணர்வை ஏற்படுத்தினார். ஸ்டாலின் மாதிரியே தொழிலமயமாக்கலை அதிகப்படுத்தினாலும், சோசலிச உழைப்பு என்ற கோட்பாட்டின் மூலம் தொழிலமயமாக்கலை மாவோவும் விரைவுபடுத்தினார்.

### 1.4 மாவோவின் உள்நாட்டுச் செயல் திட்டங்கள்:

1949ல், சீனாவில் மக்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக இராணுவத்திற்கும் பொதுவுடைமைக் கட்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. மாவோவின் கொள்கைகளுக்கு அதிக எதிர்ப்பு இல்லாமல் செய்தது. மேலும் மரபார்ந்த பழைய அரசு நிறுவனங்களின் செல்வாக்கும் குறையலாயிற்று.

மாவோவின் விவசாயச் சீர்திருத்தங்கள் கிராமப்புறங்களில் அதிகமாக வரவேற்பு பெற்றன. இது சீனப் பொதுவுடைமைக் கட்சி தனது செல்வாக்கை வளர்க்க உதவியது. பொதுவுடைமைக் கட்சி பலம் வாய்ந்ததாக மாறியதால், நிலச் சுவான்தாரர்கள் நிலம் குடியானவர்களுக்கு வழங்கப்படுமென்ற வாக்குறுதிகளைக் கொடுத்தது பொதுவுடைமைக் கட்சி.

இரண்டாவதாக, பொதுவுடைமைக் கட்சி தனது கவனத்தை சிறு வியாபாரிகள் பக்கம் திருப்பியது. இதனால் வர்க்கப் போராட்டம் வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையே நடைபெறலாயிற்று. வியாபாரிகள் கட்டாயமாகத் தங்களது சேமிப்புப் பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்ற கண்டிப்புக்குள்ளானதால், ஆயிரக்கணக்கான மக்கள் ஜாங்காயில் தற்கொலை செய்து கொண்டனர். பலர் அந்த இடத்திலிருந்து தப்பித்து, பிற இடங்களுக்குச் செல்லலாயினர். எனவே தனியார் வியாபாரம், தனியார் வணிகம் என்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

மூன்றாவதாக, பொதுவுடைமைக் கட்சியில் கோடி கோடியாய் சம்பாதித்தவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தவறு செய்தவர்கள் கட்சிக்காரர்களாயினும் கண்டடிப்புக்குள்ளாயின. ஏராளமான பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்னர். ஏராளாமான மக்கள் சித்ரவரைக்குள்ளாக்கும் சிறைச்சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

புரட்சி எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கூடி சில நேரங்களில் மாவோவிற்கு உதவி செய்வதாக அமைந்தன. ஏனெனில் மக்களுக்குப் பாதுகாப்பு என்பது தற்பாலிகமாக நிறுவப்பட்ட மக்கள்• நீதி மன்றங்கள் மூலம் கிடைத்தது. மாவோவின் சாதனையாதெனில், பல்லாயிரக்கணக்கான குடியானவர்களின் ஆதரவைத் திரட்டியது. மற்றொன்று தனியார் உற்பத்தி அமைப்புக்கள் அனைத்துக் கூட்டு அமைப்புகளாக மாற்றப்பட்டது. இவற்றின் நிர்வாகம் அனைத்தும் பொதுவுடைமையைக் கட்சியின் வசம் வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நல்லுறவு கொள்ள வேண்டுமென்ற குருச்சேவ் கருத்தை மாவோ ஏற்கவில்லை. பின்னர் சோவியத் நாட்டின் பொருளாதாரத் திட்டத்தையுமட 1958 ஆம் ஆண்டு நிராகரித்தார். பொது மக்கள் மன்றங்களை நாடெங்கிலும் அமைத்துச் செயல்படுத்தினார் மாவோ. இரஷ்யா இத்திட்டத்தை ஏற்கவில்லை. மேலும் கொள்கைகள் அவரவர் தேவைகளுக்குகந்ததாக இருக்க வேண்டுமென்ற மார்க்சியக் கோட்பாட்டை ஏற்று, சீனாவிற்குத் தேவையான மக்கள் மன்றங்களை எல்லோருடைய எதிர்ப்பிற்குப் பின்னும் நடைமுறைப்படுத்தினார். தனியார் நிலங்கள், காடுகள் மற்றும் மிருகங்கள் அனைத்தும் பொதுமக்கள் வசமாயின. ஊதிய முறை உருவாக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு அரிசி, கோதுமை ஆகியன இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாவோவின் திட்டம் மிகவும் தெளிவான திட்டமாகும். உற்பத்தியை அதிகரித்தலும், செலவை (நுகர்வை)க் குறைத்தலும் இவருடைய திட்டம். ஏராளமான தொழிலாளர்கள் ஒரு தொழிற்சாலையிலிருந்து பிற தொழிற்சாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர். குடியானவர்கள் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டனர். பெரிய அளவில் பொது மக்கள் உணவு மையங்கள் திறந்தால், மக்கள் சமையல் செய்யும் நேரம் மிச்சமாகும் என்றார் மாவோ. சீனாவில் மாவோவால் உற்பத்தியாளர்கள் தண்டிக்கப்படுவது போன்ற நிலை உருவானது. குடியானவர்கள் தங்கள் விவசாயத்தில் காட்டிய ஆர்வம் குறைந்தது. தனியார் சொத்து என்பது இல்லாதது போல காரணத்தால், குடியானவர்களின் அந்தஸ்து குறைந்தது. எனவே சீனாவின் மரபார்ந்த

நிலையிலிருந்து வித்தியாசமான கொள்கையாக இருந்தது மாவோவின் அணுகுமுறை.

மாவோவின் திட்டங்கள் தோல்வியுற்றதால், 1959, 1960 ஆம் ஆண்டில் வெளிப்படையாகவே மக்கள் பொருளாதார ரீதியலும் மனரீதியிலும் தங்களது வெறுப்புக்களைக் காட்டினர். பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக, கட்சியின் அதிகத்தீவிரம் காட்டலாயினர். கட்சியின் மத்திய செயலகம் பலப்படுத்தப்பட்டது. மாவோவின் கொள்கைகை, எதிர்கால பொருளாதாரக் திட்டங்களை எதிர்ப்பவர்கள் அனைவரையும் தண்டிக்க முடிவி செய்தனர்.

## 1.5 தொகுப்புரை:

மாவோயிசமென்பது சிந்தனைத்திரட்டு; இவருடைய பல கருத்துக்கள் அனைத்தும் தொகுக்கப்பட்ட மார்க்சிய - லெனினிசக் கோட்பாட்டின் விரிவாக்கமே மாவோயிசம். இவரது கருத்துக்கள் அனைத்தும் நடைமுறையில் பின்பற்றப்பட்டன. மாவோ 1964 ஆம் ஆண்டு வரை முதலாளித்துவத்தை ஏற்றுக்கொடாரெனினும், பின்னர் முழுமுச்சாக அதை அழிக்க வேண்டுமென எண்ணினார். பாட்டாளிவர்க்க எதிரிகள் மக்களிடையே பிரிவினை ஏற்படுத்த முயற்சிசெய்பவர்கள், அவர்கள் தண்டிக்கப்படுவர் என எச்சரித்தாரி;. கலைஞர்களும் எழுத்தாளர்களும் குடியானவர்களோடு சேர்ந்து வாழ முயற்சிக்க வேண்டுமென்றார். மாவோவின் கலாச்சாரப் புரட்சி வர்க்கப் போராட்டமாகும். இதில் அறிஞர்கள் திறமையாளர்கள் மற்றும் குடியானவர்கள் ஆகியோர்களுக்கிடையே போராட்டம் ஏற்படும் என்றார். கலைஞர்கள் மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென விரும்பினார்.

கிராமப்புறம் மூலமாக பொதுவுடைமையைப் பரப்பும் உத்தியைக் கையாண்டார் மாவோ என்பதை அறிவோம். இதுவரை இந்த உத்தியை யாரும் கையாளவில்லை.

## 1.6 முக்கிய வார்த்தைகள்:

சீனா, சூ என் லாய், கொரில்லா போர் முறை, ஜான் ஆட்சி, தொழில் மயமாக்கல்

### *1.7 பரிந்துரை நூல்கள்:*


1. R.N. Berki. The History of Political Thought. A Short Introduction, London. Dent, 1977.
2. J. Coleman. A History of Political Thought: From Ancient Greece to Early Christranity, Londonm Blackwell. 2000
3. W. Ebenstein, Great Political Thinkers, New Delhi, Oxford & IBH, 1969.
4. D. Germino. Modern Western Political Thought: Machiavelli to Marx, Chieage, University of Chicago Press 1972.
5. C.H. Mellwain. The Growth of Political Thought in the West, New York, Macmillan, 1932.
6. J.B. Morall. Political Thought in Medicval Times, New York, Harper Torchbooks, 1958.
7. G.H. Sabine. History of Political Theory. 4th edn, revised by T.L. Thorson, New Delhi, Oxford and IBH. 1973.
8. Q. Skinner. The Foundations of Modern Political Thought, 2 Volumes, Cambridge, Cambridge University Press. 1990.


### *1.8. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னிறிவுச் சோதனை கேள்விகளுக்கான பதில்கள்:*

*கேள்வி எண்.1. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:1 - ல் அறிக.*

*கேள்வி எண்.2. - இந்த கேள்விக்கான விடையை பகுதி எண் 1:3 - ல் அறிக.*

### *1.9. மாதிரி வினாக்கள்:*

*1. மாவோவின் அரசியல் சிந்தனையை எடுத்துரைக்க.*

# MADURAI KAMARAJ UNIVERSITY EXAMINATION

## MODEL QUESTION PAPER

## M.A., DEGREE EXAMINATION,

**First Year**

**Political Thought**

**Time : Three hours** **Maximum : 100 marks**

**Answer any FIVE questions**

**All questions carry equal marks**

1. Explain the Political Thought before Plato.

2. Analyse Aristotle's classification of Constitutions.

3. Examine Machiavelli's Contributions to Political Thought.

4. Assess the contribution of Plato to Western Political Thought

5. Analyse the social contract as depicted by Hobbes, Locke and Rousseau.

6. Bring out the features of the General Will of Rousseau.

7. Evaluate the utilitarianism of J.S. Mill

8. "Imperialism is the highest form of capitalism" -Lenin. Explain.

9. Examine the basic tenets of Karl Marx theory.

10. Analyse the Mao's concept of Marxism.